உ

சிவமயம்.

நாற்கவிராசநம்பி

இயற்றிய

அகப்பொருள்விளக்கம்

மூலமும் உரையும்.

இவை

யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை

வித்துவான் சிவாநந்தையரால்

பரிசோதித்து

கொக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

பார்பவ௵ பங்குனி௴,

1907.

சூசிபத்திரம்.

பரிபாடை.

இ-ம்	=	இச்சூத்திரம்; இதுசூத்திரம்.
இ-ள்	=	இதன்பொருள்.
உணர்-ற்று	=	உணர்த்துதனுதலிற்று.
உ-ம்	=	உதாரணம்.
எ-ம்	=	எனவும்; எனவரும்.
எ-து	=	என்பது; என்றது.
எ-று	=	என்றவாறு.
எ-லின்	=	என்றாராகலின்.
எ-னின்	=	என்னெனின்; என்னுதலிற்றோவெனின்.

முகவுரை.

எக்காலத்தும் எவ்விடத்தும் யாவரானும் அறிந்து பயனெய்துதற்கு உரியதும்; எய்தத்தகுவதும்; எய்தவேண்டுவதும்; எய்தப்படுவதும் பொருளொன்றே, பிறிதில்லை. அங்ஙனம் அதனையறியுங் கருவி தெய்வத்தாற்றரப்படு மியற்கை அறிவும் நூற்கேள்வியான் முயன்றெய்தப்படும் செயற்கை யறிவுமென் றிருவகைப்படும். அவற்றுட் செயற்கை யறிவுக்குக் கருவியாகிய நூல்களும் இலக்கணமு மிலக்கியமுமென் றிருவேறு வகையாம். அவையிரண்டும் விம்பமும் பிரதிவிம்பமும் போல்வனவாகலின் ஒன்றையின்றியொன் றறிதற் கமையாது. இலக்கணக் கேள்விக்கு இலக்கியக் கேள்வியும் இலக்கியக் கேள்விக்கு இலக்கணக் கேள்வியும் ஒருதலையான் வேண்டப்படுவனவேயாம்.

இலக்கணநூல் எழுத்தும், சொல்லும், பொருளும், யாப்பும், அணியும் என ஐவகைத்து. யாப்பணிகளைப் பொருட்கணடக்கி மூன்றுமென்ப. எழுத்தும் சொல்லும் யாப்பும் அணியும் என நான்கும் தன்னைநோக்கிநிற்பத் தானவற்றுளொன்றையும்நோக்காது நிற்றலான் பொருளிலக்கணம் ஏனை நான்கினுஞ் சிறப்புடைத்து. பொருளிலக்கணக்கேள்வி யில்வழி இலக்கியவுணர்ச்சி யெவ்வாற்றினு மரிது. அப்பொருளிலக்கணம் அகம் புறம் என்று இருவகைப்படும்.

பட்டாங்கு யாண்டுமொப்பநிகழ்தலால் பொருளிலக்கணம் எம்மொழிக்கண்ணு முளதேனும் இலக்கணநூலாகச் செய்து கற்றறியப்படுவது தமிழ்மொழி யொன்றன்கணன்றி வேறு எம்மொழிக்கண்ணுமில்லை. இல்லையாகவே அவற்றிற்கு இலக்கண வரம்புமின்று. இலக்கண வரம்பின்ருகவே இலக்கிய நூல்கள் இனிது கற்று உணரப்படுமாறுமரிது. ஏனைமொழிகள் பொருளிலக்கணம் ஒன்றுமொழித்து ஏனை நான்கனுள் நான்கும் மூன்றும் இரண்டும் ஒன்றுமுடையனவே யன்றிப் பொருளிலக்கணமுடையனவல்ல. தமிழ்மொழிக்கண் பொருளிலக்கணக் கேள்வியான் கற்போர்க்கு நூற்பொருள்கள் நன்குணரப்பட்டு எஞ்சாது சுவைபயந்து நிற்கின்றன. இதனுல் எம்மொழியினுந் தமிழ்மொழி யினிதெனவும் நறுந்தமிழ் எனவும் செழுந்தமிழ் எனவும் கனிதமிழெனவும் பலவாருகச் சான்ருேரெல்லாம் தமிழ்மொழியினைப் பாராட்டா நின்றனர். இதனை நன்குணர்ந்த திருவிளையாடற் புராணநூலார் "கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து-பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப்பசுந்தமிழேனை-மண்ணிடைச்சிலவிலக்கணவரம்பிலாமொழிபோ-லெண்ணிடைப்படக்கிடந்ததாவெண்ணவும்படுமோ." எனப் பாராட்டினர்.

சங்கப்புலவரெல்லாம் இப்பொருளிலக்கணச் சுவையே பெரிதுமுடையோர். இறந்தனபோக இக்காலத்து எஞ்சிநின்ற சங்கத்து நூல்களுள் பெரும்பாலன பொருள்நூல்களேயாம். சரித்திரவடிவாகிய நூல்கள் மிகச் சில. இதனுலும் பொருளிலக்கணத்தின் சிறப்பு இனிது விளங்கும்.

முற்கூறிய ஐவகையிலக்கணங்களையும் ஒருங்குகூறும்நூல்கள் அகத்தியம் தொல்காப்பியம் முதலியன. அவை விரிவுடைமையின் பிற்காலத்துச் சுருங்கி விளங்கிய நூல்கள் வேண்டப்பட்டு வழிநூலெனவும் சார்புநூலெனவும் ஒரோவொரு நயம்பற்றிப் பலநூல்கள் செய்யப்பட்டன. அவையெல்லாவற்றுள்ளும் நன்னூலும் இவ்வகப்பொருள் விளக்கமும் புறப்பொருள்வெண்பாமாலையும் யாப்பருங்கலக்காரிகையும், தண்டியலங்காரமும் கற்போரியாவராலும் பாராட்டிக் கற்

சப்படுகின்றன. இவ்வைந்து நூல்களும் வடமொழியிலக்கணங்கள் போலத் தனித்தனியாக வேறுவேறாசிரியராற் செய்யப்பட்டவை.

அழகுபத்தனுள்ளும் சொற்சுருக்கமே இலக்கணநூலோர் யாண்டும் வேண்டுவது. சொற்சுருக்கம்போலச் சூத்திரம் பல்காமையும் தந்நூற்குப் பேரழகாக வேண்டுவர். பாணினீயம் முதலிய வடமொழியிலக்கணங்களொடு பயின்றார்க்கே இவ்வுண்மை யினிது விளங்கும். மாபாடியத்து ஆசிரியர் பதஞ்சலியாரும் இவ்வாறெடுத்துரைப்பர். இவ்வைந்தும் இங்ஙனஞ் சுருங்கி விளங்கிய நடையுடைமையால் கற்பதெளிதாகலின் கற்போரியாவராலும் பாராட்டிக் கற்கப்பட்டு வழங்கிவருவனவாயின.

பொய்யாமொழிப்புலவர் அகப்பொருள் நூல்கள் பல இருப்பவும் இவ்வகப்பொருளையே இலக்கணமாகக்கொண்டு தஞ்சைவாணன் கோவைசெய்தருளினர். இதனானும் இந்நூற்பெருமைவிளங்கும். இங்ஙனந் தனக்கென ஓரிலக்கியமுடைய அகப்பொருளிலக்கணம் வேறில்லை. இது நூலாசிரியரிட்டபெயரால் அகப்பொருள்விளக்கமெனவும் இறையனார் அகப்பொருள் முதலியவற்றின் வரைந்து கோடற்கு நம்பி அகப்பொருளெனவும் வழங்கப்படுகின்றது.

இதனைப் பரிசோதிக்குங்காலத்து இந்நூலுட் காணப்பட்ட பாடபேதங்கள் அளப்பில. பயனின்மையின் ஈண்டுக் குறிக்கப்பட்டில. இந்நூலாசிரியர் காலம் முதலியன பாயிரத்தாற் சில புலப்படுகின்றன வன்றித் தெளிவாக வேறொன்றும் புலப்படவில்லை. உரையாசிரியரது பெயர்தானு மறிவதரிதாயிற்று.

இவ்வுரையுட் காட்டப்பட்ட உதாரணங்களுட் பெரும்பாலன தஞ்சைவாணன்கோவைச் செய்யுட்கள். சிந்தாமணி சிலப்பதிகாரம் திருச்சிற்றம்பலக்கோவை ஆசாரக்கோவை முதலாகப் பலநூல்கள் ஆங்காங்கு இடையிடையே எடுத்துக் காட்டப்பட்டன. நூற்பெயர்கள் இடையிடையே உரையுட் காணப்படுகின்றன. நூலாசிரியர் பெ

யர்களுஞ் சில காணப்படுகின்றன. இன்னூலகத்தனவென்று புலப்படாத செய்யுட்கள் பல. அடி தொடை பொருள் முதலியன புலப்படாத செய்யுட்கள் அவற்றினும் பல. இவ்வுதாரணச் செய்யுள்களுட் பெரும்பாலன பொருளதிகாரவுரையுள்ளும் இறையனாரகப்பொருளுரையுள்ளும் பிறுண்டும் காணப்படுகின்றன. பாடபேதங்கள் வரம்பிறந்தன. சில செய்யுட்களி னிறுதிப்பாகமும் சில செய்யுட்களின் முதற் பாகமும் ஆங்காங்கு வேண்டப்படுமவ்வளவே உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டன. முழுவதும் எடுத்துக்காட்டப்பட்ட செய்யுட்களே பெரும்பாலன.

இவ்வுரையுளெடுத்துக் காட்டப்படுஞ் சூத்திரங்கள் பல தொல்காப்பியத்தன. திருக்கோவையாருரையுட் காணப்படுமாறு போல் வேறுசூத்திரங்களுங் காணப்படுகின்றன. அவையின்னநூலிலுள்ளன வென்று புலப்படவில்லை. ஆயினும் அகத்தியத்திற்கு இந்நூலாசிரியர் பெரும்பொருளெனப் பெயரிட்டு வழங்குதலின் அந்நூற் சூத்திரங்கள் போலும். நூலுரைகளையேனும் உதாரணச் செய்யுட்களையேனும் நிச்சய வடிவம் அறியாது மாற்றுதற்கும் திருத்துதற்கும் கூட்டுதற்கும் அஞ்சி ஒழிந்தேம்.

இந்நூலுரை யிரண்டனையும் இரண்டாம் முறை பதிப்பிக்கக் கருதி அகப்பட்ட பிரதிகளை ஒருவாறு ஒப்பநோக்கி இப்பொழுது பிரதிகளிலிருந்தவாறே பதிப்பிக்கப்பட்டது.

உ

திருச்சிற்றம்பலம்.

அகப்பொருள்விளக்கம்

மூலமும் உரையும்.

பாயிரம்.

பூமலி நாவன் மாமலைச் சென்னி
யீண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகைதீர்த்
தலைகட லடக்கி மலயத் திருந்த
விருந்தவன் றன்பா லியற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலைவ னாகிய
தொல்காப் பியனரு ளொல்காப் பெரும்பொரு
ளகப்பொரு ளிலக்கண மகப்படத் தழீஇ
யிகப்பருஞ் சான்றோ ரிலக்கிய நோக்கித்
தொகுத்து முறைநிறீஇச் சூத்திரம் வகுத்தாங்
ககப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்
மாந்தருந் தேவரும் வாழ்த்தமுக் குடைக்கீ
ழேய்ந்தெழி லரிமா னேந்துபொன் னணைமிசை
மதிமூன்று கவிப்ப வுதயமால் வரைக்
கதிரோன் றிருந்தெனக் காண்டக விருந்து

தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
வுத்தமன் புளிங்குடி யுய்யவந் தானெனு
முத்தமி ழாசான் மைந்தனித் தலத்
திருபெருங் கலைக்கு மொருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே.

என்பது பாயிரம். எந்நூலுரைப்பினு மந்நூற்குப் பாயிரமுரைத்தேயுரைக்கப்படும். பாயிரம் என்றும், முகவுரை எ-ம், அணிந்துரை எ-ம், புறவுரை எ-ம், தந்துரை எ-ம், புனைந்துரை எ-ம், பதிகம் எ-ம், வருவனவொருபொருட்கிளவி. அப்பாயிரம் பொதுவுஞ் சிறப்புமெனவிருவகைத்து. அவற்றுள், பொதுப்பாயிரமென்பதெல்லாநூன்முகத்து மின்றியமையாதது. என்னை? "ஈவோன்றன்மையீதலியற்கை-கொள்வோன்றன்மைகோடன்மரபென-வீரிரண்டாகும் பொதுவின்றொகையே" என்றாராகலின். இனிச் சிறப்புப்பாயிரமென்பது பலவகைத்து. அவற்றுட் சிலவருமாறு: "பன்னியநூற்பேர்பகர்ந்தோன்பேர்காரணமுந்-துன்னுபயனளவுஞ்சொல்லினான்-முன்னைச்-சிறப்பாமவற்றிற் சிலவேறானும்-பெறப்படுமாமுன்னைப்பெயர்." இவையெல்லாம் பாயிரச்சூத்திரத்தினது பொருளுரைக்கவே விளங்கும்.

(இதன்பொருள்.) பூமிசைநடந்த வாமனைவாழ்த்தி வடமலைச்சென்னி யீண்டிய கடவுளர் வேண்டலிற் போந்து குறைகட லங்கையினடக்கித் தென் மலையிருந்தவருந்தவன் இவ்வியற்றமிழ்கெழீஇய வகப்பொருடழீஇ நோக்கி வழிதொகுத்து நிரீஇவகுத்துப் புலப்படுத்தாங் கிகப்பிலகப்பொருள்விளக்கம் பகர்ந்தெழுதினன் செந்தமிழ்நாட்டு மைந்தன் குரிசில் பாற்கடற் பல்புகழ் பரப்பிய நாற்கவிராச நம்பியென்பவனே என்றது இந்திரனானிருமிக்கப்பட்ட தெய்வத் தாமரையின்கண்ணெழுந்தருளிய அருகபரமன் ஸ்ரீ பாதங்களை வாழ்த்தி வட மலையின்கண்ணிருந்து வானோர்வேண்டலின் தெற்கின்கட்போந்து கடன்முழுதுங் குடங்கையிலடக்கிப் பொதியமலையின்கணிருந்தவன் செய்த இயற்றமிழைப் பொருந்திய பெரும்பொருளின்கண்ணுண்டாகிய பொருடழுவுதலை நோக்கி யுலகத்தாரறியும்வகைதொகுத்து முறையினிறுத்திக் கிளவிகளையடைவுபட வகுத்துப் புலப்பட இகப்பிலகப்பொருள் விளக்கமென்னும் பேர்கொடுத்து இந்நூல் பகர்ந்தெழுதினன் செந்தமிழ்நாட்டகத்து மைந்தனாகிய குரிசில் பாற்கடல்போலப் பலவகைப்பட்ட புகழை விளக்கிய நாற்கவிராசனென்னுஞ் சிறப்புப்பெயரையுடைய நம்பியென்னு மியற்பெயரையுடையோன் என்றவாறு.

பூமிசைநடந்தவென்னும் பெயரெச்சவினை வாமனென்னும் பெயர்கொண்டு முடிந்தது. வாழ்த்தியென்னும் வினையெச்சம் பகர்ந்தெழுதினனென்னும்

முற்றுவினை கொண்டது. வடமலையென்புழி யேழாமுருபும் ஆறாமுருபும், தென்னியீண்டென்புழி ஏழாமுருபும், வேண்டலிற்போந்தென்புழி மூன்றாமுருபும் தொக்கன. போந்து அடக்கியென்னும் வினையெச்சங்களடுக்காயிருந்தவென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தன. அப்பெயரெச்சம் அருந்தவனென்னும் பெயர்கொண்டுமுடிந்தது. குடங்கையினென்புழி மூன்றாமுருபு தொக்கது. இயற்றமிழென்புழி இருபெயரொட்டு. தமிழையென்றிரண்டாமுருபை விரிக்க. பெரும்பொருளென்புழி ஏழாமுருபுதொக்கது. தழீஇ நோக்கி தொகுத்து நிறீஇ வகுத்துப் புலப்படுத்தி என்னும் வினையெச்சங்கள் எழுதினனென்னும் வினைகொண்டன. ஆங்கு எ-து அசைச்சொல். வாழ்த்திப் பகர்ந்தோனெனவியையும். நிறீஇ வகுத்தென்னும் வினையெச்சங்கள் பகர்ந்தெழுதினனென்னுந் தொழிற்பெயரோடு முடிந்தன. வாழ்த்தியென்னும் பிறவினையும் அதனோடுபொருந்தும். மைந்தன் குரிசில் நாற்கவிராசன் என்னுமூவிடத்தும் உம்மை தொக்கன. பரப்பியவென்னும் பெயரெச்சம் நாற்கவிராசனென்னுஞ் சிறப்புப்பெயர்கொண்டது. நாற்கவியாவன: ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்பனவாம். பாற்கடற் பல்புகழ் பரப்பியென்புழி உவமந்தொக்கது. நம்பி என்னுமியற்பெயர் எழுதினனென்னும் முற்றுவினைப் பயனிலை கொண்டது. ஆக்கியோன்பெயர் நம்பி எ-து. வழி தொல்காப்பியவழி. வழிபலவாயினுந் தொல்காப்பியமுதனூலானமையின் இது சார்புநூலாம். எல்லையுமதனோடேயடங்கும். நூற்பெயர் அகப்பொருள் விளக்கம் எ-து. யாப்பு தொகுத்தியாத்தல் எ-து. நுதலியபொருள் அகத்துப்பொருள் எ-து. கேட்டோர் கற்றுவல்லோர். பயன் வீடுபேறு. காலம் குலசேகரபாண்டியன் காலம். களன் அறிவோரவை. காரணம் கிளவிகளையடைவுபடத் தொகுத்தல் எ-து. இவையெல்லாம் பாயிரத்திலக்கணமெனக் கொள்க. (க)

முதலாவது

அகத்திணையியல்.

க. மலர்தலை யுலகத்துப் புலவோ ராய்ந்த
வருந்தமி ழகப்பொருள் கைக்கிளை யைந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்.

எ-னின். மேற் பாயிரத்திலக்கணமுணர்த்திப்போந்தாய்; இனி நூலிலக்கணமுரைக்கின்றாம். அஃதுரைக்குங்காலை நூனுதலியதுரைத்தலும், நூலுள் அதிகாரநுதலியதுரைத்தலும், அதிகாரத்துள் ஒத்துநுதலியதுரைத்தலும், ஒத்தினுட் சூத்திரநுதலியதுரைத்தலுமென நான்குவகையாலுரைத்தல்வேண்டும். அவற்றுள், நூனுதலியதுரைத்தலாவது நூலாமாறும், நூலென்ற சொற்குப் பொருளாமாறுமுரைத்தல். அவற்றுள் நூலாமாறுரைக்குங்கால் அந்நூன் மூன்றுவகைப்படும். அவை முதனூலும் வழிநூலுஞ் சார்புநூலுமென்பன. என்னை? "முதல்வழிசார்பென நூன்மூன்றாகும்" எ-லின். அவற்றுண் முதனூலாவது, வரம்பிலறிவன்பயந்ததாகும். என்னை? "வினையினீங்கிவிளங்கியவறிவின் முனைவன்கண்டதுமுதனூலாகும்" எ-லின். வழிநூலாவது முதனூல்வழி தப்பாமற் பின்னரும் வேண்டும் விகற்பங்காட்டி வழுவாமற் சொல்லுவது. என்னை? "முன்னோர்நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோன்வேண்டும் விகற்பங்கூறி யழியாமரபினது வழிநூலாகும்" எ-லின். சார்புநூலாவது அவ்விருவர்நூலின் முடிந்தபொருளை ஒருசார்நோக்கி யொருகோவைப்பட வைப்பது. என்னை? "இருவர்நூற்கு மொருசிறைதொடங்கித் திரிபுவேறுடையது புடைநூலாகும்" எ-லின். நூலென்ற சொற்குப் பொருளுரைக்குங்காற் றந்திரமென்னும் வடமொழியை நூலென்று வழங்குவது தமிழ்வழக்கெனக் கொள்க. நூனுதலியதுரைத்தலாவது இந்தநூலின்னது கருதிற்றென் றுரைத்தல். அது நுதலிற்றென்றுரைத்தலாம். அந்த நூன் மூவகைப்படும். அவை இயலும், இசையும், நாடகமுமென்பன. அவற்றுள், இயனூன் மூன்றுவகைப்படும். அவை எழுத்துஞ் சொல்லும் பொருளுமென்பன. என்னை? "தமிழ்கூறுநல்லுலகத்து-வழக்குஞ்செய்யுளுமாயிருமுதலின்-எழுத்துஞ்சொல்லும்பொருளுநாடி" எ-லின். அஃதேல், யாப்புமலங்காரமுமவற்றினுள் யாதனுளடங்குமோவெனின், அவையிரண்டும் பொருளினுளடங்குமெனக் கொள்க. அதிகாரநுதலியதுரைத்தலாவது, இவ்வதிகாரமின்னது கருதிற்றென்றல். ஆயினிவ்வதிகாரமென்னுதலிற்றோவெனினது பாயிரத்துரைத்துப்போந்தாம். தமிழ்நுதலிற்றென்றல். இவ்வதிகாரம் அகத்திணையியலும், களவியலும், வரைவியலும், கற்பியலும், ஒழிபியலுமென ஐந்தோத்துக் கண்டதாம். அதிகாரத்துளோத்துநுதலியதுரைத்தலாவது இவ்வதிகாரத்துளிவ்வோத் தின்னது கருதிற்றென்றல். ஆயினிவ்வதிகாரத்தினிவ்வோத் தென்னுதலிற்றோவெனின், அகத்திணையிலக்கணமுணர்த்துத

னுதலிற்றெனக் கொள்க. ஓத்தினுட் சூத்திரநுதலிய துரைத்தலாவது, இவ்வோத்தினு ளித்தலைச்சூத்திர மின்னது கருதிற்றென்றல். ஆயினிவ்வோத்தினு ளித்தலைச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், அகப்பொருளிலக்கணமெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று. அன்னதாகல் இச்சூத்திரத்துப் பொருளுரைக்கவே விளங்கும். அகப்பொருளுரை நான்குவகைப்படும். அவை கருத்துரைத்தலும், கண்ணழித்துரைத்தலும், பொழிப்புத்திரட்டலும், அகலங்கூறலுமென்பன. என்னை? "கருத்துரைகண்ணழிபொழிப்புத்திரட்ட-லகலங்கூறலெனநால் வகைத்தே-புகலுஞ்சூத்திரப் பொருளுரையென்ப" எ-லின். அவற்றுட் கருத்துரைத்தலாவது சூத்திரத்துட்கோளுரைத்தல். என்னை? "சூத்திரத்துட்கோள்சொல்லல்கருத்துரை" எ-லின். கண்ணழித்தலாவது சூத்திரத்தின் சொற்றோறும் பொருளுரைத்தல். என்னை? "சொற்றொறுஞ்சொற்றொறுந்துணிபொருளுரைத்தல்-கற்றறிபுலவர்கண்ணழியென்ப" எ-லின். பொழிப்புத்திரட்டலாவது சூத்திரத்துட்பொருளையெல்லாந் தொகுத்துரைத்தல். என்னை? "பொழிப்பெனப்படுவது பொருந்தியபொருளைப்-பிண்டமாகக்கொண்டுரைப்பதுவே" எ-லின். அகலங்கூறலாவது சூத்திரத்துட்பொருளைத் தூய்மைசெய்தற்குக் கடாவும் விடையுமுள்ளுறுத்து விரித்துரைத்தல். என்னை? "அகலமென்பதாசறக்கிளப்பின்-விகலமின்றிவிரித்துரைப்பதுவே" எ-லின். அவற்றுட் கருத்துரை முற்கூறப்பட்டது. கண்ணழித்துரைக்குமாறு:

மலர்தலையுலகத்து என்பது பரந்தவிடத்தையுடைய தமிழ்நாட்டகத்து என்றவாறு. புலவோராய்ந்தவருந்தமிழகப்பொருள் எ-து தலைச்சங்கத்தோரும் இடைச்சங்கத்தோரும் கடைச்சங்கத்தோருமாகிய சான்றோரா லாராயப்பட்ட வரிய தமிழ்நூலகத்துப்பொருளென்றவாறு. கைக்கிளையைந்திணைபெருந்திணையெனவெழுபெற்றித்தாகும் எ-து கைக்கிளையும் ஐந்திணையும் பெருந்திணையும் என எழியல்பினையுடைத்தென்றவாறு. என்னை? "கைக்கிளைமுதலாப் பெருந்திணையிறுவாய்-முற்படக்கிளந்தவெழுதிணையென்ப" எ-லின்.

பொழிப்புத்திரட்டலாவது பரந்தவிடத்தையுடைத்தாகிய தமிழ்நாட்டிடத்து மூன்றுவகைப்பட்ட சங்கத்தோராலாராயப்பட்ட வரிய தமிழ்நூலகத்து அகப்பொருளாவது கைக்கிளையும் ஐந்திணையும் பெருந்திணையுமென எழியல்பினையுடைத்தென்றவாறு.

அகலங்கூறுமாறு: சூத்திரத்துள் மலர்தலையென்ப தியாதோவெனின் வினைத்தொகையெனக் கொள்க. வினைத்தொகையாவது ஒருகாலத்திற்கேயுரித்தாகாது முக்காலத்திற்கும் பொதுவாய்நிற்பதாம். மூன்றுகாலமாவன: இறப்பு எதிர்வு நிகழ்வு என்பன. அஃதவற்றொடுவருங்கால் மலர்ந்த எ-ம், மலராநின்ற எ-ம், மலரும் எ-ம் வரும். அவற்றுளீண்டு மலர்ந்தவென்பதே பொருளாம். மலர்தலையுலகத்தென்புழி இரண்டாமுருபு மேழாமுருபுந் தொக்கன. புலவரென்னுமெழுவாய்க்கு ஆய்ந்தவென்னும் வினை பயனிலையாம். ஆயினும் அதுவே பெயரெச்ச வாய்பாடாதலா னருந்தமிழென்னும் பெயரோடு முடியும். அருந்தமிழகப்பொருளென்புழி எழாமுருபு தொக்கது. அகப்பொருளென்னுமெழுவாய் பெற்றித்தென்னுங் குறிப்புவினை கொண்டது. கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணையென உம்மைத்தொகையா யேழென்னுந் தொகைபெற்றன. என எ-து எண்ணிடைச்சொல். (க)

உ. அதுவே,—

புனைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினுந்
தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே.

இச்சூத்திரம் மேற்சொல்லப்பட்ட வகப்பொருட்குரிய விதியுணர்த்துதனுதலிற்று. அதுவே அவ்வகப்பொரு ளில்லது முள்ளதுமாகிய விரண்டுகூறுபாட்டானும் பழைய நெறி பிறழாமற் கூறப்படும். எ-று. என்னை? "நாடகவழக்கினு முலகியல்வழக்கினும்-பாடல்சான்ற புலநெறிவழக்கினுங் - கலியேபரிபாட்டாயிருபாங்கினு-முரியவாகுமென்மனார்புலவர்." எ-லின். (உ)

௩. அவற்றுட்,—

கைக்கிளை யுடைய தொருதலைக் காமம்.

இ-ம். நிறுத்தமுறையானே கைக்கிளைக்குரிய காமப்பொருளுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட வகப்பொருள்விகற்பமாகிய வேழினுட் கைக்கிளையென்பதனுடைய பொருள் ஒருதலைக்காமம். எ-று.

அவற்றுள் என்பதனை மேல்வருஞ் சூத்திரமிரண்டற்குங் கூட்டுரைக்க. (௩)

௪. ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்.

இ-ம். ஐந்திணைக்குரிய காமப்பொருளுணர்-ற்று. ஐந்திணையென்பதனுடையபொருளன்புடைக்காமம். எ-று. (௪)

௫. பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம்.

இ-ம். பெருந்திணைக் காமப்பொருளுணர்-ற்று. பெருந்திணையென்பதனுடையபொருள் பொருந்தாக்காமமாம். எ-று. இவற்றின் விகற்பமெல்லாம் மேலே காட்டப்படும். (௫)

௬. குறிஞ்சி பாலை முல்லை மருத
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே.

இ-ம். நிலம் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையுமொழித்து நிலம்வகுக்கப்படும் ஐந்திணைக்குரிய பெயருணர்-ற்று. குறிஞ்சியும் பாலையும் முல்லையும் நெய்தலுமாம் ஐந்திணைக்குப் பொருந்தியபெயர்கள். எ-று. என்னை? "மாயோன்மேயகாடுறையுலகமுஞ்-சேயோன்மேயமைவரையுலகமும்-வேந்தன்மேய தீம்புன லுலகமும்-வருணன்மேய பெருமண லுலகமு-முல்லைகுறிஞ்சிமருதநெய்தலெனச்-சொல்லியமுறையே சொல்லவும்படுமே." மற்றிதனுட் பாலைக்குத் திணையில்லையாலெனின், அது நிலனின்மையாலொழிக்கப்பட்டதெனக்கொள்க. அஃதேலீண்டுக்கூறியதென்னையெனின் மதுரைக்காஞ்சியுட் "பாலைசான்றசுரஞ்சேர்ந்தொருசா" ரென்பதனானும் பிறவாற்றானுங் கொள்ளப்பட்டதெனக்கொள்க. அஃதற்றாக, முல்லை குறிஞ்சி மருதநெய்தலென்றிம்முறையெண்ணாது குறிஞ்சிபாலைநெய்தலென்றெண்ணியதென்னையெனின் அச்சூத்திரத்

திற் "சொல்லியமுறையே சொல்லவும்படுமே" என்றவுண்மையாற் பிறவாற்றானுஞ் சொல்லவும்படுமென்பதுபட நிற்றலானும், பத்துப்பாட்டும், கலித்தொகையும், ஐங்குறுநூறும், கீழ்க்கணக்கும், சிற்றடக்கமுமுதலாகிய சான்றோர்செய்யுட்களெல்லாம் வேண்டிய முறையானே வைத்தலானு மவற்றானெண்ணப்பட்டதெனக்கொள்க. மற்றிக்குறிஞ்சி முதலாகிய பெயர் நிலங்கட்செய்தியவாறென்னையெனின் உலகத்தார் வழங்கிப்போந்த முறைமையாமெனக் கொள்க. அன்றிக் குறிஞ்சியும் பாலையு முல்லையு மருதமும் நெய்தலுமென்னும் பொருள்கள் அவ்வந்நிலத்திற்குச் சிறந்தன வாதலா னவற்றாற் பெற்ற பெயரெனவுமாம். "கருங்கோற்குறிஞ்சிப்பூக்கொண்டு-பெருந்தேனிழைக்கும்" எ-ம், "கோடுறுபல் காய்வாலிணர்ப்பாலை" எ-ம், "முல்லையந்தண்பொழில்" எ-ம், "மருதமாநிழல்" எ-ம், "பாசடைநிவந்தகணைக்கானெய்தல்" எ-ம் சான்றோரானெடுத்துக் கூறப்படுதலினெனக் கொள்க. இவையாகுபெயராம். (கூ)

எ. அவைதாம்,—

முதற்பொருள் கருப்பொரு ளுரிப்பொரு ளெனமுறை
நுதற்பொருண் மூன்றினு நுவலப் படுமே.

இ-ப். ஐந்திணைக்கும் பொதுவாகிய பொருளுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட குறிஞ்சிமுதலாகிய ஐந்திணைதாம், முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளுமென முறையானே கருதுதலையுடைய பொருண் மூன்றானுஞ் சொல்லப்படும். எ-று. என்னை? "முதல்கருவுரிப்பொருளென்ற மூன்றே-நுவலுங்காலை முறைசிறந்தனவே- பாடலுட்பயின்றவைநாடுங்காலை." எ-லின். அவைதாம் நுவலப்படுமெனக்கூட்டுக. என எ-து எண்ணிடைச்சொல். (எ)

அ. நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே.

இ-ம். நிறுத்த முறையானே முதற்பொருளின் பாகுபாடுணர்-ற்று. முதற்பொருளாவது நிலமும் பொழுதுமென இரண்டுகூற்றினையுடைத்தாம். எ-று. என்னை? "முதலெனப்படுவது நிலம்பொழுதிரண்டி-னியல்பெனமொழிபவியல்புணர்ந்தோரே" எ-லின். (அ)

கூ. வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தரு மிடனே
யெனவீ ரைவகைத் தனையிய னிலமே.

இ-ம். முதற்பொருளின் பாகுபாடாகிய விரண்டனுள்ளு முன்னதாகிய நிலத்தின் வரையறையுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட வியல்பினையுடைய நிலமென்னுமுதற்பொருள் வரையும், வரைசார்ந்தவிடமும், சுரமும், சுரஞ்சார்ந்தவிடமும், புறவும், புறவுசார்ந்தவிடமும், பழனமும், பழனஞ்சார்ந்தவிடமும் கடலும், கடல்சார்ந்தவிடமும், எனப் பத்துவகையினையுடைத்து. எ-று. இவற்றிற்கு விதி மேலே காட்டப்பட்டன. இவற்றை ஐந்திற்கும் நிரனிறையாகக் கொள்க. புறவெனினுங் காடெனினுமொக்கும். பழனமென்புழி ஏகாரந்தொக்கதாயினுங் குற்றமின்றாம். என்னை? "எண்ணேகாரமிடையிட்டுக்கொளினு-மெண்ணுக்குறித்தியலுமென்மனார்புலவர்" எ-லின். அனையவியலெனற்பாலது அனையியலென விகாரமாயிற்று. (கூ)

கo. பெரும்பொழு தென்று சிறுபொழு தென்று
விரண்டு கூற்ற. தியம்பிய பொழுதே.

இ-ம். பொழுதென்னு முதற்பொருளின் பாகுபாடுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட பொழுதென்னு முதற்பொருள் பெரும்பொழுதென்றுஞ் சிறுபொழுதென்று மிரண்டுபெகுதியினையுடைத்து. எ-று. என்று எ-து எண்ணிடைச்சொல். (கo)

கக. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றுங்
கிருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே.

இ-ம். நிறுத்தமுறையானே பெரும்பொழுதினது பாகுபாடுணர்-ற்று. கார்முதலாக வேனிலீறாகச் சொல்லப்பட்ட ஆறுபகுதியினையுடைத்தாம், புலவரானாராயப்பட்ட பெரும்பொழுது. எ-று. ஆங்கு எ-து அசை. (கக)

கஉ. மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.

இ-ம். சிறுபொழுதின் பாகுபாடுணர்-ற்று. மாலைமுதலாக நண்பகலீறாகச் சொல்லப்பட்ட ஐவகையினையுடைத்தாம் அவ்வொழுக்கத்திற்குரிய சிறுபொழுது. எ-று. அவற்றுள் மாலையாவது உச்சிக்குப் பின்னும் ஆதித்தன்படுவதற்கு முன்னுமுண்டாகிய காலம். யாமமாவது இடையிரவு. வைகறையாவது விடியற்காலம். எற்படுகாலையாவது ஆதித்தன்படுகிறபொழுது. நண்பகலாவது உச்சிப்பொழுது. கை எ-து ஒழுக்கம். (கஉ)

கந. அவற்றுட்,—
கூதிர் யாம முன்பனி யென்றிவை
யோதிய குறிஞ்சிக் குரிய வாகும்.

இ-ம். குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமுணர்-ற்று. பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமாகிய பதினொன்றுள்ளுங் கூதிரும் யாமமும் முன்பனியுமாகிய மூன்றும் மேற்சொல்லப்பட்ட குறிஞ்சிக்குரியவாம். எ-று. இதனுட் பெரும்பொழுதாகிய முன்பனியைக் கூதிரென்பதனோடுசேரக் கூறாது, யாமமாகிய சிறுபொழுதின் பின்கூறியதென்னையெனின், அது கூதிரின்றுணைச்சிறப்புடைத்தன்றென்றவாறு கூறப்பட்டதெனக் கொள்க. வருஞ்சூத்திரத்திற்கு மொக்கும். (கந)

கச. வேனி னண்பகல் பின்பனி யென்றிவை
பான்மையி னுரிய பாலை தனக்கே.

இ-ம். பாலைக்குரிய பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமாமாறுணர்-ற்று. பாலைக்கு வேனிலும், நண்பகலும், பின்பனியுமாகிய மூன்றும் விதியானுரிய

வாம். எ-று. அவற்றது சிறப்புடைமையும் சிறப்பின்மையும் எற்றாற் பெறுதுமெனின், "குறிஞ்சி-கூதிர்யாமமென்மனார்புலவர்" எ-ம், "முன்பனிதானுமுரித்தெனமொழிப" எ-ம், "பனியெதிர்பருவமுமுரித்தெனமொழிப" எ-ம், "நடுவுநிலைத்திணையேநண்பகல்வேனிலொடு-முடிவுநிலைமருங்கின் முன்னியநெறித்தே" எ-ம் கூறியவதனாற் பெறுதுமெனக் கொள்க. (௧௪)

௧௫. மல்குகார் மாலை முல்லைக் குரிய.

இ-ம். முல்லைக்குரிய பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமுணர்-ற்று. மிகாநின்ற காரகாலமும் மாலைக்காலமுமாகிய இரண்டுகாலமும் முல்லைக்குரிய. எ-று. என்னை? "காருமாலையுமுல்லைக்குரிய" எ-லின். (௧௫)

௧௬. இருள்புலர் காலை மருதத்திற் குரித்தே.

இ-ம். மருதத்திற்குரிய சிறுபொழுதுணர்-ற்று. மருதத்திற்கு விடியற்காலமுரித்து. எ-று. என்னை? "வைகறைவிடியன்மருதமென்ப" எ-லின். ()

௧௭. வெய்யோன் பாடு நெய்தற் குரித்தே.

இ-ம். நெய்தற்குரிய சிறுபொழுதுணர்-ற்று. ஆதித்தன் படுகின்றகாலம் நெய்தற்குரித்து. எ-று. என்னை? "எற்பாடு-நெய்தலாதன் மெய்பெறத்தோன்றும்" எ-லின். (௧௭)

௧௮. மருத நெய்த லென்றிவை யிரண்டிற்கு
முரிய பெரும்பொழு திருமூன் றும்மே.

இ-ம். மருதத்திற்கும் நெய்தற்கும் உரிய பெரும்பொழுதுணர்-ற்று. மருதமுநெய்தலு மென்னுமிரண்டிற்கும் பெரும்பொழுதாறுமுரியவாம். எ-று. இஃதெற்றாற் பெறுதுமோவெனின் ஞாபகத்தாற் பெறுதுமெனக் கொள்க. அஃதியாதோவெனின்; ஏனை மூன்றிற்கும் பெரும்பொழுது கூறிப்போந்தார் மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது கூறாததனாலெனக் கொள்க. அதனாற் பெரும்பொழுதாறு முரியவெனக் கொள்க. (௧௮)

௧௯. ஆரணங் குயர்ந்தோ ரல்லோர் புள்விலங்
கூர்நீர் பூமர மூணுப்பறை யாழ்பண்
டொழிலெனக் கருவீ ரெழுவகைத் தாகும்.

இ-ம். கருப்பொருளின் பாகுபாடுணர்-ற்று. தெய்வமுதலாகத் தொழிலீறாகச் சொல்லப்பட்ட பதினான்குவகையினையுடைத்தாங் கருப்பொருள். எ-று. என்னை? "தெய்வமுணாவே மாமரம்புட்பறை-செய்தியாழின் பகுதியொடுதொகைஇ-யவ்வகைபிறவுங்கருவெனமொழிப" எ-லின். மற்றிக் கருப்பொருள் பதினான்கென்று வரையறுத்ததென்னை? இதனுளெடுத்தோதப்பட்டனவெட்டல்லவோவெனின், ஒழிந்த ஆறும் இச்சூத்திரத்துப் பிறவென்னு மிலேசானே பெறப்பட்டன. (௧௯)

உO. விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயின் மறப்புலி குடாவடி
கறையடி சீயஞ் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்த
ளாரந் தேக்ககி லசோக நாகம்
வேரலை வனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோ ளவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல் செந்தே னளித்தல்
செழுங்கிழங் ககழ்தன் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே.

இ-ம். குறிஞ்சிக் கருப்பெருளுணர்-ற்று. சேய் முதலாகச் சுனையாடலீ ருகச் சொல்லப்பட்டனவெல்லாங் குறிஞ்சிக் கருப்பொருளாம். எ-று. (உO)

உக. கன்னி விடலை காளை மீளி
யின்னகை யெயிற்றி யெயின ரெயிற்றியர்
மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை
கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
வுழிஞை பாலை யோமை யிருப்பை
வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சுறை யாடல் பாலைக் கருப்பொருளே.

இ-ம். பாலைக்குரிய கருப்பொருளுணர்-ற்று. கன்னிமுதலாகச் சுறை யாடலீருகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாலைக்கருப்பொருளாம். எ-று. ()

உஉ. நெடுமால் குறும்பொறை நாடன் றோன்றல்
மடிவில் கற்பின் மனைவி கிழத்தி
யிடைய ரிடைய்ச்சிய ராய ராய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவங்
கொன்றை காயா மன்றலங் குருந்தங்

தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
யேற்றுப்பறை முல்லை யாழ் சாதாரி
சாமை வரகு தரமுடன் வித்த
லவைகளை கட்ட லரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழ லூதன்
மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னுடன் முல்லைக் கருப்பொருளே.

இ-ம். முல்லைக்குரிய கருப்பொருளுணர்-ற்று. நெடுமோன் முதலாகக் கான்யாருடலீறுகச் சொல்லப்பட்டனவெல்லாம் முல்லைக்கருப்பொருளாம். (உஉ)

உங. இந்திர னூரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பிற் கிழத்தி மனைவி
யுழவ ருழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலைவண் டான மகன்றி லுரை
யன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா வெருமை நீர்நாய்
பெருகிய சிறப்பிற் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதஞ்
செந்நெல் வெண்ணெ லந்நெ லரிகிணை
மன்றன் முழவ மருதயாழ் மருத
மன்றணி விழாக்கொளல் வயற்களை கட்ட
லரிதல் கடாவிட லகன்குளங் குடைதல்
வருபுன லாடன் மருதக்கருப் பொருளே.

இ-ம். மருதநிலத்திற்குரிய கருப்பொருளுணர்-ற்று. இந்திரன்முதலாகப் புனலாடலீறுகச் சொல்லப்பட்டனவெல்லாம் மருதநிலத்திற்குரிய கருப்பொருளாம். எ-று. (உங)

உச. வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பருமவல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்திய
ரளவ ரளத்திய ரலைகடற் காக்கை

சுறவம் பாக்கம் பெறலரும் பட்டின
முவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டக மடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவுமீ னுப்பு விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்த
லுணங்கலை விற்றன்மீ னுணக்கல்புள் ளோப்ப
னெடுங்கட லாட னெய்தற் கருப்பொருளே.

இ-ம். நெய்தற்குரிய கருப்பொருளுணர்-ற்று. வருணன்முதலாகக் கடலீறாகச்சொல்லப்பட்டனவெல்லாம் நெய்தற்கருப்பொருளாம். எ-று. இச்சூத்திரங்களிலே தெய்வ முதலாகத் தொழிலீறாகச் சொல்லப்பட்ட கருப்பொருள் பதினான்கு முறையானே கண்டுகொள்க. (உச)

உரு. புணர்தலும் பிரிதலு மிருத்தலு மூடலு
மிரங்கலு மிவற்றி னிமித்தமு மெனவாங்
கெய்திய வுரிப்பொரு ளையிரு வகைத்தே.

இ-ம். உரிப்பொருளின் பாகுபாடுணர்-ற்று. மேலெய்திய வுரிப்பொருள் புணர்தலும், புணர்தனிமித்தமும், பிரிதலும், பிரிதனிமித்தமும், இருத்தலும், இருத்தனிமித்தமும், ஊடலும், ஊடனிமித்தமும், இரங்கலும், இரங்கனிமித்தமும் எனப் பத்துவகையினையுடைத்து. எ-று. என்னை? "புணர்தல் பிரிதலிருத்த லிரங்க-லூட லிவற்றி னிமித்த மென்றிவை-தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே" எ-லின். இச்சூத்திரத்தானும் ஐந்திணை வேண்டிய முறையானே யெண்ணலாமென்பது பெறப்பட்டது.

அவற்றுட் குறிஞ்சிக்குதாரணம் வருமாறு: "இன்னிசை யுருமொடு கனைதுளி தலைஇ-மன்னுயிர்மடிந்த பானாட்கங்குற்-காடுதேர்வட்டத்து விழியிடம்பெறாது-விரியதள்படுத்த சேக்கைத்தெரியிழைத்-தேனாறுகதுப்பிற் கொடிச்சியர்தந்தை-கூதிரிற்றிரியுங் குன்றநாட-வளைந்துவாலிளமுலை ஞெமுங்கப்புல்லுழி-விளங்குதொடிமுன்கை வளைந்துபுறஞ்சுற்ற-நின்மார்படைத்தலி னினிதாகின்றே-நும்மில்புலம்பினு முள்ளுதொறுநலியுந்-தண்வரலசைஇயபண்பில்வாடை-பதம்பெறுகல்லாதிடம்பார்த்துநீடிய-மனைமரமொசியவொற்றிப்-பலர்மடிகங்குனின் னெடும்புறநிலையே" எ-ம்,

பாலைக்குதாரணம்: "அறியாய்வாழி தோழியிருளற-விசும்படன் விளக்கும் விரைசெலற்றிகிரிக்-கடுங்கதிரெறிப்ப விடுவாய்நிறைய-நெடுங்கான் முருங்கை வெண்பூத்தாஅய-நீரறநிவந்த நிரம்பாநீளிடை-வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப்பிணவொடு-கள்ளியங்காட்ட கடத்திடையுழிஞ்சி-லுள்ளூன்வாடிய சுரிமூக்குநொள்ளைப்-பொறியரைபுதைத்த புலம்புகொளியவின்-விழுத்தொடைமறவர் வில்லிடைவீழ்ந்தோ-ரெழுத்துடைநடுக

வின்னிழல்வதியு - மருஞ்சுரக்கவலை நீந்தியென்று - மில்லோர்க்கில்லென் றியைவதுகரத்தல்-வல்லோர்நெஞ்சம் வலிப்பநம்மினும்-பொருளேகாதலர் காத-லருளேகாதலென் றறிநீயே" எ-ம்,

முல்லைக்குதாரணம்: "முல்லைவைந்நுதிதோன்றவில்லமொடு - பைங் கார்க்கொன்றை மென்பிணியவிழ - விரும்புதிரித்தன்ன மாயிருமருப்பிற் - பரலவலடைய விரலைதெறிப்ப-மலர்ந்தஞாலம் புலம்புறங்கொடுப்பக்- கரு விவானங் கதழுறைசிதறிக்- கார்செய்தன்றே கவின்பெறுகானங் - குரங் குளைப்பொலிந்த கொய்சுவற்புரவி - நரம்பார்த்தன்ன வாங்குவளைபரியப் - பூத்தபொங்கர்த் துணையொடுவதிந்த - தாதுண்பறவை பேதுறவஞ்சி-மணி நாவார்த்த மாண்வினைத்தேரி-னுதுக்காண்டோன்றுங் குறும்பொறைநாட ன்-கறங்கிசைவிழவி னுறந்தைக்குணாது-நெடும்பெருங்குன்றத் தமன்றகாந் தட்-போதவிழலரிநாறு-மாய்தொடியரிவைநின் மாணலம்படர்ந்தே" எ-ம்,

மருதத்திற்குதாரணம்: "நெடுங்கோடுநுடங்குநியமதூர்-நாட்டுறைப் பட்ட மோட்டிருவராஅற் - றுடிக்கட்கொழுங்குறை கொடுத்துண்டாடி - வேட்டமறந்து துஞ்சுங்கொழுநர்க்குப் - பாட்டியரம்பைப் பகலிலைவெஞ் சோறு - தீம்புளிப்பாம்பின் றிரள்கனியளைஇ-விடியல்வைகறை விடுமூதார் தொடு-கலங்குழுகலங்குறு கலராற்றந்தை- கண்கவினழித்த கனற்பற்றெ வ்வர்-வென்றுலந்தழுவி முயங்கியமார்பே" எ-ம்,

நெய்தற்குதாரணம்: "கானன்மலர்ந்த கழிப்பூக்கூம்ப- நீனிறப் பெ ருங்கடல் பாடெழுந் தொலிப்ப - மீனார்குருகின் மென்பறைத்தொழுதி - குவையிரும்புன்னைக் குடம்பைசேர-வசைவண்டார்க்கு மல்குறுகாலைத்-தா ழைத்தளரத் தூக்கிமாலை-யழிதகவந்த கொண்டலொடுகெழிபடர்- காமர்நெ ஞ்சங் கையறுபடையத்- துயரஞ்செய்தநம் மருளாராயினு-மறாஅலியரோ வவருடைக்கேண்மை-யளியின்மையி னவணுறைவுழேஇ-வாரற்கதில்ல தோழிகழனி-வெண்ணலரிநர் பின்றைத்ததும்புந்-தண்ணுமைவெரீஇயதட ந்தாணாரை - செறிமடைவயிரிற் பிதற்றிப்பெண்ணை - யகமடற்சேக்குந் து றைவ-னின்றுயின்மார்பிற் சென்றவென்னெஞ்சே" எ-ம் வரும். இவற் றுண் முதலுங் கருவு முரிப்பொருளும் வந்தவாறு கண்டுகொள்க. (௨௫)

௨௬. அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.

இ-ம். ஐந்திணைக்குரிய கைகோள்வரையறையுணர்-ற்று. எல்லையி ல்லாத வின்பத்தையுடைய ஐந்திணையிடத்துக் களவுங் கற்புமென விரண் டொழுக்க நிகழும்? எ-று. களவுங் கற்புமென உம்மையை விரிக்க. கை கோள்-ஒழுக்கம். (௨௬)

௨௭. இயற்கைப் புணர்ச்சி யிடந் தலைப்பாடு
பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்
றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.

இ-ம். நிறுத்த முறையானே களவென்னுங் கைகோளிற் புணர்ச்சி யுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட களவென்னுங் கைகோளிற் புணர்ச்சி

இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் பாங்கற்கூட்டமும் பாங்கியிற் கூட்டமுமென நான்குவகையினையுடைத்தாம். எ-று. என்னை? "காமப் புணர்ச்சியு மிடந்தலைப்பாடும்-பாங்கொடுதழாலும்தோழியிற்புணர்வுமென் றாங்கநால்வகையு மடைந்தசார்பொடு-மறையெனமொழிந்திசின்மறையோ ராறே" எ-லின். (உஎ)

உஅ. மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப.

இ-ம். கைக்கிளைநிகழுமிடமுணர்-ற்று போழப்படுங் கிளைநரம்பினை யுடைய யாழினையுடைய காந்தருவர் விரும்புங் களவிற்புணர்ச்சிமுன் கைக் கிளைநிகழ்தல் கடனென்று சொல்லுவர் புலவர் எ-று. (உஅ)

உகூ. அதுவே,—
காமஞ்சான்ற விளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகா து நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.

இ-ம். கைக்கிளைக்குரிய விலக்கணமுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட கைக்கிளையாவது காமநுகர்தற்கமைந்த இளமையையுடைய தலைமகளிடத் துண்டாகிய குறிப்பினைத் தானறியுமளவுந் தலைமகனவளைச் சார்ந்துநின்று தன்வசமாம் நெஞ்சொடு சொல்லுதலாம். எ-று. (உகூ)

ஙo மறையோர் மன்னர் வணிகர் சூத்திரரெனு
மிறையோர் தத்தமக் கெய்து மற்றதுவே.

இ-ம். கைக்கிளைக்குரிய தலைமக்களையுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட கைக்கிளை மறையோரும், மன்னரும், வணிகரும், சூத்திரருமென்னு நால் வகைத் தலைமக்கட்குங் கூடுவதாம். எ-று. (ஙo)

ஙக. அதுவே,—
மொழிந்தோர் நால்வரு மொழிந்த நிலத்துறை
யிழிந்தோர் தம்மு ளுயர்ந்தோரு மெய்துப.

இ-ம். கைக்கிளைக்கெய்துவதோர் வேறுபாடுணர்-ற்று. மேற்சொல்ல ப்பட்ட கைக்கிளையை நால்வகைத் தலைமக்களுமன்றி ஐந்துநிலத்துமுறையு நிலமக்களுட் டலைமக்களும் பெறுவர். எ-று. உம்மையிழிபுசிறப்பாதலிற் சிறுபான்மை நோக்கிநின்றதெனக் கொள்க. (ஙக)

ஙஉ. தெய்வந் தன்னி னெய்தவுங் கிழத்தியி
னெய்தவும் படூஉ மியற்கைப் புணர்ச்சி. (

இ-ம். இயற்கைப்புணர்ச்சிக் கிலக்கணமுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட நால்வகைப் புணர்ச்சியுள்ளு மியற்கைப்புணர்ச்சியாவது, தெய்வத்தாற் பெறவும்படும், தலைமகளாற் பெறவும்படும் எ-று. படுமென்பதனை யிரண்டிடத்துங் கூட்டுக. (௩௨)

௩௩. இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி
முயற்சி யின்றி முடிவ தாகும்.

இ-ம். இயற்கைப்புணர்ச்சிக் கெய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்-ற்று. இவ்வியற்கைப்புணர்ச்சி தெய்வத்தாற் பெறுங்காலத்து முயற்சியின்றித் தானேமுடிவதாம். எ-று. எனவே யப்புணர்ச்சி தலைமகளாற் பெறுங்காலத்து முயற்சியானே முடிவதென்பதாயிற்று. முயற்சியின்றி முடிவதற்குச் சொல்லிய நுவற்சி வல்லேபெற்றுழியென்பதாம். (௩௩)

௩௪. உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியுங்
களவுப் புணர்ச்சியுட் காதலற் குரிய.

இ-ம். எய்தாததெய்துவித்தனுதலிற்று. உள்ளத்தாற் புணரும் புணர்ச்சியு மெய்யுற்றுப்புணரும் புணர்ச்சியுமென்னு மிரண்டுந் தலைமகற்குரியவாம் களவிற் புணர்ச்சிக்கண். எ-று. கள்ளம் எ-து களவு. (௩௪)

௩௫. பொருவிறந் தோற்குப் பெருமையு முரனு
நன்னுதற் கச்சமு நாணமு மடனு
மன்னிய குணங்க ளாதலின் முன்ன
ருள்ளப் புணர்ச்சி யுரிய தாகும்.

இ-ம். உள்ளப்புணர்ச்சி நிகழுமிடமுணர்-ற்று. பெருமையுமுரனுந் தலைமகற்கு நிலைபெற்ற குணமாதலானும், அச்சமும் நாணும் மடனுந் தலைமகட்கு நிலைபெற்ற குணமாதலானும் மேற்சொல்லப்பட்ட இரண்டு புணர்ச்சியுள்ளும் உள்ளப்புணர்ச்சி முன்னிகழ்தற்குரித்தாம். எ-று. உரனெனினும் அறிவெனினுமொக்கும். பெருமை எ-து பழியும் பாவமுமஞ்சுதல். அறிவு எ-து தக்கவறிதல். அச்சம் எ-து காணாததொன்று கண்டாற் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணம் எ-து பெண்டீர்க் கியல்பாகிய குணம். மடம் எ-து பேதைமையெனக்கொள்க. அவையவர்க்குக் குணமானவாறென்னையெனின்: “பெருமையு முரனு மாடூஉ மேன” எ-ம், “அச்சமுநாணு மடனுமுந்துறுத்த-நிச்சமும்பெண்பாற் குரியவென்ப” எ-ம் சொன்னாராகலி னெனக் கொள்க. (௩௫)

௩௬. காட்சி முதலாச் சாக்கா டீறாக்
காட்டிய பத்துங் கைவரு மெனினே
மெய்யுறு புணர்ச்சி யெய்துதற் குரித்தே.

இ-ம். மெய்யுறுபுணர்ச்சிநிகழுமிடமுணர்-ற்று. காட்சியும் வேட்கையும் ஒருதலையுள்ளுதலும், மெலிதலும், ஆக்கஞ்செப்பலும், நாணுவரையிறத்தலும், நோக்குவவெல்லா மவையேபோறலும், மறத்தலும், மயக்கமும், சாக்காடுமென்னும் பத்தவத்தையுமொருங்கு நிகழுமளவாயிற்றலைமகற்கு மெய்யுறுபுணர்ச்சி கூடுதற்குரித்தாம். எ-று.

அவற்றுட் காட்சியாவது தலைமகளைத் தலைமகன் றனியிடத்துக் காண்டல். வேட்கையாவது இவளைப்பெறவேண்டுமென்னு முள்ளநிகழ்ச்சி. ஒருதலையுள்ளுதலாவது இடைவிடாது நினைத்தல். மெலிதலாவது உடம்புவாடுதல். ஆக்கஞ்செப்பலாவது தன்னெஞ்சின்கண் வருத்தமிகுகின்றபடியைப் பிறர்க்குரைத்தல். நாணுவரையிறத்தலாவது நாணத்தினெல்லையைக் கடத்தல். நோக்குவவெல்லாம்மவையேபோறலாவது காணுமவையெல்லா மவளுறுப்புக்கள்போலத் தோன்றுவது. மறத்தலாவது அறிவுதிரிதல். மயக்கமாவது மோகித்தல். சாக்காடாவது இறந்துபடுதல். சாக்காடொழிந்த ஒன்பதும் மேலேகாட்டுதும்.

அஃதே லிவற்றுக் கிலக்கண மியாண்டுப் பெறுதுமெனின் "ஒத்தகிழவனுங் கிழவியுங் காண்ப - மிக்கோனாயினுங் கடிவரையின்றே" எ-ம், "வேட்கையொருதலையுள்ளுதன்மெலித-லாக்கஞ்செப்பனாணுவரையிறத்த-னோக்குவ வெல்லா மவையேபோறன்-மறத்தன் மயக்கஞ் சாக்காடென்றிச்-சிறப்புடைமரபி னவைகளவெனமொழிப" எ-ம் வந்த சூத்திரங்களாற் பெறுதுமெனக் கொள்க. (௩௬)

௩௭. பகற்குறி யிரவுக் குறியெனும் பான்மைய
புகற்சியி னமைந்ததோர் புணர்ச்சிநிக ழிடனே.

இ-ம். குறியின் பாகுபாடுணர்-ற்று. அன்பினலமைந்ததோர் புணர்ச்சி நிகழுமிடம் பகற்குறி யிரவுக்குறி யென்னும் பகுதியினையுடையதாம் எ-று. (௩௭)

௩௮. இல்வரை யிகந்தது பகற்குறி யிரவுக்குறி
யில்வரை யிகவா வியல்பிற் றாகும்.

இ-ம். குறிகட்கிலக்கணமுணர்-ற்று. பகற்குறியில்லினெல்லையைக் கடந்ததாம். இரவுக்குறியில்லினெல்லையைக்கடவாததாம். எ-று. (௩௮)

௩௯. ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றிருவகைத் தாகு
நிறைதரு காதன் மறையினிற் பிரிவே.

இ-ம். களவியற்பிரிவு வரையுணர்-ற்று. ஒருவழித்தணத்தலும் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதலு மென்னுமிரண்டுபகுதியினையுடைத்தாம் நிறைந்த காதலினையுடைய களவின்கட் பிரியும் பிரிவு. எ-று.

அவற்றுள் ஒருவழித்தணத்தலாவது ஒரூரின்கண்ணும் ஓர்நாட்டின்கண்ணும் பிரிதல். வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் காட்டிடையிட்டும் நாட்டிடையிட்டும் பிரிதலெனக் கொள்க. (நகூ)

சഠ. அவற்றுள்,—
ஒருவழித் தணத்தற்குப் பருவங் கூறார்.

இ-ம். ஒருவழித் தணத்தற்குரியதோ ரிலக்கண முணர்-ற்று. வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் காட்டிடையிட்டும் நாட்டிடையிட்டும் பிரியப்பட்டாராயினதற்குப் பருவவரையறை சொல்லார் சான்றோர். எ-று. (சഠ)

சக. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரித
லிருதுவின் கண்ண தென்மனார் புலவர்.

இ-ம். வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவினிலக்கணமுணர்-ற்று. வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் காட்டிடையிட்டும் நாட்டிடையிட்டும் பிரிதல். அஃதிரண்டு திங்க ளிகவாமை யுடைத்தென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. என்னை? "களவினுட்டவிர்ச்சி வரைவினீட்டந்-திங்களிரண்டினகமெனமொழிப." எ-வின். (சக)

சஉ. களவு வெளிப்படா முன்னும் பின்னும்
விளையு நெறித்தென விளம்பினர் வரைவே.

இ-ம். வரைவுநிகழுமிடமுணர்-ற்று. களவு வெளிப்படாமுன்னும் களவு வெளிப்பட்டபின்னும் விளையுநெறியினையுடைத்தாம் வரைவு என்று சொல்லுவர் புலவர். எ-று. களவு வெளிப்படாமுன்னு மென்றதனாற் களவு வெளிப்பட்டபின்னுமெனத் தந்துரைக்கப்பட்டது. இவ்வாறுரைத்தற்கிலக்கணம் யாதோவெனின், "களவுவெளிப்படாமுன்னுறவரைதல்-களவு வெளிப்பட்ட பின்னுறவரைதலென் - றியிரண் டென்ப வரைதலாறே." எ-வின். (சஉ)

சங. நான்குவகைப் புணர்ப்பினுந் தான்றெருண்டு வரைத
பாங்கனிற் பாங்கியிற் றெருளுற்று வரைதலுங் [லும்
களவு வெளிப்படா முன்வரைத லாகும்.

இ-ம். களவுவெளிப்படாமுன்னிகழும் வரைவிலக்கணமுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட வியற்கைப்புணர்ச்சி முதலாகிய நான்கு புணர்ச்சிக்கண்ணுந் தலைமகன்றானே தெருண்டுவரைதலும் பாங்கனாலாதல் பாங்கியாலாதல் தெருட்டப்பட்டு வரைதலும் ஆகியவிவை களவுவெளிப்படாமுன் வரைதலாம். எ-று. (சங)

சச. உடன்போய் வரைதலு மீண்டு வரைதலு
முடன்போக் கிடையீ டுற்று வரைதலுங்
களவுவெளிப் பட்டபின் வரைத லாகும்.

இ-ம். களவுவெளிப்பட்டபின்னிகழும் வரைவிற்கிலக்கணமு-ணர்-ற்று. புணர்ந்துடன்போய தலைமகன், தன்னூரின்கண்ணே வரைதலும் மீண்டுவந்து தம்மூரின்கண்ணே வரைதலும், உடன்போக்கிடையீட்டுத் தலைமகன்றலைமகடமரை வழிபட்டுவரைதலுமாகியவிவை களவுவெளிப்பட்டபின் வரைதலாம். எ-று. (சச)

சரு. அவற்றுள்,—
உடன் போய்வரைத லொருவழித்தாகும்.

இ-ம். உடன்போய்வரைதல் வகையுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட மூன்றுள்ளும் உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலாகிய வஃதொருவகையினையுடைத்தாம். எ-று. (சரு)

சசு. அவண்மனை வரைதலுந் தன்மனை வரைதலு
மெனமீண்டு வரைத லிருவகைத் தாகும்.

இ-ம். மீண்டுவரைதலின் வகையுணர்-ற்று. தலைமகளை மனையின்கண்ணே வரைதலும், தன்மனையின்கண்ணே வரைதலுமென விரண்டு வகையினையுடைத்தாம் உடன்போய்மீண்டு தம்மூரின்கண்ணே வரைதல். எ-று. (சசு)

சஎ. ஆற்றா றஞ்சினு மவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினுங் காப்புக்கைம் மிகினு
மாற்றுறத் தோன்று மறத்தொடு நிலையே.

இ-ம். அறத்தொடு நிலைநிகழுமிடமுணர் - ற்று. தலைமகன் வரும் வழியேதத்தினையஞ்சியவிடத்துந் தமர்வரைவெதிர்கொள்ளாதவிடத்தும் பிறர்வரைவுநேருமிடத்துங் காவல்கைமிகுந்தவிடத்தும் நெறிப்படப் புலப்படுமறத்தொடுநிலை. எ-று. என்னை? "காப்புக்கைம்மிகக் காமம்பெருகினு-நொதுமலர்வரையும் பருவமாயினும்-வரைவெதிர்கொள்ளாது தமரவண்மறுப்பினு-மவனூறஞ்சுங்காலமாயினு-மந்நாலிடத்துமெய்ந்நாணொரீஇ-யறத்தொடுநிற்றறேழிக்குரித்தே." எ-லின். (சஎ)

சஅ. தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்குஞ்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கு
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கு மென்ப நெறியுணர்ந் தோரே.

இ-ம். அறத்தொடு நிற்றற்குரியாரையுணர்-ற்று. தலைவி முதலாகிய நால்வரும் இவ்வாறு அறத்தொடு நிற்றற்குரியாரென்று சொல்லுவரகப்பொருளிலக்கணமுணர்ந்தோர். எ-று. (சஅ)

சகூ. ஒருபுணர் வொழிந்தவற் றொருவழி தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியவு
மிறைவனைச் செவிலி குறிவழிக் காணவு
மனைவயிற் செறிப்பவும் வருத்தங் கூரின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணு
மனநடைக் கிழவி யறத்தொடு நிற்கும்.

இ-ம். தலைமகளறத்தொடு நிற்குமிடமுணர்-ற்று. பாங்கியிற் கூட்டமாகிய ஒன்றுநீங்கின மூன்றுபுணர்ச்சிக்கண்ணுந் தலைமகனொருவழித்தணத்தலானும், வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதலானுஞ் செவிலிதலைவனைக் குறிவயிற்காண்டலானும் இற்செறித்தலானுந் தனக்குவருத்தமிகுமாயிற் றன்னையவள் வினவியவிடத்தும் வினவாவிடத்துந் தலைமகள் பாங்கிக்கறத்தொடுநிற்கும். எ-று. பாங்கி எ-து அதிகாரத்தான் வந்தது. இதற்குவிதி யாதோவெனின், "வரைவிடைவைத்தகாலத்துவருந்தினும்- வரையநாளிடைவந்தோன்முட்டினு - முரையெனத்தோழிக் குரைத்தற்கண்ணுந்-தானேகூறுங் காலமுமுளவே." எ-லின். (சகூ)

ருo. முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளிற்
சின்மொழிப் பாங்கி செவிலிக் குணர்த்தும்.

இ-ம். பாங்கியறத்தொடு நிற்குந் திறமுணர்-ற்று. முன்னிலைப் புறமொழியும், முன்னிலைமொழியுமாகிய விரண்டினுனும் பாங்கி செவிலிக்கறத்தொடுநிற்கும். எ-று. (ருo)

ருக. செவிலிநற் றாய்க்குக் கவலையின் றுணர்த்தும்.

இ-ம். செவிலியறத்தொடு நிற்குந் திறமுணர்-ற்று. செவிலியறத்தொடு நிற்குங்காலத்து நற்றாய்க்கு விளங்க அறிவிக்கும். எ-று. (ருக)

ருஉ. நற்றா யறத்தொடு நிற்குங் காலைக்
குரவனுந் தன்னையுங் குறிப்பி னுணர்ப.

இ-ம். நற்றாயறத்தொடுநிற்குந் திறமுணர்-ற்று. நற்றாயறத்தொடு நிற்குங்காலத்துச் சொல்லாடப்பெறாளாதலிற் றலைமகடந்தையுந் தன்னையும் அவள் குறிப்பினானேயுணர்வர். எ-று. என்னை? "தந்தையுந்தன்னையு முன்னத்தினுணர்ப" எ-லின். (ருஉ)

ருங. பாங்கி தலைவியை வினவுஞ் செவிலி
பாங்கியை வினவும் பாங்கி தன்னையு
நற்றாய் தானும் வினவுஞ் செவிலியிற்
பொற்றொடிக் கிழவியை யுற்று நோக்கின்.

இ-ம். அறத்தொடுநிற்பார்க்கு வினநிகழுமிட முணர்-ற்று. தலைமகண்மாட்டு வேறுபாடுகண்டுழிப் பாங்கிமுதலாகிய மூவரு மிவ்வாறு வினவப்பெறுவார். எ-று. பாங்கிதன்னையுமென்னும்மும்மை நற்றாய் செவிலியை வினதலன்றியென்னும் பொருள்படநின்றது. இவ்வாறு நற்றாய் வினவுவது செவிலியைப்போற் றலைமகளையுற்றுப்பார்த்தவிடத்தெனக் கொள்க. (௫௩)

௫௪. ஆங்குடன் போயுழி யறத்தொடு நிற்ப
பாங்கியுஞ் செவிலியும் பயந்த தாயும்.

இ-ம். புணர்ந்துடன்போயவிடத்து அறத்தொடுநிற்றற்குரியாரையுணர்-ற்று. தலைமகனுந் தலைமகளும் புணர்ந்துடன்போயகாலத்து அறத்தொடுநிற்பார் தோழியுஞ் செவிலியும் நற்றாயும். எ-று. ஆங்கு அசை. ௫௪

௫௫. களவின் வழிவந்த கற்பும் பொற்பமை
களவின் வழிவராக் கற்புமென் றாங்கு
முற்படக் கிளந்த கற்பிரு வகைத்தே.

இ-ம். கற்பின் பாகுபாடுணர் - ற்று. மேற் சொல்லப்பட்ட கற்பு, களவிற் புணர்ச்சிவழியான் வந்த கற்பும் களவின்வழிவாராக் கற்புமென விரண்டுபகுதியினையுடைத்து. எ-று. அஃதேற் களவின்வழிவந்த கற்பினை முற்கூறியதென்னையெனின், "முற்புணர்த்தல்சொல்லின்மையிற் - கற்பெனப்படுவது களவின்வழித்தே" என்றாராகலின் அதனது சிறப்பு நோக்கியெனக் கொள்க. (௫௫)

௫௬. குரவரிற் புணர்ச்சி வாயிற் கூட்டமென்
றிருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி.

இ-ம். கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சி வரையறை யுணர்-ற்று. கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சி, குரவராற் புணரும் புணர்ச்சியும் வாயில்களாற் புணரும் புணர்ச்சியுமென் றிரண்டுபகுதியினை யுடைத்து. எ-று. இவற்றுட் குரவராற் புணரும் புணர்ச்சியாவது வதுவைகூடிப் புணரும் புணர்ச்சி. வாயிலாற் புணரும் புணர்ச்சியாவது புலவிதீர்த்துப் புணரும் புணர்ச்சியெனக் கொள்க. (௫௬)

௫௭. அவற்றுட்,—
களவின் வழிவந்த கற்பின் புணர்ச்சி
கிளைஞரி னெய்தாக் கேண்மையு முடைத்தே
யுடன்போய் வரைதலு முண்மை யான.

இ-ம். களவின்வழிவந்த கற்பிற்புணர்ச்சிக் கெய்துவதோர் வேறுபாடுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட விருவகைக் கற்பினுள்ளுங் களவின்வழிவந்த கற்பினுட் புணரும் புணர்ச்சி தலைமகள் சுற்றத்தாராற் பெறப்படாத கோட்பாட்டினையுமுடைத்தாம், புணர்ந்துடன்போய தலைமகன் தன்னூரின்கண்ணே வரைந்துகோடலுமுண்டாதலால். எ-று. "கொடுப்போரின்றியுங்கரணமுண்டே- புணர்ந்துடன்போகியகாலையான" எ-லின். (௫௭)

௫௮. மறைவிற் புணர்ச்சியு மன்றற் புணர்ச்சியு
மிறைவற் கெய்தலுண் டிருவகைக் கற்பினும்.

இ-ம். தலைமகற்குக் கற்புக்காலத்து நிகழுமொழுக்க வேறுபாடுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட இருவகைக் கற்பின்கண்ணும் தலைமகற்குக் களவிற்புணர்ச்சியும் வதுவைப்புணர்ச்சியும் பொருந்துதலுண்டு. எ-று. (௫௮)

௫௯. காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்
பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்
றன்னவ ருரிய ரவையிரண் டற்கும்.

இ-ம். அவ்வொழுக்க மிரண்டிற்குமுரிய மகளிரையுணர்-ற்று. காதற்பரத்தை முதலாய மூவகையோருந் தலைவனவ்வகையொழுகு மொழுக்கமிரண்டிற்குமுரியர். எ-று. (௫௯)

௬0. அவருட்,—
காதற் பரத்தையர் களவிற் குரியர்.

இ-ம். களவிற்குரிய மகளிரையுணர்-ற்று. மேற் சொல்லப்பட்ட மூவகையோருள்ளுங் காதற்பரத்தையர் களவொழுக்கத்திற்குரியர். எ-று. (௬0)

௬௧. ஒழிந்தோர் மன்றற் புணர்ச்சிக் குரியர்.

இ-ம். வதுவைப்புணர்ச்சிக்குரிய மகளிரையுணர்-ற்று. காமக்கிழத்தியும், பின்முறைவதுவைப் பெருங்குலக்கிழத்தியுமாகிய விருதிறத்தோரும் வதுவைப்புணர்ச்சிக்குரியர். எ-று. (௬௧)

௬௨. பரத்தையிற் பிரித லோதற்குப் படர்த
லருட்டரு காவலொடு தூதிற் ககற
லுதவிக் கேக னிதியிற் கிகத்தலென்
றுரையறு கற்பிற் பிரிவறு வகைத்தே.

இ-ம். கற்பிற்பிரியும் பிரிவுவரையறையுணர்-ற்று. பரத்தையிற் பிரிதன் முதலாய் நிதியிற்கிகத்தலீறாக வறுவகையினையுடைத்தாங் கற்பின்கட்பிரியும் பிரிவு. எ-று. என்னை? "ஓதல்காவல்பகைதணிவினையே-வேந்தற்குற்றுழி பொருட்பிரிபரத்தையென்-றாங்கவ்வாறே யவ்வயிற்பிரிவே" எ-லின். அஃதே லீண்டுப் பரத்தையிற்பிரிவு முற்கூறியதென்னையெனின், அது தொல்காப்பியர் துணிவெனக்கொள்க. (௬௨)

௬௩. அயன்மனைப் பிரிவயற் சேரியி னகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத் தான.

இ-ம். தலைமகற்குரிய சில தொழிலுணர்-ற்று. அயன்மனைப்பிரிவு முதலாகிய மூன்று பிரிவுந் தலைமகற்குரியவாம் பரத்தையிற் பிரியுங்காலத்து. எ-று.

கூச. கெழீஇய காமக் கிழத்தியர் பொருட்டாத்
தழீஇய வயன்மனைத் தலைவன் பிரியும்.

இ-ம். நிறுத்தமுறையானே யயன்மனைப்பிரிவிற் கேதுவுணர்-ற்று. பொருந்திய காமக்கிழத்தியர் காரணமாகத் தலைமகன்றொடர்ந்த அயன்மனைக்கண்ணே பிரியும். எ-று. (கூச)

கூரு. பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையு
மின்னியல் விழவு மேது வாக
வவனயற் சேரியி னகலு மென்ப.

இ-ம். அயற்சேரியிற் பிரிவுக்கெய்துவதுணர்-ற்று. இரண்டாவது வரைந்துகொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக் கிழத்தியுங் காதற்பரத்தையும் விழவுங்காரணமாகத் தலைமக னயற்சேரியின்கண்ணே பிரியும். எ-று. (கூரு)

கூசு. விருந்தியற் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்
டிளமரக் காவின் விளையா டற்கும்
புனலா டற்கும் புறநகர்ப் போகும்.

இ-ம். புறநகர்ப்போதற்கேது வுணர்-ற்று. மரக்காவின்கண்ணே விளையாடுதல் காரணமாகவும் புனலாடுதல் காரணமாகவுந் தலைமகன் புதியளாகிய பரத்தையைத் தேர்மேலேற்றிக்கொண்டு நகர்ப்புறத்திலே போம். எ-று. நகர்ப்புறமெனமாறுக. (கூசு)

கூஎ. ஊட லவ்வழிக் கூடுங் கிழத்திக்கு.

இ-ம். தலைமகட்கூடனிகழுமிடமுணர்-ற்று. அம்மூன்று பிரிவின்கண்ணுந் தலைமகட்கூடல் பொருந்தும். எ-று. (கூஎ)

கூஅ. கொளைவல் பாணன் பாடினி கூத்த
ரிளையோர் கண்டோ ரிருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி யறிஞர்
காமக் கிழத்தி காதற் புதல்வன்
விருந்தாற் றுமை யென்றிவை யூடன்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்க டாமே.

இ-ம், மேற்சொல்லப்பட்ட வாயில்களாவன விவையென்ப துணர்-ற்று. பாணன்முதலாக ஆற்றுமையீறாகச் சொல்லப்பட்ட விவையனைத்துந் தலைமகளூடலை மருந்தாய்த் தீர்க்கும் வாயில்களாம். எ-று. இதனுளுயர்திணையுமஃறிணையும் விரவியெண்ணி யிவையென வஃறிணையாற் றொகைகொடுத்தது "பலவயினானு மெண்ணுத் திணைவிரவுப் பெய - ரஃறிணை முடிபின செய்யுளுள்ளே" எ-லின். (கூஅ)

௬௯. ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்.

இ-ம். ஓதற்றொழிற்குரியதோர் சிறப்புணர்-ற்று. ஓதலென்னுந் தொழில் அந்தணர் அரசர் வணிகர் என்கிற மூவர்க்குமுரித்து. எ-று. (௬௯)

௭௦. அல்லாக் கல்வி யெல்லார்க்கு முரித்தே.

இ-ம். ஒழிந்த கல்வியினது தன்மையுணர்-ற்று. வேதமல்லாத கல்வி நால்வர்க்குமுரித்து. எ-று. (௭௦)

௭௧. படைக்கலம் பயிறலும் பகடுபிற வூர்தலு
முடைத்தொழி லவர்க்கென வுணர்ந்திசி னோரே.

இ-ம். நாவினுற் கற்குந் தொழிலல்லாத கல்வித்தொழிலுணர் - ற்று. படைக்கலங்களைக் கற்றலும் யானையுங் குதிரையுந் தேரு முதலாயின வூர்தலும் மூவர்க்கு முடைமையாகிய தொழிலெனச் சொன்னார் புலவர். எ-று. பிறவென்றதனாற் றேருங் குதிரையு முதலாயின கொள்ளப்பட்டன. பகடும் பிறவு மெனவும்மைத்தொகை. (௭௧)

௭௨. அறப்புறங் காவ னாடு காவலெனச்
சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே.

இ-ம். காவற்றொழிலின் பாகுபாடுணர்-ற்று. அறப்புறங்காவலும் நாடு காவலுமென விருகூற்றதாம் மேம்பாடுற்ற காவற்றொழிலின் பாகுபாடு. எ-று.

௭௩. அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே.

இ-ம். நிறுத்தமுறையானே அறப்புறங்காவற்றன்மையுணர்-ற்று. மேற் சொல்லப்பட்ட விரண்டினுள்ளும் அறப்புறங்காவலென்பது நால்வர்க்கு முரித்து. எ-று. (௭௩)

௭௪. மற்றைக் காவல் கொற்றவற் குரித்தே.

இ-ம். நாடுகாவற்றன்மையுணர்-ற்று. நாடுகாவலென்பது அரசற்குரித்து. எ-று. (௭௪)

௭௫. வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்குந்
தூது போதற் றொழிலுரித் தாகும்.

இ-ம். தூதுபோதற்றொழிலின்றன்மையுணர்-ற்று. பார்ப்பாரும் வேந்தருமென்னு மிருவர்க்கு முரித்தாந் தூதுபோதற்றொழில். எ-று. பகைதணிவினையெனினுந் தூதுவினையெனினு மொக்குமென்க.

"வயலைக்கொடியின் வாடியமருங்கு-வுயவலூர்திப்பயலைப்பார்ப்பான்-எல்லினந்துநில்லாதுபுக்குச்-சொல்லியசொல்லேசிலவேயதற்கே-யேணியுஞ்சீப்புமாற்றிய-மாண்வினையானையின்மணிகளைந்தனவே" என்பதனாலும், "மடந்தாழு

நெஞ்சத்துக் கஞ்சனூர்வஞ்சங்-கடந்தானை நூற்றுவர்பா லூற்றிசையும்போற்றத்-துடர்ந்தாரணமுழங்கப் பஞ்சவர்க்குத்தூது-நடந்தானை யேத்தாத நாவென்னநா வே-நாராயணாவென்னாநாவென்னநாவே" என்பதனாலும் அவ்விருவர்க்குந் தூதுபோதற்றொழி லுரித்தானவாறு கண்டுகொள்க. (எரு)

எசு. சிறப்புப் பெயர்பெறிற் செப்பிய விரண்டு
முறற்குரி மரபின வொழிந்தோ ரிருவர்க்கும்.

இ-ம். நாடுகாவற்றொழிற்குந் தூதுபோதற்றொழிற்குமுரியதோர் வேறுபாடுணர்-ற்று. அரசராற் சிறப்புப்பெயர் பெற்றாராயின் வணிகருஞ் சூத்திரருமென்னு மிருவர்க்கு முற்கூறியவிரண்டுதொழிலும் பொருந்துதற்குரிய மரபினவாம். எ-று. உரிமரபென்பது விகாரம். (எசு)

எஎ. உதவி யந்தண ரொழிந்தோர்க் குரித்தே.

இ-ம். உதவித்தொழிலின்றன்மையுணர்-ற்று. வேந்தர்க்குற்றுழியுதவியாகிய தொழில் அந்தணரொழிந்த மூவர்க்குமுரித்து. எ-று. (எஎ)

எஅ. பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவு
முரைத்த நால்வர்க்கு முரிய வாகும்.

இ-ம். நால்வர்க்கும் பொதுவாகிய தொழிலிவையென்பதுணர்-ற்று. பரத்தையிற்பிரிவும் பொருள்வயிற்பிரிவுமாகியவிரண்டும் மேற்சொல்லப்பட்ட நால்வர்க்கு முரியவாம். எ-று. (எஅ)

எகூ. இழிந்தோர் தமக்கு மிவற்றுண்மேம் பட்டவை
யொழிந்தன வாமென மொழிந்தனர் புலவர்.

இ-ம். நிலமக்களுட் டலைமக்களுக்குரிய தொழிலுணர்-ற்று. இவ்வகைத்தொழிலுள்ளும் மேம்பட்டனவாகிய வோதலும் நாடுகாவலுந் தூதுபோதலுமாகிய மூன்றுதொழிலும் ஒழித்தல்லாதனவெல்லா மிழிந்தோராகிய நிலமக்களுட்டலைமக்கட்குரியவாமெனச் சொன்னா ரறிவோர். எ-று. (எகூ)

அ0. கல்வி முதலா வெல்லா வினைக்குஞ்
சொல்லி யகறலுஞ் சொல்லா தகறலு
முரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு.

இ-ம். பிரியுந் தலைமகற் குரியதோ ரிலக்கணமுணர்-ற்று. கல்விமுதலாகிய ஐந்துவினைக்குந் தலைமகட்குச் சொல்லிப்பிரிதலுஞ் சொல்லாது பிரிதலுமுரியன் றலைமகன். (அ0)

அக. சொல்லா தகலினுஞ் சொல்லும் பாங்கிக்கு.

இதுவுமது. தலைமகன் றலைமகட்குச் சொல்லாது பிரியுமாயினுந் தோழிக்குச் சொல்லியே பிரியும். எ-று. (அக)

அஉ. குறிப்பி னுணர்த்தும் பெறற்கருங் கிழத்திக்கு.

இ-ம். தலைவன், சொல்லாது பிரியுமாயினுங் குறிப்பினுணர்த்துந் தலைவிக்கு. எ-று. (அஉ)

அஙு. காலிற் சேறலுங் கலத்திற் சேறலு
மூர்தியிற் சேறலு நீதி யாகும்.

இ-ம். பிரியுங்காலத்து நால்வர்க்கும் பொதுவாகிய தொழிலுணர்-ற்று. காலிற்சேறன்முதலாகிய மூன்று மெல்லாப்பிரிவின்கண்ணு மெல்லார்க்குமியல்பாம். எ-று. (அங)

அச. புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்குக்
கலத்திற் சேறல் கடனன் றென்ப.

இ-ம். அந்தணர்க்காகாத தொழிலுணர்-ற்று. காலிற்சேறன் முதலாகிய மூன்றினுள்ளுங் கலத்திற்சேறலாகிய தொழில் கல்வியினுன்மிக்க அந்தணர்க்கு முறைமையன்றென்று சொல்லுவர் புலவர். எ-று. (அச)

அரு. வலனுயர் சிறப்பின் மற்றைமூ வர்க்குங்
குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப.

இ-ம். அரசர் முதலாகிய மூவர்க்குமாகாத தொழிலுணர்-ற்று. குலமட மாதரொடுகூடக் கலமிசைச்சேறலுங் குலமடமாதரொடுகூடப் பாசறைச்சேறலுமாகியவிரண்டும் வெற்றியுயர்ந்த சிறப்பினையுடைய வேந்தர்முதலாகிய மூவர்க்குங் குற்றமென்று சொல்லுவர் கற்றுவல்லோர். எ-று. குலமடமாதரென்பதனை யிரண்டிடத்துங் கூட்டிக்கொள்க.

"மணமலிபூங்கானல்வருகல்ன்கணேக்கிக்-கணவன்வரக்கல்லுருவநீத்தாள்" என்பதனுற் குலமடமாதரொடு சேறலாகாமையறிக. "பனியிருங்கங்குலுங்கமியனீந்தித்-தன் னூரோனே நன்னுதல்யாமே-இரவுத்துயின்மடிந்ததானை-யுரவுச்சினவேந்தன்பாசறையேமே" என்பதனுற் குலமடமாதரொடு பாசறைக்கட் செல்லாமையறிக. குலமாதரொடு செல்லாரெனவே பரத்தையொடு செல்வர் எ-று. அஃதெற்றுற் பெற்றுமோவெனின், "துயிலின்றியாநீத்த தொழுவையம் புணாடி- மயிலியலார்மருவுண்டுமறந்தமைகுவாண்மன்னே- வெயிலொளியறியாதவிரிமலர்த்தண்காவிற்-குயிலாலும்பொழுதெனக்கூறினருளராயின்" என்பதனுற் பரத்தையொடு பாசறைக்கட் சென்றவாறறிக. ஏனையது வந்தவழிக் கண்டுகொள்க. (அரு)

அசா. ஓதன் முதலா வோதிய வைந்தினும்
பிரிவோ னழுங்கற்கு முரியோ னாகும்.

இ-ம். தலைமகற்குப் பிரிவிடத்துரிய வேறுபாடுணர்-ற்று. ஓதன்முதலாகச் சொல்லப்பட்ட வைந்தின்கண்ணும் பிரியுந் தலைமகன் போதற்கேயன்றிப் போகாமைக்குமுரியன். எ-று. (அசா)

௮௭. இல்லத் தழுங்கலு மிடைச்சுரத் தழுங்கலு
மொல்லு மவர்க்கென வுரைத்திசி னோரே.

இ-ம். பிரியக்கருதிய தலைமகன் அவ்வில்லின்கண்ணே செல்லழுங்குத லும் இடைச்சுரத்தின்கண்ணே செலவழுங்குதலுமென விரண்டிற்கு முரியனெ னக் கூறினர் புலவர். எ-று.

இவற்றிற்கிலக்கியம்: "புணரிற்புணராதுபொருளேபொருள்வயிற்-பிரியிற் புணராது புணர்வேயாயிடைச்-செல்லினுஞ்செல்லாயாயினு-நல்லதற்குரியைவா ழியநெஞ்சே" "பொருளேவாட்பூவின்பொய்கைநாப்ப-ணெடுமீனவையிற்கெ டுகயாரே - விரிநீர்வியலகத்தோணியாக - வெழுபாணளக்கும்விழுநிதிபெறிற் - கனங்குழைக்கனகமார்த்தசேயரி - மழைக்கணமர்ந்தினிதுநோக்கமொடுசெகுத் தன - னேனைவாழ்தற்குவாழியபொருளே" "புறந்தாழ்பிருண்டகூந்தற்பொதி நிறம்-பெறுமிதழ்ப்பொலிந்தவுண்களுள்ளம்-பிணிகொண்டோள்வயினெஞ்சஞ்- செல்லறீர்க்குஞ்செல்வாமென்னுஞ் - செய்வினைமுடியாதெவ்வருஞ்சூழ-வெய்யா மையோடிழிபுதலைத்தருமென- வுறுதிதூக்காத்தூங்கியறிவே-சிறிதுநனிவிரைய லென்னுமாயிடை-யொளிறேந்துமருப்பிற்களிறுமாறுபற்றிய-தேய்புரிப்பழங்கயி றுபோல-வீவதுகொல்லெனவருந்தியவுடம்பே" என வரும். (௮௭)

௮௮. தலைவி தன்னையுந் தன்மனந் தன்னையு
மலமர லொழித்தற் கழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லா னல்லன்.

இ-ம். எய்தியதோரிலக்கணமுணர்-ற்று. இல்லகத்துத் தலைமகளையுந் தன்னெஞ்சினையுந் தேற்றுதல்காரணமாகவும் இடைச்சுரத்திற் றன்னெஞ்சைத் தேற்றுதல் காரணமாகவு மழுங்குமாத்திரமல்லது தலைமகன் போகானல்லன். எ-று.

இல்லத்துத் தலைமகளைத் தேற்றுதற்குச் செய்யுள் வருமாறு: "பொன் னினுமணியினும் போலுமியாழ - நன்னர்மேனியு நறியபூங்கதுப்பும் - போதும் பணையும்போலுமியாழநின் - மாதருண்கண்ணும்வனப்பின்றோளு - மவைகாண் டொறுமகமலிந்தியானு - மறநிலைபெற்றோளையெனற்றலைப்பொலந்தொடிப் - புத ல்வனும்போதல்கற்றனன்-வினையும்வேறுபுலத்திலென- நினையின்யாதினிற்பிரி கோமடந்தை-காதலுனுங்கடலினும்பெரிதே." எ-ம் பிறவுமன்ன. (௮௮)

௮௯. அவற்றுள்,—
ஓதற் பிரிவுடைத் தொருமூன் றியாண்டே.

இ-ம். ஓதற்பிரிவிற்கியாண்டு வரையறையுணர் - ற்று. மேற் சொல்லப் பட்ட பிரிவுகளுள் ஓதற்குப் பிரியும்பிரிவு மூன்றியாண்டெல்லையினையுடைத்து. எ-று என்னை? "வேண்டியகல்வியாண்டுமூன்றிறவாது." எ-லின். (௮௯)

௯௦. தூதிற் பிரிவுந் துணைவயிற் பிரிவும்
பொருள்வயிற் பிரிவு மோரியாண் டுடைய.

இ-ம். தூதிற்பிரிவுமுதலாகிய மூன்றுபிரிவிற்கும் யாண்டுவரையறையுணர்-ற்று. தூதுகாரணமாகப் பிரியும் பிரிவும், துணைகாரணமாகப் பிரியும் பிரிவும் பொருள்காரணமாகப் பிரியும்பிரிவும் ஓரியாண்டினெல்லையினையுடைய. எ-று. என்னை? "வேந்துறுதொழிலேயாண்டகமே" எ-ம், "தூதும்பொருளுமோதியதாகும்." எ-ம் சொன்னாராகலின். அஃதேற் பரத்தையிற்பிரிவுக்குங் காவற்பிரிவுக்கும் யாண்டு வரையறாததென்னையெனின் அவை காட்டிடையிட்டும் நாட்டிடையிட்டும் பிரியப்படாமையி னீண்டு வரையறுத்திலரெனக் கொள்க. (கூ0)

கூக. பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் னீரா று நாளுங்
கருவயிற் றுறுங் கால மாதலிற்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

இ-ம். பரத்தையிற்பிரிந்த தலைமகற்குரியதோ ரிலக்கணமுணர்-ற்று. நீராடியபின் பன்னிருநாளுங் கருப்படுங் காலமாதலிற் பரத்தையிற் பிரிந்த தலைமகன் பன்னிரண்டு நாளுந் தலைமகளைப் பிரியப்பெறான் பூப்பு நிகழுங்காலத்து. எ-று. என்னை? "பூப்பின்புறப்பாடீராறுநாளு-நீத்தகன்றுறைதலறத்தாறன்றே-பரத்தையிற்பிரிந்தகாலையான" எ-ம், "தீண்டாநாண்மூந்நாளுநோக்கார் நீராடியபின்- னீராறுநாளுமிகவற்கவென்பதே - பேரறிவாளர்துணிவு" எ-ம் தொல்காப்பியனாரும் பெருவாயின்முள்ளியாரு மெடுத்தோதினராகலின். (கூக)

கூஉ. ஓதற் ககன்றோ னொழிந்திடை மீண்டு
போதற் கியையவும் புலம்பவும் பெறான்.

இ-ம். ஓதற்குப் பிரிந்த தலைமகற்காவதோ ரிலக்கணமுணர்-ற்று. ஓதற்குப் பிரிந்த தலைமகன் அவ்வோதலை யொழிந்திடையிட்டு மீண்டு வருதற்குடம்படவும் அவ்விடத்துத் தலைமகளை நினைந்து புலம்பவும் பெறான். எ-று. (கூஉ)

கூங. தூதுந் துணையு மேது வாகச்
சென்றோ னவ்வினை நின்றுநீட் டித்துழிப்
புலந்து பாசறைப் புலம்பவும் பெறுமே.

இ-ம். தூதுந்துணையுங்காரணமாகப் பிரிந்ததலைமகற்கெய்துவதோர்விதியுணர்-ற்று. தூது காரணமாகவுந் துணைகாரணமாகவும் பிரிந்த தலைமகன் அத்தொழில்கள் பிரிவிற்கோரியாண்டின்கண் முடியாது நீட்டித்தகாலத்துப் பாசறைக்கண்ணேயிருந்து தலைமகளை நினைந்துநின்று வெறுத்துப் புலம்புதல்பெறும். எ-று. அஃதாயினவாறென்னையெனின் "மூன்றன்பகுதிமண்டலத்தருமையுந்-தோன்றல்சான்மான்றோர்மென்மையும்பாசறைப்-புலம்பலும்" என்னுமிலக்கணத்தானுயிற்றெனக் கொள்க. (கூங)

கூச. பூத்தமை சேடியிற் புரவலற் குணர்த்தலு
நீத்தமை பொறாது நின்று கிழவோனைப்
பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறலுங்

கிழவோற் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்தெதிர் கோட லும்அவனொடு
பாங்கொடு பரத்தையைப் பழித்தலு நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவு மாலையங் கழனியு
மாலைவெள் ளருவியு மலையுங் கானமுங்
கண்டுவிளை யாடலுங் கடும்புன லியாறும்
வண்டிமிர் கமல வாவியுங் குளனு
மாடிவிளை யாடலுங் கூடுங் கிழத்திக்கு.

இ-ம். தலைமகட்குக் கற்புக்காலத்துக்குரியவொழுகலாறெல்லாந் தொகுத்துணர்-ற்று. பூத்தமைசேடியிற் புரவலற்குணர்த்தன்முதலாகக் குளனாடலீறுகச் சொல்லப்பட்டனவெல்லாங் கற்புக்காலத்துத் தலைமகட்குப்பொருந்தும். எ-று. கற்பு என்பது அதிகாரத்தான் வந்தது. இவற்றுக்குதாரணம் மேலே காட்டப்படும். (கூச)

கூரு. வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுஞ்
சேயிழை யூட றீர்த்தலும் போயுழி
யவணலந் தொலைவுகண் டழுங்கலு மவள்வயிற்
செல்ல விரும்பலுஞ் சென்றவர்க் குணர்த்தலுஞ்
சொல்லிய கூற்றெனச் சொல்லுங் கிழவோன்
வரவு மீண்டுவந் தரிவைக் குணர்த்தலு
மணிநலம் பெற்றமை யறியான் போன்றவட்
பணிவொடு வினாதலும் பாணற் குரிய.

இ-ம். வாயில்களுட் பாணற்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. வாயில்வேண்டன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாணற்குரியன. எ-று.

கூசு. செலவிற் றேற்றலும் புலவிற் றணித்தலும்
வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுந்
தெரியிழை விறலிக் குரிய வாகும்.

இ-ம். விறலிக்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. செலவிற்றேற்றன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் விறலிக்குரியனவாம். எ-று. (கூசு)

கூஎ. செல்வம் வாழ்த்தலு நல்லறிவு கொளுத்தலுங்
கலனணி புணர்த்தலுங் காமநுகர் புணர்த்தலும்
புலவி முதிர்காலைப் புலங்கொள வேதுவிற்
றேற்றலுஞ் செய்ம்மை செப்பலும் பாசறை

மேற்சென் றுணர்த்தலு மீண்டுவர வுணர்த்தலுங்
கூற்றரு மரபிற் கூத்தற் குரிய.

இ-ம். கூத்தற்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. செல்வம் வாழ்த்தன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கூத்தற்குரியனவாம். எ-று. (கூஎ)

கூஅ. மடந்தையை வாயில் வேண்டலும் வாயி
லுடம் படுத்தலு மவளொடு நீர்த்தலுங்
கொற்றவற் குணர்த்தலுங் குற்றேவல் செய்தலுஞ்
சென்றுமுன் வரவு செப்பலு மவன்றிற
மொன்றிநின் றுணர்த்தலும் வினைமுடி புணர்த்தலும்
வழியியல் கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலு மிளையோர் தொழிலெனற் குரிய.

இ-ம். இளையோர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. மடந்தையை வாயில்வேண்டன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லா மிளையோர்க்குரியனவாம். எ-று. (கூஅ)

கூகூ. தீதுடைப் புலவி தீர்த்தலு மவன்வரல்
காதலிக் குணர்த்தலுங் கண்டோர்க் குரிய.

இ-ம். கண்டோர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. தீதுடைப்புலவிதீர்த்தன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கண்டோர்க்குரியனவாம். எ-று. (கூகூ)

௧00. இளமையும் யாக்கையும் வளமையு மேனவு
நிலையாத் தன்மை நிலையெடுத் துரைத்தலுஞ்
செலவழுங்கு வித்தலுஞ் செலவுடன் படுத்தலும்
பிறவு மெல்லா மறையோற் குரிய.

இ-ம். இருவகைப் பாங்கரிற் பார்ப்பனப்பாங்கற்குரியன வெல்லாந் தொகுத்துணர் - ற்று. இளமை முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பார்ப்பனப் பாங்கற்குரியனவாம். எ-று. பிறவுமென்றதனால் வாயில்வேண்டன் முதலாயினவுங் கொள்க. (௧00)

௧0௧. நன்மையி னிறுத்தலுந் தீமையி னகற்றலுஞ்
சொன்னவை பிறவுஞ் சூத்திரற் குரிய.

இ-ம். சூத்திரப்பாங்கற்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. நன்மையினிறுத்தன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாஞ் சூத்திரப் பாங்கற்குரியனவாம். எ-று. சொன்னவையும் பிறவுமெனக் கூறுக. பிறவுமென்றவதனால் வாயில்வேண்டன் முதலாயினவுங் கொள்க. (௧0௧)

கOஉ. சேயிழைக் கிழத்தியை வாயில் வேண்டலும்
வாயினேர் வித்தலும் வயங்குதுனி தீர்த்தலும்
வினைமுடித் ததற்பின் வியன்பதி சேய்த்தென
வினவோற் றேற்றலும் பாகற் கியல்பே.

இ-ள். பாகற்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. தலைமகன் வாயில்வேண்டன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாகற்கியல்பாம். எ-று. (கOஉ)

கOங. பிரிவுழி விலக்கலும் பிரிவுடன் படுத்தலும்
பிரிவுழித் தேற்றலும் பிரிவுழி யழுங்கலும்
பிறவு முரிய விறைவனைப் பாங்கிக்கு.

இ-ம். பாங்கிக்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. பிரிவுழி விலக்கன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாங்கிக்குரியன. எ-று. பிறவுமென்றதனால் வாயில்வேண்டன் முதலானவுங் கொள்க. (கOங)

கOச. முன்வரை நீதி முயங்கிய முறையும்
பின்வரும் பெற்றியும் பிறவு மெல்லாந்
தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கு
முற்ற வறிவர்க்கு முரிய வாகும்.

இ-ம். செவிலிக்குமறிவர்க்குமுரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. முன்வரைநீதி முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவுமெல்லாந் தெளியச் சொல்லுதல் செவிலித்தாய்க்கும் பொருந்திய வறிவர்க்குமுரிய. எ-று. பிறவுமென்றவதனால் வாயில்வேண்டன் முதலாயினவுங் கொள்க. (கOச)

கO௫. குடிப் பிறந்தோரை வடுப்படுத் துரைத்தலு
மனைவியைப் பழித்தலும் வாடா வூடலுட்
டலைவற் கழறலு மனைவிக் கமைந்த
வொழுக்கமுங் காமக் கிழத்தியர்க் குரிய.

இ-ம். காமக்கிழத்தியர்க் குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. குடிப்பிறந்தோரை வடுப்படுத்துரைத்தன் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாங் காமக்கிழத்தியர்க்குரியவாம். எ-று. (கO௫)

கO௬. கிழவோன் றன்னையுங் கிழத்தி தன்னையு
மிகழ்தலுந் தம்மைப் புகழ்தலு மிகழ்பொருள்
காத்தலும் பரத்தையர் கடனென மொழிப.

இ-ம். பரத்தையர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. தலைமகனையுந் தலைமகளையு மிகழ்தன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையர்க்கு முறைமையாம். எ-று. (கO௬)

௧௦௭. பரத்தையர் காதற் பரத்தையைப் புகழ்தலுந்
தம்மை யிகழ்தலுந் தம்முளுங் கூறுப.

இ-ம். பரத்தையர்க்குரியதோர் வேறுபாடுணர் - ற்று. காதற்பரத்தையைப் புகழ்தலுந் தங்களையிகழ்தலுந் தம்முளேயுங்கூறுவர் பரத்தையர். எ-று. (௧௦௭)

௧௦௮. இளையர் கிழவோற் கிரவும் பகலுங்
களைத லில்லாக் கவசம் போல்வார்.

இ-ம். இளையாரதுரிமையுணர்-ற்று. இளையராவார் தலைமகற்கு நீங்காக் கவசம்போலுந் தன்மையையுடைய ரிரவும்பகலும். எ-று. (௧௦௮)

௧௦௯. இருவகைப் பாங்கரு மொருபெருங் குரிசிற்
கின்னுயிர்த் துணையா விருபெருங் குரவருந்
தன்னை யளித்த தகைமை யோரே.

இ-ம். இதனுட் பாங்கரதுரிமையுணர்-ற்று. பார்ப்பனப் பாங்கனுஞ் சூத்திரப்பாங்கனு மென்னுமிருவருந் தலைமகற்குரிய வுயிர்த்துணையாக அவன் தாயுந் தந்தையும் அவனையடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையர். எ-று. (௧௦௯)

௧௧௦. தோழி செவிலி மகளாய்ச் சூழலொடு
சாத்துணை யாகிய சாந்தணி வித்தற்
குரிய காதன் மருவிய துணையே.

இ-ம். தோழியதுரிமையுணர்-ற்று. தோழியென்பவள் செவிலிக்கு மகளாய் நன்மையுந் தீமையுமாராய்தலுடனே தலைமகட்குசாத்துணையாய் அவளது வருத்தந் தீர்த்தற்குரிய அன்புபொருந்திய துணையாம். எ-று. ()

௧௧௧. செவிலி நற்றாய் தோழி யாகி
யவல நீக்கி யறிவுமா சாரமுங்
கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே.

இ-ம். செவிலியதுரிமை யுணர் - ற்று. செவிலியென்பாள் தலைமகளுடைய நற்றாய் தோழியாய்த் தலைமகட்குவருந் துக்கங் களைந்து நல்லறிவுமாசாரமுங் கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாயாம். எ-று. (௧௧௧)

௧௧௨. அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கு
முறுதி மொழிந்த வுயர்பெருங் குரவர்.

இ-ம். அறிவரதுரிமை யுணர்-ற்று. அறிவரென்பார் தலைமகற்குந் தலைமகட்கு முறுதியைப்பயக்கு முபதேசங்களைச்சொல்லு மேம்பட்ட குருக்கள். எ-று. (௧௧௨)

௧௧௩. ஒருவன் றனக்கே யுரிமை பூண்டு
வருகுலப் பரத்தையர் மகளி ராகிக்
காமக்கு வரைந்தவர் காமக் கிழத்தியர்.

இ-ம். காமக்கிழத்தியரதுரிமையுணர்-ற்று. காமக்கிழத்தியரென்பார் சேரிப்பரத்தையர்போலப் பலர்க்கு முரியரன்றி ஒருவற்கே யுரிமைபூண்டு வருங் குலப்பரத்தையர் மகளிராய்க் காமங்காரணமாகத் தலைமகனால் வரைந்துகொள்ளப்பட்டார். எ-று. (௧௧௩)

௧௧௪. யாரையு நயவா வியல்பிற் சிறந்த
சேரிப் பரத்தையர் மகளி ராகிக்
காதலிற் புணர்ந்தோர் காதற் பரத்தையர்.

இ-ம். காதற்பரத்தையரதுரிமையுணர்-ற்று. காதற்பரத்தையரென்போர் யாவரையும் விரும்பாத வியல்பினன் மிக்க சேரிப்பரத்தையருடைய மகளிராய்த் தம்மன்பிற் றலைமகனோடுங் கூடுவார். எ-று. (௧௧௪)

௧௧௫. அவருளும் வரைதற் குரியா ருள்ளே.

இ-ம். காதற்பரத்தையர்க்குரியதோர் சிறப்புவிதியுணர்-ற்று. காதற்பரத்தையருள்ளுமுளர் தலைமகனால் வரைந்து கோடற்குரியர். எ-று.()

௧௧௬. மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

இ-ம். தலைவனுந் தலைவியுந் துறவறங்காப்பதுணர்-ற்று. மக்களொடு கூடி மகிழ்ந்து இல்லறத்தினைக் காத்துத் தமக்குப் பெருகிய காமவேட்கையெல்லாந் தீர்ந்தகாலத்துத் தலைமகனுந் தலைமகளுந் தம்மூர்நீங்கி வனத்தின்கட்சென் றெல்லையில்லாச் சுற்றத்தாரோடுந் துறவறங் காப்பர். எ-று.()

அகத்திணையியன் முற்றிற்று.

இரண்டாவது

களவியல்.

௧௧௭. உள்மலி காதற் களவெனப் படுவ
தொருநான்கு வேதத் திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத் தியல்பின தென்ப.

இ-ம். இவ்வோத்தென்னபெயர்த்தோவெனிற் களவுணர்த்தலிற் களவியலென்னும்பெயர்த்து. இவ்வோத்தினு ளித்தலைச்சூத்திர மென்னுதலிற்றோவெனிற் களவு கற்பென்னுங் கைகோளிரண்டனுள்ளுங் களவென்னுங் கைகோளதிலக்கணமுணர்-ற்று. உள்ளமலிதற்குக் காரணமாகிய அன்பினையுடைய களவென்று சொல்லப்படுவது நான்காகிய வேதத்தினுட் சொல்லப்பட்ட எட்டாகிய மணத்தினுள் காந்தருவ மணத்தோடு ஒத்த வியல்பினையுடையதென்று சொல்லுவர் புலவர். எ-று. என்னை? "இன்பமும்பொருளுமறனுமென்றாங் - கன்பொடுபுணர்ந்தவைந்திணைமருங்கிற்-காமக்கூறு காணுங்காலை - மறையோர்தேத்துமன்றலெட்டனுட்-டுறையறிநல்லியாழ்த்துணைமையோரியல்பே." எ-லின்.

வேதநான்காவன: இருக்குமுதலாயின. மன்றலெட்டாவன: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசமென விவை. என்னை? "அறநிலையொப்பே பொருள்கோடெய்வம்-யாழோர்கூட்ட மரும்பொருள் வினையே - யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய-மறையோர்மன்றலெட்டிவையவற்றுட்-டுறையறிநல்லியாழ்த்துணைமையோரியல்பிதன்-பொருண்மையென்மனார்புலமையோரே." எ-லின். பிரமமாவது பிரமசாரியாய்த் தக்கானுமாயிருப்பானுக்குக் கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க் கொடுத்தல். பிரசாபத்தியமாவது குரவர்வேண்டக் குரவர்மறாதேயுடன்பட்டுத் தலைமகளையலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுத்தல். ஆரிடமாவது ஒன்றானுமிரண்டானு மாவுமாவேறும்வாங்கிக்கொண்டு கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுத்தல். தெய்வமாவது வேள்வியாசாரியனுக்குக் கன்னியை யலங்கரித்துத் தீமுன்னர்க் கொடுத்தல். காந்தருவமாவது கொடுப்போருங் கேட்போருமின்றித் தலைமகளுந் தலைமகனுந் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுதல். காந்தருவராவார் யாழ்கொண்டு பாடித்திரிவார் சிலர்தேவர். ஆசுரமாவது தலைமகட்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் பொன்வேண்டுவன கொடுத்துக் கொள்வது. இராக்கதமாவது தலைமகடன்னினுந் தமரினும் பெறாது வலிதிற்கொள்வது. பைசாசமாவது துயின்றோண்மாட்டுங் களித்தோண்மாட்டுஞ் சென்று சேர்வது. இவற்றுள் ஆசுரமுதலாகிய மூன்றுங் கைக்கிளைக்குரியவாம். தெய்வமுதலான நான்கும் பெருந்திணைக்குரியவாம். என்னை? "முன்னையமூன்றுங் கைக்கிளைக் குறிப்பே - பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே." எ-லின். (௧)

ககஅ. காட்சி யையந் துணிவுகுறிப் பறிவென
மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.

இ-ம். மேற்சொல்லப்பட்ட வேழுதிணையினுள்ளும் முதலாகிய கைக்கிளைத்திணையின் பாகுபாடுணர்-ற்று. கைக்கிளையாவது காட்சி முதலாகக் குறிப்பறித லீறுகச் சொல்லப்பட்ட நான்குவகையினை யுடைத்தாம். எ-று. (உ)

ககக. புணர்ப்பதும் பிரிப்பது மாகிய பால்களுட்
புணர்க்கும் பாலுட் பொருவிறந் தொத்த
கறைவேற் காளையுங் கன்னியுங் காண்ப
விறையோ னுயரினுங் குறைவின் றென்மனூர்.

இ-ம். நிறுத்தமுறையானே காட்சியிலக்கண முணர்-ற்று. முற்பிறப்பினுங் காமநுகர்ந்தா ரிருவரையு மறுபிறப்பினுங் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினையுந் தீவினையு மென்னு மிரண்டினு நல்வினையீட்டத்தாலே தனியிடத் தெதிர்ப்படுவர் குலத்தானுஞ் செல்வத்தானு மறிவானும் பிறவாற்றானுந் தம்மோடொத்தாரு மிக்காருமின்றித் தம்மிற்றுமேயொத்த தலைமகனுந் தலைமகளும். அவருட் டலைமகனவற்றானுயர்ந்தானாயினுங் குற்றமின்றென்று சொல்லுவர் புலவர். எ-று. எனவே தலைமகளுயர்தல் குற்றமென்பதாம். என்னை? "ஒன்றேவேறேயென்றிருபால்வயி-னொன்றியுயர்ந்தபாலதாணையி-னொத்தகிழவனுங் கிழத்தியுங்காண்ப-மிக்கோனாயினுங் கடிவரையின்றே" எ-லின். ஈண்டுக் காளையென்பது பருவங்குறித்து வந்ததோராகுபெயரெனக் கொள்க. அதற்குச் செ-ள் "புயலேசுமந்து பிறையேயணிந்துபொருவிலுடன் - கயலேமணந்து கமலமலர்ந்தொரு கற்பகத்தினயலேபசம்பொற்கொடிநின்றதால்வெள்ளையன்னஞ்செந்நெல் - வயலேதடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன் மலயத்திலே" எனவரும். (௩)

க௨0. மடமா னோக்கி வடிவுங் கண்ட
விடமுஞ் சிறந்துழி யெய்துவ தையம்.

இ-ம். ஐயநிகழுமிடமுணர்-ற்று. தலைமகள் வடிவும் அவளைத் தான் கண்ட இடமுஞ் சிறப்புடைத்தாகிய காலத்துத் தலைமகன்பால் ஐயநிகழும். எ-று. எனவே அவை சிறப்புடையவல்லாதகாலத்து ஐய நிகழாதென்பதாம். என்னை? "சிறந்துழியையஞ்சிறந்ததென்ப-விறந்துழியிழிபேசுட்டலான." எ-லின். அதற்குச் செ-ள் வருமாறு: "பாரணங்கோதிருப்பாற்கடலின்றபங்கேருகத்தி - லோரணங்கோவெற்புறையணங்கோ வுயர்பாவலர்க்கு - வாரணங்கோடிதருந்தஞ்சைவாணன் றென்மாறைவையை-நீரணங்கோநெஞ்சமேதனியேயிங்குநின்றவரே." எ-ம், "அணங்குகொலாய் மயில்கொல்லோ கனங்குழை - மாதர்கொன்மாலு மென்னெஞ்சு." எ-ம், "தாமரைமேல்வைகியதையல்கொறுழ்தளிர்க்-காமருபூங்கணையான்காதலிகொறேமொழி - மையமருண்கட்பேதைமாமயிலஞ்சாயல்கொ - ணையமொழியாதாமென்னெஞ்சு." எ-ம் வரும். (௪)

க௨க. எழுதிய வல்லியுந் தொழில்புனை கலனும்
வாடிய மலருங் கூடிய வண்டு
நடை பயி லடியும் புடைபெயர் கண்ணு
மச்சமும் பிறவு மவன்பா ணிகழுங்
கச்சமி லையுங் கடிவன வாகும்.

இ-ம். துணிவுநிகழ்தற்கேதுவாவன விவையென்றுணர்-ற்று. எழுதிய வல்லிமுதலாக வச்சமீறாகச் சொல்லப்பட்ட வேழு மவைபோல்வன பிறவுந் தலைமகன்மாட்டு நிகழாநின்ற வெண்ணில்லாவையங்களைப் போக்குவனவாம். எ-று. பிறவுமென்றவதனு னிகழ்தன்முதலாயினவுங் கொள்க. என்னை? "வண்டேயிழையேவல்லிபூவே-கண்ணேயலமரலிமைப்பே யச்சமென்- றன்னவைபிறவுமாங்கணிகழ்கின்ற-வையங்களையுங் கிளவியாகும்" எ-லின். இதற்குச் செ-ள் "மையார்குவளைவயற்றஞ்சைவாணனை வாழ்த்தலர்போ-னையாதொழிமதிநன்னெஞ்சமேயினி நம்மினுந்த - னெய்யார்கருங்குழற்செம்மலர்வாடின நீலவுண்கண் - கையாலழைப்பவர் போலிமையாநிற்குங் காரிகைக்கே" எ-ம், "திருநுதல்வேர்வரும்புந்தேங்கோதை வாடு-மிருநிலஞ்சேவடியுந்தோயு-மரிபரந்த - போதிதழுண்கண்ணுமிமைக்கு-மாகுமற்றிவளகலிடத்தணங்கே." எ-ம் வரும். (௫)

க௨௨. அரிவை நாட்ட மகத்துநிகழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குறிசிற் கென்ப.

இ-ம். குறிப்பறிதற்கேதுவுணர்-ற்று. தலைமகளுள்ளத்துநிகழாநின்ற வேட்கையைத் தலைமகற்கு விளங்க அறிவிக்குமவள்கண். எ-று. என்னை? "நாட்டமிரண்டு மறிவுடம்படுத்தற்குக் - கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்." எ-லின். இதற்குச் செ-ள் "மண்ணிற்சிறந்தபுகழ்த்தஞ்சைவாணன்மலயவெற்பிற்-பெண்ணிற்சிறந்தவிப்பேதைதன்பார்வைபெருவினையே-னெண்ணிற்சிறந்தவருந்துயர்நோய்தனக்கின்மருந்தாய்க்- கண்ணிற்சிறந்த வுறுப்பிலையாவதுங்காட்டியதே." எ-ம், "இருநோக்கிவளுண்கணுள்ளதொருநோக்கு-நோய்நோக்கொன்றந்நோய்மருந்து." எ-ம் வரும். (௬)

க௨௩. இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்க
லிடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடம்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடையீ
டிரவுக் குறியே யிரவுக்குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாத
லொருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரித லென்றிரு பதினேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

இ-ம். களவிற்குரிய கிளவித்தொகையுணர்-ற்று. இயற்கைப்புண ர்ச்சிமுதலாக வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதலீறாகச்சொல்லப் பட்ட பதினேழுங் களவென்னுங் கைகோளிற்குரிய கிளவியின்றொகை யாம். எ-று. (எ)

௧௨௪. தெய்வம் புணர்ப்பச் சிந்தை வேறாகி
எய்துங் கிழத்தியை யிறையோ னென்ப.

இ-ம். இயற்கைப்புணர்ச்சிய திலக்கணமுணர்-ற்று. தெய்வங்கூட் டத் தன்னறிவுதிரிந்து தலைமகளைத் தலைமகன் கூடும். எ-று. (அ)

௧௨௫. கலந்துழி மகிழ்தலு நலம்பா ராட்டலு
மேற்புற வணிதலு மென்னுமிம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.

இ-ம். இயற்கைப்புணர்ச்சியின் பாகுபாடாகிய விரண்டனுண் முன் னையதாகிய தெய்வப்புணர்ச்சியின் விரியுணர்-ற்று. கலந்துழி மகிழ்தலும் நலம்பாராட்டலும் ஏற்புறவணிதலும் என்னு மூன்றுகிளவியு மகத்திணையி யலுட் பெறப்பட்ட தெய்வப்புணர்ச்சியின் விரியாம். எ-று. (௯)

௧௨௬. வேட்கை யுணர்த்தன் மறுத்த லுடம்படல்
கூட்டமென் றிறைவியிற் கூட்டநால் வகைத்தே.

இ-ம். தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் வகையுணர்-ற்று. வேட் கையுணர்த்தன் முதலாகக் கூட்டமீறாகச் சொல்லப்பட்ட நான்குவகையி னையுடைத்து தலைமகளாற் புணரும் புணர்ச்சி. எ-று. (௧0)

௧௨எ. இரந்து பின்னிற்றற் கெண்ணலு மிரந்து
பின்னிலை நிற்றலு முன்னிலை யாக்கலு
மெய்தொட்டுப் பயிறலும் பொய்பா ராட்டலு
மிடம்பெற்றுத் தழாலும் வழிபாடு மறுத்தலு
மிடையூறு கிளத்தலு நீடுநினைந் திரங்கலு
மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலு
முறுவற் குறிப்புணர்தலு முயங்குத லுறுதலும்
புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் பிறவு
முணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே.

இ-ம். தலைமகளாற் புணரும் புணர்ச்சியின்விரியுணர்-ற்று. இரந்துபி ன்னிற்றற்கெண்ணன்முதலாகப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்ட பதினைந் தும் பிறவும் மேற்சொல்லப்பட்ட தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் விரி யாம். எ-று.

அவற்றுள் இரந்துபின்னிற்றற்குச் செ-ள் வருமாறு: "தேங்கியகாரவாதரஞ்செப்பித்தண் செப்பிணைபோல்-வீங்கியமாமுலை மேவுதும்யாம் விசயக்கொடிமேல்-வாங்கியசாபமுயர்த்தவன்போர்வென்றவாணன் வையந்-தாங்கியமாலனையான்றஞ்சைசூழ்வரைத்தாழ்குழற்கே." எ-ம், "மருந்திற்றீராதுமண்ணினுகா-தருந்தவமுயற்சியகறலுமரிதே-தான்செய் நோய்க்குத்தான்மருந்தாகிய-தேனிமிர்நறவின்றேறல்போல-நீதரவந்தநிறையழிதுயரநின்-னெடுகொடிமருங்குனருளினல்லது-பிறிதிற்றீராவென்பதுபின்னின்-றறியக்கூறுகமெழுமோநெஞ்சமே-நாடுவிளங்கொண்புகழ்நடுதல்வேண்டித்-தன்னெடுமழைத்தடக்கையறுத்தமுறைநிறுத்த - பொற்கைநறுந்தார்புனைதேர்ப்பாண்டியன்-கொற்கையம்பெருந்துறைக் குனிதிரைதொகுத்த-விளங்குமுத்துறைக்கும்வெண்பற்-பன்மாண்சாயற்பரதவர்மகட்கே." எ-ம் வரும்.

இரந்துபின்னிலைநிற்றற்குச் செ-ள் "செறிவேழவெஞ்சிலைவேடஞ்சைவாணன்றிருந்தலர்மே-லெறிவேலைவென்ற கண்ணென்னுயிர்க்கேவியிருண்டறல்போ-னெறிவேயலங்கன் முடித்தலைசாய்த்திங்கனிற்பதுதா-னறிவேயறிந்தவுனக்கலர் மாளிகையாரணங்கே." எ-ம், முன்னிலையாக்கற்குச் செ-ள் "வழுதியர்நாமம்வளர்க்கின்றவாணன்றென்மாறைவண்டு - கொழுதியலார்செய்குழன்மடவீர்நுங்குற்றேவல்செய்து-தொழுதியலாயத் தொகுதியொடாடிச்சுனைகுடையா-தெழுதியபாவையைப் போனின்றவாறென்னியம்புமினே." எ-ம், மெய்தொட்டுப்பயிறற்குச் செ-ள் "நல்லார்விழிபோலிருந்துமளியெனுநாமம்பெற்று-மல்லார்குழலி லமர்ந்திருந்தாலமராரைவெல்ல-வல்லான்வரோதயன்வாணன்றென்மாறைமதுகரங்கா - ணில்லாதிடையுமக்கே பழிசாலநிலைநிற்குமே." எ-ம், பொய்பாராட்டற்குச் செ-ள் "பருந்தொன்றுகூரிலை வேற்படைவாணன் பரிமளப்பூஞ்- செருந்தொன்றுசோலைத்தென்மாறையன்னீர்செழுந்திங்களுங்கண்- முருந்தொன்றுகோபமுகங்கண்டுநாணிமுயன்மறுத்தீர்-மருந்தொன்றுநாடியன்றோவடமேருவலங்கொள்வதே." எ-ம், "மாதர்முகம்போலொளிவிடவல்லையேற்-காதலைவாழிமதி." எ-ம், இடம்பெற்றுத்தழாலுக்குச் செ-ள் "படம்பட்டவாளரவல்குலிலேதளைபட்டநெஞ்சே - விடம்பட்டவாள்பட்ட வேதனைதீர விண்டோய்பொழிலுந்-தடம்பட்டவாவியுஞ் சூழ்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிநா-மிடம்பட்டவாரமுலைத்தடந்தோய்தற்கிடமிதுவே" எ-ம், வழிபாடுமறுத்தற்குச் செ-ள் "தேறுதெவ்வென்றவாணன்றென்மாறைச்செந்தேனருவி-யூறுதகாலத்துமூறுதண்சார லொதுக்கிடந்தந்-தாறுதசோகமுமாற்றுதல்வேண்டுமசோகமெய்தி - மாறுததண்ணளிகூர்மலர்வாண்முகமாதவியே." எ-ம், இடையூறுகிளத்தற்குச் செ-ள் "சிதையாமுளரித்திருமாளிகையிற்சிறந்ததென்றென் - னிதையாரவிந்தத்தினிதிருப்பீர்கோட்டொருகை-மதயானைவாணன்வருந்தஞ்சைசூழ்வையைநாட்டுறைவோர்-புதையார்தனமெனவேமதர்வேற்கண்புதைத்ததுவே." எ-ம், நீடுநினைந்திரங்கற்குச் செ-ள் "தமிழ்தங்கியதஞ்சைகாவலன்வாணன்றடஞ்சிலம்பிற்-குமிழ்தங்கியமதிக்கொம்பரன்னீர்குளிர்வெண்ணிலவூ- டுமிழ்தண்டரளப்பவளச் செங்கேழ்வள்ளத்துள்ளிருக்கு - மமிழ்தந்தருவதன்றோ பெருவேட்கையென்னுருயிர்க்கே." எ-ம், மறுத்தெதிர்கோடற்குச் செ-ள் "கறையாரிலங்கிலைவேலன்பர்காமக்கடற்கெதிர்ந - நிறையாம் வரம்பினிநிற்பதன்றுனிறைநீருலகை-மறையாமல்வண்களமாற்றியவாணன்றென்மாறையினும்-பொறையார் தவஞ் செய்திலே நெஞ்சமே யென் புகல்கின்றதே." எ-ம்,

''பண்டுநாம்வேறல்லவென்பதொன்றுண்டாலவனொடு- மாறுண்டோநெஞ்சேநமக்கு.'' எ-ம் வரும்.

வறிதுநகைதோற்றற்குச் செ-ள் ''எறிதேனலம்புஞ் சிலம்பினெப்போதுமிரந்திவள்பின்-வெறிதேதிரிந்து மெலிந்தனம்யாமுள்ளமெல்லியற்குப்-பிறிதேகொலென்னும்பெருந்தகைதேறப் பெரிதுயிர்த்து-வறிதேமுறுவல்செய்தாடஞ்சைவாணன்வரையணங்கே.'' எ-ம், முறுவற்குறிப்புணர்தற்குச் செ-ள் ''வின்மலைவேலன்னநன்னுதல்வாட்கண்ணிவேட்கையெண்ணு-ளென்மலைவேலென்னு மென்னுயிர்தாங்குமெதிர்ந்தவொன்னார்-மன்மலைவேழந்திறைகொண்டசேய்தஞ்சைவாணன்மஞ்சார்- தென்மலைவேய்நிகரும்பெருந்தோளிசிறுநகையே.'' எ-ம், ''முகைமொக்குளுள்ளதுநாற்றம்போற்பேதை-நகைமொக்குளுள்ளதொன்றுண்டு.'' எ-ம், முயங்குதலுறுதற்குச் செ-ள் ''வானக்கதிரவன்மண்ணகமாதைமணந்ததொக்கு-நானக்குழலியைநானின்றுபெற்றது நாவலர்க்குத்-தானக்களிறுதரும்புயல்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ்- கானக்கடிவரைவாய்விரைநாண்மலர்க்காவகத்தே.'' எ-ம், புணர்ச்சியின்மகிழ்தற்குச் செ-ள் ''மலைநாடுகொண்டவழுதிகண்போல்பவன்வாணனெண்ணெண்- கலைநாடுதஞ்சையர்காவலன்மால்வரைக்கன்னிபொன்னுண் - முலைநாமுயன்றுமுயங்கினமான்முயன்றுவினியைந்-தலைநாகநன்மணியும்பெறலாமித்தரணியிலே'' எ-ம், ''கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம்புலனு-மொண்டொடிகண்ணேயுள.'' எ-ம், புகழ்தற்குச் செ-ள் ''இரண்மாமரகதச்செய்குன்றுகாளென்றுஞ் செவ்வணீர்-முரண்மாதவங்கண்முயன்றுசெய்தாலுமுளரிமங்கை- சரண்மாறைவாணன்றமிழ்த்தஞ்சைநாட்டென்றனியுயிர்க்கோ - ரரண்மானனையகண்ணாள்கொங்கைபோறலரிதுமக்கே.'' எ-ம் வரும்.

இரந்துபின்னிற்றற்கெண்ணன்முதலாக நீடுநினைந்திரங்கலீறாகச்சொல்லப்பட்ட ஒன்பதுள்ளும் வழிபாடுமறுத்தலொன்றுமொழித் தல்லாதவெட்டும் வேட்கையுணர்த்தற் குரியவாம். வழிபாடுமறுத்தலொன்றுந் தலைமகன் மறுத்தற்குரியதாம். மறுத்தெதிர்கோடலும் வறிதுநகைதோற்றலுமென்னுமிரண்டுந் தலைமகளுடம்பாட்டிற்குரியவாம். முறுவற்குறிப்புணர்தலும் முயங்குதலுறுதலு மென்னு மிரண்டுந் தலைமக னுடம்பாட்டிற்குரியவாம். புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலு மென்னுமிரண்டுந் தலைமகன் கூட்டத்திற் குரியவாம். பிறவுமென்றதனால் எற்புறவணிதலுங் கொள்ளப்படும். இலக்கியம் மேலே காட்டப்பட்டது. (கக)

கஉஅ. ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை யிருவகைத் தாகும்.

இ-ம். வன்புறையின்வகையுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட வன்புறை ஐயந்தீர்த்தலும் பிரிவறிவுறுத்தலுமென விரண்டு கூற்றினையுடைத்தாம். எ-று. இக்கிளவி தீராத்தேற்றமென்பதனாற் கொள்ளப்படும். (கஉ)

கஉகூ. அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தலும்
பெருநயப் புரைத்தலுந் தெய்வத்திறம் பேசலும்
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலும்

மிடமணித் தென்றலு மென்றிவை யாறு
மடனறத் தெரிந்த வன்புறை விரியே.

இ-ம். வன்புறைவிரியின் பாகுபாடுணர்-ற்று. அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தன்முதலாக இடமணித்தென்றலீறாகச் சொல்லப்பட்டவாறுந் தலைமகன் றலைமக ளறிவின்மைநீங்க வாராய்ந்து சொன்ன வன்புறைவிரியாம். எ-று.

வன்புறுத்தலான் வன்புறையென்றாயிற்று. அவற்றுள் அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தற்குச் செ-ள் "நாவியுங்காரகிலாவியுந்தோய்குழனுணியஞ்சேல் - வாவியுஞ் சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவயற் - காவியுஞ்சேலுங்கமலமுங்காட்டுநின்கண்மலரு - மாவியும்போலினியாரணியாக வணிந்தனமே." எ-ம், பெருநயப்புணர்த்தற்குச் செ-ள் "மன்னுவுலகத்து மன்னியசீர்த்தஞ்சை வாணன்வெற்பி - லென்னுவியன்ன விவளிடைமேலிணை கொண்டெழுந்த - பொன்னுணணிகொங்கைபோலவண்டீருங்கள் பொய்கையுண்டோ-நன்னுளரும்பொருதாளிரண்டீனுநளினங்களே" எ-ம், "கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி - காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ - பயிலியதுகெழீஇயநட்பின்மயிலியற் - செறியெயிற்றரிவைகூந்தலி - னறியவுமுளவோ நீயறியும்பூவே." எ-ம், தெய்வத்திறம்பேசற்குச் செ-ள் "மன்னியபார்புகழ்வாணன்றென்மாறையின் மாந்தளிர்போன் - மின்னியமாமைவிளர்ப்பதென்னேவிதிகூட்டநம்மிற் - பின்னியகாதற் பிரிப்பவர்யாரினிப் போருவி - யின்னியமாக விளமயிலாடு மிரும்பொழிற்கே." எ-ம், பிரியேனென்றற்குச் செ-ள் "வண்கொடியேய்மதின்மாறைவரோதயன்வாணனென்னு-மொண்கோடியேனெய்தவிவ்வண்ணநீயிரங்கேலிரங்கே - னுண்கொடியேரிடைவண்டிமிர்பூங்குழனூபுரத்தாட் - பெண்கோடியே பிரியேன்றரியேனிற் பிரியினுமே." எ-ம், பிரிந்துவருகென்றற்குச் செ-ள் "சென்றேபகைவென்ற திண்படைவாணன் செழுந்தஞ்சைசூழ் - நன்றேதருவையைநாடனையாய்நமதாருயிர்போ-லொன்றேயெனதுரைபூங்குயர்சோலையினூடொளியா - நின்றேவருவலிங்கேவிளையாடுகநீசிறிதே." எ-ம், இடமணிதென்றற்குச் செ-ள் "மணிபொன் சொரியுங்கைவாணன்றென்மாறைமருவினர்போற் - றணிபொன்சொரியுந்தடமுலையாயுயர்சந்தமுந்தி - யணிபொன்சொரியுமருவியெஞ்சாரலகத்தலர்தேங் - கணிபொன்சொரியுநின்சாரன்மென்காந்தளங்கையகத்தே." எ-ம் வரும். இவற்றுண் முன்னையமூன்றுமையந்தீர்த்தற்குரிய. பின்னைய மூன்றும் பிரிவறிவுறுத்தற் குரியவெனக்கொள்க. (௧௩)

௧௩௦. தலைவன் மாற்றந் தலைவி தேற்றந்
தெளிவா மென்ப தெளிந் திசிஞேரே.

இ-ம். வைத்தமுறையானே தெளிவுணர்த்துத-ற்று - தலைமகன் சொல்லைத் தலைமகள் தெளிதலைத் தெளிதலென்று சொல்லுவர் புலவர். எ-று. தலைமகன்சொல்லைத் தலைமகள்தெளிதற்குச் செ-ள் "எத்துந்தமதுரை தேறிநின்றேனையிங்கேதனியே - வைத்தங்ககன்றுமறந்துறையார்வறியோர்கவர - முத்துந்துகிருமிரங்குந்தரங்கமுகந்தெறிந்து - தத்துங்கரைவையைசூழ்தஞ்சைவாணன்றமிழ்வெற்பரே" என வரும். (௧௪)

௧௫௧. செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தொடு
சொல்லலும் பாகனொடு சொல்லலு மிரண்டும்
பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.

இ-ம். பிரிவுழிமகிழ்ச்சியின் விரியுணர்-ற்று. அவ்வாறவ்விடத்து நீங்கித் தலைமகடன்னைக் காணுமற்றுவனவளைக் காண்பதோரணிமைக்கணின்ற தலைமகன் புணர்ச்சிக்களத்துநின்று போகாநின்ற தலைமகளது செலவுகண்டு தன்னெஞ்சொடு கூறலும் பாகனொடு கூறலுமாகிய விரண்டும் பிரிவின்கண் மகிழ்ச்சியின் விரியாம். எ-று. ஈங்கிக்கிளவி பண்மையின்மையின் வகையின்றாயிற்று. செல்லுங்கிழத்தி செலவுகண்டுளத்தொடு சொல்லற்குச் செ-ள் "அகிலேந்துகூந்தலொருகையினேந்தி யசைந்தொருகை - துகிலேந்தியேந்துந் துணைச்சிலம்பார்ப்பத்துளிகலந்த-முகிலேந்தும்பொழில்சூழ்தஞ்சைவாணன் முந்நீர்த்துறைவாய் - நகிலேந்துபூங்கொடிபோற்செல்லுமானெஞ்சநம்முயிரே" எ-ம், பாகனொடு சொல்லற்குச் செ-ள் "தென்பாற்றிலகமன்னன்றஞ்சைவாணன் றென்மாறை முந்நீர் - வன்பாற்றிரண்முத்தவெண்டலின்மேல்வருமேதமஞ்சி - முன்பார்த்தென்னெஞ்சம்வரும்வழிபார்த்துமுறைமுறையே - பின்பார்த்தொதுங்குதல் காண்வலவாவொருபெண்ணணங்கே." எ-ம் வரும். இவ்விரண்டிற்குமிலக்கணவிதியிவையாகக் கொள்க. (௧௫)

௧௫௨. மருளுற் றுரைத்த றெருளுற் றுரைத்தலென்
றிருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.

இ-ம். பிரிவுழிக்கலங்கலின்வகையுணர்-ற்று. மருளுற்றுரைத்தலுந் தெருளுற்றுரைத்தலுமென விரண்டுவகையினையுடைத்தாம் பிரிவுழிக்கலங்கல் எ-று. இக்கிளவி பிரிந்தவழிக் கலங்கலென்பதனுற் கொள்ளப்பட்டது. (௧௬)

௧௫௩. ஆய வெள்ளம் வழிபடக் கண்டிது
மாயமோ வென்றலும் வாயில்பெற் றுய்தலும்
பண்பு பாராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலுங்
கண்படை பெறாது கங்குனோ தலுமெனு
மைந்தும் பிரிவுழிக் கலங்கல்விரி யாகும்.

இ-ம். பிரிவுழிக்கலங்கலின் விரியுணர்-ற்று. தலைமகளையாயவெள்ளம்வழிப்படக் கண்டிதுமாயமோவென்றன் முதலாகக் கண்படைபெறாது கங்குனோதலீறாகச் சொல்லப்பட்ட ஐந்தும் பிரிவுழிக் கலங்கலின் விரியாம். எ-று.

தலைமகளையாயவெள்ளம் வழிப்படக்கண் டிதுமாயமோவென்றற்குச் செ-ள் "சீயங்கொலோவெனத் தெவ்வென்றவாணன் றென்மாறைவையைத் - தோயங்கொலோவெனு நேயநம்பால்வைத்துச் சோலைமைஞ்ஞை- யாயங்கொலோவெனுமாயத்துளாளிவ்வரிவையென்ன - மாயங்கொலோநெஞ்சமேமணம்போலிங்குவந்துற்றதே." எ-ம், வாயில்பெற்றுய்தற்குச் செ-ள் "பெருமான்மருந்தொன்றுபெற்றனம்யாநெஞ்சம்பேதுறல்பார் - மருமான்வரோதயன்மாறன்றென்மாறைமணங்கமழ்பூந்-திருமான்முகமலர்ச்சேயரிபாய்கயல்சென்றுசென்றவ் - வொருமானைகைமுகமாமலரோடையுலாவருமே" எ-ம், பண்புபாராட்டற்குச் செ-ள்

"மயலார்களிற்றண்ணல்வாணன்றென்மாறையின்வாய்த்தவர்கண்- கயலாமெனிற்கயல்கள்ளங்கொள்ளாகருந்தாழளகம்- புயலாமெனிற்புயல்போதுகொள்ளாவிப்பிணையிழையா-ரியலாமனைத்தையும்வேறென்னபேரிட்டியம்புவதே" எ-ம், பயந்தோர்ப்பழிச்சற்குச் செ-ள் "அணியுஞ்சுடர்விரிசங்குபங்கேருகமாடகமு-மணியுந்தரமன்னிவாழியரோதஞ்சைவாணன்வெற்பிற்- றணியுந்தொழிலொழித்தின்பமுந்துன்பமுந்தன்பதமே - பணியும்பணியெனக்குப்பயந்தாரைப்பயந்தவரே." எ-ம், கண்படைபெறாதுகங்குனோதற்குச் செ-ள் "வாமக்கலையல்குல்வாணுதலார்தஞ்சைவாணன்வெற்பி-னமக்கலவிநலங்கவர்போதுநமக்களித்த- காமக்கனலவர்கையகல்காலைக்கடும்பனிகூர்- யாமக்கடலகத்துந்துணியாதினியென்செய்துமே" எ-ம் வரும். இவற்றுள் ஆயவெள்ளம்வழிபடக்கண்டிதுமாயமோவென்றலாகியவொன்று மருளுற்றுரைத்தற்குரித்தாம். ஏனையநான்குந் தெருளுற்றுரைத்தற்குரிய. (௧௭)

௧௩௪. தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந் தலைப்பாடே.

இ-ம். இடந்தலைப்பாட்டின் வகையுணர்-ற்று. தெய்வந்தெளிதலுங் கூடலும் விடுத்தலுமென இடந்தலைப்பாடு மூன்றுவகையினை யுடைத்து. எ-று. ஓர் எ-து அசை. இக்கிளவி பெற்றவழி மகிழ்ச்சியென்பதனாற் கொள்ளப்பட்டது. (௧௮)

௧௩௫. தந்த தெய்வந் தருமெனச் சேறலு
முந்துறக் காண்டலு முயங்கலும் புகழ்தலு
முடன்புணராயத் துய்த்தலு மெனவைந்
திடந்தலைப் பாட்டி னிலக்கண விரியே.

இ-ம். இடந்தலைப்பாட்டினிலக்கணவிரி யுணர்-ற்று. தந்ததெய்வந்தருமெனச் சேறன்முதலாக ஆயத்துய்த்தலீறாகச் சொல்லப்பட்ட வைந்து மிடந்தலைப்பாட்டின் விரியாம். எ-று.

தந்ததெய்வந்தருமெனச் சேறற்குச்செ-ள் "மன்றும்பொதியினுமாமயில்சேர்தஞ்சைவாணன்வையைத் - துன்றும்புயலிளஞ்சோலையின்வாய்ச் சுறவக்குழையைச்-சென்றுந்துசேல்விழிமின்னைமுன்னாட்டந்ததெய்வநமக்- கின்றுந்தருநெஞ்சமேயெழுவாழியிங்கென்னுடனே" எ-ம், முந்துறக்காண்டற்குச்செ-ள் "மருவாயநாப்பண் யயிலுருவாய் நென்னல்வாணன்றஞ்சைத்- தருவாய்த்தழைகொய்துதண்புனங்காத்துத்தடங்குடைந்து - திருவாய்மலர்ந்துசிலம்பெதிர்கூயின்றோர்தெய்வதப்பெண் - ணுருவாயொருதனியேநின்றதாலென்னுயிர்க்குயிரே." எ-ம், முயங்கற்குச்செ-ள் "மானுகரன்றஞ்சைவாணன்வரோதயன்மாறையன்னு-டானுவிநின்றலர்தாமரையேயத்தடமலர்வா- யானுதொழுகுசெந்தேனல்லிமேவுமரசவன்னம்- யானுகிடைப்பதுவேயின்னபான்மையிருவர்க்குமே." எ-ம், புகழ்தற்குச்செ-ள் "அரும்பாமளவிற்றனத்தொடொவ்வாயலராமளவிற் - கரும்பார்மொழி வதனத்தொடொவ்வாய் கனியானைசெம்பொன் - றரும்பாரிவாணன்றமிழ்த்தஞ்சையான்றரியாரின்முன்செய்- பெரும்பாவமல்லதுநீர்நின்றபேறல்லிபெற்றிலையே" எ-ம், ஆயத்துய்த்தற்குச்செ-ள் "மேவிக்கலைகடலென்புலன்மீனுண்டுமீண்டுவெந்தென்-னாவிக்கமலத்தமரன்னமேநின்னயில்விழிபோல்-

வாவிக்கயலுகளுந்தஞ்சைவாணன்வரையிலுடன் - கூவிக்கயங்குடைநின்குயிலா யங்குறுகவே" எ-ம் வரும். தந்ததெய்வந்தருமெனச் சேறலாகியவொன்றுமே தெய்வந்தெளிதற்குரித்தாம். காண்டலும் முயங்கலும் புகழ்தலுமாகிய மூன் றுங் கூடற்குரியவாம். ஆயத்துய்த்தலாகிய ஒன்றும் விடுத்தற்குரியதாம். (கக)

கருசு. சார்தல் கேட்டல் சாற்ற லெதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்
றுங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.

இ-ம். பாங்கற்கூட்டத்தின் வகையுணர்-ற்று. சார்தன்முதலாகப் பாங் கிற் கூட்டலீறாக ஏழுவகையினையுடைத்தாம் பாங்கற் கூட்டம். எ-று. (உ0)

கருஎ. தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்
றலைவனை யுற்றது வினுதலுந் தலைவ
னுற்ற துரைத்தலுங் கற்றறி பாங்கன்
கழறலுங் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலுங்
கிழவோற் பழித்தலுங் கிழவோன் வேட்கை
தாங்கற் கருமை சாற்றலும் பாங்கன்
றன்மனத் தழுங்கலுந் தலைவனோ டழுங்கலு
மெவ்விடத் தெவ்வியற் றென்றலு மவனஃ
திவ்விடத் திவ்வியற் றென்றலும் பாங்க
னிறைவனைத் தேற்றலுங் குறிவழிச் சேறலு
மிறைவியைக் காண்டலு மிகழ்ந்ததற் கிரங்கலுந்
தலைவனை வியத்தலுந் தலைவியை வியத்தலுந்
தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறலுந்
தலைவன் சேறலுந் தலைவியைக் காண்டலுங்
கலவியின் மகிழ்தலும் புகழ்தலுந் தலைவியைப்
பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலு மென்றீங் கீட்டு நாலாறுங்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

இ-ம். பாங்கற்கூட்டத்து விரியுணர்-ற்று. தலைவன் பாங்கனைச்சார்த ன்முதலாகப் பாங்கிற்கூட்டலீறாக இவ்விடத்துத் தொகுத்த இருபத்துநான்கும் மேற்காட்டிய பாங்கற்கூட்டத்து விரியாம். எ-று.

அவற்றுள் தலைவன் பாங்கனைச்சார்தற்குச்செ-ள் "புனையாழியங்கைப் புயல்வளர்பாற்கடற்பூங்கொடிவாழ்-மனையாகியதஞ்சைவாணனென்னுரெனமற் றிங்ஙனே-யினையாதெழுமதிநன்னெஞ்சமேநமக்கின்னுயிரே - யனையானருட்பு னலாலனங்கானலமாற்றுதற்கே." எ-ம், பாங்கன்றலைவனையுற்றது வினுதற்குச்

செ-ள் "வலம்புரிபோற்கொடைவாணன்றென்மாறைமழைவளர்பூஞ்-சிலம்புறைசூர்வந்துதீண்டினபோலொளிமேம்பியிவ்வா - றுலம்புறைதோளுநின்னுள்ளமும்வாடியுருகிநின்று,- புலம்புவதென்னைகொல்லோ சொல்லவேண்டும்புரவலனே." எ-ம், தலைவனுற்றதுரைத்தற்குச் செ-ள் "மலைமுழுதுங்கொற்றம்வைச்சின்றவாணன்றென்மாறைநண்பா - சிலைமுழுதுஞ்சற்றுமுற்றுமெய்யாகிற்பச்செந்நிறத்தே-கொலைமுழுதுங்கற்றகூரியவாளிகுளிப்பவின்றென் - கலைமுழுதும்பட்டதாலொருமான்முடிக் கண்ணியிலே." எ-ம், கற்றறிபாங்கன் கழறற்குச் செ-ள் "தருகற்பகமன்னசந்திரன்வாணன்றமிழ்ச்சிலம்பின் - முருகக்கடவுளைபவெற்பா முகிலும்பிறையுஞ் - செருகக்கிளர்வரைவந்தவொர் பேதைக்குன் சிந்தையெல்லா - முருகக்கலங்கினைநீதகுமோ மற்றுனக்கிதுவே." எ-ம், கிழவோன்கழற்றெதிர் மறுத்தற்குச்செ-ள் "மாலாய்மதம்பொழி வாரணவாணன்றென்மாறையன்னார்-சேலார்கருங்கண்ணுஞ் செங்கனிவாயுஞ்சிறுநுதலு-நூலார்மருங்கும்பெருந்தனபாரமுநுண்மையன்றி - மேலானவருங்கண்டாலுரையாரின்னவீரங்களே." எ-ம், பாங்கன்கிழவோற்பழித்தற்குச் செ-ள் "சூரார்சிலம்பிற்சிலம்பிமென்னூல்கொண்டுசுற்றவெற்றிப் - போரார்களிறுபுலம்பிநைந்தாங்கொருபூவைகொங்கை - வாராலணைப்பவருந்தினைநீ தஞ்சைவாணன்வெற்பா-வோராழிசூழுலகத்தெவரேநின்னை யொப்பவரே." எ-ம், கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றற்குச் செ-ள் "பொறைகொண்ட தாமரைப்போதன்னகொங்கையும் பொங்கொளிசேர் - கறைகொண்டவாளன்ன கண்களுங்கொண்டொருகன்னிதெவ்வைத் - திறைகொண்டவாணன்செழுந்தஞ்சைசூழுஞ்சிலம்பினின்றென் -னிறைகொண்டவாறறியாதிகழாநிற்றிநீயுநின்றே" எ-ம், பாங்கன்றன்மனத்தழுங்கற்குச்செ-ள் "சீதளவாரங் கமழ்தஞ்சைவாணன்றென்மாறையன்னார்-காதளவாவெங்கடுவளவாவொளிர் காவியந்தண்-போதளவாவிழியென்னுமென்னுசைப்புறத்தளவா-சூதளவாமுலையென்னுமென்னுமினிச்சொல்லுவதே." எ-ம், பாங்கன்றலைவனோடழுங்கற்குச் செ-ள் "என்மேலறைகின்றதியானிங்குநின்செவிக்கென்சொலெல்லாம் - வன்மேலடர்கொங்கைகாரணமாய்த்தஞ்சைவாணன்வெற்பா- கன்மேலறைகின்றமென்முளைபோலுங்கடல்வெதும்பிற் - றன்மேல்விளாவவுண்டோ தரைமேலொருதண்புனலே." எ-ம், பாங்கனெவ்விடத் தெவ்வியற்றென்றற்குச் செ-ள் "முகத்திற்பகழியிரண்டுடையார்க்கிடமூரிமுந்நீ-ரகத்திற்பிறந்தவரவிந்தமோவடையார்தமக்கு - மகத்திற்சனியன்னசந்திரவாணன்றென்மாறைவெற்போ-நுகத்திற்பகலனையாய்தன்மையேதுநுவலெனக்கே." எ-ம், அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றற்குச்செ-ள் "கனமேகுழல்செங்கயலேவிழிமொழிகார்க்குயிலே - தனமேமுகையென்றனிநெஞ்சமேயிடைதன்பகைக்கு - வனமேயருளியவாணன்றென்மாறைமணிவரைசூழ்-புனமேயிடமிங்ஙனேயென்னைவாட்டியபூங்கொடிக்கே" எ-ம், பாங்கனிறைவனைத் தேற்றற்குச் செ-ள் "மழைவளர்மாளிகைமாறைவரோதயன்வாணன்வெற்பி - னிழைவளர்வார்முலை யேரிளந்தோகையை யிக்கணம்போய்க்-கழைவளர்சாரலிற்கண்டினையான்வந்துகாண்பளவுந் - தழைவளர்தாரண்ணலே தணிவாய்நின்றகவின்மையே." எ-ம், பாங்கன் குறிவழிச்சேறற்குச் செ-ள் "பாரித்ததிண்மையெம்மண்ண லுண்ணீரைப்பருகிநின்று-பூரித்தசெவ்விளநீர்களுந்தாங்கியபூங்கொடிதான்-வாரித்தலம்புகழ்வாணன்றென்மாறை வரைப்புறஞ்சூழ் - வேரித்தடம்பொழில்வாய் விளையாடுங்கொல் மேதகவே" எ-ம், பாங்கனிறைவியைக்கண்டற்குச் செ-ள் "கானேயளகங்கரும்பே மொழியியல்கார்மயிலே-மானேவிழிமுகமாமதியேசஞ்சைவாணன்வெற்பிற் - றேனேய்தொடையலென்சேயனையான்சொன்னசேயிழையா-டானேயிவளிதுவேயிடமாகிய தண்புனமே" எ-ம், பாங்கனிகழ்ந்ததற்கிரங்கற்குச் செ-ள் "கொலைகாலயிற்படை

சேரியர்கோனகங்கோடவங்கைச் - சிலைகால்வளைத்துத் திருத்தியவாணன்றென் மாறைவெற்பின்-மூலைகால்கொளக்கண்டிளைத்தநுண் ணூலிடைமுற்றிழைகண்-வலைகால்பிணிப்பவந்தார்வருந்தாரல்லர்மாலுழந்தே." எ-ம், பாங்கன்றலைவனை வியத்தற்குச் செ-ள் "தலங்காவலன் றஞ்சைவாணன் முந்நீர்பொருந் தண் பொருந்தத்-திலங்காரவல்வடக்கொங்கை வெற்பாலிணைநீலவுண்கட் - பொலங் காமர்வல்லி கடைந்தவப்போது புடைபெயர்ந்து - கலங்கா திருந்த தெவ்வா றெம்பிரான்றன் கலைக்கடலே" எ-ம், பாங்கன்றலைவியை வியத்தற்குச் செ-ள் "வெங்கோன் மழைபொழி வாரணவர்போர்வென்ற மீனவர்தஞ் - செங்கோன் முறைமைசெலுத்தியவாணன்றென்மாறைவெற்பி- னங்கோன்மெலியநலிகின்ற காமவெந்நஞ்சினையிப் - பைங்கோன் மணிவளையார்தணியாரல்லர்பார்வைகொண்டே" எ-ம், பாங்கன்றலைவன்றனக்குத் தலைவிநிலைகூறற்குச் செ-ள் "வளங்கனிமர்றைவரோதயன்வாணன்மலையவெற்பா - வுளங்கனிகாதலுடனின்றதானின்னுடலமெல்லாங் - களங்கனிபோலக்கருகிவெண்கோட்டுக்களிறுண்டதோர்-விளங்கனிபோல்வறிதேநிறைவாங்கியமென்கொடியே" எ-ம், தலைவன் குறிவழிச்சேறற்குச் செ-ள் "புறங்கூரிருட்கங்குல்போன்றகநண்பகல்போன்றபொங்கர் - நிறங்கூர்விழியவர்நின்றனரேநிழலைச்சுழித்து-மறங்கூர்களிற்றண்ணல்மாறன்றென்மாறையில்வாணுதலா-ரறங்கூர்மனத்தருளானின்றதாமெனதாருயிரோ" எ-ம், தலைவன்றலைவியைக்காண்டற்குச் செ-ள் "பாகையுந்தேனையும்போன் மொழியார்தமிழ்ப்பைந்தொடையும்- வாகையுஞ்சூடியவாணன்றென்மாறைவளமுமவ-னீகையும்போலு மெழிலியைநோக்கி யிரங்குபுள்ளுந் - தோகையும்போ ளின்றவாதணியேயிந்தச்சோலையிலே." எ-ம், தலைவன்கல்வியின்மகிழ்தற்குச் செ-ள் "யாரும்பர்தம்பதமென்போலவெய்தினரிம்பரம்பொன் - வாருந்துறை வையைசூழ்தஞ்சைவாணன்மலயவெற்பிற்-றேருந்தொறுமினிதாந்தமிழ்போன் றிவள்செங்கனிவா - யாருந்தொறுமினிதாயமிழ்தாமெனதாருயிர்க்கே" எ-ம், புகழ்தற்குச் செ-ள் "தழல்கண்டதன்னகலிவெம்மையாறத்தன்றண்ணளியா-நிழல்கண்டசந்திரவாணன்றென்மாறைநிலவுமிழுங் - கழல்கண்டதன்னகதிர்முத்தமாலிகைக்காரிகைநின் - குழல்கண்டபின்னல்லவோவறனீருட் குளித்தது வே." எ-ம், தலைவன்றலைவியைப் பாங்கியொடுவருகெனப்பகர்தற்குச் செ-ள் "என்காதலிஞென்றியம்புகின்றேனிங்கினிவருங்கா - ணின்காதலியொடுநீவரல்வேண்டுநிலமடந்தை - தன்காதலன்றஞ்சைவாணன்றென்மாறையந்தாமரைவாழ்-பொன்காதல்கொண்டுதொழுஞ்சிலம்பாரடிப்பூங்கொடியே." எ-ம், தலைவன்றலைவியைப்பாங்கிற்கூட்டற்குச் செ-ள் "என்னொடுநின்றவிளங்கொடியேசங்கமேந்துகுழாந்- தன்னொடுசெல்லுஞ்சலஞ்சலம்போற்றஞ்சைவாணன்வெற்பிற்- பொன்னொடுசெல்லும்புகழ்மணிபோனின்புடையகலா - மின்னொடுநுண்ணிடையாருடனீசென்றுமேவுகவே." எ-ம் வரும்.

இவற்றுள் முன்னையமூன்றுஞ் சார்தல், கேட்டல், சாற்றல் என்னு மூன்றிற்குரியவாம். பாங்கன் சுழறன் முதலாகக் கிழவோன்வேட்கை தாங்கற்கருமை சாற்றலீறாகச்சொல்லப்பட்ட நான்கு மெதிர்மறைக்குரிய. பாங்கன்றன்மனத்தழுங்கன்முதல் தலைவன்றனக்குத் தலைவிநிலைகூறலீறாகக் கூறியபதினொன்று நேர்தற்குரியவாம். தலைவன் சேறன் முதலாகத் தலைவியைப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்ட நான்குங் கூடற்குரியவாம். தலைவியைப் பாங்கியொடு வருகெனப்பகர்தலும் பாங்கிற்கூட்டலுமாகிய விரண்டும் பாங்கிற்கூட்டற்குரியவாம். இதனுட் பாங்கனொடுதலைவன் கூறியவெல்லாம் "நிற்பவை நினை யிசைப்பவை யுணர்தலு" மென்பதனாற் கொள்ளப்பட்டன. பாங்கன் கூற்றாயினவெல்லாங் "குற்றங்காட்டிய வாயில்பெட்டலு" மென்பதனாற் கொள்ளப்பட்டன. (௨௪)

௧௩௮. முன்னுற வுணர்தல் குறையுற வுணர்த
லிருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றொருமூன்று வகைத்தே பாங்கிமதி யுடம்பாடு.

இ-ம். பாங்கிமதியுடம்பாடுணர்-ற்று. முன்னுறவுணர்தலுங் குறையுற வுணர்தலு மிருவருமுள்வழியவன்வர வுணர்தலுமென மூன்றுவகையினையுடைத்தாம் பாங்கிமதியுடம்பாடு. எ-று. அவற்றுள் முன்னுறவுணர்தலாவது பாங்கி தலைமகளது வேறுபாடுகண்டதனானே கூட்டமுண்மையறிதல். குறையுறவுணர்தலாவது தலைமகன் தழையுங்கண்ணியுங்கொண்டு தன்பாங்கிற்குறையுற்று நிற்கக் கண்டதனானே கூட்டமுண்மையறிதல். இருவருமுள்வழி யவன்வரவுணர்தலாவது தலைமகளுந்தானு மொருங்கிருந்துழித் தலைமகனவ்வாறு வரக்கண்டதனானே கூட்டமுண்மையறிதல். (௨௨)

௧௩௯. நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றோர்தலு
மவ்வகை தன்னா லையந் தீர்தலு
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பலவேறு கவர்பொருட் சொல்லி னாடலுமென
முன்னுற வுணர்தன் மூன்றா கும்மே.

இ-ம். முன்னுறவுணர்தலின் பாகுபாடுணர்-ற்று. நாற்றமுதலாகப் பயிலீறாகச் சொல்லப்பட்ட விவ்வகையுடைய வேழினானும் பாங்கியையமுற்றோர்தலு மவற்றானேயையந்தீர்தலும் மெய்யினும் பொய்யினுங் குற்றேவல் தப்பாமற் பலவாய் வேறுபட்ட விருபொருள்பட்ட சொற்களானாராய்தலுமென முன்னுறவுணர்தன் மூன்றாம். எ-று. என்னை? "நாற்றமுந்தோற்றமுமொழுக்கமுமுண்டியுஞ்-செய்வினைமறைப்புஞ்செலவினும்பயில்வினும்-புணர்ச்சியெதிர்ப்பாடுள்ளுறுத்துவரு-முணர்ச்சியேழினுமுணர்ந்தபின்றை-மெய்யினும்பொய்யினும் வழிநிலைபிழையாது-பலவேறுகவர்பொருணாட்டத்தானும்" எ-லின்.

அவற்றுள் நாற்றமாவது தான் பண்டுபயின்றறியாததோர் நாற்றம். தோற்றமாவது கூட்டத்தாற்பெற்றதோரழகு. ஒழுக்கமாவது தெய்வந்தொழாமைமுதலியன. உண்டியாவது பண்டையிற்குறைந்தவுண்டி. செய்வினைமறைத்தலாவது தலைமகடான்செய்யுந்தொழிலைப் பாங்கியைமறைத்தல். செலவாவது ஆயத்தை நீங்கித் தனியே பெயர்தல். பயிலலாவது எப்போதுமோரிடத்தே நிற்றல்.

பாங்கியவற்றாலையமுற்றோர்தற்குச் செ-ள் "வண்டலையாயத்துடனயர்ந் தோவன்றிவண்டிமிர்பூந் - தண்டலையாரத்தழைகள்கொய்தோதஞ்சைவாணன் வெற்பிற்-புண்டலைவேலினுங்கண்சிவப்பாரப்பொலஞ்சுனைத்தேன்-கொண்டலை நீர்குடைந்தோவிவண்மேனிகுழைந்ததுவே." எ-ம், ஐயந்தீர்தற்குச் செ-ள் "திளைக்குந்திரைமேலுனக்குமுன்றோன்றலிற்செம்பொன்வெற்பை-வளைக்கும்பிரான்முடிவைகுதலாற்றஞ்சைவாணன்மண்மேல்-விளைக்கும்புகழ்போல்விளங்கு

தலாற்செக்கர்விண்பிறைகார் - தனைக்குங்குழற்றிருவேதொழுவேதகுந்தன்மைய தே.'' எ-ம், ''மூன்னுந்தொழத்தோன்றிருள்ளெயிற்றுயித்திசையே- யின்னுந் தொழத்தோன்றறிதேகாண்-மன்னும்-பொருகளிமால்யானைப் புகழ்க்கிள்ளிபூண் போற்-பெருகொளிபான்மிக்கபிறை'' எ-ம், மெய்யினும்பொய்யினும் வழிநிலை பிழையாது பலவேறுகவர்பொருட்சொல்லினுடற்குச் செ-ள் ''பூட்டியவார்சிலை வீரரைவென்றெப்பொருப்பினுஞ்சீர்-தீட்டியவாணன்றென்மாறையன்னீரிதழ்ச் செம்மைபும்மை-யூட்டியவாளின்கருமையுந்தான்கொண்டிங்கிங்ஙனே-சூட்டிய வாறுநன்றுன்முல்லைமாலைசுனைப்புனலே'' எ-ம், காவுநாடற்குச் செ-ள் ''மற லாயெதிர்ந்தமறமன்னர்வேழமலையெறிவேற் - றிறலார்முருகன் செழுந்தஞ்சை வாணன் றென்மாறைவையை - யறலார் குழலாய் நுதற்குறு வேர்வு மழகுநின் போற்-பெறலாமெனிற்குடைவேனடியேனும்பெருஞ்சுனையே'' எ-ம், தகை யணங்குறுத்தற்குச் செ-ள் 'குவளைசிவத்துக்குமுதம்வெளுத்தகுறையல்லையே- லவளைமறைத்துன்னைக் காட்டிடலாமலர்த்தேன்குதிக்கத்-தவளைகுதிக்குந் தடம் பொய்கைசூழ்தஞ்சைவாணன்வெற்பி-லிவளைவரக்கண்டுநீயணங்கேபின்னெழுந் தருளே'' எ-ம், நடுங்கநாட்டம். ''பால்போன்மொழி வஞ்சியஞ்சி நின்றே னிந்தப்பார்முழுது - மால்போற்புரந்தவன்மாறைவரோதயன்வாணன்வென்றி- வேல்போற்சிலந்து நெறிமுறைகோடியவேந்தன்வெய்ய-கோல்போற்கொடியன வாங்கொலையானையின்கோடுகண்டே'' எ-ம், 'பண்டிப்புனத்திற்பகலிடத்தே னலுட்-கண்டிக்களிற்றையறிவன்மற்-றுண்டிக்-கதிரன்பழையனூர்க் கார்நீல க்கண்ணு-யுதிரமுடைத்திதன்கோடு'' எ-ம் வரும். இவற்றுள் முன்னைய மூன் றும் மெய்யினாற் சொல்லிப் பின்னைய மூன்றும் பொய்யினாற் சொல்லிய. பிறவு மன்ன. நாணநாட்டத்துக்குச் சான்றோர் செய்யு ளின்மையா னஃதிலக்கண மன்று. (உ௬)

கசுO. பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுத்தோன்
கண்ணியுந் தழையு மேந்தி நண்ணி
யூர்பெயர் கெடுதியோ டொழிந்தவும் வினவுழி
யாரே யிவர்மனத் தெண்ணம் யாதெனத்
தேர்தலு மெண்ணந் தெளிதலு மெனவாங்
கோரிரண் டாகுங் குறையுற வுணர்தல்.

இ-ம். குறையுறவுணர்தலின் பாகுபாடுணர்-ற்று. இயற்கைப்புணர்ச்சிக் குப்பின்னே தலைமகளாற் பேணப்பட்ட வாயிலைப்பெற்றுப் பின்னிரந்து குறை யுறுதல் வலியுறுத்ததலைமகன் கண்ணியுந் தழையுமேந்திச் சார்ந்துநின்று ஊரு ம் பேரும் கெடுதியும் ஒழிந்ததும் வினவியவிடத்து இவர் யாரெனவும் மனத்தின் கண்ணுள்ளதாகிய வெண்ணம் யாதெனவும் பாங்கியாராய்தலும் மனகத்தெண் ணத்தினைத் தெளிதலுமென விரண்டாகுங் குறையுறவுணர்தல் எ-று. அவற் றுள். தலைமகன் பாங்கியையிரவுவலியுறுத்தற்குச் செ-ள் ''பொருமணிவெண் டிரைப்பைங்கடல்வங்கம்பொருந்திமுன்பு-தருமணிபின்பெற்றணிபவர்போற்செ ன்றுசார்ந்திரந்து-பருமணிநன்கலப்பாங்கியைநீங்கியப்பாவையைநா -மருமணிவ ண்டறைதார்வாணன்மாறைமருவுதுமே'' எ-ம், ஊர்வினுதற்குச் செ-ள் ''புதி யேன்மிகவிப்புனத்துக்கியான்றணிபோந்தனனும் - பதியேதுசெல்லும்படிசொல் லுவீர்படிமேற்படிந்த-மதியேய்சுதைமதில்சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவை யை-நதியேய்சுழிநிகரும்பழிதீருந்திநல்லவரே'' எ-ம், பேர்வினுதற்குச் செ-ள்

"கரைத்தாவியுந்தியகாவிரிவைகையகலத்தினும்- தரைத்தாருவன்னசெந்தண்ணளிவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்-வரைத்தாழ்பதியினும்வாழ்பதியீதென்றுவஞ்சியன்னீ-ருரைத்தாலழிவதுண்டேற்பெயரேனுமுரைமின்களே" எ-ம், கெடுதிவினுதற்குச் செ-ள் "தண்பட்டமேவும்வயற் றஞ்சைவாணன் றமிழ்ச்சிலம்பிற் - பண்பட்டதேமொழிப்பாவையன்னீர்பணைபட்டகையு-மண்பட்டகோடு மதம்பட்டவாயும்வடிக்கணையாற் - புண்பட்டமேனியுமாய்வந்ததோவொருபோர்க்களிறே" எ-ம், "சீதவிரைக்கனகச்செந்தாமரைப்பொகுட்டு-மாதனையீரம்போடுவந்ததோ - சோதிப்-பொருதாரைவேற்கண்டன்பூபாலதீபன் - கருதாரிலிங்கோர்களிறு" எ-ம், ஒழிந்ததுவினுதற்குச்செ-ள் "வனமார்குடிஞைப்பகைக்குரலாமெனவாணன் றஞ்சைப் - புனமார்குளிரிப் புடைப்பொலியாற்கிள்ளை போயினமீண் - டினமாமெனவந்திவ்வேனலெல்லாம்வெளவுமென்பதற்கோ-கனமாநறுங்குழலீர்மொழியாதொழிகாரணமே" எ-ம், யாரேயிவர்மனத்தெண்ணம்யாதெனத்தேர்தற்குச் செ-ள் "தரையாரவண்புகழ்தேக்கியவாணன் றமிழ்த்தஞ்சைசூழ்-வரையாதுநும்பதியாதுநும்பேரென்பர்வார்துளிக்கார்-புரையானையப்பொடுபோந்ததுண்டோவென்பர்பூங்கொடியீ - ருரையாததென்னென்பராலென்கொலோவிவருட்கொண்டதே" எ-ம், எண்ணந்தெளிதற்குச் செ-ள் "யாரேயிவரென்றறிகின்றிலே மெதிர்ந்தாரைவென்று - வாரேகழல்புனைவாணன்றென்மாறைவரையுறைவீ - ரூரேதெனமுன்வினவிப்பின்வேறொன்றுரைப்பதெல்லா - நேரேயிவள்பொருட்டாலென்றுதோன்றுமென்னெஞ்சினுக்கே" எ-ம், "பூத்தவேங்கைவியன்சினையேறி- மயிலினமகவுநாட - னன்னுதற்கொடிச்சிமனத்தகத்தோனே" எ-ம் வரும். இவையெல்லாம் "பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுத்தலு-மூரும்பேருங்கெடுதியும்பிறவு-நீரிற்குறிப்பினிரம்பக்கூறித்- தோழியைக்குறையுறுபகுதியுந்தோழி - குறையவட்சார்த்திமெய்யுறக்கூறலும்" என்பதனால் வந்தன. (உச)

கசக. கையுறை யேந்திவந் தவ்வகை வினவுழி
யெதிர்மொழி கொடுத்தலு மிறைவனை நகுதலு
மதியி னவரவர் மனக்கருத் துணர்வுமென்
றிருவரு முள்வழி யவன்வர வுணர்த
லொரு மூன் றாகுந் தெரியுங் காலே.

இ-ம். இருவருமுள்வழி யவன்வரவுணர்தலின் பாகுபாடுணர் - ற்று. இருவருமுள்வழியவன்வரவுணர்தலென்பது தலைமகன்றழையுமேந்தி முன்புபோல் ஊர்பேர்முதலாயின வினவினவிடத்து, தோழியதற்கெதிர்மொழி கொடுத்தலும் இறைவனைநகுதலு மதியினவரவர் மனக்கருத்துணர்தலுமென ஒருமூன்றாகு மாராயுங்காலத்து. எ-று. கையுறையேந்திவருதற்குச் செ-ள். "தண்டாமரைமலர்ப்பொன்னையும்பார்மங்கைதன்னையும்போல்-வண்டார்குழன்மடவார்மணந்தார்சென்றுவாணன்றஞ்சை - நுண்டாதணிபொங்கர்நீழலின்கீழந்நுடங்கிடையார்க் - கண்டாதரவையெல்லாஞ்சொல்லவேநல்லகாலமிதே" எ-ம், தலைவனவ்வகைவினுதற்குச்செ-ள் "வல்லாரிளங்கொங்கைவஞ்சியன்னீர்தஞ்சைவாணனைக்கண் - டொல்லார்களத்திலுடைந்ததுபோலவொருகலையோர் - வில்லார்கணைதைப்பமெய்சோர்ந்தினம்விட்டுவெய்துயிர்த்துப்-புல்லார்வதுமின்றியேவந்ததோநும்புனத்தயலே" எ-ம், பாங்கிதலைவற்கெதிர்மொழிகொடுத்தற்குச்செ-ள் "வாக்குந்திறனும

தனையொப்பீர்தஞ்சைவாணன்மஞ்சு-தேக்குங்குடுமிச்சிறுமலைக்கே திரிகோட்டிரலை-கோக்குஞ்சரமுங்குருதியுஞ்சோரக்கொடிச்சியரேங் - காக்கும்புனமருங்கே தனியேவரக்கண்டிலமே" எ-ம், பாங்கியிறைவனைநகுதற்குச் செ-ள் "மைவாளிலங்குகண்மங்கைநல்லாய் தஞ்சைவாணன்வெற்பி-லிவ்வாளிமொய்ம்பரின்றெய்த மெய்ம்மானிளமாந்தளிரின்-செவ்வாளியுங்கொண்டுசேட்சென்றதாலன்றுசீதைகொண்கன் - கைவாளியுங்கொண்டுபோனபொய்ம்மானினுங்கள்ளத்ததே" எ-ம். பாங்கிமதியினவரவர் மனக்கருத்துணர்தற்குச் செ-ள். "புனங்காவலன்றிவள்பூண்டதுமாண்டகைபோந்ததுமா- னினங்காவலின்கலையெய்யவன்றாலிகலாழிவிந்தை- தனங்காவலன்றஞ்சைவாணன்றன்னாட்டிவர்தங்களிற்றா- மனங்காவல்கொண்டதெல்லாங் கண்களேசொல்லும்வாய்திறந்தே" எ-ம் வரும். இவையெல்லாந் தோழி கூற்றுள், "வந்தகிழவனைமாயம்செப்பிப் - பொறுத்தார்காரணங் குறித்த காலை" என்பதனாற் கொள்ளப்பட்டன. (உரு)

கசஉ. ஈங்கனங் கூறிய விருநான்கு கிளவியும்
பாங்கி மதியுடம் பாட்டது விரியே.

இ-ம். மேற்சொல்லியவற்றைத் தொகுத்துணர்-ற்று. ஐயமுற்றோர் தன்முதலாக மதியினவரவர் மனக்கருத்துணர்தலீறாகச் சொல்லப்பட்ட எட்டுக்கிளவியும் பாங்கிமதியுடம்பாட்டதன் விரியாம். எ-று. (உசு)

கசங. இரந்து பின்னிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக் குடன்படன் மடற்கூற் றொழிதல்
குறை நயப்பித்த னயத்தல் கூட்டல்
கூட லாயங் கூட்டல் வேட்டலென்
றீராறு வகைத்தே யிருளையிற் கூட்டம்.

இ-ம். பாங்கியிற் கூட்டத்துவகையுணர்-ற்று. இரந்துபின்னிற்றன் முதலாக வேட்டலீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டுவகையினையுடைத்தாம் பாங்கிமதியிற்கூட்டம். எ-று. (உஎ)

கசச. தலைவனுட் கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலுந் தலைவன் றலைவி
தன்னை யுயர்த்தலு நன்னுதற் பாங்கி
யறியாள் போன்று வினாதலு மிறையோ
னிறைவி தன்மை யியம்பலும் பாங்கி
தலைவி யருமை சாற்றலுந் தலைவ
னின்றி யமையாமை யியம்பலும் பாங்கி
நின்குறை நீயே சென்றுரை யென்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி

பேதைமை யூட்டலுங் காதலன் றலைவி
மூதறி வுடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலுந்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
யுலகிய லுரைத்தலுந் தலைமகன் மறுத்தலும்
பாங்கி யஞ்சியச் சுறுத்தலு மாங்கவன்
கையுறை புகழ்தலுந் தையன் மறுத்தலு
மாற்று நெஞ்சினோ டவன்புலத் தலுமவ
ளாற்றுவித் தகற்றலு மாகு நாலைந்து
மிரந்துபின் னிற்றற்குஞ் சேட்படுத் தற்கும்
பொருந்துவ வென்மனார் தெரிந்திசி னோரே.

இ-ம். தலைவனுட்கோள்சாற்றன்முதலாகப் பாங்கியாற்றுவித்த லீறாகச் சொல்லப்பட்ட விருபதுமாம் இரந்துபின்னிற்றற்குஞ் சேட்படுத்தற்கும் பொருந்துங்கிளவியென்று சொல்லுவாராய்ந்தோர். எ-று.

தலைவனுட்கோள்சாற்றற்குச் செ-ள் "வாவுங்கலைவிந்தைகாவலன்வாணன்றென்மாறையன்னீ - ரேவுந்தொழிலெனக்கேதியலாததிங்கேநுமக்கோர்-மேவுஞ்செய்குன்றமுஞ்சோலையுமாகப்பொன்வெற்பும்விண்ணோர் - காவுந்தரவும்வல்லேனெனையாளுங்கடைக்கண்வைத்தே" எ-ம், பாங்கிகுலமுறைகிளத்தற்குச் செ-ள் "நீவேறுரைக்கின்றதென்குறமாதெங்கணேரிழைபோர் - மாவேழவன்படைவாணன்றென்மாறைமணியையன்றித் - தாவேதுமில்லாத்தமணியமீ துதலம்புரக்குங்-கோவேயழுத்துவரோவறியோருங்குருவிந்தமே." எ-ம், தலைவன் தலைவியையுயர்த்தற்குச் செ-ள் "மிக்காருளரல்லர்மெல்லியன்மாதரின்மேதினிமே - ணக்கார்புகழ்தஞ்சைவாணர்பிரான்றமிழ் நாடனையாய் - மைக்கார்நிகர்குழல்வள்ளிசெவ்வேளுக்குவல்லவையா - மிக்காரணமுணராதென்கொலோநின்றியம்புவதே." எ-ம், "திங்களுள்வில்லெழுதித்தோராதுவேல்விளக்கித் - தங்களுள்ளானென்னுந்தகவினு-லிங்கட்-புனங்காக்கவைத்தார்போற்பூங்கொடியேபோந்தென்-மனங்காக்கவைத்தார்மருண்டு." எ-ம், பாங்கிதலைமகளையறியாள்போன்றுவினுதற்குச் செ-ள் "பொன்னியலூசலும்பொய்தலுமாடியெப்போதுநன்னீர்-மன்னியனீலமுநித்திலமுங்குற்றுவாணன்றஞ்சை - யின்னியலாருமிளமரக்காவினிடம்பிரியாக் - கன்னியர்தாம்பலர்யார்நின்னைவாட்டியகாரிகையே." எ-ம், இறையோனிறைவிதன்மையியம்பற்குச் செ-ள் "தாளிணைமாந்தளிரல்குல்பொற்றேரிடைசங்கைகொங்கை- கோளிணைகோலக்குரும்பைகைகாந்தள்கொடிக்கரும்பார் - தோளிணைவேய்முகந்திங்கள்செவ்வாயிதழ்தொண்டையுண்கண் - வாளிணைவார்குழலாய்வாணன்மாறையெம்மன்னுயிர்க்கே." எ-ம், பாங்கிதலைவியருமைசாற்றற்குச் செ-ள் "புகழார்வரையெம்புரவலன்காதற்புதல்வியைநீ - நிகழாவெளியளென்றெண்ணப்பெற்றீரெமக்கென்றும்வண்மை- திகழாபரணன்செழுந்தஞ்சைவாணன்சிலம்பினுள்ளீ - ரகழார்கவியுலகிற்புலனுணவணங்கவளே." எ-ம். தலைமகன்றலைமகளின்றியமையாமையியம்பற்குச் செ-ள் "வனைந்தாலன்னகொங்கைமாதுருவாய்த்தஞ்சைவாணன்வெற்பிற் - புனைந்தாலனையபுனத்

தயல்வாய்வண்டுபோதகத்தே - னனைந்தாலனையவென்னல்வினைதான்வந்துநண்ணிற்றென்று-நினைந்தாலணங்கனையாய்தமியேனுயிர்நிற்கின்றதே.'' எ-ம். பாங்கிநின்குறைநீயேசென்றுரையென்றற்குச் செ-ள் "மருப்பாவியதொங்கல்வாணன்றென்மாறைவணசமலர்த் - திருப்பாவையன்னவென்சேயிழையாட்குன்றிருவுளத்து-விருப்பாகியகுறையுள்ளதெல்லாஞ்சொல்லிவேண்டுகநீ - பொருப்பாமொழியப்பெருவரம்மனேரிவைபோல்வனவே.'' எ-ம், "தன்னையுந்தானுநுஞ்சாயலாட்கிதுரைப்பி-னென்னையுநாணப்படுங்கண்டாய் - மன்னிய- வேயேமென்றோளிக்குவேறுவிணியொருநா-ணீயேயுரைத்துவிடு'' எ-ம், பாங்கியைத்தலைவன்பழித்தற்குச் செ-ள் "வில்லார்நுதல்வெய்யவேலார்விழிக்கென்மெலிவுசொல்ல- வல்லாரிலைசொல்லவல்லையென்றியான்றஞ்சைவாணன்றெவ்வி-னுல்லாதிது நுமக்கென்றுணரேனின்றுணங்கியிந்நா - ளெல்லாமிரந்ததுநின்குறையேயல்லவென்குறையே.'' எ-ம், "மாதர்குறைமுடிக்கவல்லாயைவல்லையெனக்-காதல்சிறப்பக்கருதியது - மேதகைய-பாம்படுதேரல்குல்பயன்படுநீர்மானமான்-றேம்படுதோளீதுசெயல்'' எ-ம் வரும்.

பாங்கிபேதைமையூட்டற்குச் செ-ள் "தேனுஞ்சரும்புஞ்செறிதொங்கல்வாணன்றென்மாறைவெற்பா - மானுங்கலையும்வடிக்கணையாலெய்துமன்னுயிரு-மூனுங்கவர்கின்றதன்னையர்போலயிலொத்தகண்ணு - டானும்பிறருள்ளநோயறியாததகைமையளே.'' எ-ம், "நறுந்தண்டகரம்வகுளமிவற்றை-வெறும்புதல்போல்வேண்டாதுவெட்டி-யெறிந்துழுது- செந்தினைவித்துவார்தம்கைபிறர்நோய்க்கு-நொந்தினையவல்லாளோநோக்கு'' எ-ம், காதலன்றலைவிழுதறிவுடைமைமொழிதற்குச் செ-ள் "வருநீர்வணமுலைமங்கைநல்லாய்செங்கைவாணன்வைவை-தருநீர்மலிவயற்றஞ்சையன்னாளன்றுதஞ்சமிலே - னருநீர்நவையுறக்கண்மலர்நிதெளித்தாற்றினளா - விருநீர்நிலங்கொள்ளுமோவறியாளென்னுமிவ்வுரையே.'' எ-ம், பாங்கிமுன்னுறுபுணர்ச்சிமுறையுறக்கூறற்குச் செ-ள் "செறிவளர்காவிவயற்றஞ்சைவாணன்சிறுமலைமே-னெறிவளர்வார்குழனேரிழையாளன்னநீர்மையளேற்-குறிவளர்காவின்முன்கூடியவாறின்னுங்கூடுகநீ- கறிவளர்சாரல்வெற்பாபிறராலென்னகாரியமே'' எ-ம், தன்னிலைதலைவன்சாற்றற்குச் செ-ள் "உரைத்தென்பிறவந்தப்பைந்தொடியாகமுறுவிடில்வெண்-டிரைத்தென்கடன்முத்துந்தண்மலைச்சந்துஞ்செழும்பனிநீ-ரரைத்தென்புருகமெய்யப்பினும்வெப்பமாறுதிணிநின் - வரைத்தென்கருமமெல்லாந்தஞ்சைவாணன்வரையணங்கே.'' எ-ம், பாங்கியுலகியலுரைத்தற்குச் செ-ள் "விரையகநாண்மலர்மெல்லியன்மாதைவிரும்பினையேல் - வரையகநாடவரைந்துகொணீதஞ்சைவாணன்முந்நீர்த்-தரையகநான்மறைக்கேள்வியர்வேள்வியர்சான்றவர்த - முரையகநாடிமுன்னிட்டணதாகுமுலகியலே.'' எ-ம், தலைமகன்மறுத்தற்குச் செ-ள் "வெண்டாமரைமங்கைகாதலனாகியவேதியன்பா - லுண்டாகியதொல்லுலகியலாலுங்களாரணங்கை-வண்டார்குழலிவரைந்துகொள்வேன்றஞ்சைவாணன்வண்மை- கண்டாலருநுநள்ளநீயெனதாருயிர்காத்தபின்னே.'' எ-ம், பாங்கியஞ்சியச்சுறுத்தற்குச் செ-ள் "மல்லார்புயன்றஞ்சைவாணன்வெற்பாவெமர்வந்தினியிக்-கல்லார்வியன்புனங்காவிடாரவர் காணின்மிகப் - பொல்லாதிருண்டது போதுமற்றியாங்களும்போதுமிங்கு-நில்லாதெழுந்தருணீயுமிப்போதுநெடுந்தகையே.'' எ-ம், தலைவன்கையுறைபுகழ்தற்குச்செ-ள் "இமையார்மலயத்தமிழ்த்தஞ்சைவாணன்சிறுமலைமே - லமையாகியதடந்தோளன்னமேயணியத்தகுமா-லுமையாளிறைவன்பயிற்சயிலாயத்துறும்பர்தங்கு-மிமையாசலத்துமெல்லாமில்லையாணிகரித்தழைக்கே'' எ-ம், பாங்கிகையுறைமறுத்தற்குச் செ-ள் "மல்குற்றதண்புனல்சூழ்தஞ்

சைவாணன்மலயவெற்பா- நல்குற்றவையிந்நாட்டுளவன்மையினன்றுதலா-ள
ல்குற்றடத்தெமர்கண்டாலயிர்ப்பரதுவுமன்றிப் பல்குற்றமும்வருமால்யாங்கள்வா
ங்கேம்பசுந்தழையே" எ-ம், தலைமகனுற்றநெஞ்சினோடவன்புலத்தற்குச் செ-ள்
"உழையும்வெங்காளமும்போலுங்கண்ணுமொருகாலமுள்ளங்-குழையுமெம்பா
லென்றுகொண்டநெஞ்சேகலிக்கோடைமன்னமேன்- மழையுமந்தாரமும்வந்தன
வாணன்றென்மாறையின்மாந்-தழையுநம்போலிங்ஙனேகவின்வாடத்தவஞ்செய்
ததே." எ-ம், பாங்கியாற்றுவித்தகற்றற்குச் செ-ள் "சோலையில்வாழிளந்தோ
கையன்னனைத்தொழுதிரந்திம் - மாலையில்வாழிவரங்கொள்வல்யான்றஞ்சைவா
ணன்வெற்பா-வேலையிலார்துகிரன்னமெய்யோன்வெயில்வெற்பின்மல்கும்-காலை
யில்வாபின்னையென்கையதாகுநின்கையுறையே." எ-ம், தலைவன்கூற்றாயின
வெல்லாமிரந்துபின்னிற்றற்கும் பாங்கிகூற்றாயினவெல்லாஞ் சேட்படுத்தற்கு
முரியவெனக் கொள்க. (உ௮)

கசரு. இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்
குலகின் மேல்வைத் துரைத்தலு மதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமக ளவயவத் தருமை சாற்றலுந்
தலைமகன் றன்னைத் தானே புகழ்தலு
மலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தலுங்
கொண்டுநிலை கூறலு மென்றிவை யேழு
மடற் கூற்றிற்கு மடல்விலக் கிற்குங்
கடவ வென்மனார் கற்றறிந் தோரே.

இ-ம். இரந்துகுறைபெறாது வருந்தியகிழவோன் மடலேபொருளென
மதித்தன முதலாகப் பாங்கிகொண்டுநிலைகூறலீறாகச் சொல்லப்பட்டனவேழுந்
தலைமகன் மடற்கூற்றிற்குந் தோழி மடல்விலக்கிற்குமுரிய கிளவியென்று சொ
ல்லுவர் கற்றறிந்தோர். எ-று.

பாங்கியையிரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன் மடலேபொருளெனம
தித்தற்குச் செ-ள் "திருந்தார்தொழுங்கழற்சேயன்னவாணன்றென்மாறைவெ
ற்பி-னருந்தாவமுதன்னவஞ்சொனல்லாரழகார்குழைதோய்-பெருந்தாரைவேல்
விழிதந்தவெங்காமப்பிணிதனக்கு- மருந்தாவதுநெஞ்சமேயில்லைவேறுமடலன்றி
யே." எ-ம், பாங்கிக்குத்தலைமகன்மடலேற்றினையுலகின்மேல்வைத்துய்த்துரை
த்தற்குச் செ-ள் "விரையூர்குழலியர்தந்தசிந்தாகுலவெள்ளநிரைக்-கரையூர்பொ
ழுதிளங்காளையர்தாங்கிளிகைப்பிடித்துத்- தரையூர்தொறும்பெண்ணைமாமடலூ
ர்வர்தவிர்ந்துபின்னும்- வரையூர்வர்தஞ்சையர்கோன்வாணன்மாறையில்வாணுத
லே" எ-ம், அம்மடலேற்றினைத்தலைமகன்றன்மேல்வைத்துச்சாற்றற்குச் செ-ள்
"வன்பணிபோனிலந்தாங்கியவாணன்றென்மாறைவெற்பின் - மின்பணிபூண்மு
லைமெல்லியலீர்குறைவேண்டியுங்கண்- முன்பணிவேனின்றுநாளைவெண்பூளைமு
கிழெருக்கோ-டென்பணிவேன்மடன்மேல்வருவேனிவையென்பணியே." எ-ம,
"தொடலைக்குறுந்தொடிதந்தாண்மடலொடு-மாலையுழக்குந்துயர்." எ-ம் வரும்.

பாங்கிதலைமகளவயவத்தருமைசாற்றற்குச்செ-ள் "தொடையேயெருக்கலைக ண்புநீயணிந்தாலென்னைசுல்வனையூர்- மடையேய்வயற்றஞ்சைவாணன்வெற்பாம லரோன்வகுத்த-டைடயேய்நயனம்படைத்தபொற்பாவைபடியெடுக்க - விடை யேதெனத்தெரியாதுரையாணியிடவரிதே" எ-ம், "கம்பமதயானைக்கண்டன்கட ற்கோடிக்-கொம்பர்விழிக்குவமைகூறுவதே-னம்பு-கருநீலஞ்செங்குவளைகாலன் வேலாஎம்-பெருநீர்மைதோற்றழிந்தபின்." எ-ம் வரும். தலைமகன்றன்னைத்தா னேபுகழ்தற்குச் செ-ள் "நறையலராவிரைப்போதிசையாதிசைநான்முகத்து- மறையலராவந்தமான்மகன்யான்றஞ்சைவாணன்வையைத் - துறையலராவியங் காவியங்கண்ணிதுணிந்துசொல்லுங்- குறையலரார்குழலாட்கினித்தீரக்குறையி ல்லையே." எ-ம், பாங்கியருளியல்கிளத்தற்குச் செ-ள் "செயலார்குடம்பையிற் சேர்தலையன்றிற்சினையுளைபைங்-கயலார்வனவெண்குருகின்வண்பார்ப்புளைக்க டங்கா-மயலார்களிற்றண்ணல்வாணன்றென்மாறைவையைத்துறைவா - வியலா தருளுடையார்க்கென்றுமாமடலேறுவதே." எ-ம், பாங்கிகொண்டுநிலைகூறற்கு ச் செ-ள் "வெண்கோடணிமுகப்பைங்குரும்பைக்கொங்கைவெய்யவுண்கட்- கண்டோர்விரும்புங்கரும்பனையாரைக்கடற்றுறைவா- கொண்டோர்குறைமுடி கொம்பனையார்நின்குறைமறுத்தால் - வண்டோலிடுந்தொங்கலான் வாணன்மா றைவளநகர்க்கே." எ-ம் வரும். இது தலைமகனிலையைத் தாங்கிக்கொண்டு நிலையாயிற்று.

இச்சூத்திரத்துட் டலைமகன் கூற்றாயினவெல்லாம் மடற்கூற்றிற்கும் பாங்கிகூற்றாயினவெல்லாம் மடல்விலக்கிற்குமுரியவெனக் கொள்க. இவ்விர ண்டு சூத்திரத்து மெடுத்தோதப்பட்ட கிளவிக ளிவ்வியலுட் பாங்கிகூற்றுட் "குறையுற்-றெதிரியகிழவனைமுறையுறப்பெருமை-யிரப்பேயிரப்பினு முலகுரை தெளிப்பினு - மருமையினகற்றலு மவனறிவுறுத்துப் - பின்வாவென்றலும் பேதை மையூட்டலு-முன்னுறுபுணர்ச்சி முறைநிறுத்துவைத்தலு - மஞ்சியச்சுறுத்தலு முரைத்துனிக்கூட்டமோ-டெஞ்சாதுகிளந்தவிருநான்குகிளவியும்" என்பதனு லும், தலைமகன்கூற்றுள் "தண்டாதிறத்தலு மற்றையவழியுஞ்-சொல்லவட்சா ற்றலிற் புல்லியவகையினு - மறிந்தோர்யாப்பி னவ்வழிமருங்கிற் - கேடும்பீடுங் கூறலுந்தோழி-நீக்கலனாகிய நிலையுநோக்கி- மடனமாகூறு மிடன்மற்றுண்டே- என்பதனாலும், பொருளியலுள் இரந்துகுறையுற்ற கிழவனைத்தோழி, நிரம்ப நீக்கி நிறுத்தலன்றியும், வாய்மைகூறலும் பொய்ம்மைகூறலும், நல்வகையு டைய நயத்திற்கூறலும், பல்வகையாலும் படைக்கவும்பெறுமே" என்பதனா லுங் கொள்ளப்பட்டன. (உக)

கசரு. தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலுந் தலைவன் றலைவி
வருத்திய வண்ண முரைத்தலும் பாங்கி
செவ்வி யருமை செப்பலுந் தலைவன்
செவ்வி யெளிமை செப்பலும் பாங்கி
யென்னை மறைத்தபி னெளிதென நகுதலு
மந்நகை பொறாஅ தவன்புலம் பலுமவ
டேற்றலுங் கையுறை யேற்றலுங் கிழவோ

றாற்றலு மென்னு மவ்வொன் பானுங்
குறைநேர் தற்கு மடற்கூற் றொழிதற்கு
முறைமையி னுரிய மூன்றுங் காலே.

இ-ம். தலைவியிளமைத்தன்மை பாங்கிதலைவர்க்குணர்த்தன்முதலாகக் கிழவோனாற்றலீறாகச் சொல்லப்பட்ட வொன்பதும் பாங்கி நேர்தற்கும் தலைமகண் மடற்கூற்றொழிதற்கும் முறையானேயுரியவா மூன்றுங்காலத்து. எ-று.

தலைவியிளமைத்தன்மை பாங்கிதலைவற்குணர்த்தற்குச் செ-ள் "களவரும் பாகருநீலங்கள்காமக்கடவுளுமால் - கொளவரும்பாளைபைங்குரும்பைக்குலஞ்செங் குமுதத்துவெண் - டளவரும்பாநண்பனேதஞ்சைவாணன்றமிழ்வையைநாட் - டிளவரும்பாமிவண்மாட்டென்கொலோநின்றிரப்பதுவே" எ-ம், தலைவன் றலைவி வருத்தியவண்ணமுரைத்தற்குச் செ-ள் "சிலைபயில்வாணுதன்மின்னே பிறந்தவச்செவ்வியிலே - கொலைபயிலுகக்குருளையைப்போற்குறியோனிருந்த - மலைபயில்வார்தமிழ்வாணன்றென்மாறைமயிலனையா - ளலைடயிலால்விழியாலெனதாவியணங்கினளே" எ-ம், பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பற்குச் செ-ள் "ஏடாரலங்கலிலங்கிலைவேல்வெற்பவேழுலகும் - வாடாமல்வந்தருள்வாணன்றென்மாறையில்வல்லியன்னாள் - சூடாள்குவளையுமுல்லையஞ்சூட்டுஞ் சுணையும்பந்து-மாட்டடனக்கென்கொலோவடியேன்சென்றறிவிப்பதே" எ-ம், "நெறிநீரிருங்கழிநீலமுஞ்சூடாள் - பொறிமாண் வரியலவனுடலுமாடாள் - சிறுநுதல் வேர்வரும்பச்சிந்தியாநின்றாட் - கெறிநீர்த்தண்சேர்ப்பயா னென்சொல்லிச்சொல்கோ" எ-ம், தலைவன் தலைவிசெவ்வியெளிமைசெப்பற்குச் செ-ள் "தேன்வந்தவாயிதழ்ச்சேயிழையாயிளஞ்செவ்விநவ்வி- மான்வந்தவாள்விழிவஞ்சிக்குநீதஞ்சைவாணன்வெற்பில்- யான்வந்தவாசென்றியம்புதியேலவர்யாவரொன்று-டான்வந்தவாவுடனேநின்னையாரத்தழீஇக்கொள்ளுமே." எ-ம், பாங்கியென்னை மறைப்பினெளிதெனநகுதற்குச் செ-ள் "மண்ணும்பயில்வித்துமொன்றினுஞ் சந்திரவாணன்வெற்பா - நண்ணும்புனலின்றியங்குரியாதுங்கணல்வினையாற் - கண்ணுங்கருத்துங்கலந்தனவாயினுங்கண்ணினுமு- ளெண்ணுங்குறையென்னை நீர்மறைத்தாலிங்கியல்வதன்றே" எ-ம், அந்நகைபொறாதுஅதவன்புலம்பற்குச் செ-ள் "வெவ்வேலெறிந்தவிழுப்புண்ணின்மீட்டும்வெதுப்பியதோர் - செவ்வேனுழைப்பவர்சீலமன்றோதிருவேமருவார்- வைவேலமர்வென்றவாணன்றென்மாறைமயில்பொருட்டா - னைவேனையஞ்சலென்றுநின்னவாறுரைக்கின்றதே." எ-ம், பாங்கிதலைமகனைத்தேற்றற்குச் செ-ள் "தன்கண்ணனையதன்பாங்கியருள்ளுந்தனக்குயிரா - மென்கண்ணருள்பெறிதெம்பெருமாட்டிக்கிகன்மலைந்தார்- வன்கண்ணமர்வென்றவாணன்றென்மாறையில்வந்தவளாற் - புன்கண்ணடையலைநீயினிவாடல்புரவலனே." எ-ம், பாங்கிகையுறையேற்றற்குச் செ-ள் "ஒலிதெண்கடல்புடைசூழுலகேழினுமூழ்வினைதான்- வலிதென்பதனைவயக்கியதாற்றஞ்சைவாணன்வெற்பா - கலிதெங்குமாவுங்கமுகும்பலாவுங்கதலிகளும்-பொலிதென்பொதியிலின்மேற்சந்தனுடைவிப்பூந்தழையே." எ-ம், "ஊழையுமுப்பக்கங்காண்பாருலைவின்றித்-தழாதுஞற்றுபவர்" எ-ம் வரும். கிழவோனாற்றற்குச் செ-ள் "மைப்போதணிதொங்கல்வாணனென்னுமொனவல்வினையேற்-கப்போதடைந்தவருந்துயர்நீங்கியரும்பியபொற்- செப்போதிளமுலையாணைகைவாண்முகத்திங்களைக்கண் -டிப்போதிளகியதாலிந்துகாந்தங்கொலென்னெஞ்சமே." எ-ம், "உறாஅதவர்போற்சொலினுஞ் செறாஅர்சொ - லொல்லை யுணரப்படும்" எ-ம்

வரும். இதனுட் பாங்கிகூற்றாயினவெல்லாங் குறைநேர்தற்கும் தலைவன்கூற்றாயினவெல்லா மடற்கூற்றொழிதற்குமுரியவெனக் கொள்க. இதனுள் எடுத்தோதப்பட்ட கிளவிகள், "பண்பிற்பெயர்ப்பினும் பிறவற்றுமெலியினு-மன்புற்றுநகினு மவட்பெறமெலியினு-மீறுடையுறுத்தலுமவ்வினைக்கியல்பே" என்பதனாற் கொள்ளப்பட்டன. இவற்றுட் சான்றோர்செய்யுளில்லாதவற்றிற்குஞ் சூத்திரந்தன்னையே யிலக்கியமாகக் கொள்க. (௬௦)

௧௬௭. இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
யிறைவிக் கவன்குறை யுணர்த்தலு மிறைவி
யறியாள் போன்று குறியாள் கூறலும்
பாங்கி யிறையோற் கண்டமை பகர்தலும்
பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி
யென்னை மறைப்ப தென்னெனத் தாழாலுங்
கையுறை புகழ்வுமென் றிவ்விரு மூன்று
மெலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
வலிதாகச் சொல்லி மறுத்தற்கு முரிய.

இ-ம். இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி யிறைவிக்கவன்குறையுணர்த்தன்முதலாகப் பாங்கிகையுறைபுகழ்தலீறாகச் சொல்லப்பட்டவாறும் பாங்கி மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தற்கும் தலைமகள் வலிதாகச் சொல்லி மறுத்தற்குமுரிய கிளவி. எ-று.

இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி யிறைவிக்கவன்குறையுணர்த்தற்குச் செ-ள் "இருவர்கண்டால்வருமேதமென்றெண்ணியெனக்கெதிரே-வருவர்வந்தாலுந்தம்வாய்திறவார்தஞ்சைவாணன்வெற்பி-லொருவர்நஞ்சாரலுழையகலார்தழையுள்ளதெல்லாந் - தருவர்வம்பார்முலையாயென்கொலோ செயத்தக்கதுவே" எ-ம், இறைவியறியாள்போன்று குறியாள்கூறற்குச் செ-ள் "கலைதொடக்கிண்டகருவியந்தேன்பலகால்கொடுமா-மலைதொடுத்தூர்ந்துவருகின்றதாற்றஞ்சைவாணன்வென்றி - சிலைதொடுத்தாங்கெழில்சேர்நுதலாய்பயில்செம்பழுக்காய்க்-குலைதொடுத்தோங்குபைங்கேழ்ப்பூகநாகக் குழாங்கவர்ந்தே" எ-ம், பாங்கியிறையோற்கண்டமைபகர்தற்குச் செ-ள் "திவாகரனேயன்னபேரொளிவாணன்றென்மாறைநன்னாட்-டுவாமதியோலுமொளிர்முகத்தாயென்னொளிப்பதுன்மேலவாவினனாகியொர்மானைவினாவிவந்தானையின்றிக்- கவானுயர்சோலையின்வாய்வண்டலாடுமைழக்கண்டனமே" எ-ம், பாங்கியைத் தலைவிமறைத்தற்குச் செ-ள் "செவ்வண்ணவேல்விழியாய்தஞ்சைவாணன்றென்மாறைநன்னாட்-டிவ்வண்ணநீசொல்வதேற்பதன்றானின்னிடையெனத்த- மெய்வண்ணம்வாடிவெறிதேவருந்திவிருந்தினராய்க்- கைவண்ணவார்தழைகொண்டுசென்றார்தமைக்கண்டுகண்டே" எ-ம், பாங்கியென்னைமறைப்பதென்னெனத்தழாஅற்குச் செ-ள் "பரக்கின்றசெவ்விதழ்ப்பங்கயப்பாதம்பணிந்துநின்னை-யிரக்கின்றதொன்றையுமெண்ணலையாலெழுபார்முழுதும்-புரக்கின்றகோன்றஞ்சைவாணன்பொதியிலிற்பொய்த்தெனை நீ-காக்கின்றதென்னைகொலென்னுயிராகியகாரிகையே" எ-ம், பாங்கிகையுறைபுகழ்தற்குச் செ-ள் "கூடத்தருவனவல்லவெல்லாம்படிசொல்லினுங்

தாம்-வாடத்தகுவனவல்லநல்லாய்தஞ்சைவாணன்வெற்பர் - தேடத்தகுவனவல்லதல்லாதசிலம்பினுள்ளார்- நாடத்தகுவனவல்லகல்லாரநறுந்தழையே'' எ-ம், இதனுட் பாங்கிகூற்றாயினவெல்லாங் குறைநயப்பித்தற்குந் தலைவிகூற்றாயின வெல்லாங் குறைமறுத்தற்குமுரியவெனக் கொள்க. (௫௧)

௧௪௮. தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தலு
மறுத்தற் கருமை மாட்டலுந் தலைவன்
குறிப்பு வேறாக நெறிப்படக் கூறலுந்
தலைவி முனிதலுந் தலைவி பாங்கி
தன்னை முனிதலுந் தன்கைக் கையுறை
யேற்றலு மெனமுறை சாற்றிய வாறும்
வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கு
மெலிதாகச் சொல்லி மேவற்கு முரிய.

இ-ம். தோழி தலைவன்றுயர்நிலை கிளத்தன்முதலாகக் கையுறையேற்றலீறாகச் சொல்லப்பட்டவாறும் வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தற்கும் மெலிதாகச் சொல்லி மேவற்குமுரிய கிளவியாம். எ-று.

தோழிகிழவோன்றுயர்நிலைகிளத்தற்குச் செ-ள் ''வளையுங்குழல்வஞ்சிவாணன்றெண்மாறைவரைக்களிறு- இளையுந்தழையும்பிடியொடுமேய்ந்துதெளிந்த வின்னீர்-சுனையுண்டசோகநிழற்சோகநீங்கித்துயில்வதுகண்-டெனையுங்கடைக்கணிபாவினையாநிற்பரேதிலரே.'' எ-ம், தோழி தலைமகனைமறுத்தற்கருமை மாட்டற்குச் செ-ள் ''கையுந்தழையுமுன்காண்டொறுங்காண்டொறுங்கட்டுரைத்த-பொய்யுந்தொலைந்தனபூந்தழைபோலரிபோர்த்துநஞ்சு - மையுங்கலந்துண்டவாழ்விழியாய்தஞ்சைவாணன்வெற்பா - மெய்யுந்துவண்டதென்னுன்முடியாதுவெளிநிற்கவே.'' எ-ம், தோழி தலைமகன்குறிப்புவேறாக்கி நெறிப்படக் கூறற்குச் செ-ள் ''விடையான்மிசைவருமேருவில்லானொடுமேழிவென்றிப்-படையானொடும்வெம்பகைகொள்வதோபகல்போலுமெய்ம்மை - யுடையானுயர்தஞ்சைவாணனென்னானெனவொல்கியநுண் - ணிடையாய்பிறிதுகொலோவறியேன்வெற்பரெண்ணுவதே.'' எ-ம், தோழி தலைவியைமுனிதற்குச் செ-ள் ''தூற்றாதலரைமறைப்பவர்க்கேகுறைசொல்லுகுற்ற-மேற்றாதொழியெனையெம்பெருமாட்டிசென்றேற்றவற்கு- மாற்றாதருள்செங்கைவாணன்றெண்மாறையில் வந்துநெஞ்சம்-போற்றாதுநின்றயலேன்சொன்னதீங்குபொறுத்தருளே.'' எ-ம், தலைவி பாங்கியைமுனிதற்குச் செ-ள் ''மாற்றேதவர்நினைவார்தஞ்சைவாணன் வரையின்முந்நாட் - பொற்றேரின்வந்துபுணர்ந்துசென்றார்தம்பொருட்டுநம்மைக்-குற்றேவன்மங்கைகுறையிரந்தாளனுங்குற்றமிந்நா - ளெற்றேதவறுநயப்பாலில்லையாகவுமெய்தியதே.'' எ-ம், தலைவிபாங்கிதன்கைக்கையுறையேற்றற்குச் செ-ள் ''ஆற்றுந்தலைவரருந்துயராற்றினுமாற்றலனுண் - மாற்றும்புனையின்மயிலனையாய்தஞ்சைவாணன்றெவ்விற் - போற்றுங்கொடுவினையேன்புனையாவிடிற்போந்தலரே - தூற்றுந்தழையென்றிதொன்றெங்ஙனேவந்துதோன்றியதே.'' எ-ம் வரும். இதனுட் பாங்கிகூற்றாயினவெல்லாங் குறைநயப்பித்தற்குந் தலைவிகூற்றாயினவெல்லாங் குறைநயத்தற்கு முரியவெனக் கொள்க. (௫௨)

௧௪௬. இறைவி கையுறை யேற்றமை பாங்கி
யிறைவற் குணர்த்தலுங் குறியிடங் கூறலுங்
குறியிடத் திறைவியைக் கொண்டு சேறலுங்
குறியிடத் துய்த்து நீங்கலு மிறையோ
னிடத்தெதிர்ப் படுத்தலு மியைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியற் சார்ந்து
கையுறை காட்டலு மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலும் நீங்கித் தலைவற்
கோம்படை சாற்றலு முலகியன் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலு மென்னத் தெரிந்தபன் மூன்றுங்
கூட்டன் முதலா வேட்ட லீருப்
பாங்கிக்கு வகுத்த நான்கிற்கு முரிய.

இ-ம். இறைவிகையுறையேற்றமை பாங்கியிறைவற்குணர்ந்தன் முதலாகத் தலைவன் விருந்திறைவிரும்பலீருக வாராய்ந்த பதின்மூன்றுங் கூட்டலுங் கூடலும் பாங்கி கூட்டலும் வேட்டலுமென்னும் நான்கிற்குமுரியவாம். எ-று.

இறைவிகையுறையேற்றமைபாங்கியிறைவற்குணர்த்தற்குச் செ-ள் "போயானளித்தலுங்கைகுவித்தேற்றபின்போற்றியன்பாற்- சாயாதகொங்கையின்மேலணைத்தாடஞ்சைவாணன்வெற்பா - காயாமலரன்னமேனியெய்யாகநின்கையுறையே-நீயாகவல்லதுமாந்தழையாகநினைத்திலளே." எ-ம், பாங்கிதலைவற்குக்கூறியவிடங்கூறற்குச் செ-ள் "அணிமாமலர்மயிலைப்புயத்தூணங்கொளாகமெனு-மணிமாளிகைவைத்தவாணன் வண்காவலன்மாறைவெற்பா- துணிமாமரகதப்பாசறைவேலைச்சுடரவன்போற் - பணிமாமணிதிகழும்பகல்யாங்கள்பயிலிடமே." எ-ம், பாங்கிகுறியிடத்திறைவியைக்கொண்டுசேறற்குச் செ-ள் "நாமாவிழுழ்கிநறுமலர்குற்றுநந்தாவனத்துத் -தேமாவிளந்தளிர்செவ்வண்ணங்கொய்துசிலம்பெதிர்கூய் - வாமானெடுங்கண்மடந்தைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பிற்-பூமாதவிப்பந்தர்வாய்விளையாடுகம்போதுகவே." எ-ம், பாங்கிதலைமகளைக் குறியிடத்துய்த்துநீங்குதற்குச் செ-ள் "கண்சாயல்கையுருக்கொண்டுதன்வேன்மயில்காந்தள்வள்ளி- யெண்சாயவென்றனையென்றுசெவ்வேளிவரும்பவளம்-வண்சாயொசிக்குமவயற்றஞ்சைவாணன்மலயமராத்- தண்சாயைநின்றணங்குந்தையணிநிற்கசாரலிலே." எ-ம், இறைவியையிறையோனிடத்தெதிர்ப்படுத்தற்குச் செ-ள் "முயங்கியநூபுரப்பங்கயத்தாளுமுலைசுமந்து-தயங்கியநூலிடைதானுமென்போலத்தளர்வுறுமிங் - கியங்கியவாறென்மனத்திருணீங்கவென்றேதுணிந்தோ-வயங்கியசீருடையான்வாணன்மாறைமணிவிளக்கே." எ-ம், புணர்ச்சியின்மகிழ்தற்குச் செ-ள் "தருந்தாருவஞ்சுங்கொடையுடையான்றஞ்சைவாணனின்சொற் - செருந்தார்பசுந்தமிழ்த்தென்வரைமேற் செம்பொன்மேருவெற்பாற் - கருந்தாரை நஞ்சுமிழ்வாசுகியால் வெண்கடல்கடைந்து - வருந்தாவமுதளித்தாள் வல்லளாமிம் மடக்கொடியே." எ-ம், நலம்பாராட்டற்குச்

செ-ள் "மயனூர்விதித்தன்னமாமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற் - பயனூர்ப யோதரப்பாவையன்னீர்பசும்பொற்குழைதோய் - நயனாரவிந்தத்துநஞ்சுநும்வாயிதழ்நல்லமுத-மயனூர்படைத்திலரேலடங்காதவ்வரனுக்குமே." எ-ம், தலைமகளைத்தலைமகன்விடுத்தற்குச் செ-ள் "நேயம்புகலிடமின்றிநின்பால்வந்துநின்றதுபோ-லாயம்புகலவடைந்தருணீயடையாதமன்னர்- வாயம்புகவில்வணக்கியவாணன்றென்மாறைநன்னீர்த் - தோயம்புகரிணைவேல்விழியாய்நின்றுணையுடனே.'' எ-ம், பாங்கிதலைவியைச்சார்ந்துகையுறைகாட்டற்குச் செ-ள் "பொய்போலிடைநின்விழிபோற்குவளையம்போதிவைநின்- மெய்போலசோகமிளிர்பூந்தழையிவைமெல்லியனின் - கைபோற்கவின்கொள்செங் காந்தளம்போதிவை கண்டருள்யான் - மைபோற்குழலிதந்தேன்றஞ்சைவாணன்வரையினின்றே.'' எ-ம், பாங்கிதலைவியைப் பாங்கிற்கூட்டற்குச் செ-ள் "குனிநாண்மதிநுதற் கோகிலமேநின்குழலிலெல்லாப் - பனிநாண்மலரும்பறித்தணிந்தேனிந்தப்பார்மடந்தை-தனிநாயகன்றஞ்சைவாணன்றண்சாரற்றனித்துநில்லா- தினிநாமகன்றிளையார்விளையாடிடமெய்துதுமே." எ-ம், பாங்கிதலைவியைநீங்கித் தலைவற்கோம்படைசாற்றற்குச் செ-ள் "சின்னாண்மலர்க்குழல்காரணமாச்செவ்விபார்த்துழன்று-பன்னாளுரைத்தபணிமொழிநோக்கிப்பழிநமக்கீ- தென்னாதிடைப்பட்டவன்னிலைநீமறவேலிறைவா - தன்னாகமெய்ப்புகழான்றஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே." எ-ம், பாங்கிதலைமகனையுலகியன்மேம்பட விருந்துவிலக்கற்குச் செ-ள் "வலைப்பெய்தமான்றசைதேன்றோய்த்தருந்திமரைமுலைப்பா - லுலைப்பெய்தவார்தினைமூரலுமுண்டுளங்கூருவகை- தலைப்பெய்தநாளனையான்றஞ்சைவாணன்சயிலத்தெம்மூ - ரிலைப்பெய்ததாழ்குரம்பைத்தங்கினுலுமக்கென்வருமே." எ-ம், தலைமகன்விருந்திறை விரும்பற்குச் செ-ள் "மஞ்சுட்டியன்னசுதைமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற்-பஞ்சூட்டியமென்பதயுகத்திருங்கள்பாடியின்மான்-வெஞ்சூட்டிமுதன்னவூனும்பைந்தேனும்விருந்தினற்குச் - செஞ்சூட்டிளகுபொன்போற்றினைமூரலுந்தெள்ளமுதே." எ-ம், "நாள்வாய்ப்பெறினுந்தன்னள்ளாதாரில்லத்து - வேளாண்மைவெங்கருனைவேம்பாகும் - கேளா - யபராணப்போழ்தினடகிடுவாரேனுந்- தமராயார்மாட்டேயினிது." எ-ம் வரும்.

இதனுட் பாங்கிகூற்றாயினவெல்லாங் கூட்டற்கும் வேட்டற்குமுரிய. தலைவன் கூற்றாயினவெல்லாங் கூட்டற்குங் கூடற்குமுரியவெனக் கொள்க. இம்மூன்று சூத்திரத்துள்ளுமெடுத்தோதப்பட்ட கிளவிகள் பாங்கியிற்கூற்றுள் நன்னயம்பெற்றுளி நயம்புரிவென்பதனானுந் தலைமகன்கூற்றுள்ளே வேளாணெதிரும்விருப்பினானு மென்பதனானுங் கொள்ளப்பட்டன. (௱௯)

கஉ௦. அற்றமில் சிறப்பினிவ் வறுபத் தொன்றுங்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.

இ-ம். தலைமகனுட்கோள் சாற்றன் முதலாகத் தலைமகன் விருந்திறை விரும்பலீறாகச் சொல்லப்பட்ட கூற்று இவ்வறுபத்தொரு கிளவியும் பாங்கியிற்கூட்டத்து விரியாம். எ-று. (௱௨)

கஉக. கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்
வேட்ட லென்றொரு நால்வகைத்தே பகற்குறி.

இ-ம். கூட்டன் முதலாக வேட்டலீறாக நான்குவகையினையுடைத்துப் பகற்குறி. எ-று. (௱௩)

௧௫௨. குறியிடங் கூறன் முதலாப் பெறலரும்
விருந்திறை விரும்ப லீறாப் பொருந்தப்
பகர்ந்த பன்னிரண்டும் பகற்குறி விரியே.

இ-ம். குறியிடங் கூறன் முதலாக விருந்திறை விரும்பலீறாக மேற்பாங்கியிற் கூட்டத்து ளெடுத்தோதப்பட்ட பன்னிரண்டும் பகற்குறிவிரியாம். எ-று. உதாரணம் மேற்காட்டப்பட்டனவெனக் கொள்க. (௧௬)

௧௫௩. இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்த லென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி.

இ-ம். இரங்கலும் வன்புறையும் இற்செறிப்புணர்த்தலுமென மூன்று வகையினையுடைத் தொருசார் பகற்குறி. எ-று. (௧௭)

௧௫௪. கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்
பொழுதுகண் டிரங்கலும் பாங்கி புலம்பலுந்
தலைவ னீடத் தலைவி வருந்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
முன்னிலைப் புறமொழி மொழிதலு மின்னுயிர்ப்
பாங்கியொடு பகர்தலும் பாங்கி யச்சுறுத்தலு
நீங்கற்கருமை தலைவி நினைந் திரங்கலுந்
தலைவிக்கவன் வரல் பாங்கி சாற்றலுஞ்
சிறைப் புறமாகச் செறிப்பறி வுறுத்தலு
முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலு
முன்னின் றுணர்த்தலு முன்னின் றுணர்த்தி
யோம்படை சாற்றலு மேம்படு கிழவோன்
றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலு
மென்ற வீரேழு மெல்லுக்குறி விரியே.

இ-ம். கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கன் முதலாகக் கிழவோன் றஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தலீறாகச் சொல்லப்பட்ட பதினான்கு மொருசார் பகற்குறி விரியாம். எ-று.

ஒருசாரென்றது அதிகாரத்தால்விரித்துரைக்கப்பட்டது. அவற்றுட் கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண்டிரங்கற்குச் செ-ள் "ஆழ்ந்தார் தமக்கருளாதவர்போலிவ்வளவிலன்பு - சூழ்ந்தார்செலத்தொங்கல் சூழ்குழலாய் சொற்பொருள்படைத்து - வாழ்ந்தார்புகழ்தஞ்சைவாணனைப்பேணலர்மானவெய்யோன் - வீழ்ந்தார்கலிக்கரந்தான்பனிமாலைவெளிப்படவே." எ-ம், பாங்கிபுலம்பற்குச் செ-ள் "காலையம்போருகவாண்முகத்தாளன்பர்கையகல - மாலையம்போதுவருவித்தநீர்தஞ்சைவாணன்றெவ்வ - ராலயம்போலுங்களாதவன்கோயிலமுல்கொழுந்த - வேலையம்போடுழல் விப்பரிகாளென் றும்வெய்துயிர்த்தே." எ-ம்,

தலைவனீடத் தலைவிவருந்தற்குச் செ-ள் "ஆராதவின்பவிடந்தொறுநீங்கியவா
யமென்பால்-வாராதமுன்னம்வருகிலராற்றஞ்சைவாணன்வெற்பிற் - கூராதரநல்
கியல்வினையேனலங்கொள்ளைகொண்டு - தேராதவனுடனேநென்னன்மாலையிற்
சென்றவரே." எ-ம், தலைவியைப்பாங்கிகழறற்குச் செ-ள் "சிறந்தார்தெ
ரிந்தசெழுந்தமிழ்வாணன்றென்மாறைவெற்பர்- துறந்தாரெனையென்றுசோருவ
தேனிந்தத்தொல்லுலகிற் - பிறந்தாரெவர்க்கும்பிரிவெய்துமால்வெய்யவேமர்க்க
ட்-புறந்தாழ்கரியகுழற்செய்யவாயையபூங்கொடியே." எ-ம், தலைவிமுன்னி
லைப்புறமொழி மொழிதற்குச் செ-ள் "பூவலர்வாவியினீரற்றபோதுற்றபுன்
மையல்லாற்-காவலர்காமந்துறக்கிலென்னுங்கடம்பாய்மதுகை-மாவலவாணன்வ
யற்றஞ்சைவேந்தனைவாழ்த்தல்செய்யா - மேவலர்போலுங்கழற்றுரையாளர்விய
னறிவே." எ-ம், தலைவி பாங்கியொடுபகர்தற்குச் செ-ள் "மூலையார்முயக்கி
னுமல்லாவிடத்தினுமுரிமுந்நீ - ரலையாரமுதமுநஞ்சமும்போலவணங்கனையாய்-
தொலையாதவின்பமுந்துன்பமுங்காட்டுவெர்தூங்கருவி- மலையாசலத்தமிழ்தேர்வா
ணன்மாறைநம்மன்னவரே." எ-ம், தலைவியைப் பாங்கியச்சுறுத்தற்குச் செ-ள்
"பேணற்கரியநின்பெண்மையுநாணமும்பேணியவர்- காணத்தகுமென்றுகாண்ப
தல்லாற்கழிகாதனெஞ்சு - பூணத்தருகினும் பொறற்பல்லவாகுதல்கற்பல்லவால் -
யாணர்த்தமிழுடைய ன்வாணன்மாறையினின்னமுதே" எ-ம், "மெய்யிற்றீரா
மேவருங்காமமோ - டெய்யாயினமுரைப்பனோழிகொய்யாமுன்னறுங்குரல்வார்
புகினையே-யருவியான்றபைங்கானொறுமிருவிதோன்றினபலவேநீயே-முருகு
முரண்கொள்ளுந்தேம்பாய்கண்ணிப-பரீப்பனொடுபென்மலைபடரும்- வேட்டுவப்
பெறலோமைந்தனையாழ- நின்றேட்டொடலைநுடங்கவெழூந்தெழூந்து-கிள்ளைத்
தெள்விளியிடையிடைபயிற்றி- யாங்காங்கொழுகாயாயினினைச்-சிறுகினிகடி
தேறேற்றளிவளெனப்-பிறந்துநிற்குவரையுறற் -கரிதாகுமவன்மணர்ந்த மார்பே,,
எ-ம், நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கற்குச் செ-ள் "குன்றாகியபொன்னும்
வேழக்குழாமுங்கொடைபுகழ்ந்து - சென்றோர்முகக்குஞ்செழுந்தஞ்சைவாணன்
றென்மாறைவெற்பி - னன்றேமிறைவற்குநன்றியிலேற்குமுன்னுன்முகத்தோ-
ஞென்றேவிதித்திலனேயுயிர்போலவுடம்பையுமே." எ-ம், தலைவிக்கவன்வரல்
பாங்கிசாற்றற்குச் செ-ள் "நெஞ்சுகவாய்மலரன்னகண்ணீர்மல்கநின்றவஞ்சொ
ற்-கிஞ்சுகவாய்வஞ்சிகேட்டருணீயுங்கிளைத்தமிழோர் - தஞ்சுகவாய்மொழிநெஞ்
சுடையான்றஞ்சைவாணன்வெற்பின்- மஞ்சுகவார்த்தனவாலவர்தேரின்மணிக்கு
ரலே." எ-ம், தோழிசிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தற்குச் செ-ள் "தொ
டைக்கணியார்தடந்தோளவர்கேளலர்தோகையன்ன - ருடைக்கணியாந்தழை
கொய்யாருழவருடைத்ததெண்ணீர் - மடைக்கணியாரம்டுக்தஞ்சைவாணன்வ
ரையின்முன்போற் - கடைக்கணியார்கணியார்நம்மைநாளைக்கருங்கணியே."
எ-ம், தலைமகற்குமுன்னிலைப்புறமொழிந்திற்செறிப்புணர்த்தற்குச் செ-ள் "பயி
ல்காளபந்திப்புயலன்னவோதியைப்பைங்கிள்ளைகாண்- மயில்காள்சிறிதுமறக்கப்
பெறீர்தஞ்சைவாணன்வெற்பிற்-குயில்காளமெங்குமியம்புதண்சோலையிற்கூடியி
ன்ப-மயில்காளவெங்கதிர்வேலன்பர்சாலவயர்ப்பினுமே." எ-ம், பாங்கிதலைமக
ன்முன்னின்றுசெறிப்பறிவுறுத்தற்குச் செ-ள் "கானலங்கான்மலர்க்கள்வாய்
க்கருங்கணிகட்டுரையாற்-கூனலுஞ்சாய்பொற்குரலுங்கொய்தாரெமக்கொற்றவ
யா-மேனலங்காலலுமின்றேயொழிந்தனமேழ்புவிக்குந் - தானலங்காரமன்னன்
றஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே." எ-ம், பாங்கிதலைவன்முன்னின்றுசெறிப்
புணர்த்தியோம்படைசாற்றற்குச் செ-ள் "கனஞ்சாயநல்கியகையுடையானெ
திர்கன்றினர்தம் - மனஞ்சாயவென்றருள்வாணன்வரோதயன்மாறைவெற்பிற்-
கினஞ்சாலும்வேலண்ணலேமறவேலெமைச்செவ்வியிரு - தனஞ்சாயினுமினி

நின்னையல்லாதில்லைத்தாழ்குழற்கே.” எ-ம், “எறிந்தெமர்தாமுழுதவீர்ங்குரலேனன்-மறந்துகிளியினமும்வாரா-கறங்கருவி-மாமலைநீர்நாடமடமொழிதண்கேண்மை-நீமறவேனெஞ்சத்துக்கொண்டு.” எ-ம், தலைமகன்றஞ்சம்பெறாது நெஞ்சொடுகிளத்தற்குச் செ-ள் “எவலரேய்விழிமாந்தளிர்மேனியரேனலினிச்-காவலரேமனங்காத்தனம்யாங்களியானைசெம்பொ- னுவலரேபெறநல்குங்கைமேகநாங்குவளை - மாவலரேயதொடையான்றஞ்சைவாணன்வரையில்வந்தே.” எ-ம் வரும்.

இவற்றுட் கிழவோன்பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண்டிரங்கலும் பாங்கி புலம்பலுந் தலைவனிடத் தலைவிவருந்தலு முன்னிலைப்புறமொழி மொழிதலும் பாங்கியொடு பகர்தலும் நீங்கற்கருமை தலைவிநினைந்திரங்கலும் தலைவன் றஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தலுமாகிய வேழு மிரங்கற்குரிய. இவற்றுட் கிழவன்றஞ்சம்பெறாது நெஞ்சொடுகிளத்தலொன்று மொழிந்தேனையவாறும் வரைதல்வேட்கைக்குரியவாம். தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவியைப்பாங்கி யஞ்சியச்சுறுத்தலும் தலைவிக்கவன்வரல் பாங்கிசாற்றலுமாகிய மூன்றும் வன்புறைக்குறைய. சிறைப்புறமாகச் செறிப்பறிவித்தலு முன்னின்றுணர்த்தி யோம்படைசாற்றலுமாகிய நான்கு மிற்செறிப்புணர்த்தற்குரியவெனக் கொள்க. இவை நான்கும் வரைவுகடாதற்குரியவாம். (கூசு)

கருரு. விலக்கல் சேறல் கலக்க மென்றாங்
கிகப்பின் மூவகைத்தே பகற்குறி யிடையீடு.

இ-ம். பகற்குறியிடையீடுதொகுத்துணர்-ற்று. விலக்கலுஞ் சேறலுங் கலக்கமுமென மூன்றுவகையினையுடைத்தாம் பகற்குறியிடையீடு. எ-று. (கூஎ)

கருசா. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலு
மிறைவியைக் குறிவரல் விலக்கலு மிறைமக
ளாடிடநோக்கி யழிதலும் பாங்கி
யாடிடம் விடுத்துக்கொண் டகறலும் பின்னு
ணெடுந்தகை குறிவயி னீடுசென் றிரங்கலும்
வறுங் களநாடி மறுகலுங் குறுந்தொடி
வாழூமூர் நோக்கி மதிமயங்கலு மெனு
மேழும் பகற்குறி யிடையீட்டு விரிபே.

இ-ம். பகற்குறியிடையீட்டுவிரியுணர்-ற்று. இறைவனைப்பாங்கி குறிவரல்விலக்கன் முதலாகக் குறுந்தொடி வாழூமூர்நோக்கி மதிமயங்கலீறாகச் சொல்லப்பட்ட வேழும் பகற்குறியிடையீட்டுவிரியாம். எ-று.

இறைவனைப்பாங்கி குறிவரல்விலக்கற்குச் செ-ள் “புனமும்பசுந்தினைச் செங்குரலேந்தும்புகன்றகிள்ளை- யினமுங்குழீஇவந்திறைகொள்ளுமாலிறையார் வளையு-மனமுங்கவர்வெற்பவாணன்றென்மாறைமடப்பிடியு - மனமுந்தொழுநடைபாற்பலகால்வருமன்னையுமே.” எ-ம், பாங்கியிறைவியைக் குறிவரல்விலக்கற்குச் செ-ள் “நந்துசுற்றுங்கடன்ஞாலமெல்லாம்புகழ்நாமன்வளர்- சந்துசுற்றுங்கொங்கைமங்கையர்வெள்சஞ்சரீகஙறை - வந்துசுற்றுந்தொங்கல்வாணன்

றென்மாறைவரையின்மலர்க் - கொந்துசுற்றுங்குழலாய்செல்லனியக்குளிர்பொழிற்கே." எ-ம், "கரும்புமருண்முதற்பைந்தாட்செந்தினைத் - தடக்கையன்னபால்வார்புதறிக்-குறட்டினறஞ்சியசெறிதோற்பைங்குரற் - படுகிளிகடிகமஞ்செறிமறப்பே - ரஃகுவிளங்கு தடக்கையவன்றூர் - மார்பினன்வருகதில்லவருகுவளியாயே." எ-ம், இறைமகளாடிட நோக்கியழிதற்குச் செ-ள் "அருவித்தடமுமணிமுத்தயாறுமவணியெங்குந்-திருவித்தியதஞ்சைவாணன் சிலம்பழிச்சிற்றிலும்பே-ரிருவிப்புனமுமின்றென்னினைக்கின்றனவென்னையின்னே-மருவிப்பிரிபவர்போலில்லையேமண்ணில்வன்கண்ணரே." எ-ம், பாங்கியாடிடம்விடுத்துக்கொண்டகறற்குச் செ-ள் "உன்னையராவல்குனல்லவரேயென்றுசாவினங்கண்-மன்னையராமல்வருத்துரைநீதஞ்சைவாணன்வெற்பி - னென்னையரானைகொண்டேகுகின்றேனிவையித்தனையும் - பின்னையராதொழிவாயிதனையிதுபெற்றனமே." எ-ம், பின்னுநெடுந்தகைகுறிவயினீடு சென்றிரங்கற்குச் செ-ள் "மான்காணிகரின்மடமயில்காடஞ்சைவாணன்வெற்பிற் - றேன்காண்மைமென்சிறைக்கிள்ளைகாளென்றெருமரனேய் - தான்காணியகொலிச்சந்தனச்சோலையைத்தன்னையின்றி - யான்காணியகொலெழுந்தருளாததின்றென்னுயிரே." எ-ம், தலைமகன்வறுங்களநாடி மறுத்தற்குச் செ-ள் "செங்கேழ்விழிக்குமொழிக்கும்பகைதிருப்பாற்கடலும் - பங்கேருகமும்பயந்தனவாயினும்பைங்கிள்ளைகாள்-சங்கேய்தடந்துறைசூழ்தஞ்சைவாணன்றரியலர்போ-லெங்கேயினித்தங்குவாரேனல்காத்திங்கிருந்தவரே" எ-ம், "கள்ளாவிநாறுகமழ்கூந்தற்காரிகையென்-றுள்ளாவிசென்றவழியறியேன்-றள்ளாத-மல்லலருவிமலைநாடவாய்திறந்து-சொல்லல்புரியாய்துணிந்து." எ-ம், தலைமகன்றலைமகள்வாழூர்நோக்கி மதிமயங்கற்குச் செ-ள் "பெறவரிதாலவள்பின்சென்றநெஞ்சமும்பேணலர்க்கு-மறவரிதான்னவாணன்றென்மாறைவரைப்புனஞ்சூழ்- நறவரிதாழ்முல்லைநாண்மலரோதிநகருமெனக்- குறவரிதாமென்செய்வேனென்றுசோருமென்னேருயிரே." எ-ம் இவற்றுண் முன்னையவிரண்டும் விலக்கற்குரிய பாங்கியாடிடம் விடுத்துக்கொண்டகறலாகிய வொன்றுஞ் சேறற்குரியது. ஏனைய நான்குங் கலக்கத்திற்குரிய. (௬௰)

கருஎ. வேண்டல் மறுத்த லுடன்படல் கூட்டல்
கூடல் பாராட்டல் பாங்கிற் கூட்ட
லுயங்க னீங்கலென் றொன்பது வகைத்தே
யியம்பிப் போந்த விரவுக் குறிதானே.

இ-ம். வேண்டன்முதலாக நீங்கலீறாக வொன்பதுவகைத்து மேற்சொல்லிப்போந்த விரவுக்குறி. எ-று. (௬௧)

கருஅ. இறையோ னிருட்குறி வேண்டலும் பாங்கி
நெறியின தருமை கூறலு மிறையோ
னெறியின தெளிமை கூறலும் பாங்கி
யவனாட் டணியியல் வினாதலுங் கிழவோ
னவனாட் டணியியல் வினாதலு மவற்குத்
தன்னாட் டணியியல் பாங்கி சாற்றலு

றிறைவிக் கிறையோன் குறைபறி வுறுத்தலு
நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தலு
நேரிழை பாங்கியொடு நேர்ந் துரைத்தலு
நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தலுங்
குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதலு
மிறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தலு
மவட்கொண்டு சேறலுங் குறியுய்த் தகறலும்
வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதலும்
பெருமக ளாற்றின தருமைகினைந் திரங்கலும்
புரவலன் றேற்றலும் புணர்தலும் புகழ்தலு
மிறைமக ளிறைவனைக் குறிவிலக் கலுமவ
னிறைவியை யில்வயின் விடுத்தலு மிறைவியை
யெய்திப் பாங்கி கையுறை காட்டலு
மிற்கொண் டேகலும் பிற்சென் றிறைவனை
வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலுந்
தோழி தலைமக டுயர்கிளந்து விடுத்தலுந்
திருமகட் புணர்ந்தவன் சேறலு மென்றாங்
கிருபத் தேழு மிரவுக்குறி விரியே.

இ-ம். இறையோனிருட்குறிவேண்டன் முதலாகத் திருமகட்புணர்ந்தவன் சேறலீறாகச் சொல்லப்பட்ட விருபத்தேழுமிரவுக்குறி விரியாம். எ-று.

அவற்றுள் இறையோனிருட்குறிவேண்டற்குச் செ-ள் "கருவிருந்தெண்டிசையுங்கனமாமழைகான்றதுள்ளம்- வெருவிருந்தெம்பதிக்கேகவொண்ணுதுவிதம்விதமாய் - வருவிருந்தென்றும்புரந்தருள்வாணன்றென்மாறையன்னீ- ரொருவிருந்தெங்களைப்போலெய்துமோகங்குலுங்களுக்கே." எ-ம், பாங்கிநெறியினதருமைகூறற்குச் செ-ள் "மலைமாதுவல்லவன்வாணன்வரோதயன்மாறைவெற்பிற்-சிலைமாலுருமெங்குந்தீயுமிழாநிற்குஞ்சிங்கமெங்கும் - கொலைமாகரியிரைதேர்ந்துழலாநிற்குங்கொற்றவபொற் - கலைமானுறைபதிநீவருமாறென்கொல்கங்குலிலே." எ-ம், "ஒருவரைப்போலோங்குபலவரையுஞ்சூழ்ந்த- வருவரையுள்ளதாஞ்சீறூ-ரருவரையு- ளைவாயநாகம்புகுந்திடுமேலாயுங்காற்-கைவாயநாகஞ்சேர்காடு." எ-ம், தலைமகனெறியினதெளிமைகூறற்குச் செ-ள் "வடுவரிநீள்கண்ணியஞ்சலம்யாந்தஞ்சைவாணன்வெற்பிற் - கொடுவரிகேழற்குழாம்பொருகொல்லையுங்குஞ்சரந்தேர்ந் - தடுவரிதாவுமடுக்கமுஞ்சூர்வழங்காறுமைவாய்க்- கடுவரிநாகந்தவமல்குகல்லளைக்கானமுமே." எ-ம், பாங்கியவனூட்டணியியல்வினுதற்குச் செ-ள் "பூந்தழையாதுமலைமலர்யாதுபுனையிழையுஞ் - சாந்தமும்யாதுதடம்பொழில்யாதுதரணியின்மேன் -மாந்தரில்வேளன்னவாணன்றென்மாறைவளநகர்சூழ் - தேந்தருசோலைவெற்பாவுஞ்சனூட்டுறைசெல்வியர்க்கே." எ-ம், தலைமகளவனூட்டணியியல்வினுதற்குச் செ-ள் "எந்நாட்டவரணிகூறி

வெண்பேறிங்கிகல்வடிவேன்- மைந்நாட்டவெண்முத்தவாணகையாய்சஞ்சைவாணன்மென்மே- லுந்நாட்டரிவையராடிடஞ்சாந்தமொளியிழைபூ-மொய்ந்நாட்டழைவயொடெல்லாமொழியாமன்மொழியெனக்கே" எ-ம், தலைமகற்குப்பாங்கிதன்னுட்டணியியல்சாற்றற்குச் செ-ள் "வகைகொண்டமாந்தழைகாந்தளம்போதுமருப்பின்முத்தந் - தகைகொண்டசந்தனச்சாந்தணிந்தாடுவர்தஞ்சையர்கோன்-மிகைகொண்டதெவ்வரைவென்கண்டவாணன்வெற்பாவெமதூர்-நகைகொண்டவல்லியன்னுரெல்லிநாகநறுநிழலே." எ-ம், "ஆம்பலணிதழையராந்துயல்வருந் - தீம்புனலூரன்மகளிவள்-பாய்ந்தாறுந்- தேமலர்நீலம்பிணையல்சிறந்தமலர்த்-தாமரைதன்னையர்பூ." எ-ம், பாங்கிதலைமகட்குத்தலைமகன்குறிப்பறிவுறுத்தற்குச் செ-ள் "புயலேறதிர்தொறும்பொங்குழைமீதெழப்போதகந்தேர்ந்-தியலேறதிருமிருங்கல்குல்வாய்முத்தமீன்றுசங்கம்-வயலேறணைவளருந்தஞ்சைவாணன்வரையிலுண்கண்- கயலேறனையநின்பால்வரல்வேண்டினர்காதலரே." எ-ம், தலைமகளுணர்ந்துநெஞ்சொடுகிளத்தற்குச் செ-ள் "விடவார்கணைவிழிமெல்லியன்மாதரைமேதினியோர் - மடவாரெனுமுரைவாய்மைநெஞ்சேதஞ்சைவாணன்வெற்பிற் - கடவாரணந்திரிகங்குனங்கண்ணன்னகாதலர்மூட்-பிடவார்சிறுநெறிவாய்வரல்வேண்டினள்பெண்ணணங்கே." எ-ம், தலைமகளுணர்ந்துபாங்கியோடுரைத்தற்குச் செ-ள் "வெங்குலவாரணமேற்றவர்க்கேநல்கிவேற்றரசர்- தங்குலவாழ்வுதவிர்த்தருள்வாணன்றமிழ்ச்சிலம்பிற்-கங்குலவாவினர்காதலராயிற்களிபயந்த- கொங்குலவாவலர்சூழ்குழாலாயென்கொல்கூறுவதே" எ-ம், தலைமகளுணர்ந்தமைபாங்கிதலைமகற்குரைத்தற்குச் செ-ள் "பரவாதவண்ணம்பரவியும்பாதம்பணிந்துநெஞ்சங்- கரவாதபொன்னைநின்காரணமாகக்கயிலையென்றே-வரவாதவனஞ்சும்வெண்மாளிகைத்தஞ்சைவாணன்வெற்பா - விரவாதவண்ணமெல்லாமிரந்தேனிவ்விரவிடையே." எ-ம், பாங்கிதலைமகனைக்குறியிடத்துநிறுத்திவந்து தாய்துயிலறிதற்குச் செ-ள் "மாகந்தரியலர்க்கீந்தருள்வாணன்றென்மாறைவெற்பின்-மேகந்தருமின்னிடையன்னமேவிரைநாண்மலர்வெய்-நாகந்தழுவுங்குடம்பைபின்வாய்நடுநாளிரவிற்- சோகந்தவிர்விலவாய்த்துயிலாததென்றேருகைகளே." எ-ம், பாங்கிதலைமகட்குத் தலைமகன்வரவறிவுறுத்தற்குச் செ-ள் "கந்தாரநாணுங்கனிந்தசொல்லாய்நங்கடிமனைக்கே-நந்தாவனப்பொய்கைநான்கொய்குவேன்குழனுணுங்கங்குல் - கொந்தார்தெரியனின்செங்கனிவாயொடுங்கொங்கையொடும்- பைந்தாமரையையுஞ்சேதாம்பலையும்பகைப்பித்ததே." எ-ம், பாங்கிதலைமகளைக் குறியிடத்திற்குக்கொண்டுசேறற்குச் செ-ள் "மின்னேயயிலொடுமின்விளக்காவந்தவெற்பரைநாம் - பொன்னேயெதிர்கொளப்போதுகம்வாபுவியேழினுக்குந்- தன்னேயம்வைத்தருள்சந்திரவாணன்றமிழ்ச்சிலம்பி-னின்னேரியன்மயில்கண்டுயிலுகநிழலகத்தே." எ-ம், பாங்கிதலைமகனைக்குறியிடத்துய்த்துநீங்கற்குச் செ-ள் "மந்தாரமன்னகைவாணன்றென்மாறைமயிலனையாய் - நந்தாவனப்பொய்கைநான்கொய்குவேன்குழனுணுங்கங்குல்-கொந்தார்தெரியனின்செங்கனிவாயொடுங்கொங்கையொடும் - பைந்தாமரையையுஞ்சேதாம்பலையும்பகைப்பித்ததே." எ-ம், தலைமகன்றலைமகளைக்குறியிடத்தெதிர்ப்படுத்தற்குச் செ-ள் "முதிராமுலையிப்பணியந்தகாரமுனியவல்ல-கதிராயிரமில்லையேழ்பரித்தேரில்லைக்காவல் வெய்யோற்-கெதிராதல்சோமற்கியைவதன்றேநும்மில்யார்திறந்தார் - மதுராபுரித்தமிழ்தேர்வாணன்மாறைவனத்துவந்தே." எ-ம், தலைமகளாற்றினதருமைநினைத்திரங்கற்குச் செ-ள் "செழியன்கயலைத்திசைவைத்தவாணன்றென்மாறையென்மேற் - கழியன்புடையநின்கால்கண்களாகக்கராம்பயிலுங் - குழியன்றியும்வெஞ்சுழியொன்றும்யாறுங்குழீஇக்கொடிதாம் - வழியன்பநீயெங்ஙனேவந்தவாறிம்மழையிருளே."

எ-ம், தலைமகன்றலைவியைத்தேற்றற்குச் செ-ள் "வெயிலுந்தரவிந்தமென்மலரன்னமும்விந்தைவெற்றி - மயிலும்பயில்புயன்வாணன்றென்மாறைநின்வாழ்விழிபோ-லயிலுங்குயின்மொழிநின்னிடைபோன்மின்னுமடளிகள்-பயிலுந்தொடைநின்குழல்போலிருளைப்பருகினவே" எ-ம், புணர்தற்குச் செ-ள் "சழிநீரலைகடற்றொல்லுலகேழினுந்தோற்றும்வண்மைக்- கழிநீடுமாடகமேருவின்மீதினுங்காவல்கொண்டு- வழிநீள்புகழ்கொண்டவாணன்றென்மாறைவரையின்மலர்ப்-பொழினீழலும்பரமுதலையாரைப்புணர்ந்தனமே." எ-ம், "தம்மிலிருந்துதமதுபாத்துண்டற்று-லம்மாவரிவைமுயக்கு." எ-ம், புகழ்தற்குச் செ-ள் "மண்ணூர்பெரும்புகழ்வாணன்றென்மாறைவரைபயிலுந் - தண்ணூரமுங்கமழ்சார்வருஞ்சாரலிற்சார்ந்துறையும்-பெண்ணாரணங்கன்னநின்முகந்தான்கண்டபின்னுமுண்டோ-கண்ணூர்தடங்களின்வாயொடுங்காதகமலங்களே" எ-ம், தலைமகனைத் தலைமகள்குறிவிலக்கற்குச் செ-ள் "மூரற்கதிர்முத்தவார்முலையாவியின்மூழ்கநனி-வாரற்கநீதஞ்சைவாணன்வெற்பாவயமாவழங்கும்- வேரற்கடியகவலையினூடுவெயிலவற்குஞ்-சாரற்கருமையதாவிருள்கூருமென்சாரலிலே." எ-ம், "அருள்பேருலகின்வாரலர்***கோட்டுமாவழங்குங்காடகநெறியே" எ-ம், தலைமகன்றலைமகளையில்வயின்விடுத்தற்குச் செ-ள் "மல்லையம்போர்வென்றவாணன்றென்மாறைநின்மாளிகையாந் - தொல்லையம்போருகந்தேடவுங்கூடுந்தொடித்தளிரான்-முல்லையம்போதுமுகையுங்கொய்யாதுமுகிழ்முலையாய் - செல்லையம்பொற்பளிங்கிற்றலம்பாதஞ்சிவப்பிக்கவே." எ-ம், பாங்கிதலைமகளையெய்திக்கையுறைகாட்டற்குச் செ-ள் "முகையாயலராய்முலைக்குநின்வாய்க்குமுறைமுறையே-பகையாமுளரியுஞ்சேதாம்பலுமிவைபைங்கழுநீர்-வகையார்தொடைபுனைவாணன்றென்மாறையின்மௌவலன்ன- நகையாயவையிவைநின்குழற்காமுல்லைநாண்மலரே." எ-ம், பாங்கிதலைமகளையிற்கொண்டேகற்குச் செ-ள் "ஒல்காவிருண்மணந்தொல்கரும்போழ்தி னுணர்ந்துநம்மை - நல்காவியல்பணைநாடினுநாடுநடந்தருணீ - மல்காவிசூழ்தஞ்சைவாணன்றென்மாறையின்வள்ளையின்மேற் - செல்காவியன்னவிழித்திருவேநின்றிருமனைக்கே." எ-ம், பிற்சென்றுதலைமகனைப்பாங்கிவரவுவிலக்கற்குச் செ-ள் "வெம்போர்முருகென்னவேல்வலனேந்திவெறிதிங்ஙனே - வம்போர்நகரெல்லிவாரல்வெற்பாமருவாவரசர்-தம்போர்கடந்ததடம்புயவாணன்றமிழ்த்தஞ்சைநாட்டம்போருகமல்லவோதிருக்கோயிலணங்கினுக்கே." எ-ம், தலைமகன்மயங்கற்குச் செ-ள் "வஞ்சங்கலந்தகலிவென்றவாணன்றென்மாறைவெற்பிற்- றஞ்சங்கலந்தசொற்றையலும்யானுந்தனித்தனியே-நெஞ்சங்கலந்தநிலைமையெல்லாங்கண்டுநீயமுதி- னஞ்சங்கலந்தனையேநனைவார்குழனன்னுதலே." எ-ம், தோழிதலைமகடுயர்நிலைகிளந்துவிடுத்தற்குச் செ-ள் "முன்னூரரவுந்தெரியாவிருணெறிமுன்னிசையு-மின்னூர்புனையிழைமின்னனையாளுய்யவேலின்வெம்போர் - மன்னூர்களிறுதிறைகொண்டவாணன்றென்மாறையன்ன-நின்னூரகம்புகுந்தாற்குறிகாட்டுநெடுந்தகையே." எ-ம், தலைமகட்புணர்ந்தவன்சேறற்குச் செ-ள் "இருங்குன்றனமதிலெம்பதிக்கேகலெளிதுசெம்மை- தருங்குங்குமமுலைமடயனல்லாய்தஞ்சைவாணன்வெற்பிற்- கருங்குஞ்சரவினம்வெண்சிங்கவேறஞ்சுங்கங்குலினெம்- மருங்குஞ்சுடர்விளக்காமடவார்குழைமாணிக்கமே." எ-ம் வரும்.

இவற்றுள் இறையோனிருட்குறிவேண்டலும் நெறியினதெளிமைகூறலுந் தலைமகனவளூட்டணியியல் வினாதலும் பாங்கியிறைவிக்கிறையோன் குறியறிவுறுத்தலுமாகிய நான்கும் வேண்டற்குரிய. பாங்கியவளூட்டணியியல்வினாதலுமவற்குத் தன்னூட்டணியியல்சாற்றலுந் தலைமகளெருந்து பாங்கியோடு சாற்ற

லுமாகிய மூன்று முடம்படற்குரிய. தலைமகனோர்ந்தமை பாங்கிதலைமகற்குண ர்த்தலும் குறியிடையிடைநிறீஇத்தாய்துயிலறிதலு மிறைவிக்கிறைவன் வரவறி வுறுத்தலுமவட்கொண்டு சேறலுமாகிய நான்குங் கூட்டற்குரிய. தலைமகளையெ திர்ப்படுதலுந் தேற்றலும் புணர்தலுமாகிய மூன்றுங் கூடற்குரிய. தலைமகனலம் பாராட்டலுங் கையுறைகாட்டலுமாகிய விரண்டும் பாராட்டற்குரிய. தலைமக னிறைவியை யில்வயின்விடுத்தலும் பாங்கிதலைமகளையிற்கொண்டேகலுமாகிய விரண்டும் பாங்கிற்கூட்டற்குரிய. நோராதிறைவிநெஞ்சொடு கிளத்தலுந் தலை மகளாற்றின தருமை நினைந்திரங்கலும் பெருமகன்மயங்கலுந் தோழிதலைமகடு யர்நிலைகிளந்து விடுத்தலுமாகிய நான்கு முயங்கற்குரிய. பாங்கிகுறியுய்த்தகற லுந் திருமகட்புணர்ந்தவன் சேறலுமாகிய விரண்டும் நீங்கற்குரியவாமெனக்கொ ள்க. இவற்றுள் நோராதிறைவிநெஞ்சொடுகிளத்தலும் பெருமகளாற்றினதரு மை நினைந்திரங்கலு மிறைமகளிறைவனைக் குறிவரல்விலக்கலுமாகிய மூன்றும் வரைதல்வேட்கைக்குரிய. பாங்கிநெறியினதருமைகூறலு மிறைவனை வரவுவி லக்கலுந் தலைமகடுயர்நிலைகிளந்துவிடுத்தலுமாகிய மூன்றும் வரைவுகடாதற்குரி யவாம். (சஉ)

கருகூ. அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றுங்
கெல்லிக்குறி யிடையீ டிருவகைத் தாகும்.

இ-ம். அல்லகுறியும் வருந்தொழிற் கருமையுமென விரண்டுவகையி னையுடைத்தாகு மிரவுக்குறியிடையீடு. எ-று.

அல்லகுறி எ-து குறியல்ல எ-று. அது மூன்றிலென்பதுபோலக் கொ ள்க. அல்லகுறியாவது தலைமகனானிகழ்த்தப்படுவனவாகிய புள்ளெழுப்ப ன் முதலாகிய பிறிதொன்றுனிகழ்தல். வருந்தொழிற்கருமை, தலைமகளும் வருகின்ற தொழிற்கருமையாம். என்று எ-து எண்ணிடைச்சொல். ஆங்கு எ-து அசை. (சங)

கசுo. இறைவிக் கிருளை யிறைவர வுணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவியவட் குணர்த்தலும்
பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பலும்
புலந்தவன் போதலும் புலர்ந்தபின் வறுங்களந்
தலைவிகண் டிரங்கலுந் தன்றுணைக் குரைத்தலுந்
தலைமக ளவலம் பாங்கி தணித்தலு
மிறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றலு
மிறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றலு
மவள்குறி மருண்டமை யவளவற் கியம்பலு
மவன்மொழிக் கொடுமை சென்றவ ளவட்கியம்பலு
மென்பிழைப் பன்றென் றிறைவி நோதலுமென
வொன்று பன்னொன்று மல்லகுறிக் குரிய.

இ-ம். இறைவிக் கிகுளையிறைவரவுணர்த்துழித் தான்குறிமருண்டமை தலைவியவட்குணர்த்தன் முதலாக வென்பிழைப்பன்றென் றிறைவி நோதலீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு மல்லகுறிக்குரியவாம். எ-று.

இறைவிக்கிகுளையிறைவரவுணர்த்தற்குச் செ-ள் "கயல்வென்றவுண் கண்ணிகாரணமேது கொல்லைகைதையங்கா - னயனின்றபுன்னையினன்னமெலாமடலாழியங்கைச் - சயமங்கைதன்பெருமான்றஞ்சைவாணன்றரியலர்போற் - றுயரம்பெருகியிராவொருபோதுந்துயின்றிலவே" எ-ம். இது தோழியாய்க்குரைப்பாள்போற்றலைமகட்குணர்த்தியதாம். தான்குறிமருண்டமை தலைவிபாங்கிக்குணர்த்தற்குச் செ-ள் "பேசத்தகுவதொன்றன்றுகண்டாய்பிறிதோர்குறியை - நேசத்தவர்குறியென்றுசென்றியான்குறிநின்றுவந்தேன் - வாசத்தமிழ்புனைதோளுடையான்றஞ்சைவாணனொன்னார் - தேசத்தவருமெய்தாவெய்யநோயெய்திச்சேயிழையே" எ-ம், "அணிகொண்டதண்சேர்ப்பன்றேர்ப்பரிமாபூண்ட - மணியரவமென்றெழுந்துபோந்தேன் - றனிவிரும்பு - புள்ளரவங்கேட்டுப்பெயர்ந்தேனணியிழா - யுள்ளிடைநெஞ்சினேனியான்." எ-ம், பாங்கிதலைமகன்றீங்கெடுத்தியம்பற்குச் செ-ள் "வடியோவெனுங்கண்மடந்தைநல்லாய்தஞ்சைவாணனைவந் - தடியோமெனச்சென்றடையலர்போலயர்கின்றநின்னைத் - தொடியோடமென்பணைத்தோளிணைவாடுந்தொழில்புரிந்த - கொடியோர்துணிந்துசெய்தார்குறியாதகுறிநமக்கே" எ-ம், தலைமகள்புலந்துபோதற்குச் செ-ள் "தேனுற்றவாகையந்தார்த்தஞ்சைவாணனைச்சேரலர்போன் - மானுற்றபார்வைமயில்பொருட்டாகவழிதெரியாக் - கானுற்றகானற்கனையிருள்வாய்வரக்கற்பித்தநீ - யானுற்றநோய்களெல்லாம்படுவாயினியென்னெஞ்சமே." எ-ம், புலர்ந்தபின்வறுங்களந் தலைவிகண்டிரங்கற்குச் செ-ள் "தாதகைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றடந்துறைவாய் - நீதகைகொண்டென்முன்னின்றனையேசெந்நிறக்கனிவாய் - மேதகைமுள்ளெயிற்றொண்முகைக்கொங்கை வெண்டோட்டு மென்பூங் - கேதகையென்னுநல்லாயகொண்கர்மாலைகிடைத்ததென்றே" எ-ம், தலைவி தன்றுணைக்குரைத்தல் பிறசெய்யுட்கவி *"வரலிங்கரியமயங்கிருள்யாமத்துள்வந்திளவேய் - நாலுஞ்சிலம்பர்நவமணியாழிநறவுண்வண்டு - மூாலுந்தளையவிழ்மொய்ம்மலர்க்காந்தளஞ்செம்மலர்க்கை - விரலென்றுகொல்செறித்தார்நெறித்தாழ்குழன்மெல்லியலே." எ-ம், தலைமகளவலம்பாங்கிதணித்தற்குச் செ-ள் "பொய்யாதவர்தங்குறிபிழையாரவர்பூண்டவன்பு - மெய்யாதறேறியழுங்கன்மின்னேபயவெற்பிரண்டான் - மையாழிவையநிலையிட்டவாணன்றென்மாறைவெற்பி - னுய்யானமென்கழுநீர்நறுமாலையுடைத்தல்லவே." எ-ம், இறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றற்குச் செ-ள் "விம்மூர்துயர்க்கடல்வெள்ளத்துள்ளேயெமைவீழ்வித்துநீ - ரெம்மூரகத்துவரலொழிந்தீரொதிரேற்றதெவ்வர் - தம்மூரைமுப்புரமாக்கியவாணன்றமிழ்த்தஞ்சைபோலும்மூர்வரத்துணிந்தேமன்பகூறுமவ்வூரெமக்கே." எ-ம், இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றற்குச் செ-ள் "துறந்தனளாகியம்போருகந்தனையித்தொல்வரைமேற் - பிறந்தனளாகும்பெருந்திருமாதெனப்பேதையரிற் - சிறந்தனளாதலிற்செந்தமிழ்வாணன்றென்மாறையன்றுண் - மறந்தனளாயி

---

* இவ்விடத்து "எந்நாளுங்கைதை." என்னுந் தஞ்சைவாணன்கோவையும் "நெய்தற்படுவினிறைகழித்தண்சேர்ப்பன் - கைதைசூழ்கானலிற்கண்டநாட்போலானூற் - செய்தகுறியும்பொய்பாயினவாற்சேயிழை - யையகொலென்றோர்தொடர்பு." என்னுங் கவியுஞ் சிலபிரதிகளிலுள்ளன.

னும்யாமொருபோதுமறவலமே." எ-ம், தலைமகள்குறிமருண்டமைதோழிதலைவற்குரைத்தற்குச் செ-ள் "தனையாவரும்புகழத்தரும்வாணன்றமிழ்த்தஞ்சைமா - னனையாளவள்குறியாமிதென்றேநினைந்தலதொன்று-நினையாவருங்கங்குனின்குறியாவந்துநின்றதுநம்-வினையால்விளைந்ததென்றேவெறிதேயன்பமீண்டனளே." எ-ம், தோழி தலைமகன்சொல்லியகொடுமையைத் தலைமகட்குச் சொல்லற்குச் செ-ள் "பல்லியம்போலுருமேறெங்குமார்ப்பதும்பார்ப்பதின்றி- வல்லியம்போதகம்போர்பயில்கான்வந்துவாணன்றஞ்சை - மல்லியம்போதுங்கயன்னநின்பேருள்ளாசையினின் - றெல்லியம்போதுசென்றேனென்றுகேள்வரியம்பினரே." எ-ம், என்பிழைப்பன்றென்றிறைவிநோதற்குச் செ-ள் "வியலூரெயிற்புறநொச்சியினூழ்மலர்வீழ்தொறெண்ணி - மயலூர்மனத்தொடுவைகினன்யான்றஞ்சைவாணன்வெற்பர்-புயலூரிருட்கங்குல்வந்தவமேநின்றுபோயினரென்- றயலூர்நகைக்குமென்னேயென்னபாவங்கொலாக்கினவே." எ-ம் வரும். முன்னைநான்றுநிகழ்ந்தவையறிந்திருந்து மற்றைஞான்று தலைமகளிவ்வாறு சொல்லியாற்றுதல் காரணமாகவும் பாங்கிசொல்லியாற்றுவித்தல் காரணமாகவும் வந்தன. (சச)

கசுக. தாயு நாயு மூருந் துஞ்சாமை
காவலர் கடுகுத னிலவு வெளிப்படுதல்
கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுத
லாகிய வேழு மல்லகுறித் தலைவன்
வருந்தொழிற் கருமை பொருந்துதற் குரிய.

இ-ம். தாய்துயிலாமை முதலாகக் கோழி குரற்காட்டலீறாகச் சொல்லப்பட்ட வேழு மிரவுக்குறிக்கட் டலைமகன் வருந்தொழிற்கருமைக்குப் பொருந்துதற்குரியவாம். எ-று.

தாய்துஞ்சாமைக்குச் செ-ள் "ஆழியகன்புவியுள்ளன்யாவுமடங்கினள்ளென் - றூழிமுடிந்தனவோங்கிருள்யாமத்துமோரடையினும் - தாழியினும்போதலர்தஞ்சைவாணன்றரியலர்போற் - றோழிநம்மன்னைகண்ணேதுயில்கோடறுறந்தனவே." எ-ம், நாய்துஞ்சாமைக்குச் செ-ள் "தண்ணென்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றரியலர்போற் - பெண்ணன்பிறவியும்பேறுடைத்தன்றிப்பெரும்பதிநங்-கண்ணென்பவர்வரக்கங்குலின்ஞாளிக்கணங்குரைத்துத் - துண்ணென்கடுங்குரல்வாயன்னைதுஞ்சினுந்துஞ்சிலவே." எ-ம், ஊர்துஞ்சாமைக்குச் செ-ள் "ஓங்கண்ணல்வெம்பகடுந்திவந்தோரையுடன்றுதும்பைத்- தேங்கண்ணிசூடிச்செருவென்றவாணன்றென்மாறையின்னே- தாங்கண்ணனையர்தமைப்பிரிந்தோநந்தனிமைகண்டோ- நாங்கண்ணுறங்கினுமோவுறங்கார்கண்ணகரவரே." எ-ம், காவலர்கடுகுதற்குச் செ-ள் "புயற்கண்ணியதலைப்பூகமென்பாளைப்புதுமதுநீர்-வயற்கண்ணிறைதஞ்சைவாணன்றென்மாறையில்வஞ்சியன்னாள் - கயற்கண்ணிணையஞ்சிநீர்மல்கக்காவலர்கைப்பறையின்- செயற்கண்ணிணையல்லவோபடுகின்றனதிண்கடிப்பே." எ-ம், நிலவுவெளிப்படுதல் "தெண்பாற்கதிர்முத்தவெண்ணகையாய்திகிரிக்கிரிசூழ் - மண்பாற்புகழ்வைத்தவாணன்றென்மாறைநம்மன்னர்பொற்றேர்- பண்பாற்பரிக்கும்பரிவருமாறென்பரந்தநிலா-வெண்பாற்கடலில்வையம்பதினுலுமிதக்கின்றவே." எ-ம், கூகை குழ

றுதல் "நம்பேறுடைமையிருக்கின்றவா கடன்ஞாலத்துள்ளோர் - தம்பே றெனவந்தசந்திரவாணன்றரியலர்போல் - வம்பேறுகொங்கைமயிலியனும ஞ்சமன்றமராங் - கொம்பேறிநள்ளிருள்வாய்க்குழறுநின்றகூகைகளே." எ-ம், கோழிகுரற்காட்டுதல் 'மன்பதையுய்யவருந்தஞ்சைவாணன்றென் மாறைவெற்பர் - கொன்பதிவேல்வலங்கொண்டுவந்தாற்றங்கள்கோனடந் தா-னென்பதுதேறியிடையிருளுரையெழுப்பும்வெம்முட்-பொன்பதிதாள் வளைவாய்ச்செய்யசூட்டுவன்புள்ளினமே." எ-ம், "கல்வரைக்காட்டுவ பேரற் கொள்ளுங்கூறல் கூவுங்கோழி." எ-ம் வரும். இவை யேழும் வரைவுகடாதற்குரியவாம். (௪௫)

௧௬௨. திரட்டி யிவ்வாறு செப்பிய வொன்பதிற்
றிரட்டியு மிரவுக்குறி யிடையீட்டு விரியே.

இ-ம். கூட்டியிப்படியாற் சொல்லப்பட்ட பதினெட்டு மிரவுக்குறி யிடையீட்டு விரியாம். (௪௬)

௧௬௩. அச்ச முவர்த்த லாற்றாமை யென
மெய்ச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.

இ-ம். அச்சம் உவர்த்தல் ஆற்றாமையென மூன்றுவகையினையுடைத் தாம் விதிக்கப்பட்ட வரைதல்வேட்கை, எ-று. (௪௭)

௧௬௪. பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி
யருமறை செவிலி யறிந்தமை கூறலுந்
தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலுந்
தலைமக ளூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
யிறையோன் றன்னை நேர்ந்தியற்பட மொழிதலுங்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலுந்
தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டலுந்
துன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லலு
மலர்பார்த் துற்ற வச்சக் கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியுங்
காம மிக்க கழிபடர் கிளவியுந்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
நெறிவிலக்கு வித்தலுங் குறிவிலக்கு வித்தலும்
வெறிவிலக்கு வித்தலும் பிறவிலக்கு வித்தலுங்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித் தலுமென
வுரைபெற வகுத்த வொன்பதிற் றிரட்டியும்
வரைதல் வேட்கை விரியெனப் படுமே.

இ-ம். பருவரல்விஞவிய பாங்கிக் கிறைவி யருமறைசெவிலி யறிந்தமை கூறன் முதலாகக் குரவரைவரை வெதிர்கொள்ளுவித்தலீருகச் சொற்பெறவகுத்த பதினெட்டும் வரைதல்வேட்கையின் விரியாம். எ-று.

அவற்றுட்டலைமகளைப்பாங்கி பருவரல்வினவியதற்குச் செ-ள் "விண்டார்பதிகொண்டவேற்படைவாணன்விரைகமழ்பூந்- தண்டாமரைமங்கைதங்கியதஞ்சைநின்றுயர்தம்மோ - டுண்டாகியமுனிவோவன்றியாயத்தொடுற்றதுண்டோ-வண்டார்குழலிசொல்லாய்செல்வதேதுன் மனத்திடையே." எ-ம், தலைமகளருமை செவிலியறிந்தமைகூறற்குச் செ-ள் "மாணிக்கமென்கொம்பரென்சொல்லுகேன்றஞ்சைவாணன்வெற்பர்- பேணிப்புணர்ந்துபிரிந்தபின்றென்றலும்பேதைமுகம்-பாணித்தலின்றிமதிகண்டுநாணியபங்கயம்போ-லாணிக்கவிழ்ந்ததனாலறிந்தாளன்னைநங்களவே." எ-ம், தலைமகடலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றற்குச் செ-ள் "ஒவலில்வாயன்னைஞாளியிவ்வூர்கணுறங்கினுமூர்க் - காவலர்காய்வர்நிலாமதிகாலுங்கங்குடினைச்-சேவலும்வாரணமுந்தஞ்சைவாணனைச்சென்றிறைஞ்சா - மேவலர்போல்வெய்யவாயடையாவென்மெலிவறிந்தே." எ-ம், தலைமகடலைமகனூர்க்குச்செல்லவொருப்படுதற்குச் செ-ள் "நம்பானலனுண்டநம்பாதகர்தந்நகர்வினவித்- தம்பாலுடன்சென்றுசார்குவமோதரியாரைவென்று-வம்பார்கழல்புனைவாணன்றென்மாறைவளரும்வஞ்சிக் - கொம்பாகியமருங்குற்கரும்பாமொழிக்கோமளமே." எ-ம், பாங்கிதலைவனைப்பழித்தற்குச் செ-ள் "வறியார்புகழ்தஞ்சைவாணன்றென்மாறைமடந்தையன்னா - ளறியாடுயர்முன்னறிந்தவர்தாமதனாலழலின்- பொறியாருயிர்வெம்பணிமாமணியும்புதையிருள்கூர்-நெறியாரருள்பெறநாடுநாளிடைநீந்துதுமே." எ-ம், தலைமகளியற்படமொழிதற்குச் செ-ள் "புணராவிரகமும்போகாவிரவும்புணர்முலைமே-விணரார்பசப்பும்பிறவுமெல்லாமிருள்கூர்ந்தறல்போல்-வணரார்குழற்பிறைவாணுதலாய்தஞ்சைவாணன்வெற்ப- ருணராதிருப்பதுவேயென்றுமல்லநம்மூழ்வினையே." எ-ம், தலைமகள்கனவுநலிவுரைத்தற்குச் செ-ள் "சினவாளைகைகுடிச்செருவென்றவாணன்றென்மாறையினம் - மனவாழ்வனையவர்வந்துநல்லியாமமணந்ததெல்லா - நனவாமெனவேமகிழ்ந்தேவிழித்தொன்றுநான்கண்டிலேன்-கனவாய்முடிந்ததுபின்னையென்னேயென்னைதவமே." எ-ம், கவினழிபுரைத்தற்குச் செ-ள் "வாளினுநீள்விழிவாணுதலாய்தஞ்சைவாணன்றெவ்வி - னாளினுநாளுநலந்தொலைவேனைகையாரயில்வேல்-வேளினுமோர்நல்லவெற்பனுநீயுமென்மேனியினுந்-தோளினுநோயறியீரறியாததென்றொல்வினையே." எ-ம், தலைமகன்றுயர் தலைமகற்குரைத்தல்வேண்டற்குச் செ-ள் "வரைப்பான்மதுரத்தமிழ்தெரிவாணன்றென்மாறைவையை - நுரைப்பான்முகந்தன்னநுண்டுகிலாயிந்தநோயவர்க்கின்-றுரைப்பாருளரேலுயிரெய்தலாநமக்கூர்திரைசூழ்- தரைப்பால்வளரும்புகழெய்தலாமவர்தங்களுக்கே." எ-ம், பாங்கிநின்குறைநீயேசொல்லெனத்தலைமகட்குச்சொல்லற்குச் செ-ள் "ஒல்லெனவேயென்னுறுதுயர்தாமுமுணரும்வண்ணஞ் - சொல்லெனநீயிதுசொல்லியென்பேறுன்றுயரமெல்லாம்-வல்லெனவேகொண்டகொங்கையர்வேடஞ்சைவாணன்வெற்பி-லல்லெனவார்குழலாயறியாரல்லரன்பருமே." எ-ம், தலைமகளலர்பார்த்துற்றவச்சக்கிளவிக்குச் செ-ள் "மலருந்தொடைவஞ்சிவஞ்சகமாதருமாரனும்வா-யலருந்தடங்கையலருந்தொடாகிற்பவஞ்சிநெஞ்சம்-பலரும்புகழ்தஞ்சைவாணர்பிரானைப்பணியலர்போற் - புலரும்பெயருங்கண்ணீர்புல

ராதுபுலரினுமே" எ-ம், தலைமகளாறுபார்த்துற்றலச்சக்கிளவிக்குச் செ-ள் "அரியுஞ்சரியும்பொருநெறிக்கோர்துணையாயவர்மேற்-சொரியுந்திவலைதுடைக்கவென்றேகுழைதோய்ந்துநஞ்சும்-வரியும்பயில்கண்ணிவாணன்றென்மாறைநம்மன்னர்வந்து- பிரியும்பொழுதெல்லிவாய்வினையேன்மனம்பின்செல்வதே." எ-ம், காமமிக்ககழிபடர்கிளவி "புன்கண்கூர்மாலைப்புலம்புமென்கண்ணேபோற்-றுன்பமுளவாய்துயிலப்பெறுதியா - லின்கள்வாய்நெய்தானீயெய்துங்கனவினும் - வன்கணார்கானல்வரக்கண்டறிதியோ." எ-ம், "மாதுற்றமேனிவண்ணயுற்றவில்லிதிலைநகர்சூழ்-போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்கா - ளேதுற்றழிதியென்னீர்மன்னுமீர்ந்துறைவற்கிவளே- தீதுற்றதெற்றுக்கென்னீரிதுவோநன்மைசெப்புமினே" எ-ம், தன்னுட்கையாறெய்திடுகிளவி "விண்டலையாவர்க்கும்வேந்தர்வண்டில்லைமெல்லங்கழிசூழ்-கண்டலையேசரியாக்கன்னிப்புன்னைக்கலந்தகள்வர் - கண்டிலையேவரக்கங்குலெல்லாமங்குல்வாய்விளக்கு-மண்டிலமேபணியாய்தமியேற்கொருவாசகமே." எ-ம், தலைமகனெறிவிலக்குவித்தற்குச் செ-ள் 'ஈன்றாளினுமெனக்கன்புடையாய்சென்றிரந்துகொண்டு-சான்றாண்மையன்பர்தமக்குறைநீதஞ்சைசகலவனைத்-தேன்றாழ்வரைத்தமிழ்சேர்த்தியவாணனைச்சேரலர்க்குந் - தோன்றாவிருட்கங்குனீவருமாறொழிதோன்றலென்றே." எ-ம், தலைமகள்குறிவிலக்குவித்தற்குச் செ-ள் "வெற்றியவாவியவாணர்பிரான்றஞ்சைவெற்பகத்திற் - பெற்றியசோலைப்பிறங்கிருள்வாரன்மின்பேதையின்னு - முற்றியவேனற்படுகிள்ளையோட்டுமுறைமையளென் - றெற்றியகாதலிலைசந்தாளன்னையென்றுரையே." எ-ம், வெறிவிலக்குவித்தற்குச் செ-ள் "மின்னிடித்தென்னவன்னைகொண்டாள்வெறிவிந்தைமங்கை-மன்னண்மைமன்னியவாணன்றென்மாறையவரையில்வண்டியா - ழென்னவணமிறைகொள்ளுநாடரெனக்கருளான்-முன்னளருளியநோய்தணிப்பானின்றுமொய்குழலே." எ-ம், பிறவிலக்குவித்தற்குச் செ-ள் "பொருபான்மதியினைப்போன்மருப்பியானையிற்பொன்னெடின்பர் - தருபான்மொழிவஞ்சிசாரவந்தார்தஞ்சைவாணன்வெற்பிலொருபானெனுதமலரென்னவெந்தீயுலையுற்றசெவ்வே - லிருபான்மருங்கினுங்கொண்டெறிந்தாலொத்ததென்செவிக்கே." எ-ம், குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தற்குச் செ-ள் "தற்பழியாமலுஞ்சந்திரவாணன்றமிழ்த்தஞ்சைநங் கற்பழியாமலுங்காரணமாகக்கயல்விழிநின் - சொற்பழியார்நமர்சொல்லுவல்லேசென்றுசொல்லலையே-லிற்பழியாம்வழியாநமதாருயிர்க்கேதமுமே." எ-ம், "எந்தையுந்-தாயுமறியவுரைத்தியேல்யானுற்ற-நோயுங்களைகுவமன்." எ-ம் வரும். (௪௮)

௧௬௫. பொய்த்தன் மறுத்தல் கழறன் மெய்த்தலென்
றொருநால் வகைத்தே வரைவு கடாதல்.

இ-ம். பொய்த்தன் முதலாக மெய்த்தலீறாக நான்குவகையினையுடைத்து வரைவுகடாதல். எ-று. (௪௯)

௧௬௬. வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலு
மலரறி வுறுத்தலுந் தாயறி வுணர்த்தலும்
வெறியச் சுறுத்தலும் பிறர்வரை வுணர்த்தலும்

வரைவெதிர் வுணர்த்தலும் வரையுநா ளுணர்த்தலு
மறிவறி வுறுத்தலுங் குறிபெயர்த் திடுதலும்
பகல் வருவானை யிரவுவரு கென்றலு
மிரவு வருவானைப் பகல்வரு கென்றலும்
பகலினு மிரவினும் பயின்று வருகென்றலும்
பகலினு மிரவினு மகலிவ ணென்றலு
மூரவோ டூரு மூருங் குலனு
மரபும் புகழும் வாய்மையுங் கூறலு
மாறு பார்த்துற்ற வச்சங் கூறலு
மாற்றாத் தன்மை யாற்றக் கூறலுங்
காவன் மிகவுரைத்தலுங் காமமிக வுரைத்தலுங்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலு
மென முறைநாடி யியம்பிய விருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே.

இ-ம். வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பன் முதலாகக் கவினழிவுரைத்தலீறாகச் சொல்லப்பட்ட விருபதும் வரைவுகடாதல் விரியெனப்படும். எ-று.

வினவியசெவிலிக்கு மறைத்தமைவிளம்பற்குச் செ-ள் "தளராவிளமூலதாங்குகில்லாதுதளரிடைகண் - வளராததென்கங்குல்வாராயெனத்தஞ்சைவாணன்வெற்பா-விளரார்திருநுதலன்னைக்கொர்மாற்றம்விளம்பியுய்ந்தே-னுளராமவர்வலையுட்பட்டுவாழ்வதுணர்ந்தருளே." எ-ம், அலரறிவுறுத்தற்குச் செ-ள் "மணிவரைமாளிகைமாறைவரோதயன்வாணன்வெற்பா-பணிமொழியாளென்னுங்கொள்கொம்புமூடிப்படர்ந்தயலா - ரணிமனைதோறுங்கொழுந்துவிட்டம்பலரும்பிமண்மேற் - றணிவில்தாகவிப்போதலர்பூத்ததுன்றண்ணளியே." எ-ம், தாயறிவுணர்த்தற்குச் செ-ள் "இரையிற்பவளம்வடவாமுகத்தெழுந்தீக்கொழுந்திற் - கரையிற்படருங்கடற்றுறைநாடகயற்கொடிபொன்- வரையிற்றிகழ்வித்தவாணன்றென்மாறைவளர்ந்தமௌவல் - விரையிற்களவையெல்லாமறிந்தாளன்னைமெய்யுறவே." எ-ம், வெறியச்சுறுத்தற்குச் செ-ள் "மையுற்றநீலக்கண்மாமங்கைகோன்றஞ்சைவாணன்வெற்பி- னெய்யுற்றவேலன்பசீதணியாமையினெஞ்சினுள்ளே-யையுற்றயர்வுற்றெம்மன்னையும்யாயுமென்றாரணங்கின் - மெய்யுற்றநோய்தணிப்பான்வெறியாடல்விரும்பினரே." எ-ம், பிறர்வரைவுணர்த்தற்குச் செ-ள் "வெடிக்கின்றவிப்பியுணித்திலம்பைத்தலைவெம்பகுவாய்த்-துடிக்கின்றதிங்களிற்றோன்றுந்துறைவசெஞ்சொற்புலவோர்- வடிக்கின்றமுத்தமிழ்வாணன்றென்மாறையெம்மான்மருங்கை - யொடிக்கின்றகொங்கைகண்டாலெவர்நெஞ்சுருகாதவரே." எ-ம், வரைவெதிர்வுணர்த்தற்குச் செ-ள் "குருதிகண்டாலன்னகாந்தளஞ்சாரற்குறிவெறிதே -வருதிகண்டாய்தஞ்சைவாணன்வெற்பாவெங்கண்மாநகர்நீ - குருதிகண்டாரொடுங்

தோன்றிலங்கேளிர்நின்சொல்லிகவார் - பருகிகண்டான்மல்ராதொழியாக
யப்பங்கயமே." எ-ம், வரையுநாளுணர்த்தற்குச் செ-ள் "அலகம்பனக
ண்ணிவள்கொங்கைமென்சுணங்காகிவண்டு - பலகம்பலைசெய்யப்பூத்தன
வேங்கைபனிவரைமேற் - றிலகம்பதித்தெனச்சேல்வைத்தவாணன்றென்
மாறைநன்ன-னுலகம்பயில்புகழ்போற்சிலப்பாமதிபூர்கொண்டதே." எ-ம்,
தலைமகளறிவு தலைமகற்கறிவுறுத்தற்குச் செ-ள் "வனநாண்முளரிமுகை
வென்றுவர்ணன்றென்மாறைவெற்பிற் - கனநாணணிந்துபொற்கச்சறவீசி
க்கதித்தெழுந்த - தனநாணுநுண்ணிடைத் தையனல்லாள்பழி சாற்றுவல்
யா - னெனநாணிநின்பழிதான்மறைத்தாளன்பவென்னையுமே." எ-ம்,
குறிபெயர்த்திடுதற்குச் செ-ள் "ஊரோர்பவரிங்குலாவவுங்கூடும்வந்தொ
ண்சிலம்பா-வேறோர்பொதும்பரிற்போய்விளையாடுகவேற்படையான் - மா
றோர்பகைவென்றவாணன்றென்மாறையெம்மன்னுூவப் - பேறோர்வடிவு
கொண்டாலன்னநீயுமென்பேதையுமே" எ-ம், இச்செய்யுள் பகற்குறிக்கு
மிரவுக்குறிக்கு மேற்குமாறறிந்து கொள்க. பகல்வருவானை யிரவுவருகெ
ன்றற்குச் செ-ள் "முத்தணிநீலமணித்தகட்டுள்ளொங்குமொய்கொளவே-
வைத்தணிசேரவகுத்ததுபோற்றஞ்சைவாணன்வையைப் - பைத்தணிவார்
திரைதோய்கருந்தாட்புன்னைப்பாசிலைவெண் -டொத்தணிபூந்துறைவாவரு
வாயிருடேங்கிடையே." எ-ம், இரவுவருவானைப் பகல்வருகென்றற்குச்
செ-ள் "இழைவிளையாடுமிளமுலைசாயற்கிடைந்தமஞ்ஞை- கழைவிளையா
டுங்கடிப்புனங்காத்துங்கலையகலா - துழைவிளையாடுமுயர்சிலம்பாவின்னுமு
ன்பொருட்டான் - மழைவிளையாடு மதிற்றஞ்சைவாணன் மலயத்திலே."
எ-ம், பகலினுமிரவினும்பயின்றுவருகென்றற்குச் செ-ள் "குரவுங்கணி
யும்விரவும்வெற்பாவெய்யகுஞ்சரமேல் - வரவுந்தியதெவ்வைமாற்றியவாண
ன்றென்மாறைமின்னு-மரவும்பணியுநுடங்கிடையாற்றலளாற்பகலு - மிர
வுங்குறிவயினீவரல்வேண்டுமிவள்பொருட்டே." எ-ம், பகலினுமிரவினு
மகலிவணென்றற்குச் செ-ள் "தாவாதசெல்வந்தருந்தஞ்சைவாணன்றட-
ஞ்சிலம்பா-நீவரல்சாரனிலவலராம்பகனீடிருட்கண்-மாவானிலவுநிலமங்
கைவார்குழன்மல்லிகைபோ- லோவாநிலவெறிக்குஞ்சோலைநீழலினூடுவந்
தே." எ-ம், தலைமகளூடுமூருங்குலனுமரபும் புகழும் வாய்மையுங்கூறற்கு
ச்செ-ள் "தலத்திற்குமாறைக்குமன்னவன்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ் -
நிலத்திற்குமாமணியாகுநின்னூட்டிற்குநின்பதிக்குங்- குலத்திற்குமாசில்குடி
மைக்குஞ்சீர்மைக்குங்கோதின்மெய்ம்மை - நலத்திற்குமாவதன்றால்வரை
யாது நடப்பதுவே." எ-ம், ஆறுபார்த்துற்ற வச்சங்கூறற்குச் செ-ள்
"புராந்தகர்செஞ்சடைவெண்பிறைபோனுதற்புள்ளிமிழ்பூங் - குராந்தொ
டைமென்குழற்கொம்பினைவேண்டிக்கொடிமுல்லைநீண் - மராந்தழுவுந்தஞ்
சைவாணன்வெற்பாவல்லிதேர்ந்திலஞ்சிக்-கராந்திரிகல்லதர்வாயெல்லிநீவ
ரல்கற்பலவே." எ-ம், ஆற்றாதன்மையாற்றக்கூறற்குச் செ-ள் "கலங்குந்
தெளியுங்கனலெழமூச்செறியுங்கண்ணினீர் - மலங்கும்பொலந்தொடிசோ
ரமெய்சோருமறஞ்செய்கொலை- விலங்கும்படிறுசெய்யாக்குன்றநாடவிரை
ந்தளிப்பா-யலங்குங்கடும்பரித்தேர்வாணன்மாறையணங்கினையே." எ-ம்,
காவன்மிகவுரைத்தற்குச் செ-ள் "நஞ்சாரரவந்திரிதருகானடுநாளிரவி-
லஞ்சாதுசெங்கையயில்விளக்காவணங்கின்பொருட்டான்- மஞ்சார்மதிற்ற
ஞ்சைவாணன்வெற்பாவரல்வன்சொலன்னை- துஞ்சாள்கடுந்துடிக்கைநகர்
காவலர்துஞ்சினுமே." எ-ம், காமமிகவுரைத்தற்குச் செ-ள் "தென்னுக
வண்டமிழ்வாணன்றென்மாறைச்செருந்தியுடன் - புன்னுகமுங்கமழ்பூந்து

றைவாசுரர்போற்றமிர்தம்- பின்றேகமுன்வந்தபேதைதன்காமப்பெருங்கடற்கு-நின்றுகமன்றியுண்டோபுணையாவதுநீந்துதற்கே.'' எ-ம், கனவுநலிவுரைத்தற்குச் செ-ள் "மாறுதெவ்வென்றவாணன்றென்மாறைறவளநகர்போற்- பூணுகமெல்லியற்புல்லினையாகவப்பொய்யைமெய்யாய்ப்-பேணுமகிழ்ந்துபெருந்துயிலேற்றவள்பின்னைநின்னைக்-காணுள்கலங்கினளாற்கலங்காமனக்காவலனே.'' எ-ம், கவினழிவுரைத்தற்குச் செ-ள் "ஏரேற்றகொங்கையிளங்கொடிமாந்தளிரேய்ந்தவண்ணங் - காரேற்றசங்குலிற்பீரலர்போன்றதுகாவியுண்கண் - வாரேற்றபைங்கழல்வாணன்றென்மாறையில்வாவியின்கண் - ணீரேற்றசெங்கழுநீர்மலர்போன்றதுநின்பொருட்டே.'' எ-ம் வரும். இவற்றுள் வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பன் முதலாகப் பிறர்வரைவுணர்த்தலீறாகச் சொல்லப்பட்டவைந்தும் பொய்த்தற்குரிய. குறிபொய்த்திடுதன் முதலாகப் பகலினுமிரவினுமகலவென்றலீறாகச் சொல்லப்பட்டவைந்து மறுத்தற்குரிய. உரவோனுடுமூருங்குலனுமரபும் புகழும்வாய்மையுங் கூறலாகியவொன்றுங் கழறற்குரிய. வரைவெதிர்வுணர்த்தலும் வரையகாணுணர்த்தலு மலரறிவுறுத்தலு மாறுபார்த்துற்றவச்சங்கூறலுங் காவன்மிகவுரைத்தலு முதலாகியவாறு மெய்த்தற்குரிய.()

கசுஎ. செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்க றேற்றி யாற்றுவித்தல்
வந்துழி நொந்துரை யென்றெழு வகைத்தே
யொன்றக் கூறிய வொருவழித் தணத்தல்.

இ-ம். செலவறிவுறுத்தன் முதலாக வந்துழிநோதலீறாக வெழுவகை யுடைத்துப் பொருந்தக்கூறிய வொருவழித்தணத்தல். எ-று. (ருக)

கசுஅ. தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றலு
மென்சொற் பாங்கி விலக்கலுந் தலைவ
னீங்கல் வேண்டலும் பாங்கி விடுத்தலுந்
தலைவிக் கவன்செல வுணர்த்தலுந் தலைவி
நெஞ்சொடு புலத்தலுஞ் சென்றோர் நீடலிற்
காமமிக்க கழிபடர் கிளவியுங்
கோற்றொடிப் பாங்கி யாற்றுவித் தலுமவன்
வந்தமை யுணர்த்தலும் வந்தோன் றன்னொடு
நொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்
பாங்கியொடு நொந்து வினாதலும் பாங்கி
யிறைவியை யாற்றுவித் திருந்த வருமை
கூறலு மென்னு மாறிரு கிளவியு
மொருவழித் தணத்தலின் விரியெனப் படுமே.

இ-ம். தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றன்முதலாகத் தலைவியைப் பாங்கி யாற்றுவித்திருந்தவருமை கூறலீருகச் சொல்லப்பட்ட வாறிருகிளவியு மொருவழித்தணத்தல் விரியென்றுகூறுவர் புலவர்., எ-று.

தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றற்குச் செ-ள் "திரைகேதகைமணங் கூடுமெழும்பாடியிற்சென்றுவந்தியான்- வரைகேன்வருந்துலைவல்லியைநீதஞ்சைவாணன்செவ்வேற்- புரைகேழ்மதர்விழிக்கோங்கரும்பேர்முலைப்பூசல்வண்டு-நிரைகேசவஞ்சியஞ்சேலென்றுதேற்றுதனின்கடனே." எ-ம், மென்சொற்பாங்கிதலைவனைச்செலவுவிலக்கற்குச் செ-ள் "பறந்தாங்கிவர்பரித்தேர்கடவேலுன்பதியடைந்தான் - மறந்தாங்கமையவும்வல்லையன்பாதஞ்சைவாணனென்னுர் - நிறந்தாங்கிவர்கலைபோலுண்கண்மாமுகினீர்மைகொண்டு- புறந்தாழ்கருங்குழல்வெண்முத்தவாணகைப்பொன்னினையே." எ-ம், தலைவனீங்கல்வேண்டற்குச் செ-ள் "அறையும்பொறையுமணந்தவெங்கானத்தணங்கையில்வைத்- திறையும்பிரிவதற்கெண்ணுகிலேனெண்ணலார்வரைமேன் - மறையும்படிவென்றசந்திரவாணன்றென்மாறையில்வண்-டுறையுங்குழலிசென்றேவரல்வேண்டுமெம்மூரகத்தே" எ-ம், தலைமகனைப்பாங்கிவிடுத்தற்குச் செ-ள் "இல்லத்துறையுமிவள்பொருட்டானுமக்கியானுமொன்று - சொல்லத்தவிர்கில்ன்சூழ்கழலீர்சுடர்தோய்புரிசை-வல்லத்தமர்வென்றவாணன்றென்மாறையில்வந்துவந்து-செல்லத்திருவுளம்வைத்தகல்வீர்நுந்திருநகர்க்கே." எ-ம், பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தற்குச் செ-ள் "நிலவேய்தரளநிரைத்தன்னவாணகைநீலநிறக் - குலவேய்நிகர்பொற்குழைநெடுந்தோளிகுறுகிவரச்- செலவேகருதினர்செந்தமிழ்வாணன்செழுங்கமலத்-தலவேதியன்பெறுநாள்பெற்றுவாழ்பவன்றஞ்சையிலே." எ-ம், தலைவிநெஞ்சொடுகிளத்தற்குச் செ-ள் "குளித்தாரிளங்கொங்கையாவியிலாவிகுளிர்ப்பநம்மை-யளித்தாரளித்தகலத்தணைத்தாரன்றணங்கின்முன்னே - தெளித்தார்செழுந்தஞ்சைவாணனென்னுரினஞ்சிந்தைநைய - வொளித்தாரெனிங்ஙனேநன்றுநன்றிவ்வுலகியலே." எ-ம், "அளித்தஞ்சலென்றவர்நீப்பிற்றெளித்தசொற்- றேறியார்க்குண்டோதவறு." எ-ம், சென்றோனீடலிற்காமமிக்கழிபடர்கிளவிக்குச் செ-ள் "மயிலாடுதண்டலைமாறைவரோதயன்வாணனென்னுர்க்- கெயிலாகியகடற்கானலஞ்சேர்ப்பற்கிடையிருள்யான்- றுயிலாநிலையொன்றுஞ்சொல்லாய்துணையுடன்சூழ்திரைத்தேன் - பயிலாமலரணைமேற்றுயிலாநிற்றிபாலன்னமே." எ-ம், தலைவியைப்பாங்கியாற்றுவித்தற்குச் செ-ள் "ஆடுகம்வாநம்மகன்றவரூரகலாப்புதுநீர்-பாடுகம்வாபொற்பசலைதந்தார்திறம்பாங்கினெல்லாந்- தேடுகம்வாதஞ்சைவாணனன்னுட்டன்பர்தேர்வழிநாஞ் - சூடுகம்வாகவலாதவர்கானற்றுறைமலரே." எ-ம், பாங்கிதலைமகட்குத் தலைமகன்வரவுணர்த்தற்குச் செ-ள் "பண்ணுங்குழலும்பழித்தசொற்பாவைபரியலெல்லா-மண்ணும்புகழ்தஞ்சைவாணனென்னுரெனமைக்குவளைக்- கண்ணுங்கனையிருட்கங்குலுமாரன்கணைகள்பட்ட-புண்ணும்புலரவந்தார்தமதூர்வயிற்போனவரே." எ-ம், வந்தோன்றன்னெடுபாங்கிநொந்துவினைதற்குச் செ-ள் "ஒருதலைக்கெய்தியகல்லதர்க்குச்செல்லவோருயிர்த்தா - யிருதலைப்புள்ளினியைந்தநுங்கேண்மையையெண்ணியெம்மூர்-வருதலைக்கொண்கநினைந்திலைவாணன்றென்மாறைவண்டு-பொருதலைக்குங்குழலாளழுநீகண்டுபோயபின்னே." எ-ம், தலைவன்பாங்கியொடுநொந்துவினைதற்குச் செ-ள் "ஐவாயரவுற்றதன்னவின்னுவிடராற்றியென்போ-லெவ்வாறிருந்திர்நிரெல்வளையீரெதிர்ந்தாரைவென்று- மைவாரணங்கொண்டவாணன்றென்மாறைமருவலர்போ-லொவ்வாவலரையுங்கேட்டிருவீருமொருதனியே"

எ-ம், பாங்கிதலைவியையாற்றுவித்திருந்தவருமை தலைமகற்குச் சொல்லற்குச் செ-ள் "இவளாருயிர்புரந்தியானிருந்தேன்செக்கரிந்துவன்னப்- பவளாடவியிற்பயினித்திலம்பங்கயங்குவியத் -தலளாதவஞ்சொரிதண்டுறைவாதஞ்சைவாணன்றெவ்விற் - றுவளாமலாற்றுவியென்றன் றுநீசொன்னசொன்னினைந்தே." எ-ம் வரும். இவற்றுள் தன்பதிக்கற்சி தலைவன் சாற்றலும் பாங்கிதலைவிக்கவன் செலவுரைத்தலுமாகிய விரண்டுஞ் செலவறிவுறுத்தற்குரிய. தலைமகளைப் பாங்கியாற்றுவித்தலுந் தலைமகன்வந்தமை தலைமகட்குரைத்தலுமாகிய விரண்டுந் தேற்றியாற்றுவித்தற்குரிய. தலைமகளைப் பாங்கியாற்றுவித்தலும் பாங்கிவந்தோன்றன்னொடு நொந்துவினாதன் முதலாகிய மூன்றும் வந்துழிநொந்துரைக்குரிய. (௫௨)

௧௬௯. பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.

இ-ம். பொருள்வயிற் பிரிவாமாறுணர்-ற்று. பிரிவறிவுறுத்தன் முதலாக வந்துழிமகிழ்ச்சியீறாக வொன்பதுவகையினை யுடைத்தாம் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவு. எ-று. (௫௩)

௧௭௰. என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலு
நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றலு
நீடே னென்றவ னீங்கலும் பாங்கி
யோடரிக் கண்ணிக் கவன்செல வுணர்த்தலும்
பூங்குழை யிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற்
சொல்லலுந் தலைவி கொடுஞ்சொற் சொல்லலும்
வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும்
பருவங் கண்டு பெருமகள் புலம்பலு
மிதுவவம் பென்றலு மிறைமகன் மறுத்தலு
மவர்தூ தாகிவந் தடைந்ததிப் பொழுதெனத்
துணைவி சாற்றலும் பிணைவிழி யாற்றலு
மவனவட் புலம்பலு மவன்வரு காலைப்
பாகன் றன்னொடு மேகந் தன்னொடுஞ்
சோகங் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தலும்
வலம்புரி கிழத்தி வாழ்த்தலும் வந்துழி

நினைத்தமை வினவலு நினைத்தமை செப்பலு
மனைத்தகை யவளை யாற்றுவித் திருந்தமை
பாங்கி கூறலுமெனு மாங்கெழு மூன்றும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின்
விரியெண மொழிந்தனர் தெரிமொழிப் புலவர்.

இ-ம். பொருள்வயிற்பிரிவின் பிரியாமாறுணர்-ற்று. இ-ள். என்பொருட் பிரிவுரையேந்திழைக்கென்றன் முதலாகத் தலைமகளையாற்றுவித்திருந்தமை பாங்கி கூறலீறாகச் சொல்லப்பட்ட விருபத்தொன்றும் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் விரியெணமொழிந்தனராய்ந்தறிவுடையோர். எ-று.

என்பொருட்பிரிவுணர்த் தேந்திழைக்கென்றற்குச் செ-ள் "கழைபோல் வளர்நெற்கவின்பெறவாரிகவர்ந்துவரு - மழைபோல்வருகுவன்வன்சுரம்போய்த் தஞ்சைவாணன்வெற்பி - லிழைபோலிடையாண்மூலைவிலைக்காளையாவையுங் கொண்-டுழைபோலரிநெடுங்கண்மயிலேசென்றுணர்த்திதுவே." எ-ம், பாங்கிநின்பொருட்பிரிவுரைநீயவட்கென்றற்குச் செ-ள் "வசையும்புகழுநின்மேலனவாந்தஞ்சைவாணன்வெற்பா-மிசையுங்கரும்பினில்வேம்புவைத்தாலன்னவேட்கையெல்லாத்-திசையும்பரவுந்திருவனையாடன்றிருவுளத்துக்- கிசையும்படிவல்லையேற்சொல்லிநீபின்னெழுந்தருளே." எ-ம், நீடேனென்றவணீங்கற்குச் செ-ள் "காலைப்பொழுதுகடும்பரித்தேர்பண்ணிக்கானகம்போய்-மாலைப்பொழுதுவருகுவல்யான்றஞ்சைவாணனன்னாட்- டாலைப்பழனமணிந்தவெவ்வூர்நும்மகங்குளிரச் - சோலைப்பயில்குயில்போன்மொழியாயென்றுணிவிதுவே." எ-ம், பாங்கிதலைமகட்குத்தலைமகன்செலவுணர்த்தற்குச் செ-ள் "வில்லேய்நுறும்புமிறும்புமெவ்வாயும்விராயவெவ்வாய்ச்- கல்லேய்கவலைக்கடங்கடந்தார்நமர்காய்ந்தெதிர்ந்தார் - செல்லேய்முரசச்செருவென்றவாணன்றென்மாறையினின்-வல்லேய்முலைவிலைதான்றந்துநாளைமணம்பெறவே." எ-ம், தலைமகளிரங்கற்குச் செ-ள் "இப்பேருவகையினிப்பிரியேனென்றுமென்முன்சொன்ன - வப்பேருரைபழுதாமென்னவேவரவஞ்சுமந்த- மைப்போலைகடல்வையகந்தாங்கியவாணன்றஞ்சைச் - செப்பேரிளங்கொங்கைமங்கைசெப்பாதன்பர்சென்றதுவே." எ-ம், பாங்கிகொடுஞ்சொல்சொல்லற்குச் செ-ள் "ஆரணத்தானருள்பாரளித்தானடங்காதவரை - வாரணத்தால்வென்றவாணன்றென்மாறைவயங்கொளிசேர்-பூரணத்தார்மதிபோன்முகத்தாயென்புலம்புதிநின்-காரணத்தாலல்லவோபிரிந்தாரின்றுகாதலரே." எ-ம், தலைவிகொடுஞ்சொற்சொல்லற்குச் செ-ள் "மண்டுந்திரைவையைசூழ்தஞ்சைவாணற்குவன்புலியுஞ் - செண்டுங்கொடுத்தகல்செம்பியர்போலன்பர்சென்றுழிமுள் - ளிண்டுங்கழையும்பயிலும்வெங்கானியல்கேட்டுமின்னேய்- கண்டுங்கலங்கல்செல்லாதிந்தவூரெற்கழறனன்றே." எ-ம், வருகுவர்மீண்டெனப்பாங்கிவலித்தற்குச் செ-ள் "தேர்த்தானைவாணன்றென்மாறைமின்னேயஞ்சல்செம்புருக்கி - வார்த்தாலனையவழிநெடும்பாலைமடப்பெடைநோய்-பார்த்தாதவந்தணிபாதவமின்மையிற்பைஞ்சிறகாற் - போர்த்தாலுமஞ்ஞைகண்டும்போவரோநம்புரவலரே." எ-ம், பருவங்கண்டுபெருமகள்புலம்பற்குச் செ-ள் "மிகவும்பரந்தகரியகண்ணீர்செங்கைவெள்வளைபோ-லுகவுந்துறந்தவருன்னலராலுறைகார்பொழிய-மகவுந்துணையுங்கலைதழுவுந்தஞ்சைவாணன்வெற்பி-னகவும்பெடைமயிலுந்தமியேனைநகுற்றுவலே." எ-ம், இகுளைவம்பென்றற்குச் செ-ள் "தனஞ்சேர்ந்தவஞ்சிநின்சாயல்கண்டஞ்சித்தனித்தனிபோய் - வனஞ்சேர்ந்தயர்ந்தமயில்களெல்லாந்தஞ்சைவாணன்வெற்பிற்-கன

ஞ்சேர்ந்தலர்துளிகாலுமுன்னேவப்புகாலுமென்று - வினஞ்சேர்ந்தகவினகாந்த
ணிவாடியிருத்தல்கண்டே.'' எ-ம், இறைமகன்மறுத்தற்குச் செ-ள் ''வாவி
த்தலைகையன்னமேதஞ்சைவாணன்வரையகத்தென்- பாவித்தனிநெஞ்சபார்த்தஞ்
சுமேசண்பயின்றகண்ணூர்-தூவித்தளைமயில்கோபங்கொள்ளாவரத்தோன்றியை
ச்சேர்ந்-தாவித்தகந்தளரும்மணிகாலுமராவென்னவே'' எ-ம், அவர்தூதாகிவ
ந்நடைந்ததிப்பொழுதெனத்துணைவிசாற்றற்குச் செ-ள் ''இன்னேவருவர்நி
ன்காதலரேதிலரேங்கவினிக்-கொன்னேயிரங்கிவருந்தல்கண்டாய்கொற்றநேமி
விந்தை-மன்னேயெனவந்தவாணன்றென்மாறைவரவுணர்த்த- முன்னேநடந்த
னகாண்கடுங்காலமுகிலினமே.'' எ-ம், ''கடுங்கதிர்கூராதகார்செல்லவெய்த-
நெடுங்காடுகாய்சினையீனக்-கொடுங்குழை- இன்னேவருவர்நமரென்றுலிவாண-
மின்னுமவர்தூதுரைத்து.'' எ - ம், தலைமகளாற்றற்குச் செ - ள் ''இன்
புற்றகாலத்திருவர்க்குமொன்றுயிரென்றுசொன்னு- ரன்புற்றகாதலராதலினாலக
ன்றுரெனநாந்- துன்புற்றகாலத்தவருமுறாரல்லர்தோழிசொல்லும்-வன்புற்றகா
ரளிக்குந்தஞ்சைவாணன்றென்மாறையிலே.'' எ-ம், அவனவட்புலம்பற்குச்
செ-ள் ''வளைபடுமுத்தம்பாதவர்பகருங்-கடல்செழுகொண்கன்காதன்மடமகள்-
கெடலருந்துன்பநல்கிப்-படலினபாயல்வெளவியேளே'' எ-ம், மீண்டுவருங்
காலத்துத் தலைமகன்பாகனொடுசொல்லற்குச் செ-ள் ''வன்மாமுடுகவலவதிண்
டேரினிவாணன்றஞ்சைக் - கென்மாலுறுநெஞ்சின்முன்செலநாகிளவேநுபுல்லி
ப்-பொன்மாமணியும்பிரிந்திருந்தாரும்புலம்புமன்றிற் - சென்மாலையந்திகண்டாற்
றரியாளென்றிருந்திழையே.'' எ-ம், தலைமகன்மேகத்தோடுசொல்லற்குச்
செ-ள் ''வேண்டும்பொருளைத்தரும்பொருட்போய்முற்றிமீண்டவென்றேர்-
தூண்டும்பரிமுன்றுனைமுகில்காள்சென்றுசொல்லுமிந்து - தீண்டுங்கொடிமதில்
சூழ்தஞ்சைவாணனைச்சேரலர்போ - லீண்டும்பசலைமெய்போர்த்திருப்பார்தமக்
கென்வரவே.'' எ-ம், பாங்கிவலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தற்குச் செ-ள்
''பொருகின்றசெங்கயல்போல்விழியாய்பண்டுபோயநின்கைக்- குருகின்றணிந்தி
றைகொள்வதுகாண்கநங்கொண்கர்பொற்றேர்-தருகின்றசங்கந்தருவன்னவாண
ன்றமிழ்த்தஞ்சைவாய்-வருகின்றதென்றுமுன்னேயோகைகூறும்வலம்புரியே''
எ-ம், வலம்புரிகிழத்திவாழ்த்தற்குச் செ-ள் ''மால்வண்டெனமன்னிவாணன்
றென்மாறைமன்னன்புகழே- போல்வண்டமிழ்மன்னர்போற்றவிளங்குகபொன்
கொழிக்குங் - கால்வண்டல்வையைக்கரைமல்குமல்லிகைக்கான்முகையின்-மே
ல்வண்டிருந்ததுபோற்கருமாமுகவெண்சங்கமே.'' எ-ம், தலைமகன்வந்துழிப்
பாங்கிநினைந்தமை வினுதற்குச் செ-ள் ''நினையீர்பொருட்குப்பிரிந்தயனுட்டுழி
நின்றுழிவே-ளனையீர்நினைந்துமறிதிர்கொல்லோவஞ்சொலாலறிவோர் -வனையிரி
தழ்க்கண்ணிவாணன்றென்மாறையைவாழ்த்தலர்போ - 'னனையிரிதழ்க்கண்வை
காவெவ்வநோயுற்றநவ்வியையே.'' எ-ம், தலைமகனினைந்தமைசெப்பற்குச்
செ-ள் ''கானெடுங்குன்றங்கடந்துசென்றேனொருகாலுமைதோய்- மானெடுங்
கண்ணிமறந்தறியேன்வண்கைவாணன்றஞ்சை- நீனெடும்பண்ணைக்குரும்பை
யுஞ்சூதுநெருங்குகொங்கைத்-தேனெடுங்கண்ணிமென்பூங்குழன்மாதர்திருமுக
மே.'' எ-ம், தலைமகளையாற்றுவித்திருந்தவருமை பாங்கிகூறற்குச் செ-ள்
''உயராமலகத்தருங்கனிநீர்நகைக்குண்சுபம்போய்-வியராமலில்லின்விடுத்தகன்
றுளைமென்பூஞ்சிலம்பா-வயராமலஞ்சலென்றாற்றுவித்தோனிவ்வவனியெல்லா-
மயராமல்வந்தபிரான்றஞ்சைவாணன்றென்மாறையிலே.'' எ-ம் வரும். இவ
ற்றுள் என்பொருட் பிரிவுரையேந்திழைக்கென்றலும் பாங்கிதலைவிக்கவன் செ
லவுணர்த்தலுமாகிய விரண்டும் பிரிவறிவுறுத்தற்குரிய. பாங்கிநின்பொருட் பிரி
வுரைநீயவட்கென்றலாகிய ஒன்றும் பிரிவுடன்படாமைக்குரித்து. தலைமகனிடே

னென்றவொன்றும் பிரிவுடன்படுத்தற்குரித்து. தலைமகளிரங்கலுங் கொடுஞ்சொற்சொல்லலும் பருவங்கண்டு பெருமகள் புலம்பலுமறுத்தலுந் தலைமகன் சேணிடைப்புலம்பலுமாகிய வைந்தும் பிரிவுழிக்கலங்கற்குரிய. பாங்கிகொடுஞ்சொற்சொல்லலும் வருகுவர்மீண்டெனப் பாங்கிவலித்தலும் பருவமன்று வம்பென்றலும் அவர் தூதாகிவந்தடைந்ததிப்பொழுதென்றலுமாகிய நான்கும் வன்புறைக்குரிய. தலைமகளாற்றலாகிய ஒன்றும் வன்பொறைக்குரிய. தலைமகன் மீண்டுவருங்காலைப் பாகனொடு சொல்லலு மேகமொடு சொல்லலுமாகியவிரண்டும் வரும்வழிக்கலங்கற்குரிய. பாங்கி வலம்புரிகேட்டவன் வரவறிவுறுத்தன் முதலாகிய வைந்தும் வரும்வழி மகிழ்ச்சிக்குரியவெனக் கொள்க. (௫௪)

களவியன் முற்றிற்று.

மூன்றாவது

வரைவியல்.

௧௭௧. **வ**ரைவெனப் படுவ துரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையுங்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.

இ-ம். இவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின் வரைவியலென்னும் பெயர்த்து. இதனுள் வரைவென்று சொல்லப்படுவது தலைமகன் றலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவுங் கொடாதொழியவும் வதுவைச் சடங்கோடு பொருந்த மணஞ்செய்து போதல். எ-று. (௧)

௧௭௨. **வ**ரைவு மலிவே யறத்தொடு நிலையென்
றுரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளத்தினர் புலவர்.

இ-ம். வரைவிற்குரிய கிளவித்தொகையுணர்-ற்று. வரைவுமலிவு மறத்தொடு நிற்றலுமென்று நூல்களுட் கூறுதல் பொருந்துமவையிரண்டும் வரைவிற்குரிய கிளவித்தொகையாம். எ-று. (௨)

௧௭௩. **வ**ரைவு முயல்வுணர்த்தல் வரைவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.

இ-ம். வரைவுமுயல்வுணர்த்தன் முதலாகப் பராவல்கண்டுவத்தலீறாக நான்குவகையினையுடைத்து வரைவுமலிதல், எ-று. (௩)

கஎச. காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி
காதலிக் குணர்த்தலுங் காதலி நற்று
யுள்ள மகிழ்ச்சி யுள்ளலும் பாங்கி
தமர்வரை வெதிர்ந்தமை தலைவிக் குணர்த்தலு
மவளுவகை யாற்று துளத்தொடு கிளத்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவி
மணம் பொருட்டாக வணங்கைப் பராநிலை
காட்டலுங் கண்டோன் மகிழ்வுமென் றீட்டிய
விருமூன்று மொன்றும் வரைவு மலிதற்காம்
விரியென விளம்பினர் மெய்யுணர்ந் தோரே.

இ-ம். காதலன்முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தன் முதலாகத் தலைமகளணங்கைப் பராநிலைகாட்டக் கண்டோன்மகிழ்தலீறாகச் சொல்லப்பட்ட வேழும் வரைவுமலிதற்காம் விரியென்று சொன்னார் உரையறிந்தோர். எ-று.

காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கிகாதலிக்குணர்த்தற்குச் செ-ள் "தொலைவிலையாகியபல்பொருள்காதலர்சூதமர்நின்-முலைவிலையாகமுகந்தளித்தார்முனைவேந்தர்தம்மைத்- தலைவிலையாகத்திறைகொண்டவாணன்றமிழ்த்தஞ்சைநீ-யுலைவிலைபாருகபொன்வண்ணமாறுகவொண்ணுதலே." எ-ம், காதலிநற்றுயுள்ளமகிழ்ச்சியுள்ளற்குச் செ-ள் "கயமாமலரெனுங்கண்ணியைவண்டெனுங்காளைபல்புள்-ளியமாமணம்புணரீர்ந்துறைநாடரெதிர்ந்தவர்மேல் - வயமாநடத்தியவாணன்றென்மாறைவருகுவரே-னயமாமணவணிகண்டியாயுமின்புறுநம்மினுமே" எ-ம், பாங்கிதமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தற்குச் செ-ள் "மணிப்பாலிகைமுத்தம்வைத்தாங்கடம்பலர்வார்திரைதூ• யணிப்பாய்துவலையரும்புந்துறைவர்க்கணியெதிர்ந்து - பணிப்பாசிழையல்குல்வெண்ணகையாய்நமர்பாரநின்றோய்-தணிப்பான்முரசறைந்தார்தஞ்சைவாணன்றமிழ்நிலத்தே." எ-ம், தலைமகளுவகையாற்றுதுளத்தொடுகிளத்தற்குச் செ-ள் "சோகாகுலமெய்தல்கண்டுநெஞ்சேநந்துறைவரெனு - நீகானுடன்பள்ளிநீள்வங்கமேறிநிலம்புரக்கு-மாகாவிரியன்னவாணன்றென்மாறைமன்னன்பகையு-மேகாவிருட்கங்குலாங்கடற்காலையெனுங்கரையே." எ-ம், தலைவனைப்பாங்கிவாழ்த்தற்குச் செ-ள் "மாரியஞ்சுங்கொடைவாணன்றென்மாறையில்வாழிவண்டார்-வேரியந்தொங்கல்விரைகமழ்மார்பவிடா,வம்பற்- சேரியம்பொய்கைத்துறையலர்வாடநுஞ்செவ்விமணந்-தூரியஞ்சங்கதிரக்காட்டுநீயன்றுசூட்டலரே." எ-ம், தலைவிமணம்பொருட்டாகவணங்கைப்பராயநிலைபாங்கிதலைமகற்குகாட்டற்குச் செ-ள் "உரவிப்பெருங்கலித்துன்பங்கள்போய்முதலூழியின்பம்-வரவிப்படிதன்னைவாழ்வித்தவாணன்றென்மாறையன்னாள்- புரவிப்புனைநெடுந்தேரண்ணலேநின்பொருட்டணங்கைப்-பரவிப்பரவிநின்றேவரம்வேண்டுதல்பார்த்தருளே." எ-ம், தலைமகளணங்கைப்பராநிலைகண்டதலைமகன்மகிழ்தற்குச் செ-ள் "இவ்வித்தகமிவட்கெய்தியதெவ்வண்ணமெவ்வுலகும் - வவ்வித்திகழ்புகழ்வாணன்றென்மாறைமணம்பொருட்டா-னவ்வித்தொகையினனுமென்றேக்கிநறைபுகையாச்- செவ்வித்தகைமலர்தூய்த்தெய்வம்வாழ்த்துந்திருத்தகவே." எ-ம் வரும். இவற்றுள்

காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கிகாதலிக்குரைத்தலுந் தலைவிமணப்பொருட்டாகவணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டலுமாகிய விரண்டும் வரைவுணர்த்தற்குரிய. பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குரைத்தலாகிய வொன்றும் வரைவெதிர்வுணர்த்தற்குரித்து. தலைவி நற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளலு முவகையாற்றா துளத்தொடுகிளத்தலுந் தலைவனைப் பாங்கி வாழ்த்தலுமாகிய மூன்றும் வரைவறிந்துமகிழ்தற்குரிய. தலைமகளணங்கைப் பராநிலைகண்டோர் மகிழ்தலாகிய வொன்றும் பரவல்கண்டுவத்தற் குரித்து. (௪)

௧௭௫. முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்
கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே.

இ-ம். முன்னிலைமொழியு முன்னிலைப்புறமொழியுமென விருவகைத்தாகு மறத்தொடுநிலை. எ-று. மொழியென்பதனை முன்னும்பின்னுங் கூட்டுக. ()

௧௭௬. கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தற் காரணங் கூறலுந் தலைவன்
றெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
யெய்தக் கூறலு மிகந்தமை யியம்பலு
மியற்பழித் துரைத்துழி யியற்பட மொழிதலுந்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலு
மில்வயிற் செறித்தமை சொல்லலுஞ் செவிலி
கனையிரு ளவன்வரக் கண்டமை கூறலு
மெனமுறை யியம்பிய வேழும் புனையிழைத்
தலைவி யறத்தொடு நிலைதனக் குரிய.

இ-ம். கையறுதோழி கண்ணீர்துடைத்துழிக் கலுழ்தற்குக் காரணங் கூறுதன் முதலாகச் செவிலி கனையிருளவன்வரக்கண்டு கூறலீறாகச் சொல்லப்பட்ட வேழுந் தலைமகளறத்தொடு நிலைக்குரிய கிளவியாம். எ-று.

கையறுதோழிகண்ணீர்துடைத்தற்குச் செ-ள் "அயிரார்திரைவந்துன்வண்டலம்பாவையளித்தனவோ - செயிராதவன்னைசெயிர்த்தனளோசெறிநாரைதிண்போர்-வயிராவரலும்வயற் றஞ்சைவாணன்றென்மாறையிலென்-னுயிராகியதையனீகலுழ்வானென்னுளங்குழைந்தே." எ-ம், தலைமகள்கலுழ்தற்குக்காரணங்கூறற்குச் செ-ள் "தாரணிகொண்டவிருதோளொருவர்தனித்துழியென்-வாரணிகொங்கைமணந்துசென்றார்தஞ்சைவாணனென்னார் - தேரணிவென்றசெழும்புகர்வேல்விழித்தேனினஞ்சூழ்-காரணிமென்குழலாயதுவேகலுழ்காரணமே." எ-ம், தலைமகன்றெய்வங்காட்டித்தெளிந்தமையெய்தக்கூறற்குச் செ-ள் "துதித்தேனணங்கொடுசூளுமுற்றேனென்றசொல்லைமெய்யா - மதித்தேனயர்ந்துமதியிலியேன்றஞ்சைவாணன்வையை-நதித்தேனினம்புணர்மாதர்கண்போலநகைக்குநெய்தற்-பொதித்தேனுகர்ந்தகலுங்கழிக்கானற்புலம்பர்வந்தே." எ-ம், தலைமகனிகந்தமையியம்பற்குச் செ-ள் "வரியோலவண்டலைதண்டலைசூழ்தஞ்சைவாணன்வண்மைக்-குரியோனுயர்வையையொண்டுறைவாயுரவோர்தெளி

த்துங்-கரியோர்பிறரில்லையென்றகன்றாரினிக்காரிகையாய்- பெரியோர்மொழிபி
றழாரென்றுதேறுதல்பேதைமையே.'' எ-ம் இது தெளிவுடைவிலங்கல். அது
கேட்டபாங்கி யியற்பழித்துரைத்தற்குச் செ-ள் ''மழவேதுறந்துமறந்தவர்போ
ற்றஞ்சைவாணன்வென்றி - முழவேயமுந்நீர்முழங்கிருங்கானன் முழுதுலகுந் -
தொழவேதகுந்தெய்வநோக்கிச்செல்லேனென்றுசொல்லியுநீ - யழவேதுறந்தன
ரானல்லர்நல்லரவ்வாடவரே.'' எ-ம், தலைமகளியற்கைமொழிதற்குச் செ-ள்
''மாகப்புயன்மண்ணில்வந்தனவாணன்றென்மாறைமுந்நீர் - நாகப்புகர்ச்செய்ய
புள்ளிப்பைங்கான்ஞெண்டுந கிளர்ந்தண் -பூகக்குளிர்நிழற்பேடையொடாடும்புல
ம்பனின்று-ராகக்கருதினல்லாயினியாரினியாருளரே.'' எ-ம், தெய்வம்பொறை
கொளச்செல்குவமென்றற்குச் செ-ள் ''மாதங்கநல்குங்கைவாணன்றென்மா
றைவையைத்துறைவ-ரேதப்பயந்திலரெங்கட்குநீயெய்ம்மிகந்தசனற் - கோதம்ப
டாதிகொடுந்தெய்வமேயென்றுகூர்பலிதூய்ப் - பாதம்பரவநல்லாயிருவேமும்ப
டர்குவமே.'' எ-ம், இல்வயிற்செறித்தமை சொல்லற்குச் செ-ள் ''தன்போ
லுலகம்புரக்கின்றவாணன்றமிழ்த்தஞ்சையார்- மன்போலெவர்க்கும்வழங்கியுண்
ணுகவர்வைத்திழக்கும் - பொன்போலிறுகப்பொதிந்துகொண்டாளன்னைபூவை
யென்மேல்- வன்போதியமடவாரலர்தூற்றியவாறுகண்டே.'' எ-ம், செவிலி
கனையிருளவன்வரக்கண்டமையியம்பற்குச் செ-ள் ''வெங்கார்முகவெம்புருவமி
ன்னேயன்னமேலொருநா - ளெங்காதலரிருளெய்தல்கண்டாளிந்தவேழுலகு-
மங்காமல்வந்தருள்வாணன்றென்மாறைவண்டானமஞ்சச்- சங்காழிகொண்டெ
றியுங்கண்டல்வேலியந்தண்டுறைக்கே.'' எ-ம் வரும்.

இவற்றுள் கலுழ்தற்குக் காரணங்கூறலாகிய வொன்று மொழித்து ஏனைய
வெல்லாம் பாங்கி வினவா தொழியவுந் தலைமகளறத்தொடு நிலைக்குரியவாமா
றறிந்து கொள்க. (௬)

௧௭௭. எறிவளை வேற்றுமைக் கேது வினவினும்
வெறி விலக்கியவழி வினவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேது வாகத் தலைப்பா டியம்பும்.

இ-ம். செவிலி தலைமகள் வேற்றுமைக்காரணங் கேட்பினுந் தான்
வெறிவிலக்கியவிடத்துக் காரணங் கேட்பினும் பாங்கி பூவும் புனலுங் களி
றுமிவை காரணமாகப் புணர்ச்சியினை யவட்கறிவிக்கும். எ-று.

செவிலி தலைமகடன்வேற்றுமைகண்டு பாங்கியைவினாதற்குச் செ-ள்
''பொன்னுற்றகொங்கையுமுத்துற்றகண்ணுமிப்போதுகண்டேன் - பன்னு
ற்றசொல்லுமின்பாலுங்கொள்ளாள்பதினாலுலகு-மன்னுற்றவண்புகழ்வாண
ன்றென்மாறையென்மானனையாட் - கென்னுற்றதென்றறியேன்புனங்காவ
லிருந்தபின்னே.'' எ-ம், வெறிவிலக்கற்குச் செ-ள் ''அறியாமையினெ
ன்றுகேட்கலுற்றேனும்மையாவதொன்றுங்-குறியாமறியுயிர்கொள்ளவென்
றோகுருதிப்பலிகூர்-வெறியாலிவளுயிர்மீட்கவென்றோவென்றிவேல்வலத்
தீர்-சிறியார்மனையில்வந்தீர்தஞ்சைவாணன்சிலம்பினின்றே.'' எ-ம், செ
விலி தோழியைவினாதற்குச் செ-ள் ''மண்குன்றவந்தகலியினைமாற்றியவா
ணன்றஞ்சை - யொண்குன்றமங்கையர்முன்னர்மின்னேயுமையாண்மகனை
ப்-பண்குன்றவென்றசொல்வள்ளிதன்கோனைப்பைந்தாரயிலால்- வெண்கு

ன்றெறிந்தசெவ்வேலையிவ்வாறென்விளம்பியதே." எ-ம், தோழியுந்தருபணர்ச்சியால் அறத்தொடுநிற்றற்குச் செ-ள் "போருறைதிக்கணைபோலுநின்கண்கண்டுபோதவஞ்சி - நீருறைநீலமுநீயுநண்பாகென்றுநின்மகட்கோர் - தாருறைதோளவர்தந்தனர்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ் - காருறைசோலையில்யாம்விளையாடியகாலையிலே." எ-ம், "தந்தார்க்கேயாமற்றடமென்றோளின்னநாள் - வந்தார்க்கேயாமென்பார்வாய்காண்பாம் - வந்தார்க்கே - தாவாவிளமணற்றண்கழிக்கானல்வாய்ப் - பூவாவிளஞாழற்போது." எ-ம், நொதுமலர்வரைவின்க ணறத்தொடுநின்றதாமிது. புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றற்குச் செ-ள் "ஒழிதோற்றியசொல்லலுன்மகளோதிக் குடைந்தகொண்டல் - பொழிதோற்றிரளுந்திவந்தசெந்நீருந்திப்பொற்பினுக்கோர் - சுழிதோற்றிடும்பசைதீர்க்கின்றபோதொருதோன்றலுமவ் - வழிதோற்றிவந்தெடுத்தான்றஞ்சைவாணன்றென்வையையிலே." எ-ம், களிறுதருபுணர்ச்சியா னறத்தொடுநிற்றற்குச் செ-ள் "மண்ணலையாமல்வளர்க்கின்றவாணன்றென்மாறைவெற்பி - லண்ணலையாயிழைபாகனென்றஞ்சினமஞ்சனந்தோய் - கண்ணலைநீரிடப்பாகமுமேல்வந்தகைக்களிற்றின் - புண்ணலைநீர்வலப்பாகமுந்தோயப்பொருவதன்றே" எ-ம், "சுள்ளிச்சுனைநீலம்சோர்பாலிகைச்செயலை - யள்ளியளந்துமேலாய்ந்து - தெள்ளி - யிதனாற்கடியொடுங்காவீர்ங்கடாவியானை - யுதனாற்கடிந்தானுளன்." எ-ம் வரும். இம்மூன்றினுளொன்றானறத்தோடு நிற்கவமையுமெனக் கொள்க. (எ)

களஅ. மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினவுழி
முன்னிலை மொழியான் மொழியுஞ் செவிலி.

இ-ம். தலைமகள் வேறுபாடுகண்டு நற்றாய் செவிலியை வினவியவிடத்து முன்னிலை மொழியானே சொல்லுஞ் செவிலி. எ-று.

தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினாதற்குச் செ-ள் "தண்டார்தழுவியவேலண்ணல்வாணன்றென்றஞ்சைவெற்பில் - வண்டார்குழலிதன்வண்ணமுங்கண்ணும்வடிவுமன்றாட் - கண்டாரறியும்படியனவேயல்லகாரணமொன் - றுண்டாருயிரனையாயயிராமலுரையெனக்கே" எ-ம், செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியா னறத்தொடு நிற்றற்குச் செ-ள் "மலைவந்ததோவெனும்வாரணவாணன்றென்மாறைமதிச் - சிலைவந்ததோவெனுநன்னுதலாயொருசெல்வரிங்கோர் - கலைவந்ததோவெனவந்துவினவிநங்காரிகைக்கு - முலைவந்ததோவில்லையோவென்னுநாளின்முயங்கினரே." எ-ம் வரும். நற்றாய் குறிப்பின்றியறத்தொடுநிற்கப் பெறுளென்றமையாற் செய்யுளில்லை. (அ)

களகூ. என்றுட னியம்பிய வெல்லாங் களவிய
னின்றுழி யறத்தொடு நிற்றலின் விரியே.

இ-ம். கையறுதோழி கண்ணீர்துடைத்துழி தலைமகள் கலுழ்தற்குக் காரணங்கூறன்முதலாக தலைமகள் வேறுபாடுகண்டு நற்றாய்வினவியவழிச் செவிலிமுன்னிலைமொழியான் மொழிதலீறாகச் சொல்லப்பட்ட வெல்லாங் களவினொழுக்கம் வெளிப்படாது நின்றவிடத்து அறத்தொடுநிற்றலின் விரியாம், எ-று. (கூ)

கஅ0. போக்கே கற்பொடு புணர்ந்த களவை
மீட்சி யென்றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே.

இ-ம். போக்குமுதலாக மீட்சியீறாகச் சொல்லப்பட்ட மூன்றுங் களவுவெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகையாம். எ-று. (க0)

கஅக போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்த லேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே.

இ-ம். போக்கறிவுறுத்தன் முதலாகத் தேற்றலீறாக வெட்டுவகையினையுடைத்தா மன்பமைந்தவுடன்போக்கு. எ-று. (கக)

கஅ௨. பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தலு
மாங்கவன் மறுத்தலு மவளுடன் படுத்தலுந்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலுந் தலைவி
நாணழி விரங்கலுங் கற்புயேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலுந் தலைவி
யொருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்தியல் புரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலு
மவன்சுரத் துய்த்தலு மசைவறிந் திருத்தலு
முவந்தலர் சூட்டி யுண்மகிழ்ந் துரைத்தலுங்
கண்டோ ரயிர்த்தலுங் காதலின் விலக்கலுந்
தன்பதி யணிமை சாற்றலுந் தலைவன்
றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தலு
மென்றிவை யொன்பதிற் றிருவகைக் கிளவியு
மொன்றிய வன்பி னுடன்போக்கு விரியே.

இ-ம். பாங்கி தலைவற் குடன்போக்குரைத்தன் முதலாகத் தலைவன்றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தலீறாகச் சொல்லப்பட்டபதினெட்டு வகையினையுடையன வுடன்போக்கு விரியாம். எ-று.

பாங்கி தலைவற் குடன்போக்குரைத்தற்குச் செ-ள் "மைந்நீர்நெடுங்கண்மடந்தையுடன்றஞ்சைவாணன்வெற்பா-செந்நீர்விழவணிநின்னகர்க்கே

கொண்டுசேர்ந்தருண்மற் - றிந்நீர்மையல்லதொராறுமின்றாலிங்கெம்மைய ரென்றான்-மூந்நீருலகுங்கொள்ளார்விலையாகமுலையினுக்கே.” எ-ம், தலைவனுடன்போக்கு மறுத்தற்குச் செ-ள் “பாரோமுலையிலையென்பர்நின்கேளிரென்பல்கிளைவா-ழூரோவணியதன்றெண்டொடியாய்விந்தையுண்கண் களோ-தாரோவளரும்புயன்றஞ்சைவாணன்றரியலர்போல்- யாரோதனிநடப்பாரருங்கானமிவளுடனே.” எ-ம், பாங்கிதலைமகனையுடன்படுத்தற்குச் செ-ள் “சுருளேய்குழலுஞ்சுணங்கேய்முலையுஞ்சுமந்துகற்புப் - பொருளேயெனச்சுரம்போதுமப்போதுபுகழ்வெயிலான்- மருளேய்கலியிருண்மாற்றியவாணன்றென்மாறையினின் - னருளேயொழியவுண்டோநிழலாவதணங்கினுக்கே.” எ-ம், தலைவன் போக்குடன்படுதற்குச் செ-ள் “நஞ்சோவழலோவெனுஞ்சுரமோசெல்லநாடியவென் - னெஞ்சோகொடியதுநேரிழையாய்நிழன்மாமதியோ - மஞ்சோதவழ்மதில்சூழ்தஞ்சைவாணன்வரையிலவம்-பஞ்சோவனிச்சங்கொலோவெனுஞ்சீறடிப்பைந்தொடிக்கே” எ-ம், பாங்கி தலைவிக் குடன்போக்குணர்த்தற்குச் செ-ள் “பாலன்னபாயற்பகையெனுஞ்சீறடிபட்டுருவும் - வேலன்னகூர்ங்கன்மிகிக்குங்கொலென்றனர்மேதினிக்கு-மாலன்னவாணன்றென்மாறைநன்னாட்டுவயலுகளுஞ்- சேலன்னநீள்விழியாய்தெரியாதன்பர்சிந்தனையே.” எ-ம், தலைவிநாணழிவிரங்கற்குச் செ-ள் “மறலாரைவேலங்கைவாணனைமாறையர்மன்னனைத்தம்-முறவாகவெண்ணியுறாதவர்போலுயிரோம்பியென்றுந் - துறவாதநாணந்துறப்பதுவேண்டலிற்றொல்லுலகிற் - பிறவாதொழிகைநன்றேயொருகாலமும்பெண்பிறப்பே.” எ-ம், கற்புமேம்பாடுபாராட்டற்குச் செ-ள் “செந்நாண்மலரிற்றிருவன்னகோலத்தெரிவையர்க்கு - மெய்ந்நாணுயிரினுமிக்கதென்றால்விரவாவரசர்-தந்நாண்முறைமைதவிர்த்தருள்வாணன்றமிழ்த்தஞ்சைநாட்-டந்நாணமுமடவாய்கற்புநோக்கவழகிதன்றே” எ-ம், தலைவியொருப்பட்டொழுகற்குச் செ-ள் “பலரேசுமந்தவுரைகளுந்தாயர்தம்பார்வைகளுஞ்- சிலரேசுமந்துதிரியவல்லார்செய்யசெண்பகநாண்-மலரேசுமந்தவயற்றஞ்சைவாணனைவாழ்தலர்போ - லலரேசுமந்துசுமந்திந்தவூர்நின்றழுங்குகவே.” எ-ம், பாங்கிசுரத்தியல்புரைத்துழிச் சொல்லற்குச் செ-ள் “செல்லிற்கொடியகளிற்றண்ணல்வாணன்றென்மாறைமன்னன் - வில்லிற்கொடியபுருவமின்னேயென்விளம்புதிநீ - சொல்லிற்கொடியநம்மன்னையைப்போல்பவர்சூழ்ந்திருக்கு - மில்லிற்கொடியகொல்லோசெல்லுநாட்டவ்விருஞ்சுரமே.” எ-ம், “கடக்கருங்கானத்துக்காளைபின்னாளை-நடக்கவும்வல்லையோவென்றி-சுடர்த்தோடி - பெற்றாளொருவன்பெருங்குதிரையன்னிலையே-கற்றாமஃதாருமாறு” எ-ம், பாங்கிதலைமகற்குக் கையடைகொடுத்தற்குச் செ-ள் “இவளேநின்னலதிலளேயாயுங் - குவளையுண்கணிவளலளேயாயினு-மாயிடையோனே-மாமலைநாடமறவாதீமே.” எ-ம். பாங்கிவைகிருள்விடுத்தற்குச் செ-ள் “பொழிநானமன்றலம்பூங்குழனீங்கள்புணர்ந்துசெல்லும்-வழிநாடிநும்பின்வருகுவல்யான்றஞ்சைவாணன்வையைச் - சுழிநாணிமுந்திநின்றோல்கிளைக்கேற்பனசொல்லியின்று-மொழிநாவடங்கமொழிந்தயலாரைமுகங்கவிழ்த்தே.” எ-ம், தலைமகன் சுரத்துய்த்தற்குச் செ-ள் “தளிபோற்கொடைபயில்சந்திரவாணன்றமிழ்த்தஞ்சையா- னளிபோற்குளிர்ந்தவிளமரக்காவுமவன்புகழி- னொளிபோல்விளங்கியவொண்மணல்யாறுமுவந்துகண்டு - நளிபோதவிழ்குழலாய் மெல்லமெல்லநடந்தருளே.” எ-ம், தலைமகன் றலைமகளை யசைவறிந்திருந்தற்குச் செ-ள் “வரமாமைவேற்படைவாணன்றென்மாறைவணங்கலர்கள் - புரமானவல்லழல்

பொங்குவெங்கானிற்பொருந்திய்கூ - ரமானகல்லுன்னடிமலராற்றலவா தலினுஞ்-சுரமாறுமெல்லைநல்லாயிருப்பாமிந்த்சோலையிலே" எ-ம், தலைமகன்றலைமகளை யுவந்தலர்சூட்டியுண்மகிழ்ந் துரைத்தற்குச் செ-ள் "அடிமலர்போற்றவும்போற்றியன்பாலிவளாய்முடிக்கியான் - கடிமலர்சூட்டவுங்காட்டியதாற்கள்வர்காய்ந்தெறியுந் - துடிமலர்சீர்க்கெதிர்கூகையிரட்டுஞ்சுரத்திடையோர் - வடிமலர்வேற்படையான்வாணன்மாறையென்மாதவமே." எ-ம், கண்டோரயிர்த்தற்குச் செ-ள் "சையத்திரள்புயன்சந்திரவாணன்றனிபுரக்கும்-வையத்துறைகின்றமானிடரோவன்றிவானவரோ-ஐயப்படுமழல்வெஞ்சுரத்தூடுநடந்தவரென் - றையப்படுவதல்லாலுண்மைசாலவறிவரிதே." எ-ம், கண்டோர்காதலின்விலக்கற்குச் செ-ள் "மாலுந்திருவுமெனவருவீர்தஞ்சைவாணன்றெவ்வூர் - போலுஞ்சுரமினிப்போகவொண்ணாதுபொருப்படைந்தா-னாலும்புரவியருக்கனிக்கங்குலடற்கடமான் - பாலுந்தசையுமுண்டேதங்குவீரெங்கள்பாடியிலே." எ-ம், தம்பதியணிமைசாற்றற்குச் செ-ள் "தொடங்கும்பிறைநுதற்றோகையுநீயுமுன்றோன்றுகின்ற-கடங்குன்றிரண்டுங்கடந்துசென்றாற்கமலத்தடமுங் - கிடங்கும்புரிசையுஞ்சூழ்ந்தெதிர்தோன்றுங்கிளைத்தபைந்தார்த் - தடங்குங்குமநெடுந்தோள்வாணன்மாறையுந்தஞ்சையுமே." எ-ம், தலைவன்றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தற்குச் செ-ள் "சந்தனந்தோய்ந்துதயங்குமுத்தாரந்தரித்துவிம்மு-நந்தனந்தாங்கிநுடங்கிடைபோலநடந்திங்ஙனே - நொந்தனங்காலென்றுநோவல்பொன்னேயொருநோயுமின்றி - வந்தனங்காணிதுகாண்வாணன்மாறைவளநகரே." எ-ம் வரும். இவற்றுள் பாங்கி தலைமகற்குடன்போக்குணர்த்தலுந் தலைவிக்குடன்போக் குணர்த்தலுமாகிய விரண்டும் போக்கறிவுறுத்தற்குரிய. தலைமகன் மறுத்தலுந் தலைவிநாணழிவிரங்கலுமாகிய விரண்டும் போக்குடன்படாமைக்குரிய. பாங்கி தலைவனையுடன்படுத்தலுந் தலைவி கற்புமேம்பாடு கூறலுமாகிய விரண்டும் போக்குடன்படுத்தற்குரிய. தலைவன்போக்குடன்படுதலுந் தலைவியொருப்பட்டெழுதலும் பாங்கிசுரத்தியல்புரைத்தழிச் சொல்லலுமாகிய மூன்றும் போக்குடன்படுதற்குரிய. பாங்கிகையடைகொடுத்தலும் வைகிருள்விடுத்தலும் தலைமகன்றலைமகளைச் சுரத்துய்த்தலுமாகிய மூன்றும் போக்கற்குரிய. தலைமகன் றலைவியையசைவறிந்திருத்தலுங் கண்டோர்காதலின் விலக்கலுமாகிய விரண்டும் விலக்கற்குரிய. தலைவன் றலைவியை யுவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தலுங் கண்டோரயிர்த்தலுமாகிய விரண்டும் புகழ்தற்குரிய. கண்டோர் தம்பதியணிமை சாற்றலுந் தலைவன் றன்பதியடைந்தமை தலைவிக் குணர்த்தலுமாகிய விரண்டுந் தேற்றற்குரிய. (கஉ)

கஅ௫. செவிலி புலம்ப னற்றாய் புலம்பல்
கவன்மனை மருட்சி கண்டோ ரிரக்கஞ்
செவிலி பின்றேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கௌவையை வகைத்தே.

இ-ம். செவிலி புலம்பன் முதலாகச் செவிலிபின்றேடிச் சேறலீறாக வைந்துங் கற்பொடுபுணர்ந்த கௌவை. எ-று. (கங)

கஅச. வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
யினைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலுந்
தன்னறி வின்மை தன்னைநொந் துரைத்தலுந்
தெய்வம் வாழ்த்தலு மிவ்வொரு மூன்று
மிலங்கிழைச் செவிலி புலம்புதற் குரிய.

இ-ம். வினவியபாங்கியி னுணர்ந்தகாலை யினையலென்போர்க் கெதிரழிந்துமொழிதன் முதலாக தெய்வம்வாழ்த்தலீறாகச் சொல்லிய மூன்றுந் தலைமகள் செவிலித்தாய் புலம்பற்குரியவாம். எ-று.

செவிலி பாங்கியை வினாதற்குச் செ-ள் "நலம்புனையாயமுங்கீயுநற்றாயொடுநானுநற்பொற்-சிலம்புயர்சோலையுஞ் சிற்றிலும்பேரிலுந்தெண்டிரைமேல்-வலம்புரியூர்வயல்சூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்-புலம்புறமாதரெங்கேமகளோதனிப்போயினளே." எ-ம், பாங்கி செவிலிக்குணர்த்தற்குச் செ-ள் "வெறுத்தாரொறுத்துமைமேனுநங்கேளிர்விழைதலின்றி-மறுத்தாரவற்குமணமதனாற்றஞ்சைவாணர்பிரான்-கறுத்தார்புரத்தூடந்தனள்காளைபின்காமர்கற்பாற்-பொறுத்தாளழற்சுரந்தன்னையன்னாய்நின்பொலங்கொடியே" எ-ம், "செவ்வாய்க்கரியகண்சீரினாற்கேளாதுங்-கவ்வையாற்காணாதுமார்றுமை-மெய்வாய்த்தா-ரத்தகையவாய்மொழியுந்தண்கயத்துநீலமு-மொத்தொளிர்ந்தாளென்பேதையூர்ந்து." எ-ம், பாங்கியினுணர்ந்தசெவிலி தேற்றுவோர்க்கெதிரழிந்து மொழிதற்குச் செ-ள் "மாறுவளவயல்சூழ்தஞ்சைவாணன்றென்மாறையென்க-ணாறுவருந்துயராற்றுகின்றீரறிவேகொளுத்தி-யூறுவனகடிந்தென்முலையூறமிர்தூட்டியின்சொற்-கூறுவளர்த்ததற்கோவென்னைநீத்ததென்கோல்வளையே." எ-ம், செவிலி தன்னறிவின்மை தன்னைநொந்துரைத்தற்குச் செ-ள் "வழியாவரும்பெருநீர்த்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்-கழியாதவன்புடைக்காளைபின்னாளைக்கலந்துகொண்டல்-பொழியாதவெஞ்சுரம்போகுவல்யானென்றுபோங்குறிப்பா-லொழியாதென்முன்புசொன்னாள்பேதையேனுணர்ந்திலனே." எ-ம், "முலைக்கண்ணுமுத்துமுழுமெய்யும்புல்லு-மிலக்கணம்யாதுமறியேன்-கலைக்கணம்-வேங்கைவெரூஉநெறிசெல்லியல்போலுமென்-பூம்பாவைசெய்தகுறி." எ-ம், செவிலி தெய்வம்வாழ்த்தல் 'இணங்கிப்புவனத்தெவருமில்லாவென்னிளங்கொடியா-லுணங்கிக்கழிதலொழியவென்பால்வரவுன்னையன்பால்-வணங்கிப்பலமுறைவாழ்த்துகின்றேன்றஞ்சைவாணன்றெவ்வை-யணங்கித்திரள்புயத்தான்மலயாசலத்தாரணங்கே." எ-ம் வரும். (கச)

கஅரு. செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையில்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடு
மயலார் தம்மொடும் பயிலிடந் தம்மொடுந்
தாங்கல ளாகிச் சாற்றிய வெல்லாம்
பூங்கொடி நற்றாய் புலம்பற் குரிய.

கூ

இ-ம். செவிலியறத்தொடுநிற்றலிற் கவலையிற்பாங்கி தன்னொடுபுலம்பன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாந் தலைமகணற்றாய் புலம்பற்குரியவாம். செவிலி நற்றாய்க்கறத்தொடுநிற்றற்குச் செ-ள் "சகநல்கவந்தருள்சந்திரவாணன்றென்றஞ்சைசநல்லாய் - முகநல்கிநல்கமுலைகொடுத்தாரின்முத்தங்கொடுத்தார்-மிகநல்லரென்பதுமன்பதைதேறவிடலைபின்னே- மகநல்குமந்தியங்கானடந்தாளுன்மடந்தையின்றே" எ-ம், நற்றாய் பாங்கிதன்னொடுபுலம்பற்குச் செ-ள் "முன்னேயிதனைமொழிந்தனையேனுந்தைமுந்தைமணம்-பின்னேய்குழலிபெறாளல்லளேபிறழாதெவர்க்குந் - தன்னேயம்வைத்தருளுந்தஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பிற்- பொன்னேயனையநல்லாயவமேசுரம்போக்கினையே" எ-ம், அதுகேட்ட பாங்கி யழுங்கல்கண்டு நற்றாய் புலம்பற்குச் செ-ள் "இல்லுங்கழங்காடிடங்களுநோக்கியிரங்கல்வம்பும்- வல்லும்பொருங்கொங்கைமங்கைநல்ல ய்தஞ்சைவாணனொன்னார்- புல்லுந்துணைவியர்போல்வினையேன்பெற்றபூவையன்னாள் - செல்லுஞ்சுரத்தழல்னுன்கண்ணீரொற்றெறுகின்றதே." எ-ம், நற்றாய் பாங்கியர்தம்மொடு புலம்பற்குச் செ-ள் "நேயம்புணைதுணையாகவெங்கானகநீந்தலெண்ணி-யாயம்புலம்பவகன்றனளோகல்லகங்குழைய-மாயம்புகலொருகாளைபின்வாணன்றென்மாறையன்னீர்- சேயம்புயமலர்போலடிநோவவென்சில்வளையே." எ-ம், நற்றாயயலார்தம்மொடு புலம்பற்குச் செ-ள் "மேருள்வரங்கிடந்தென்போல்வருந்திமிகவுமெய்ந்நொந் - தீன்றவர்துன்பமெய்துவரோவிமையோருலகந்- தானணநீடுமதிற்றஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பின்- மானார்விழியனையாள்விளையாடியவண்டல்கண்டே" எ-ம், நற்றாய்பயிலிடந்தன்னொடு புலம்பற்குச் செ-ள் "செயலைத்தருவின்றிருநிழலேபெருஞ்சிற்றில்லமே-வயலைக்கொடிநொச்சிமண்டபமேதஞ்சைவாணனொன்னா-ரியலைத்தனித்தனிதந்தனளேநமக்கின்றிதன்றோ- சயலைப்பொருதகண்ணாண்மேலும்வாழ்விக்குங்கட்டளையே." எ-ம், "கொன்றாய்குருந்தேசொடிமுல்லாய்வாடிலீர்-நின்றீர் அறிந்தநெடுங்கண்ணாள்-சென்றாளுக் - கென்னுரைத்தீர்க்கென்னுரைத்தாட்கென்னுரைத்தீர்க்கென்னுரைத்தாண்- மின்னுரைத்தபூண்முலையாள்விட்டு." எ-ம் வரும். (கரு)

கஅசு. நிமித்தம் போற்றலுஞ் சுரந்தணி வித்தலுந்
தன்மகண் மென்மைத் தன்மைக் கிரங்கலு
மிளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலு
மச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலு
மௌவிவை யைந்து மனைமருட்சிக் குரிய.

இ-ம். நிமித்தம்போற்றன் முதலாக வச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கலீறாகச் சொல்லப்பட்ட வைந்து மன்னைமருட்சிக்குரியவாம். எ-று.

அன்னையெனினும் நற்றாயெனினுமொக்கும். நிமித்தம்போற்றற்குச் செ-ள் "வடியேய்புகர்முகவாள்வலவாணன்றென்மாறையுள்யா - னடியேதொழுந்தெய்வமாகநிற்பேணியரும்பலியிப் - படியேதருகுவலென்றுமின்னேயிப்பதிபுவகைக் - கொடியேவரக்கரைநீகொடியேன்பெற்றகொம்பினையே." எ-ம், நற்றாய்சுரந்தணிவித்தற்குச் செ-ள் "வெஞ்சுரநாடுவியன்சுரலோகமும்வெங்கடுங்கா - னஞ்சுரதாருவனங்களுமாகவகிற்புகைபோ

ன்-மஞ்சரவாடகமாமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற் - பஞ்சரமாகுமொழிச்சுருளோதியென்பைந்தொடிக்கே.'' எ-ம். நற்றாய் தன்மகண் மென்மைத்தன்மைக்கிரங்கற்குச் செ-ள் "அரக்காம்பனுறுர்வாயம்மருங்குற்கென்ஞே-பரற்கானமாற்றினகொல்லோ-வரக்கார்ந்த-பஞ்சிகொண்டூட்டினும்பையெனப்பையெனவென்-றஞ்சிப்பின்வாங்குமடி'' எ-ம். நற்றாய் தன்மகளிளமைத்தன்மைக் கிரங்கற்குச் செ-ள் "இரும்பாமனங்கொண்டவாறென்னநீதன்னையேத்தியென்றும் - வரும்பாவலர்க்கருள்வாணன்றென்மாறைவளவயலிற்- கரும்பார்மொழியாயழலென்றுகண்ணீர் துடைத்தணைத்துன்-னரும்பாமுலைசெய்யவாய்ப்பசும்பாவைக்களிக்குமின்னே.'' எ-ம், நற்றாய் தன்மகளச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கற்குச் செ-ள் 'நாண்மாதவிமலர்நாறிருங்கூந்தனடந்தவழிக் - கோண்மாகுமிறுங்கொடுங்குரல்கேட்டொறுங்கூர்ங்கணையால்-வாண்மாமுனைவென்றவாணன்றென்மாறைமணிவரையேய்த்- தோண்மாவெருவுங்கொல்லோவென்றெனுருயிர்சோர்கின்றதே.'' எ-ம் வரும். (கசு)

கஅஎ. ஆயமுந் தாயு மழுங்கக் கண்டோர்
காதலி னிரங்கல் கண்டோ ரிரக்கம்.

இ-ம். கண்டோரிரக்கமுணர்-ற்று. தலைமகளாயத்தாயு நற்றாயு மிரங்குமாறு கண்டவளவினு லிரங்குதல் கண்டோரிரக்கம். எ-று.

இதற்குச் செ-ள் "நொந்துங்கலுழ்ந்துந்துணைவியசாற்றலர்நோக்கொடின்சொற்-றந்துங்கவையுந்தணந்துசென்றாளெனத்தாள்பணியார்-மைந்துங்கதமுங்கடிந்தருள்வாணன்றென்மாறையன்னாள்-பந்துங்கழங்குமெல்லாங்கண்டுவாடும்பயந்தவளே.'' எ-ம் வரும். (கஎ)

கஅஅ. ஆற்றாத் தாயைத் தேற்றலு மாற்றிடை
முக்கோற் பகவரை வினாதலு மிக்கோ
ரேதுக் காட்டலு மெயிற்றியொடு புலம்பலுங்
குரவொடு புலம்பலுஞ் சுவடுகண் டிரங்கலுங்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலுமவர்
புலம்ப றேற்றலும் புதல்வியைக் காணாது
கவலைகூர் தலுமெனு மிவையொன் பானுஞ்
செவிலிபின் றேடிச் சேறற் குரிய.

இ-ம். ஆற்றாத்தாயைத் தேற்றன் முதலாகப் புதல்வியைக் காணாது கவலைகூர்தலீறாகச் சொல்லப்பட்ட வொன்பதுஞ் செவிலிபின்றேடிச் சேறற்குரியவாம். எ-று.

செவிலி யாற்றாத்தாயைத் தேற்றற்குச் செ-ள் "நன்றேயிதென்றுமுகமுகநோக்கிநகைநகையா - மன்றேபலர்சொல்லுமாதர்முன்னேதஞ்சைவாணன்றொல்சீர்-சென்றேபரந்ததிசைகளெல்லாஞ்சென்றுதேர்ந்தணங்கையின்றேதருவனன்னே வருந்தாதிங்கிருந்தருளே.'' எ-ம், ஆற்றிடைமுக்

கோற்பகவரைவிஞைதற்குச் செ-ள் "ஒருவெண்குடையிருநிழன்முக்கோல்கொண்டொழுக்கத்திரு-லருவெங்களரியையுந்தாறுசெல்வீரருளீரெழுபார்-மருவெண்டிசைபுகழ்வாணன்றென்மாறையென்வஞ்சியன்னாள் - பொருவெஞ்சுடரிலைவேலொருகாளைபின்போயினளே." எ-ம், மிக்கோரேதுக்காட்டற்குச் செ-ள் 'இயங்காவனமென்மகளொருகாளைபின்னேகினளென்-றுயங்காதொழியீர்துலகியல்பாலுலவும்புயரேய்-வயங்காடகமதில்சூழ்தஞ்சைவாணன்மணங்கமழ்தார்ப்-புயங்காதல்கொண்டணைந்தாளையனார்தந்த பூமகளே." எ-ம், செவிலியெயிற்றியொடு புலம்பற்குச் செ-ள் "செருமகளேயும்புயத்தயலான்பின்செலவிடுத்தென்-னொருமகளேயென்றுனையயிர்த்தேன்புனையோவியம்போல் - வருமகளேதஞ்சைவாணனைன்னார்துன்னும்வன்சுரத்தோ-ரருமகளேயுரையாயவள்போனவதரெனக்கே." எ-ம், செவிலி குரவொடு புலம்பற்குச் செ-ள் "இரவேய்குழலியிவ்வேதிலன்பின்செல்லலென்றுசொல்லாக் - குரவேயறவுங்கொடியையைகண்டாய்கொடிகோகனகந்-தரவேயெனவந்தசந்திரவாணன்றரியலர்போஞ்- சுரவேயழல்வழியேதனிப்போயவென்றூதையையே." எ-ம், "தான்றுயாக்கோங்கந்தளர்ந்துமுலைகொடுப்ப-வீன்றாய்நீபாவையிளங்குரவே-யீன்றாண்- மொழிகாட்டாயயினுமுள்ளெயிற்றாள்சென்ற - வழிகாட்டாயீதென்றுவந்து." எ-ம், செவிலிசுவடுகண்டிரங்கற்குச் செ-ள் "தொடுசிலைக்கானவரோடியவேற்றுச்சுவடுவையே-யடுசிலைக்காளையடியவையேயறிந்தோரறிய- விடுசிலைப்பார்புரக்குந்தஞ்சைவாணனிறைக்குருகப் - படுசிலைப்பாவைபதமிவையேவண்டுடைடுகவே." எ-ம், செவிலி கலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டற்குச் செ-ள் "யானகம்போதவருந்தநும்போல்வனப்பெய்திவெய்ய-கானகம்போயினர்கண்டனிரோகற்பகாடவிசூழ் - வானகம்போர்பயில்வாணவர்க்கீந்தருள்வாணன்றஞ்சைத் - தேனகம்போருகமாதனையாளுமொர்செல்வனுமே." எ-ம், கலந்துடன்வருவோர் புலம்பதேற்றற்குச் செ-ள் 'யான்கண்டவண்ணலுமெண்ணருங்காதலினேகியவென்- மான்கண்டனகண்மயில்கண்டமாதருமாதருமந்- தான்கண்டதண்ணளிச்சந்திரவாணன்றரியலர்போங்-கான்கண்டமெய்குளிரப்பொய்கைசூழ்தஞ்சைகாண்பர்களே" எ-ம், "கண்ணீர்சென்மின்கழூமலறிவாமா - லெண்ணியவெண்ணமெளிதரோ-வொண்ணிற-வெஞ்சுடரன்னானையான்கண்டேன்கண்டனளாந்-தண்சுடரன்னனைத்தான்" எ-ம். செவிலிபதல்வினையக்காணாது கவலைகூர்தற்குச் செ-ள் 'நாணினுந்தாரணிகற்புநன்றென்றுநயந்துமுத்தம்- பூணினும்பாரமிதென்னுமென்பொன்னையிப்போதெனக்குச் - சேணினுஞ்சார்புகழ்வாணன்றென்மாறைமன்சேரலரைக் - காணினுங்காணவந்தோவரிதாலிந்தக்கானிடையே." எ-ம், "காலேபரிதப்பினவே-கண்ணேநோக்கிவாளிழந்தனவே-யகலிருவிசும்பின்மீனினும்பலரேல் - மன்றவிவ்வுலகத்துப்பிறரே." எ-ம் வரும். (கஅ)

கஅகூ. முற்பட மொழிந்த முறையெழு மூன்றுங்
கற்பொடு புணர்ந்த கௌவையின் விரியே.

இ-ம். செவிலிதேற்றுவார்க் கெதிரழிந்துமொழிதன் முதலாகச் செவிலிபுதல்வினையக்காணாது கவலைகூர்தலீறாகச் சொன்ன விருபத்தொன்றுங் கற்பொடுபுணர்ந்த கௌவையின் விரியாம். எ-று. (ககூ)

ககூ0. தெளித்தன் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிசொல் வகைத்தே.

இ-ம். தெளித்தன் முதலாகச் செப்பலீறாக நான்குவகையினையுடைத் தா மீட்சி. எ-று. (உ0)

ககூக. தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலுந்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலுந்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தன்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலு மாங்கவர்
பாங்கியர்க் குணர்த்தலு மாங்கவர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலு நற்றாய் கேட்டவ
னுளங்கொள வேலனை வினாதலு மெனவுடன்
விளம்பிரு மூன்று மீட்சியின் விரியே.

இ-ம். தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தன் முதலாக நற்றாய் தலைமகனுளங்கொள வேலனைவினாதலீறாகச் சொல்லப்பட்டவாறு மீட்சியின் விரியாம். எ-று.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தற்குச் செ-ள் "ஏடார்மலர்க்குழல்வல்லியையன்னையித் தீவினையே- நாடாவிடமில்லைஞாலத்தகல்வயினன் கமலக்-காடார்பழனக்கழனிநன்னாடுகடந்துதன்னூர் - வாடாவளமனைக்கொண்டுசென்றானொருவள்ளலின்றே" எ-ம், "தேறுகதம்மகநின்மகள்விருப்பே-யுறுதுயரவலமோடுயிர்ச்செலாச்சாய்ப்பாழ் - படுநெஞ்சம்படாடக்கலங்க-நாடிடைவிளங்கியவெற்பிற்-காடிறந்தனணங்காதலோனே." எ-ம், தலைவன்றம்மூர்சார்ந்தமை விளம்பற்குச் செ-ள் "நினையானெதிர்ப்பட்டநீடிருங்குன்றிதுநீ குடைந்த-சுனையாமதுமலர்ச்சோலைகளாமுலைதூயவண்டன் - மனையாமிவையினிவாணன்றென்மாறையைவாழ்த்தலர்போ- லினையாதெழுந்தருண்மானனையாய்நம்மெழினகர்க்கே." எ-ம், தலைவிமுன்செல்வோர் தம்மொடுதாம்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுதற்குச் செ-ள் "புனையலரேதிலர்காதலர்தாயர்பொறாமையிற்போ-யினைதுயர்யாதொன்றுமின்றிவெங்கானிகந்தியானுமம்பொன் - வனைகழலானும்வருவதெல்லாஞ்சென்றுவாணன்றஞ்சைத் - துனைவுடனேகுகின்றீர்சொல்லுவீரென்றுணைவியர்க்கே." எ-ம், முன்னேசென்றோர் பாங்கியர்க்குணர்த்தற்குச் செ-ள் "போதலர்ந்தலைமுனியுமெல்லோதிப்புனையிழைதன் - காதலன்பின்வரக்கண்டனம்யாங்கண்டல்வேலிமுந்நீர் - மாதலந்தன்னிருதோள்வைத்தவாணன்றென்மாறைவண்ணச்- சூதலர்ந்தொல்கவிம்மித்திரண்மாமுலைத்தோகையரே." எ-ம், பாங்கியர்கேட்டு நற்றாய்க்குணர்த்தற்குச் செ-ள் "வாளேய்விழிநின்மயிலனையாடஞ்சைவாணன்வெற்பில் - வேளேயனையவிடலைபின்னேசுரமீண்டினிநங்-கேளேய்பதிவருமென்னநல்லோர்சொல்லக்கேட்டனமிந்-நாளேயனையநன்னாளுளவோசென்றநாள்களிலே." எ-ம், நற்றாய் தலைமகனுளங்கொள வேலனை வினாதற்குச் செ-ள் "தென்மாறைநன்னகர்மன்னவன்வாணன்செழுந்தஞ்சைசூழ்- பொன்மாதிரத்துப்புலனுணர்வீர்சுரம்போய்வருவோ-

னென்மாமனையென்மனையிற்றருமோ தன்னையீன்றநற்றாய்- தன்மாகசருய்க்குமோ சொல்லுவீரொன்றுதானெனக்கே." எ-ம், "வேறாகநின்னைவினவலென்றெய்வத்தாற்-கூறாதுகூறுங்குணத்தினால்-வேறாக-வெம்மனைக்கேயொப்பக்கொணருமோவேலவனைத்-தன்மனைக்கேயுய்க்குமோதான்" எ-ம் வரும். இவற்றுள் தலைவிசேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தலுந் தலைவன்றம்மூர்சார்ந்தமை சாற்றலுமாகிய விவ்விரண்டுந் தெளித்தற்குரிய. தலைவிமுன்செல்வோர் தம்மொடுதாம்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுத்தலும் பாங்கியர் நற்றாய்க்குணர்த்தலுமாகிய விரண்டும் மகிழ்ச்சிக்குரிய. நற்றாய் தலைமகனுளங்கொள வேலனைவினாதலாகிய வொன்றும் வினாதற்குரித்து. முன்செல்வோர் பாங்கியர்க்குணர்த்தலாகிய வொன்றுஞ் செப்பற்குரித்து. எ-று. (உக)

ககூஉ. மடந்தை யுடன்போய் வரைந்து மீடற்கு
மவண்மனை வரைதற்குந் தன்மனை வரைதற்கு
மிவையைந்து முரிய செவிலிகூற் றொழித்தே.

இ-ம். மடந்தையையுடன்போய் வரைந்து மீள்தற்கும் வரைமன் மீண்டவளது மனையின்கண்ணேயாதல் தன்மனையின்கண்ணாதல் வரைந்துகோடற்கு மிலக்கணத்தி னுரியவாஞ் செவிலிகூற்றாயவொன்றையுமொழித் தல்லாத வைந்தும். எ-று. (உஉ)

ககூங. வினாதல் செப்பன் மேவலென் றிறைவன்
றனாதில் வரைத றான்மூ வகைத்தே.

இ-ம். வினாதலுஞ் செப்பலு மேவுதலுமென மூவகையினையுடைத்தாந் தலைமகன் மீண்டுவந்து தன்மனைக்கண்ணே வரைதல். எ-று. (உங)

ககூச. பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினாதலுஞ் செவிலிக் கிவளை
வரைந்தமை யுணர்த்தலும் வரைந்தமை செவிலி
நற்றாய்க் குணர்த்தலு முற்றாங் கிருவருந்
தலைவியல் வந்துழித் தலைவன் பாங்கிக்
கியான்வரைந் தமைநுமர்க் கியம்புசென் றென்றலுந்
தானது முன்னே சாற்றிய துரைத்தலு
மென்னு மிவ்வைந்து மின்னிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே.

இ-ம். பணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற் செவிலியை வினாதன் முதலாகப் பாங்கி தானதுமுன்னே சாற்றியதுரைத்தலீறாகச் சொல்லப்பட்ட வைந்தும் மீண்ட தலைமகன் றலைமகளைத் தன்மனையின்கண்ணே வரைந்து கோடலின் விரியாம். எ-று.

டணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற் செவிலியைவினாதற்குச் செ-ள் *"தாமாகமேவினுநபமனைக்கேயர்துதண்சிலம்பார்-மாமாதினையணஞ்செய்வதற்கேமருவார்கமலப்-பூமாதுகேள்வன்புகழ்த்தஞ்வாணன்பொருப்பிலினி- யாமாறுயிரனையாய்சொல்வமோவவரன்னையர்க்கே." எ-ம், செவிலிக்குளைவரைந்தமையுணர்த்தற்குச் செ-ள் "என்னுயிர்ப்புவதியாய்க்கினிநாமன்னையின்றுதம்மிற்-கொன்றுருநித்திலக்கோதைநமமாதைக்கொடிநெடுந்தேர்க்-கன்றுடர்மண்கொண்டவாணன்றென்மாறையிற்காதலர்தா-நன்றுண்மணம்புணர்ந்தாரென்றுதூதர்நவின்றனரே." எ-ம், வரைந்தமைசெவிலி நற்றாய்க்குணர்த்தற்குச் செ-ள் "எனக்கேளிருநின்றியற்றவங்கேமணவின்பமெய்தி-யனைக்கேண்மைநண்ணியவெண்ணல்பின்றுநம்மன்னையின்றிம் - மனைக்கேவருமெனவந்துசொன்னார்தஞ்சைவாணன்வெற்பிற் - சுனைக்கேழ்நனைக்கமழ்நீர்க்குழலாய்சிலதூதரின்னே." எ-ம், உற்றாங்கிருவருந் தலைவியில்வந்துழித் தலைவன்பாங்கிக்கியான்வரைந்தமை நுமர்க்கியம்புசென்றென்றற்குச் செ-ள் "கோபுரஞ்சோலைசொடிமதின்மாடங்குலாவிமையோர் - மாபுரம்போலுந்தென்மாறைவரோதயன்வாணன்வெற்பி-னீபுரந்தேதந்தமாதையங்கியாம்வரைநீர்மைபொன்செய்- நூபுரஞ்சூழடியாய்சென்றுகூறுநுமர்தமக்கே." எ-ம், பாங்கி தானதுமுன்னே சாற்றினேனென்றற்குச் செ-ள் "அன்னைக்கியம்பினனுண்டகையான்முன்னறிந்துதென்னன் - றன்னைப்பணிந்துகுற்றேவல்செய்யாதுசமர்க்கெழுந்த - மன்னைப்புறங்கண்டவாணன்றென்மாறைவரையிலெங்கள்- பொன்னைப்புணர்ந்துநுங்கேண்முன்னர்நீபொன்புனைந்ததுவே." எ-ம் வரும். இவற்றுள் நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதலாகிய ஒன்றும் வினாதற்குரித்து. வரைந்தமை பாங்கி செவிலிக்குணர்த்தலும் வரைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தலும் பாங்கி தானதுமுன்னே சாற்றியதுரைத்தலும் ஆகியமூன்றுஞ் செப்பற்குரிய. தலைமகள்வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றெனலாகிய வொன்று மேவுதற்குரித்து. (உச)

ககூரு. ஆதியொன் றொழித் தல்லன நான்கு
மாதினை யுடன்போய் வரைந்து மீடற்கு
நீதியி னுரிய வினையுங் காலை.

இ-ம். நற்றாய் மணனயர்வேட்கையொழித் தல்லாத நான்குந் தலைமகன் புணர்ந்துடன்போய்த் தலைமகளைத் தன்னூரின் வரைந்துமீடற்கு முரியவா மாராயுங்காலத்து. எ-று. (உரு)

ககூசு. இருவ ரில்லிற்கு மியைந்த பன்னொன் று
மொருவகை மீண்டு வரைதலின் விரியே.

இ-ம். தலைமகன் நற்றாய்சார்ந்தமை யுணர்த்தன் முதலாகப் பாங்கி தானதுமுன்னே சாற்றியதுரைத்தலீறாகச் சொல்லப்பட்ட அவண்மனை வரைதற்குந் தன்மனைவரைதற்கு முரிய கிளவி பதினொன்று முடன்போய் வரைந்துகோடலின்விரியா மொருபடியாக. எ-று.

ஒருபடி என்றது மேற்சூத்திரங்களுட் கவற்சிநீக்குதற்கெனக் கொள்க. ()

* "நும்மனைச்சிலம்புதழீஇவரினு-மெம்மனைவதுவைநன்மணங்கழிக-வென்றுநாஞ்சொல்லிலெவனோதோழி- மையறவிளங்குங்கழலடிப்- பொய்யிலகாளையையீன்றதாய்க்கே." என்னுங்கவி சில பிரதிகளிலுள்ளது.

௧௯௭. போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்த
னீக்க மிரக்க மொடுமீட்சி யென்றாங்
குடன்போக் கிடையீ டொருநால் வகைத்தே.

இ-ம். போக்கறிவுறுத்தல் முதலாக மீட்சியீறாக நான்குவகையினையு டைத்தாம் உடன்போக்கிடையீடு. எ-று. (உ௭)

௧௯௮. நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுத்தலுந் தலைமக
டன்செல வின்றாட் குணர்த்தி விடுத்தலு
மீன்றாட் கந்தணர் மொழிதலு மீன்றா
ளறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத்
தலைவி கண்டு தலைவற் குணர்த்தலுந்
தலைமக டன்னைத் தலைமகன் விடுத்தலுந்
தமருடன் செல்பவ ளவன்புற நோக்கிக்
கவன்றாற் றலுமென நுவன்றவை யாறு
முடன்போக் கிடையீட்டு விரியா கும்மே.

இ-ம். நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தகறலுந் தமருடன் செல்பவள் வன்புறநோக்கிக் கவன்றாற்றலீறாகச் சொல்லப்பட்ட வாறு முடன்போக்கிடையீட்டு விரியாம். எ-று.

நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செலவுணர்த்திவிடுத்தற்குச் செ-ள் "வளவேய்மிடைந்தவழிப்படர்வீர்செங்கைவாணன்றஞ்சைத் - தளவேய்நகை யென்றுணைவியர்பாற்சென்றுசாற்றுமின்போர்க் - களவேளனையவொர்காளைபி ன்போயினள்கான்பனிநீத் - திளவேனில்வல்லிபெற்றாங்கெவ்வநீத்தெழிலெய்தி யன்றே." எ-ம், தலைமகடன்செலவின்றாட் குணர்த்திவிடுத்தற்குச் செ-ள் "வாயாரநுங்களைவாழ்த்துகின்றேன்றஞ்சைவாணன்வெற்பிற் - சாயாதமாதவத் தாழ்சடையீரன்டர்தம்மொழின்றியான் - சேயாறுநேர்மிசைச்செல்வதெல்லா மெங்கள்சேரியிற்சென் - றியாயாகியகொடியாட்கினிதாகவியம்புமின்னே." எ-ம், நற்றாய்க்கந்தணர்மொழிதற்குச் செ-ள் "மருள்கொண்டசிந்தைமலைகி ழவோய்தஞ்சைவாணன்வெற்பில்-வெருள்கொண்டமென்பிணைவென்றகண்ணா ள்வென்றுவேல்வலங்கை-யருள்கொண்டநெஞ்சினொண்ணல்பின்னேயகன்றா ளகல்வா-னிருள்கொண்டகொண்டல்செல்லாவரைசூழுமிருஞ்சுரத்தே." எ-ம், நற்றாயறத்தொடுநிற்றலிற் றமர்பின்சேறலைத் தலைவிகண்டுரைத்தற்குச் செ-ள் "உவலைப்பதுக்கைமுரம்புசெல்லாமலுலகமங்கை - தவலைத்தவிர்த்ததமிழ்த்தஞ் சைவாணன்றரியலர்போங்-கவலைக்கடத்துச்சிலைத்திரைகோலிக்கடும்பகழித்- துவலைப்படைக்கடரோன்றல்பொற்றேர்வங்கண்சூழ்கின்றதே." எ-ம், தலைமகளைத் தலைமகன் விடுத்தற்குச் செ-ள் "ஆறலைவெஞ்சிலைக்கானவரேலென்கையம்பொ ன்றினு-னூறலைபஞ்சலைநுண்ணிடையாய்நுமரேலவர்முன்-சேறலையஞ்சுவல்செ ல்வல்லைப்பூச்செழும்பழுக்காய்த் - தாறலைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றமிழ்

வெற்பிலே." எ-ம், தமருடன்செல்லோ ளெனப்புறநோக்கிக்கண்டோரற்றற்குச் செ-ள் "ஏமானெனவஞ்சுமேற்காத்தலினவ்வில்விபொற்றேர்- வாமானினின்வாழ் வனவாகபன்றுட்டஞ்சைவாணனென்றுர்-போமானதரிடத்தென்னையர்தோன் றப்புறங்கொடுத்த - சோமான்மணிநெடுந்தேர்நுகம்பூண்டகுரசதமே" எ-ம் வரும். இவற்றுள் முன்னைய மூன்றும் போக்கறிவுறுத்தற்குரிய. பின்னைய மூன்றும் வரைவறிவுறுத்தன் முதலாகிய மூன்றற்குந் தனித்தனியுரியவெனக் கொள்க. மேற்கூறப்பட்ட கிளவிகளிதற்கொப்பன வறிந்துகொள்க. (௨௪)

௧௯௯. தன்னூர் வரைதலுந் தன்மனை வருதலு
மென்னுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோ
னந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந்
தந்து வரைத றகுதி யென்ப.

இ-ம். உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலு மீண்டுவந்து தன் மனைக்கண்ணே வரைதலுமாகிய விரண்டுமொழித் தல்லாதவெல்லாம் வரைவி ன்கண்ணுந் தலைமகனந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டருங்கலங் கொ டுத்துவரைத லுலகத்தியற்கையெனச் சொல்லுவர் புலவர். எ-று.

இவ்வாறுவரைந்து கண்டுழிக்கண்டோர் மகிழ்ந்துகூறியதற்குச் செ-ள் 'சேலார்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றென்மாறையினம்-வேலானெனப்பி றர்வேட்டவர்யார்மணம்வெண்டுகிலின்-பாலாரபளியுட்பாற்கடலானதுபங்கயக்க ண்-மாலாயினனிவனுந்திருவாயினண்மாதுமின்றே" எ-ம், "கயற்கண்ணளை யுங்காமன்னனுளையு-மியற்றினூர்மணமேத்தருந்தன்மையார் - மயற்கையில்லவர் மன்றலின்மன்னிய-லியற்கையன்புடையாருயர்ந்தார்களே." எ-ம் வரும். ()

வரைவியன் முற்றிற்று.

நான்காவது

கற்பியல்.

௨௦௦. பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலு
பிரிவும் பிறவு மருவிய தாகும்.

இ-ம். இவ்வோத்துக் கற்பியலென்னும்பெயர்த்து. பொலிவமைந்த சிறப் பினையுடைய கற்பென்று சொல்லப்படுவது உள்ளமகிழ்ச்சியு மூடலு மூடலுண ர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதாகும். எ-று.

பிறவென்றதனாற் பிரிந்துழிவரும் விகற்பமெல்லாங் கொள்க. (௧)

௨௦௧. இல்வாழ்க்கையே பரத்தையிற் பிரிவே
யோதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய வேழும்
வளமலி கற்பிற் கிளவித் தொகையே.

இ-ம். இல்வாழ்க்கை முதலாகப் பொருள்வயிற் பிரிதலீறாகச் சொல்லப்பட்ட வேழும் கற்பிற் கிளவித்தொகையாம். எ-று. (௨)

௨௦௨. கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்
றீங்கு நால்வகைத் தில்வாழ்க் கையே.

இ-ம். கிழவோன் மகிழ்ச்சி முதலாகச் செவிலி மகிழ்ச்சியீறாகச் சொல்லப்பட்ட நாலுவகையினையுடைத்தா மில்வாழ்க்கை. எ-று. (௩)

௨௦௩. தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவியை
வரையுநா ளளவும் வருந்தா திருந்தமை
யுரையா யென்றலும் பெருமக ளுரைத்தலுந்
தலைவனைப் பாங்கி வரையுநா ளளவு
நிலைபெற வாற்றிய நிலைமை வினாதலு
மன்றன் மனைவரு செவிலிக் கிகுளை
யன்புற வுணர்த்தலும் வாழ்க்கைநன் றறைதலு
மணமனைச் சென்று வந்த செவிலி
பொற்றொடி கற்பி னற்றாய்க் குணர்த்தலு
நன்மனை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தலு
மன்னவர் காத லறிவித் தலுமெனு
மின்னவை பத்து மில்வாழ்க்கை விரியே.

இ-ம். தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தன் முதலாக அன்னவர் காதலறிவித்தலீறாகச் சொல்லப்பட்ட பத்து மில்வாழ்க்கை விரியாம். எ-று.

தலைவன்றலைவிமுன் பாங்கியைப் புகழ்தற்குச் செ-ள் "நின்மேலடுத்தபசலையின் காரணநின் றுணைவி - யென்மேலடுத்தவியல்பினன்றோ பெற்றதேழுலகுந் - தன்மேலடுத்தபுகழ்த்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிநுண் - பொன்மேலடுத்தன போற்சணங்கின்றபுணர்முலையே." எ-ம், தலைவனைப்பாங்கி வாழ்த்தற்குச் செ-ள் "தெரியாடகவிதழ்ப்பூங்கொன்றைவேணியுந்தேவியும்போற் - பிரியாதுறையப்பெறுகுகிராற்பிறைமானுநெற்றிப் - புரியாழ்நிகர்மொழிப்பூவையுநீயும்புணர்ந்தபல்கேழ் - வரியார்சிலையண்ணலேதஞ்சைவாணன்றென்மாறையிலே."

எ-ம், வரையுநாளளவும்வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியைவினுதற்குச் செ-ள் “தோங்கநன்மாமுகைக்கொங்கைநல்லாய்மணங்கூடுமெல்லை- யாங்கனமாற்றியிருந்தனைநீயிபமாசயிலந் - தாங்கனமாறத்தலம்புனைவாணன்றமிழ்த்தஞ்சைவாழ்- பூங்கனமார்குழலாரலர்மாலைப்பொறைசுமந்தே.” எ-ம். தலைமகள்வருந்தாதிருத்தற்குக் காரணங்கூறற்குச் செ-ள் “மைதோய்ந்தலர்ந்தமலர்த்தடஞ்சூழ்தஞ்சைவாணனென்னூர்- மெய்தோய்ந்தசெந்நிறவேல்விழியாய்துயர்வெள்ளம்வெற்பர்-கைதோய்ந்தளிப்பவசோகத்தவாய்நிறங்கால்வனவாய் - நெய்தோய்ந்தனதழைநீயடிணையாக்கொண்டுநீந்தினனே.” எ-ம், பாங்கி தலைவனை வரையுநாளளவு நிலைபெறவாற்றிய நிலைமைவினுதற்குச் செ-ள் “அயிரைபரந்தவந்தண்பழனத் - தேந்தெழின்மார்த்தாமுடைத்திரள்கா-லாம்பல்குறுநர்நீர்வேட்டாங்கிவ-ளிளையலைக்கிடந்துநடுங்கல னீர்தொடூஉ- கான்பிறையிற்றோன்றியானுமக்-கரியகாலைப்பெரியநோன்றனீர்நோகோயானே” எ-ம், பாங்கி மணமனைச்சென்ற செவிலிக்கிருவரன்புமுரைத்தற்குச் செ-ள் “வளங்கொண்டதஞ்சைவரோதயன்வாணன்றென்மாறையன்ன - விளங்கொங்கைகொண்டுழுதீரங்கொண்மார்பின்முத்தேற்பவித்தி - விளங்கொண்பிறைநுதல்வேர்தந்துபோகம்விளைத்தன்புசே-ருளங்கொண்டருக்குதலாலன்னையூனுமப்புறமே.” எ-ம், பாங்கியில்வாழ்க்கை நன்று செவிலிக்குணர்த்தற்குச் செ-ள் “சினவேய்களியுங்களிற்றண்ணல்வாணன்றென்மாறையினம்-மனவேயகலல்குல்வல்லியன்னுண்மறையோர்முதலாஞ்-சனவேதனைகெடத்தானங்களீதலிற்சாலவுநன் - றெனவேநடக்கின்றதாலன்னைநாடொறுமில்லறமே.” எ-ம், மணமனைச்சென்றுவந்த செவிலி தலைமகள்கற்பு நற்றாய்க்குணர்த்தற்குச் செ-ள் “ஒன்றோநமக்குவந்தெய்தியநன்மையுடனெதிர்ந்தார் - வன்றோலமர்வென்றவாட்படைவாணன்றென்மாறையில்வாழ் - நின்றோகைகற்பினிலைமையெண்ணுதெதிர்நின்றுவென்னிட்-டன்றோவடக்கிருந்தாண்மடப்பாவையருந்ததியே.” எ-ம், செவிலிநற்றாய்க்குத் தலைமகன் மனைவாழ்க்கைத்தன்மையுரைத்தற்குச் செ-ள் “விண்மேலமரர்விரும்பமராவதிவெள்ளமுந்நீர்- மண்மேலடைந்தன்னவாழ்கையதான துவாணன்றஞ்சைப்-பண்மேலளிமுரல்குங்குமத்தோளவர்பங்கயம்போற்- கண்மேலருள்பெற்றுவாழ்மடமாதர்கடிமனையே.” எ-ம், செவிலி நற்றாய்க்கிருவர்காதலு மறிவித்தற்குச் செ-ள் “நனையகத்தல்கியநாண்மலரோதிநயந்துறையு- மனையகத்தல்லிடைவைகுதலாற்றஞ்சைவாணனென்னூர் - வினையகத்தல்குதல்செல்லுவரேனுமவ்வேந்தர்பொற்றேர்-முனையகத்தல்கல்செல்லாதொருநாளுமுகிழ்நகையே” எ-ம் வரும். இவற்றுள் தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலாகிய வொன்றுங் கிழவோன் மகிழ்ச்சிக்குரித்து. தலைவனைப் பாங்கி வாழ்த்தன் முதலாக செவிலிக்கு வாழ்க்கை நன்றென்றலீறாகச் சொல்லப்பட்டவாறுள் பெருமகளுரைத்தலாகிய வொன்றும் கிழத்தி மகிழ்ச்சிக்குரித்து. அல்லாதவைந்தும் பாங்கி மகிழ்ச்சிக்குரிய. செவிலி நற்றாய்க்குத் தலைமகள் கற்பியலுணர்த்தன் முதலாகிய மூன்றும் செவிலிமகிழ்ச்சிக்குரியவெனக் கொள்க. (௪)

௨௦௬. **வாயில் வேண்டல் வாயின் மறுத்தல்**
வாயினேர் வித்தல் வாயினேர்த லென்
றுய பரத்தையி னகற்சிநால் வகைத்தே.

இ-ம். வாயில்வேண்டன் முதலாக வாயினேர்தலீறாக நால்வகையினையுடைத்தாம் பரத்தையிற் பிரிவு. எ-று. (௫)

௨௦௫. காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்
கேது விதாமவ் விறைவிக் கென்றலுந்
தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கலு
மீங்கிது வென்னெனப் பாங்கி வினாதலு
மிறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
யவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்
பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தைய
ருலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன்
வரவுகண் டுவந்து வாயில்கண்டு மொழிதலும்
வரவுணர் பாங்கி யரிவைக் குணர்த்தலு
முதிரா விளமுலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியின் மகிழ்வுமென் றுணர்த்துபன் னொன்று
முணர்த்த வுணரு மூடற் குரிய.

இ-ம். காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக் கேதுவீதாமென்றன் முதலாகப் புணர்ச்சியின் மகிழ்தலீறாகச் சொல்லப்பட்ட பதினொன்று மூடற்குரியவாம். எ-று.

காதலன்பிரிவுழிக் கண்டோர்புலவிக் கேதுவிதாமவ்விறைவிக்கென்றற்குச் செ-ள் "மாறையர்காவலன்வாணன்றென்றஞ்சையில்வாணுதற்கிவ்-வாறையர் காரணமாகுமென்றேகொங்கையானையுடன்- சாறையர்வீதியரிப்பறையார்ப்பத்தயங்குகுழற்-கூறையர்கூறைகொள்வான்வயலூரனைச்சூழ்ந்தனரே." எ-ம், தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கற்குச் செ-ள் "வன்போதணிதொங்கல்வாணன்றென்மாறைமகிழ்நர்நம்மே - லன்போடுநன்னெஞ்சறிவுறைபோகவழலுள்வெந்த-பொன்போனிறங்கொண்டிரவுங்கண்ணீரும்புலர்வதுபார்த் - தென்போலெவரிங்ஙனேயிமையாமலிருப்பவரே." எ-ம், ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினாதற்குச் செ-ள் "எம்மாதிரமும்புரவலர்த்தேடியிரந்துழல்வோர்-தம்மாதுயரந்தணித்தருள்வாணன்றமிழ்த்தஞ்சைவாழ்-நம்மாவியன்னவர்நாடொறுநாடொறுநல்கவுநீ-விம்மாவருந்துவதென்பிரிந்தாரின்விளங்கிழையே" எ-ம், இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தற்குச் செ-ள் "தாராகநல்கினர்காரிகையாய்தஞ்சைவாணன்றன்னைச்-சேராதவரென்னத்தீவினையேனையச்செங்கண்வன்கட்- காராகழனிக்கரும்பினஞ்சாயக்கதழ்ந்துசென்றெ - லாராதயலிற்பஞ்சாயாருமூரரயலவர்க்கே." எ-ம், "என்கேட்டியலாளிருநிலத்தும்வானத்து-முன்கேட்டுக்கண்டுமுடியறியேன்-மின்கேட்-டணியிகவாநிற்கவவனணங்குமாதர் - பணியிகவான்சாலப்பணிந்து." எ-ம், தலைவியைப் பாங்கி கழறற்குச் செ-ள் "புனையலங்காரங்கற்பியல்போற்றியும்போற்றருஞ்சீர் - மனையறம்பாவித்தும்வாழ்வதல்லாற்றஞ்சைவாணனன்னா-டனையவண்டார்குழலாரணங்கேநமக்கன்பரிந்நா- ளினையரென்றூர்வமில்லாவுரையாடலியல்பல்லவே." எ-ம், தலைவி செவ்வணியணிந்து

சேடியை விடுப்புழி யவ்வணியுழையர்கண் டழுங்கிக் கூறற்குச் செ-ள் "வேளாண்மரபுவிளக்கியவாணன்மின்னூர்கழல்சூழ்-தாளான் வளங்கெழுதஞ்சையன்னீர்சங்கந்தரனன்னீர்த் - தோளாமணியன்னதொல்குலவேரடையிற்றோன்றியபூ- வாளாவலர்தொடுப்பார்க்கெங்ஙனேவந்துவாய்த்ததுவே." எ-ம், "அரத்தமுடீஇயலரிபழுப்புப்பூசிச்- சிரத்தயற்செங்கழுநீர்சூடிப் - பரத்தை - யினைநோக்கிகூவு மொழிமொழியலென்று-மனைநோக்கிமானவிடும்." எ-ம். பரத்தையர்கண்டுபழித்தற்குச் செ-ள் "படியொன்றுசாலியனையவர்சேரிப்படர்பவளக் - கொடியொன்றுநீலமலர்ந்ததுகாட்டக்கொடியவெம்போர்-வடியொன்றுகூரிலைவேல்வல்லவாணன்றென்மாறையிற்பொற்- றொடியொன்றுதோண்மடவார்சேரிவாய்வந்துதோன்றியதே." எ-ம், பரத்தையுலகியனோக்கிவிடுத்தலிற் றலைவன்வரவுகண்டுவந்து வாயில்கண்டு மொழிதற்குச் செ-ள் "வாருந்துபச்சிளநீர்முலையார்மதன்வாணன்றஞ்சை-யாருந்தொழத்தகுமெம்பெருமாட்டிதனைவளினுற்-சேரும்பரத்தையர்சேரியிலேசென்றசேடியைக்கண் - டூருந்திரைப்புனலூரன்வந்தானின்றுலகியற்கே." எ-ம், தலைமகன்வரவு பாங்கியரிவைக்குணர்த்தற்குச் செ-ள் "தள்ளாவளவயல்சூழ்தஞ்சைவாணன் றரியலர்போ-லுள்ளாதுனைப்பண்டகன்றனராயினுமுள்ளியிப்போ - தெள்ளாதுவந்துன்கடையினின்றூர்நம்மிறைவர்குற்றங்-கொள்ளாதெதிர்கொள்வதேகுணமாவதுகோமளமே." எ-ம், தலைவனைத் தலைவியெதிர்கொண்டு பணிதற்குச் செ-ள் "மருவிற்பெருநலமன்னுவதாந்தஞ்சைவாணன்வெற்ப-ரொருவிற்பசலையுருக்குவதாநமக்கூடலெவ்வா-திருவிற்புருவவிளங்கொடியேயென்றுமெய்தவில்லாத்- திருவிற்புனைநறுந்தார்வரைமார்பர்திருமுனின்றே." எ-ம், "உய்த்தலறிந்துபுனல்பாய்பவரேபோற்-பொய்த்தலறிந்தேன்புலந்து." எ-ம், புணர்ச்சியின் மகிழ்தற்குச் செ-ள் "மன்னவர்காமநெடுங்கடல்வாணன்றென்மாறையன்னு-டொன்னலம்வார்முலைமத்தந்தழீஇத்தடந்தோளிணையாம்-பன்னகநாணிற்கடைந்திதழ்வார்திரைப்பட்டநன்னீ - ரின்னமிழ்தார்ந்திமையோரமையாவின்பமெய்தினரே." எ-ம் வரும். (கூ)

உ0சா. வெள்ளணி யணிந்து விடுப்புழிப் புள்ளணி
மாலைவே லண்ணல் வாயில் வேண்டலுந்
தலைவி செய்யாடிய திருவினை சாற்றலுந்
தலைவன் றன்மனத் துவகை கூர்தலுந்
தலைவிக் கவன்வரல் பாங்கி யுணர்த்தலுந்
தலைவி யுணர்ந்து தலைவனொடு புலத்தலும்
பாணன் முதலாப் பாங்க னீறாப்
பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்
டிறையோன் மகிழ்தலு மிறைமகள் விருந்துகண்
டொளித்த வூடல் வெளிப்பட நோக்கிச்
சிறே லென்றவள் சீறடி தொழலுமிஃ
தெங்கையர் காணி னன்றன் றென்றலு
மங்கவர் யாரையு மறியே னென்றலுங்

காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலுந்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலுந்
தணியா ளாகத் தலைமக னூடலு
மணிவளைப் பாங்கி யன்பிலை கொடியையென்
றிணைத்தார் மார்பனை யிகழ்தலும் பிறவு
முணர்த்த வுணரா வூடற் குரிய.

இ-ம். வெள்ளணியணிந்து விடுப்புழித் தலைவன் வாயில்வேண்டன் முதலாகப் பாங்கி தலைவனை யன்பிலைகொடியையென் றிகழ்தலீறாகச் சொல்லப்பட்டனவும் பிறவும் உணர்த்தவுணரா வூடற்குரியவாம். எ-று.

வெள்ளணியணிந்து விடுப்புழிப் புள்ளணிமாலைவேல்வண்ணனெல் வாயில்வேண்டற்குச் செ-ள் "என்பாற்குறையைநினைந்துமருவெதிர்கொள்ளவல்லே-தன்பாற்புலவிதணிசென்றுநீதஞ்சைவாணன்வைய - மன்பாற்பரவும்புகழுடையானருளேயனையா -,யுன்பாற்புலவியுருள்வண்ணவார்குழலொண்ணுதலே." எ-ம், தலைவி நொய்யாடிய திருளை சாற்றற்குச் செ-ள் "மலர்புரையோர்கொண்டவாட்கணெங்கோமங்கைவாணன்றஞ்சைப் - பலர்புகழ்பாலற்பயந்துநெய்யாடினள் பாங்கெவர்க்கு-மலர்புரைநீடொளியாடியுட்பாலையன்றுட்குளநீர்- புலர்புனலூரவென்னோதிருவுள்ளமிப்போதுனக்கே." எ-ம், தலைவன் றன்மனத்துவகை கூர்தற்குச் செ-ள் "மையணிவேல்விழிவாணுதல்கூர்ந்ததுவாணன்றஞ்சைக்-கொய்யணிநாண்மலர்க்கொம்பரன்னாள்குழவிப்பயந்து-நெய்யணிமேனியிலையவிபூண்டநிலையறிந்தே - கையணிவால்வளையைக்கண்டநாளினுங்காதன்மையே." எ-ம், தலைவிக் கவன்வரல் பாங்கியுணர்த்தற்குச் செ-ள் "ஏரார்புதல்வன்பிறந்தனன்வாழியவென்னுமுன்னே- வாரார்வளமனைவந்துநின்றூர்கங்குல்வாணன்றஞ்சை-நீராவிநீலநெடுங்கண்மின்னேநின்னைநீப்பதல்லாற்- றோராதொழிகுவரோ பெரியோர்தஞ்சிறுவனையே." எ-ம், தலைவியுணர்ந்து தலைவனொடு புலத்தற்குச் செ-ள் "வயங்கேழலகும்புரக்கின்றவாணன்றெண்மாறையன்ன - நயங்கேழ் பெருவளநல்குநல்லூரநயந்துநண்ணி- முயங்கேல்சிறுவற்பயந்தவெண்மேனியின் மூத்துவடந்-தயங்கேரகமுழுதும்பழுதாமதுதானினக்கே." எ-ம், பாணன்முதலாய்ப் பாங்கனீருய்ப் பேணியவாயில்கள் பெரியோன்விடுத்துழித் தலைமகண் மறுத்தற்குச் செ-ள் "தலையாகியதன்மையூரற்குவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்-மலையாகியமதில்வையைநன்னாட்டெங்கைமான்படுக்கும்- கலையாகுநின்னிசைக் கண்ணிகொண்டேதிரிகன்றுதின்னிப் - புலையாகடக்கவெம்மிற்போகபோகபுறங்கடையே." எ-ம், வாயில்மறுக்கப்பட்டபாணன் கூறற்குச் செ-ள் "நினக்கேதகுநின்னெடும்புனலூரனுநீயுமவன் - மனக்கேதகுவைதமிழ்த்தஞ்சைவாணன்றடங்கிரிசூழ்-புனக்கேகயமன்னநின்னடிபோற்றிப்புகன்றகன்று - மெனக்கேதகுமிகையாலெம்பிராட்டியெறிந்தகல்லே." எ-ம், தலைமகள் விறலி வாயின்மறுத்தற்குச் செ-ள் "வண்புனலூர்வையைசூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்-கண்புனலூருமென்காதல்கண்டேநின்கடைத்தலைக்கே - தண்புனலூரன்வந்தானென்றுசாற்றினைதானமுறப்- பண்புனலூர்களெல்லாம்பாடியேற்றுண்ணும் பாண்மகளே." எ-ம், விருந்தொடுவந்துழித் தலைமகள் பொறுத்தல்கண்டுழித் தலைமகன் மகிழ்தற்குச் செ-ள் "புரவேயெதிர்ந்தநமக்குவிருந்தின்றுபோல வென்றும்-வரவேபுணர்ந்தநம்மாதவம்வாழியவாணன்றஞ்சைக்- குரவேய்கருமு

கிற்கொந்தளபாரங்குரும்பைகொங்கை - யரவேய்நுடங்கிடையாள்விழியூர்சிலைப் பாற்றுதற்கே." எ-ம், தலைமகள் விருந்துகண்டொழிந்தவூடல் பள்ளியிடத்து வெளிப்படத் தலைமகன் சீறேலென்றவன் சீறடிதொழற்குச் செ-ள் "தெரியோர்பொருட்டன்றுதேர்வின்றியூடல்செயிர்த்தவர்க்குக் - கரியோர்தெளித்தென்னகாரணங்காட்டுவர்காணுண்டுதேன் - வரியோர்தொடைப்புயன்வாணன்றென்மாறைமலர்த்திருவே - பெரியோர்பொறுப்பரன்றேசிறியோர்கள்பிழைத்தனவே." எ-ம், எங்கையர்காணி னன்றென்றற்குச் செ-ள் "எண்போனநெஞ்சமுநீருமென்பாதமிறைஞ்சுதலுங் - கண்போலுமெங்கையர்காணினன்றோகயன்மாதிரத்துத்-திண்போதகந்தொறுந்தீட்டியவாணன்செழுந்தஞ்சைசூழ் - வண்போதளவியநீர்வையைநாட்டுறைமன்னவரே." எ-ம், அங்கவர்யாரையுமறியேனென்றற்குச் செ-ள் "பாவிநீபுலவியினீடல்பாவியேற்-காவியொன்றிரண்டுடம்பல்லதூற்றுநீர்க்-கூவல்வாய்வெண்மணல்குறுகச்சொல்லுமோ - மேவிப்பூங்கங்கையில்விழைந்தவன்னமே." எ-ம், தலைமகள் காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தற்குச் செ-ள் "போயேதெருவிற்றனிவிளையாடும்புதல்வற்புல்ல-நீயேயிலையல்லை நின்மகனேயிவனீயுமவன் - றாயேயருகெனச்சேயன்ன வாணன்றமிழ்த்தஞ்சைமா - னேயேயெனநிற்றலானறிந்தேன்றன்னையெங்கையென்றே." எ-ம், தலைமகளைப் பாங்கி புலவி தணித்தற்குச் செ-ள் "மாவாரணமன்னவாணன்றென்மாறைநம்மன்னர்நின்னைப் - பாவாய்பணியவும்பார்க்கிலைநீயிடப்பாகமங்கை-தாவாதசங்கரன்கங்கைதன்கொங்கைதழீஇயிதழிப்- பூவார்சடைமுடிமேல்வைத்தபோதும்பொறுத்தனளே." எ-ம், "உப்பமைந்தற்றாற்புலவியதுசிறிது-மிக்கற்றானீளவிடல்." எ-ம், தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகனூடற்குச் செ-ள் "தழங்கார்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றனதருள்போற்-பழங்காதலெண்ணலென்பைதனெஞ்சேயிவள்பண்டுபைம்பொற்- கழங்காடிடமுங்கடிமலர்க்காவுங்கடந்துபுள்ளேம்-வழங்காவழிநமக்கோர்துணையாய்வந்தமானல்லளே." எ-ம், பாங்கியன்பிலை கொடியையென்றிணர்த்தார் மார்பனையிகழ்தற்குச் செ-ள் "மைந்நாண்மலர்த்தொடைவாணன்றென்மாறையெம்மன்னவருந்-தந்நாண்முயங்கி யமிழ்தெனவார்ந்தனிரார்வமுற்று-மூந்நாண்மதிநுதன்மென்முலைமாதைமுனிந்துநஞ்சென் - றிந்நாண்மிகவுவர்த்தீர்புலவாநிற்றிரெங்களையே." எ-ம் வரும். (எ)

உ0எ. ஆயிழை மைந்தனு மாற்றா மையுமே
வாயி லாக வரவெதிர் கோடலு
மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ
டிணங்கிய மைந்தனை யினிதிற் புகழ்தலுந்
தலைவனைப் புகழ்தலுஞ் சிலைநுதற் பாங்கி
மனைவியைப் புகழ்தலு மினையவை பிறவு
மனைவகை மொழிந்த வதன்பாற் படுமே.

இ-ம். ஆயிழைமைந்தனு மாற்றாமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகளெதிர்கோடன் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்டனவு மத்தன்மைத்தாகி யுணர்த்தவுணரா வூடற்குரிய வாம். எ-று.

இவைவேறு கூறியதவைபோல வூடற்சிறுபான்மைநோக்கி. மகனுமாற்றாமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகளெதிர்கோடற்குச் செ-ள் “வெள்ளம்புரந்தன்னவேட்கைசென்றாலுமிசப்பெரியோ - ருள்ளஞ்சிறியவர்மேற்செல்வரோவொளிர்கோமளஞ்செய் - வள்ளங்கமலமலர்த்தஞ்சைவாணன்றென்மாறையன்னப்-புள்ளம்புனல்வயலூரபுன்காமம்புகல்வதன்றே.” எ-ம், தலைமகனைப் புணர்ந்து நீங்கியபின் வந்த பாங்கியொடு தன்மகனைப் புகழ்தற்குச் செ-ள் ‘இருமையிலேயும்பயங்களெல்லாந்தன்னையீன்றநமக் - கொருமையிலேவந்துறத்தகைந்தான்மைந்தனொண்சுடர்போல்-வருமயிலேகொண்டுமாதடிந்தானன்னவாணன்றஞ்சைத் - திருமயிலேயனையாய்புனலூரனைத்தேருடனே.” எ-ம், தலைவி தலைவனைப் புகழ்தற்குச் செ-ள் “கொண்டாணிற்றுன்னியசேளீர்மற்றில்லைக்குறிப்பினென்று-தண்டாதவர்சொன்னசால்புகண்டேன்றலமேழ்புரக்கும் - வண்டார்மலர்ப்புயன்வாணன்றென்மாறைமகிழ்நர்முன்னா -ளுண்டாகியபழங்கேண்மையிந்நாளுமொழிந்திலரே.” எ-ம், பாங்கி தலைவியைப் புகழ்தற்குச் செ-ள் “சிறந்தார்புகழ்தருந்தீம்புனலூரன்செய்தீமையெல்லா - மறந்தார்வமெய்திவணங்குதலாலிவள்வாணன்றஞ்சை- நிறந்தாரகையன்னநித்திலம்போலுநெடுங்குலத்திற்-பிறந்தார்நிறைந்தகற்போர்வடிவேபெற்றபெற்றியளே” எ-ம் வரும். பிறவுமன்ன. (௮)

௨௦௮. மூன்று சூத்திரத்து மொழிந்தவை யெல்லா
மான்ற பரத்தையி னகற்சியின் விரியே.

இ-ம். காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக் கேதுவிதாமவ்விறைவிக்கென்றன் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையிற் பிரிவின் விரியாம். எ-று.

வாயில்வேண்டன் முதலாக நான்குவகைக்குமாமாறறிந்து கொள்க. (௯)

௨௦௯. பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைய
கல்வி முதலா வெல்லாப் பிரிவும்.

இ-ம். பிரிவறிவுறுத்தன் முதலாக வந்துழி மகிழ்ச்சியீறாகச் சொல்லப்பட்ட வொன்பது வகையினையுடையவாங் கல்விமுதலாகிய பிரிவு. எ-று.

அவற்றுள் கல்விக்குப்பிரிவு தலைமகனானுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தற்குச் செ-ள் “மல்வித்தகங்கொண்டதோளுடையான்றஞ்சைவாணன்றொல்சீர்-நல்வித்தகன்புவிநாவில்வைத்தோன்வையைநாடனையாய் - கல்வித்தடங்கடனீந்தியகாதலர்கற்றவர்முன் - சொல்வித்தவென்றழலார்சுரம்போகத்துணிந்தனரே.” எ-ம், தலைமகன் கல்விக்குப் பிரிந்துழித் தலைமகள் கார்ப்பருவங்கண்டு வருந்தியதற்குச் செ-ள் “யாணர்க்குழன்மொழியென்

செய்குவேன்கல்வியெல்லையெல்லாங்-காணப்பிரிந்தவர்காண்கிலராற்கடன்
மேய்ந்துதஞ்சை - வாணர்க்கெதிர்ந்தவர்மங்கையர்போலுமென்வல்லுயிரி-
னூணற்பமென்னவெண்ணுவருமேகமுருமுடனே." எ-ம், ஓதற்குப்பிரி
ந்துழிக் கார்ப்பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச்
செ-ள் "காதற்கயம்படிந்தன்னொடுகாமக்கனிநுகரா - தோதற்ககன்றவு
ணர்வுடையோருடைநீருல்க-மாதர்க்கமைந்தருள்வாணன்றென்மாறைவர
க்கடவா-ராதற்கணங்கனையாய்புயலேதுவறிந்தருளே" எ-ம் வரும். பிறவும
ன்ன. காவற்பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தற்குச்
செ-ள் "விண்காவல்கொண்டதிலோத்தமைதான்முதன்மெல்லியலார்-கண்
காவல்கொண்டருள்காரிகைகாவலர்கார்க்கடல்சூழ் - மண்காவல்கொண்டம
னத்தினராயினர்வாணன்றஞ்சைப்-பண்காவல்கொண்டமொழிச்செய்யவா
யிதழ்ப்பைங்கிளியே." எ-ம், தலைமகன் காவற்குப் பிரிந்துழித் தலைமகள் கூ
திர்ப்பருவங்கண்டு வருந்தியதற்குச் செ-ள் "மன்னுயிர்காவலன்வாணன்றெ
ன்மாறையில்வந்தளியா-ரென்னுயிர்காவலரேந்திழையாயிதயம்புலர்த்திக்-
கொன்னுயிர்வாடைக்கொடும்பனிநீரிற்குளிர்குழைத்துப் - பின்னுயிராம
லென்மேற்பூசுநாளுமென்பேசுவதே." எ-ம், காவற்குப்பிரிந்துழிக் கூதி
ர்ப்பருவங்கண்டு வருந்தியதலைமளைத் தோழியாற்றுவித்தற்குச் செ-ள் "வர
ற்காலமென்றென்றெனப்பலகூடல்வளைத்திரம்-விரற்காலவின்றுமெலிய
ன்மின்னேசென்றுமேதினிகாத்-துரற்காலகுஞ்சரமஞ்சமஞ்சூர்ந்துறையீசு
கின்ற-சாற்காலம்வந்தடைந்தார்தஞ்சைவாணன்றமிழ்வெற்பரே." எ-ம்,
தூதிற்பிரிவு தலைமகனுணர்ந்ததோழி தலைமகற்குச் சொல்லற்குச் செ-ள்
"தூதாகவன்பர்செலத்துணிந்தாரொன்றுஞ்சொற்புலவோர்-மாதாகவன்பசி
தீர்த்தருள்வாணன்றென்மாறையிந்து - மீதாகவம்புகிடந்தனபோலுண்கண்
மெல்லியலிப்-போதாகவம்புகல்வோரிகலார்தம்புரம்புகவே." எ-ம், தலைம
கன் றூதிற்பிரிந்துழித் தலைமகண் முன்பனிப்பருவங்கண்டுவருந்தியதற்குச்
செ-ள் "மலிகின்றவண்புகழ்வாணன்றென்மாறையைவாழ்த்தலர்போன்-
மெலிகின்றசிந்தையுமேனியுங்கொண்டுவிளர்ப்பெனும்பேர்-பொலிகின்றக
ஞ்சுகம்போர்த்திருந்தேனைப்புரந்தருளார்-நலிகின்றமுன்பனிநாளினண்ணு
ர்முனைநண்ணினரே." எ-ம், தூதிற்பிரிந்துழி முன்பனிப்பருவங்கண்டு
வருந்திய தலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச் செ-ள் "சுற்றுங்குழலின்பி
ணிவிடுப்பான்வந்துதோன்றினர்பார் - முற்றும்பொழிகின்றமுன்பனிநாண்
முகிலுங்கடலும்-வற்றும்பருவத்துமண்புரப்பான்றஞ்சைவாணனொன்னார்-
செற்றும்படையின்வெம்போர்தணிப்பானன்றுசென்றவரே" எ-ம் வரும்.
பிறவுமன்ன. வேந்தர்க்குற்றுழியுதவி தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்
குணர்த்தியதற்குச் செ-ள் "நண்பானமன்னர்க்கிடர்தணிப்பானெண்ணிநல்
லுதவிப்-பண்பானமன்னர்படர்தலுற்றார்பனிநீர்பொழியுந் - தண்பானலங்
தொடையம்புயவாணன்றமிழ்த்தஞ்சைவாழ் - வெண்பானலங்கொள்செவ்
வாயன்னமேயன்னமென்னடையே." எ-ம், தலைமகன் வேந்தர்க்குற்றுழி
ப் பிரிந்துழி தலைமகள் பின்பனிப்பருவங்கண்டு வருந்தியதற்குச் செ-ள்
"இன்னற்படுகின்றவென்னையெண்ணார்தமக்கின்றுணையா-மன்னற்குதவிபி
ரிந்தநங்காதலர்வாணன்றஞ்சைக்-கன்னற்கடிகையறிவதல்லாற்பகல்காண்
பரிதாம்-பின்னற்கனையிருள்கூர்துன்பமேவியபின்பனியே" எ-ம், மன்னர்
க்குற்றுழிப் பிரிந்தவழிப் பின்பனிப்பருவங்கண்டு வருந்திய தலைமகளைத்
தோழியாற்றுவித்தற்குச் செ-ள் "வடுக்கண்டனையகண்மங்கைநல்லாய்தஞ்
சைவாணன்வெற்பி-னடுக்கங்குளிரவசைகின்றவாடையகன்றவர்க்கு-நடுக்

கஞ்செய்பின்பனிநாளின்வந்தாரமர்கண்பனுற்ற-விடுக்கண்களையவென்றே யகன்கானமிகந்தவரே." எ-ம், பொருள்வயிற்பிரிவு தலைமகனுணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தியதற்குச் செ-ள் "மஞ்சைப்புனைமதின்மாறை வரோதயன்வாணர்பிரான்-றஞ்சைப்பதியண்ணலெண்ணலர்போற்றனிநா மிருக்க - நெஞ்சைப்பொருள்வயின்வைத்துநங்கேள்வர்நிழன்மதியின்-பிஞ் சைப்புரைநுதலாய்பிரிவானின்றுபேசினரே." எ-ம், தலைமகன் பொ ருள்வயிற் பிரிந்துழித் தலைமக ளிளவேனிற்பருவங்கண்டு வருந்தியதற்குச் செ-ள் "நங்கணிரங்கவரும்பொருட்டேநடந்தவன்பர் - செங்கணிருங்குயி லார்ப்பதுகேட்கிலர்செந்தமிழோர் - தங்கணிடும்பைதவிர்த்தருள்வாணன் றென்றஞ்சைவஞ்சி - திங்கணிவந்ததுபோற்கவினார்முகத்தேமொழியே." எ-ம், பொருள்வயிற்பிரிந்துழி யிளவேனிற்பருவங்கண்டு வருந்திய தலைமக ளைத் தோழியாற்றுவித்தற்குச் செ-ள் "வார்த்தனபாரமடமயிலேகுயின் மாருதமாங்-தேர்த்தனிவீரன்றிருநாளும்வந்ததுசேர்மின்சென்றீர் - தார்த்த டமேருவெனும்புயவாணன்றஞ்சாபுரிநின் - றூர்த்ததுகேட்டுவந்தார்பொரு டேடவகன்றனரே." எ-ம் வரும். பிறவுமன்ன. கல்வியிற்பிரிவு முதலாகிய வைந்தினுள்ளுந் தூதுமுதவியுங் காரணமுமாகிய பிரிவின்கணவ்வினையோ ராண்டின் முடியாது நீட்டித்து முடிந்துழித் தலைமகனுருவு வெளிப்படுக ண்டு சொல்லியதற்குச் செ-ள் "மைக்குஞ்சரநிரையாற்றஞ்சைவாணன் மருவலரைக் கைக்குஞ்சரங்கெழுபாசறையூடுகயலும்வில்லு-மொய்க்குஞ்சு டரிளவம்புலிதானுமுயங்கியெல்லாத் - திக்குந்தொழவருமேசுருளோலைத்தி ருமுகமே." எ-ம், பாசறைமீண்டூர்வயின்வந்த தலைமகன் பாகற்கு சொல் லற்குச் செ-ள் "மால்கொண்டவாரணவாணன்றென்மாறைவலவநண்ணா ர்-கால்கொண்டவாளமர்கையகல்பாசறைக்கைவயின்முட்-கோல்கொண்ட வாறுநின்னேவல்கொண்டியானிக்கொடிநெடுந்தேர் - மேல்கொண்டவா றுநம்மூர்வந்தவாறும்விளம்பெனக்கே." எ-ம், தலைமகளோடிருந்த தலைம கன் கார்ப்பருவங்கண்டுவந்து சொல்லியதற்குச் செ-ள் "கொத்தலரோதி யங்கொம்பரன்னாள்பொங்குகொங்கைவிம்ம - முத்தலராகமுயங்கினம்யாமு ழுநீர்விழிபோன்- மைத்தலர்நீலமலர்வயல்சூழ்தஞ்சைவாணன்வண்மைக்- கைத்தலமானவினிப்பொழிவாழியகார்ப்புயலே." எ-ம் வரும். (௧௦)

கற்பியன் முற்றிற்று.

ஐந்தாவது

ஒழிபியல்.

உ௧௦. ஒழிபெனப் படுவ தகப்பாட் டுறுப்பும்
வழுவு மமைதியுந் தழுவிய தாகும்.

இ-ம். இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின் முன்னர்வந்த விய லைந்தினுள்ளுங் கூறிக்கூறா வொழிபிலக்கணமுணர்த்தினமையான் ஒழிபி யலென்னும் பெயர்த்து. ஒழிபென்று சொல்லப்படுவ தகப்பாட்டிற்குரிய

வறுப்பு மகப்பாட்டிலக்கணத்தினைத்தப்பிய வதனையு மமைந்த நீதியினையும் பொருந்தியதாம். எ-று. (க)

உகக. திணையே கைகோள் கூற்றே கேட்போ
ரிடனே காலம் பயனே முன்ன
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென்
றப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே.

இ-ம். அகப்பாட்டுறுப்பாவன: திணைமுதலாகத் துறையீறாகப் பன்னிருபகுதிப்பட்டனவாம். எ-று. (உ)

உகஉ. அவற்றுள்,—
முன்னவை யிரண்டுஞ் சொன்னவை யாகும்.

இ-ம். அப்பன்னிரண்டினுள்ளு முற்பட்ட திணையுங் கைக்கோளு மாகிய விரண்டு மேற்சொல்லப்பட்டனவாம். எ-று. (ங)

உகங. தலைவன் றலைவி பார்ப்பான் பாகன்
பாங்கி செவிலியென் றீங்கிவ் வறுவருஞ்
சாற்றிய களவிற் கூற்றிற் குரியர்.

இ-ம். களவுகைக்கோளகத்துக் கூற்றிற்குரியாரையுணர்-ற்று. தலைவன் முதலாகச் சொல்லப்பட்ட வறுவரும் மேற்சொல்லப்பட்ட களவினகத்திற் கூற்றிற் குரியராவர். எ-று. (ச)

உகச. நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
விறலி பரத்தைய ரறிவரென் றெழுவரு
மறுவகை யவரு மாகிய வனைவருங்
குறைவறு கற்பிற் கூற்றிற் குரியர்.

இ-ம். கற்பிற்கூற்றிற்குரியாரையுணர்-ற்று. நற்றாய் முதலியவெழுவரும் மேற்சொல்லப்பட்ட தலைவன் முதலாகிய வறுவருமான பதின்மூவருங் குற்றமற்ற கற்பினகத்துக் கூற்றிற்குரியராவர். எ-று. (ரு)

உகரு. பயந்தோன் றன்னை யுயங்குநோ யறிவோ
ருரவ ரயலோர் சேரியோ ரென்றிவர்
முகத்துரை நிகழா வகப்பொரு ளகத்தே.

இ-ம். இதுவுமப்பொருளகத்து முகத்துரைகேளாதோரைக் கூறுகின்றது. பயந்தோன்முதலாகச் சொல்லப்பட்டவர் முகத்துச் சொன்னிகழா வகப்பொருளகத்து. எ-று.

எனவே அவை பிறராலெடுத்துப் பிறராலோர் சொற்றந்தெடுத்துக் கூறப்படுமெனக் கொள்க. இதற்குச் செ-ள், "எந்தையுநிலனுறப்பெறாநின்சீறடிசிவப்ப-வெவனில்குறுமகளியங்குதி" யென்னு மத்தன்மையன் றந்தை கூறினனாகத் தோழியெடுத்துக் கூறுதல் காண்க. பிறவுமன்ன. (௬)

௨௧௬. தமர்வரி னிடைச்சுரந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோ னுண்மையுங் கூறும்.

இ-ம். புணர்ந்துடன்போகா நின்றகாலத்துத் தலைமகடன் மரபினர் செல்லிற் றலைமகன் றலைமகளோ டாண்மையுங் கூறும். எ-று.

உ-ம் "கடுஞ்செயமுதாகக்கண்டுங்கொண்டுங்- கொண்டுநீவிளையாடுக சிறிதே." எ-ம். (௭)

௨௧௭. உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை
பிரிவுழித் தலைவனொடு சுரத்தியல் புகலலும்
பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்
சொல்லலு முரியள் சொல்லுங் காலை.

எ-ன். புணர்ந்துடன்போய் மீண்ட தலைமகள் பிரியுங்காலத்து அவனொடு சுரத்தியல் கூறலு மவன்பிரிந்தகாலத்து வருந்தியநெஞ்சொடும் பிறரொடும் சுரத்தியல் சொல்லலு முரியளாராய்ந்து சொல்லுமிடத்து. எ-று.

எனவே புணர்ந்துடன் போயகாலை தலைமகள் சுரத்தியல்பு கூறாள் என்க. தலைமகள் பிரியுங்காலத்து அவனொடு சுரத்தியல்பு கூறற்குச் செ-ள் "நினைக்கவுமரிதரோவையவம்பன்றுநாம் - பணைத்தாளோமைப்படுசினைபயந்த-பொருந்தாப்புதர்நிழலிருந்தனமாக-நடுக்கஞ்செய்யாதுநண்ணுவழிதோன்றி-யொடித்துமிசைக்கொண்டவோங்குயர்மருப்பியானை-பொறிபடுதடக்கைசுருக்கிப்-பிறிதோராறிடையிட்டவளவைக்கு-வேறுழந்தேசென்றார்விடரகஞ்சிலம்பும்-புன்றலைமடப்பிடிபுலம்பியசுரனே." எ-ம், பிரிந்துழி நெஞ்சொடு சுரத்தியல்புகூறற்குச் செ-ள் "வில்லுழவனுமறுவும்புல்லும் போவர்கொல்." எ-ம், பிரிந்துழிப் பிறரோடு சுரத்தியல்புகூறற்குச் செ-ள் "அறியாயதோழியவர்சென்றவாறே." எ-ம், "நறுங்கட்கொண்கனென் சிறுகண்யானைதிரிதருங்காடே" எ-ம் வரும். இவை களவின்வழிவந்த கற்பினொழிபெனக் கொள்க. (௮)

௨௧௮. தலைவன் றலைவியொடு நற்றாய் கூறாள்.

எ-ன். தலைவனொடுந் தலைவியொடு நற்றாய் கூறப்பெறாள். எ-று. (௯)

௨௧௯. புணர்ந்துடன் போய துணர்ந்த பின்ன
ரந்தணர் தெய்வ மயலோ ரறிஞர்
சிந்தைநோ யறிவோர் செவிலி பாங்கியொடு
கண்டோர்க் குரைக்கும் பண்புடை நற்றாய்.

எ-ன். அந்தணர் முதலாகச் சொல்லப்பட்ட வனைவரோடு நற்றாய் கூறுந் தலைமகள் புணர்ந்துடன்போனவாறு தானறிந்தபின். எ-று. (கo)

உஉo. தாயொடும் பாங்கி தான்முத லாரொடுஞ்
சேயிழைச் செவிலியுஞ் செப்பு மாங்கே.

எ-ன். நற்றாயோடும் பாங்கி முதலாரோடுந் தலைமகள் செவிலித்தாயுஞ் சொல்லுமுன் புணர்ந்துடன்போனமை தானறிந்தபின். எ-று.

இவ்விருவர் கூற்றிற்கு முதாரண முடன்போக்கினுட் காணப்பட்டன. (கக)

உஉக. தாயர் பாங்கியர் தலைவன் றலைவியோ
டேயு மென்ப கண்டோர் கூற்றே.

எ-ன். தாயார் முதலாகியவரோடு நிகழுங் கண்டோர் கூற்றென்று சொல்லுவர் புலவர். எ-று.

உதாரணம் உடன்போக்கினுள்ளுங் கற்பியலுள்ளுங் கண்டுகொள்க.()

உஉஉ. சாற்று வெழுவருந் தலைவன் றலைவியோ
டேற்றன கூறுப விடந்தொறு மிடந்தொறும்.

எ-ன். மேற்சொல்லப்படாத பார்ப்பானும் பாங்கனும் பாணனும் கூத்தரும் விறலியும் பரத்தையரு மறிவரு மென்கிற வெழுவருந் தலைமக னோடுந் தலைமகளோடு மிடந்தொறு மிடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவர். எ-று. (கங)

உஉங. நெஞ்சு நாணு நிறைசே ரறிவுஞ்
செஞ்சுடர்ப் பரிதியுந் திங்களு மாலையும்
புள்ளு மாவும் புணரியுங் கானலு
முள்ளுறுத் தியன்றவு மொழிந்தன பிறவுந்
தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை
யின்சொற் சொல்லுந போலவு மேவல்
செய்குந போலவுந் தேற்றுந போலவு
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்.

எ-ன். நெஞ்சுமுதலாகக் கானலீறாகச் சொல்லப்பட்டனவு மல்லாதன பிறவுந் தன்சொற் கேட்கின்றனபோலவுந் தன்னைத் தேற்றுகின்றன போலவுஞ் சொல்லிய மாத்திரத்தானே யாற்றுந் தலைமகள். எ-று.

பிறவுமென்றதனுல் கழியினெய்தலு மரமுதலானவுங் கொள்க. உ-ம் மேற்கூறியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. (கச)

உஉ௪. இம்முறை யோரு மியாரொடு மின்றித்
தம்மொடு தாமே சாற்றியு மமைப.

எ-ன். மேற்சொல்லப்பட்ட தலைவன் முதலாகிய பன்னிருவரும் யாவரோடுங் கூறாது தம்மொடுதாமே கூறியுமமைவர். எ-று.

உ-ம். மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. இத்துணையுங் கூறப்பட்டது கூற்றியலெனக் கொள்க. (கரு)

உஉரு. கிழவோன் கூற்றுங் கிழத்தி கூற்றும்
பழமறை யோன்முதற் பதின்மருங் கேட்ப.

எ-து. தலைவன் கூற்றுந் தலைவி கூற்றும் பார்ப்பான் முதலாகிய பதின்மருங் கேட்பர். எ-று. (கசு)

உஉசு. மறையோர் கூற்று மறிஞர் கூற்று
மிறையோன் முதலா வெணைவருங் கேட்ப.

எ-து. பார்ப்பாரு மறிஞருமாகிய விருவர் கூற்றுந் தலைவன் முதலாகிய வெல்லாருங் கேட்பர். எ-று.

இரண்டு சூத்திரத்தானுங் கூறியது கேட்பாரிவரெனக் கொள்க. (கஎ)

உஉஎ. நெறிப்படு கரும நிகழ்வுழி யிடமே.

எ-து. நெறிபட்டகாரிய நிகழுநிலமிடமென்னு முறுப்பாம். எ-று. அன்றித் தன்மை முன்னிலை படர்க்கை யெனினுமமையும். நெறிப்படுகருமமாவன களவுங் கற்புமெனவாம். (கஅ)

உஉஅ. சென்றது நிகழ்வது மெதிர்வது மெனமுறை
நின்று பொருளுணர நிகழ்வது காலம்.

எ-து. இறந்தகாலமு நிகழ்காலமு மெதிர்காலமு மென் றடைவே நின்று உலகத்துள்ள பொருள்களையு மறியும்படியாக நடப்பது காலமென்னு முறுப்பாம். எ-று. (கசு)

உஉகூ. இப்பொருள் பயக்கு மிஃதென்பது பயனே.

எ-து. இப்பொருளை யிதுபயக்குமென்று சொல்லுவது பயனென்னு முறுப்பாம். எ-று. (உo)

உஙo. இன்னோர்க் கின்னுழி யின்னது பயக்குமென
முன்னங் தருவது முன்ன மாகும்.

எ-து. இத்தன்மையார்க் கிவ்விடத்தின்னது தருமென்னுங் குறிப்பினை வெளிப்படுக்குமது முன்னமென்னுங் குறிப்பாம். எ-று. (உக)

உ௱௫க. நகைமுத லாவிரு நான்கு மெய்ப்பாடு
நிகழ்பொருண் மெய்ப்பட நிற்பமெய்ப் பாடே.

எ-து. மொழிந்தன பிறவுந் தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை யின்சொற்சொல்வன போலவு மேவல்செய்குந போலவுந் தேற்றுந போலவு நகையு மழுகையு மிழிவரலு மருட்கையுமச்சமும் பெருமிதமு முவகையும் வெகுளியு மென்னு மெட்டு மெய்ப்பாடு மவ்விடத்து நிகழும் பொருளைக் கேட்டோர் மெய்யின்கண்ணே வெளிப்படநிற்பது மெய்ப்பாடென்னுங் குறிப்பாவது. எ-று.

மெய்ப்பாடு வெளிப்பாடெனக் கூட்டுக. (உஉ)

உ௱௫உ. சொல்லே யாயினுங் குறிப்பே யாயினுஞ்
சொல்லி முடித்தல் வேண்டுவ தெச்சம்.

எ-து. ஒருசொல்லேயாயினு மொரு குறிப்பேயாயினுங் கூடிப் பொருண்முடித்தல் வேண்டிநிற்ற லெச்சமென்னு முறுப்பாம். எ-று. (உங)

உ௱௫௩. ஒருதிணைக் குரிமை பூணு நிலைமை
பொருள்வகை யென்மனார் புலமை யோரே.

எ-து. இத்திணைக்கே இப்பொருளுரித்தாவ தென்னுமல் எல்லாத்திணைக்கும் பொதுவாய் நிற்கு நிலைமை பொருள்வகையென்று சொல்லுவரறிவுடையோர். எ-று.

அவையாவன: நிரைனிறைமாற்று எண்ணமொழிமாற்று அடிமறிமொழிமாற்று பூட்டுவிற்பொருள்கோள் புனல்யாற்றுப்பொருள்கோள் தாப்பிசைப்பொருள்கோள் அளைமறிபாப்புப்பொருள்கோள் கொண்டுகூட்டுப்பொருள்கோள் என வொன்பதாம். (உச)

உ௱௫ச. சொல்லிய வல்ல வொன்றினு மவற்றினோ
டொல்லும் வகைதேர்ந் துணர்ந் தியல்வழாம
லுரைப்போர் கேட்போ ருண்மை யின்றி
யுரைக்குங் கவியே யுரைப்பது துறையே.

எ-து. மேற்சொல்லப்பட்ட மக்களு மாவு முதலாயினவன்றிப் பிறதோன்றினவாயினு மவற்றை முன்சொல்லியவற்றோடும் பொருந்தும்வண்ணமாராய்ந்து இலக்கணம் வழுவாதபடியாகத் தன்னையன்றி யுரைப்போருங் கேட்போரு முண்டாதலின்றிக் கவிசொல்லும் புலவனுனே கூறுவது துறையென்னு முறுப்பாவது. எ-று.

இதற்குச் செ-ள் "உழையும்வெங்காளமும்போலுங்கண்ணுளொருகாலமுள்ளங் - குழையுநம்பாலென்றுகொண்டநெஞ்சேகலிக்கோடைமண்மேன்-மழையுமந்தாரமும்வந்தன்னவாணன்றென்மாறையின்மாந்-தழையுநம்போலிங்ஙனேகவின்வாடத்தவஞ்செய்ததே." என்னும் பாட்டிற்கு, திணை, குறிஞ்சி, கைகோள், களவு. கூற்று, தலைமகன்கூற்று. கேட்போர் நெஞ்சு.

இடம், தனியிடம், முன்னிலையுமாம். காலம், இறந்தகாலம். பயன் குறை நேர்தல் எனைக்குறை நேர்விக்கு மிவ்வுரையென்றது. மெய்ப்பாடு மருட்கை. எச்சம், இனியென்செய்வேமென்னுஞ்சொல். பொருள்கோள், சொற்றொறும்பொருளற்று வந்தமையாற் புனல்யாற்றுப்பொருள்கோள். “ஏமானனைவஞ்சமெற்காத்தலினவ்விரவிபொற்றேர்-வாமானின்வாழ்வனவாக பன்னாட்டஞ்சைவாணனென்னார் - போமானதாகத்தென்னையர்தோன்றப் புறங்கொடுத்த-கோமான்மணிநெடுந்தேர்நுகம்பூண்டகுரகதமே” என்னும் பாட்டிற்கு. திணை, பாலை. கைக்கோள் கற்பு. கூற்று, தலைவிகூற்று. கேட்போரில்லை. இடம், சுரத்திடம். காலம், இறந்தகாலம். பயன், ஆற்றுவது. முன்னம், இக்காலத்திதுசகுவதென்பது. மெய்ப்பாடு, உவகை. எச்சம், நின்றதாயினென்பட்டொழியும். எ-து குறிப்பு. பொருள்கோள் வகை, குரகதமெற்காத்தலின் வாழ்வனவாகவென இறுதியும் முதலும் நடுவும் பொருள்படநிற்றலிற் பூட்டுவிற்பொருள்கோள். “காதற்கடற்படிந்தன்னெடுங்காமக்கனிநுகரா-வோதற்ககன்றவுணர்வுடையோருடையாருலக-மாதர்க்கமைந்தவன்வாணன்றென்மாறைவரக்கடவா-ராதற்கணங்கனையாய்புயலேதுவறிந்தருளே.” என்னும் பாட்டிற்கு. திணை, முல்லை. கைகோள் கற்பு. கூற்று, தோழிகூற்று. கேட்போர் தலைமகள். இடம், மனையிடம். காலம், எதிர்காலம். பயன், ஆற்றுவது. முன்னமிவ்விடத்திவட்கிதுதருவதென்பது. மெய்ப்பாடுவகை. எச்சம், நீர்வருந்தவேண்டாமென்னுஞ்சொல். பொருள்கோள்வகை சொற்றொறும் பொருளற்று வந்தமையாற் புனல்யாற்றுப் பொருள்கோள். “போயேதெருவிற்றனிவிளையாடும்புதல்வற்புல்லி-நீயேதிலையல்லைநின்மகனேயிவனீயுமிவன்-றாயேயருகெனச்சேயன்னவாணன்றமிழ்த்தஞ்சைமா - னேயேயெனநிற்றலாலறிந்தேன்றன்னையெங்கையென்றே.” என்னும் பாட்டிற்கு, திணை, மருதம். கைகோள், கற்பு. கூற்று, தலைமகன்கூற்று. கேட்போர், தலைமகன். இடம், பள்ளியிடம். காலம், இறந்தகாலம். பயன், பரத்தையிற் பிரிவொழித்தல். முன்னம் இவ்விடத்திவற்கிதுதருமென்பது. மெய்ப்பாடச்சம். எச்சம், நீமறைத்தல் வேண்டாமென்னுஞ்சொல். பொருள்வகை சொற்றொறும் பொருளற்றுவந்தமையாற் புனல்யாற்றுப் பொருள்கோள் உ-ம். “வெடிக்கின்றவிப்பியுணித்திலம்பைத்தலைவெம்பகுவாய் - துடிக்கின்றதிங்களிற்றோன்றுந்துறைவசெஞ்சொற்புலவோர் - வடிக்கின்றமுத்தமிழ்வாணன்றென்மாறையென்மான்மருங்கை - யொடிக்கின்றகொங்கைகண்டாலெவரோநெஞ்சுகாதவரே.” என்னும் பாட்டிற்கு, திணை, நெய்தல். கைகோள், களவு. கூற்று, தோழிகூற்று. கேட்போர், தலைமகன். இடம், தனியிடம். காலம், எதிர்காலம் பயன், வரைவு. முன்னமிவ்விடத்திது தருவதென்பது. மெய்ப்பாடு, அச்சம், எச்சம், வரைதல்வேண்டுமென்னுஞ் சொல். பொருள்வகை முன்னம்போற் புனல்யாற்றுப் பொருள்கோள். பிறவுமன்ன. (௨௫)

௨௬௫. அவற்றுள்,—
எச்ச மின்றியு மியலு மென்ப.

எ-து. மேற்கொள்ளப்பட்ட திணைமுதலாகிய பன்னிரண்டினுள்ளு மெச்சமென்னு முறுப்புத் தொடராமலும் வரப்பெறும் அகப்பாட்டு என்று சொல்லுவர் புலவர். எ-று.

அதற்குச் செ-ள் "சேலார்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றென்மாறையினம்-வேலானெனப்பிறர்வேட்டவர்யார்மணம்வெண்டுகிலின்-பாலாரமளியம்பாற்கடலானதுபங்கயக்கண் - மாலாயினனிவனுந்திருவாயினண்மாதருமே" இதற்கு திணை, முல்லை. கைகோள் சற்பு. கூற்று, கண்டோர்கூற்று. கேட்போர், தம்மிற்றாம். இடம், வதுவை மணையிடம். காலம், நிகழ்காலம். பயன், காட்சி. முன்னம் இவ்விடத்திற்கிதுதகுமென்பது. மெய்ப்பாடுவகை. எச்சம் இல்லை பொருள்வகை முன்போல் யாற்றுப்பொருள்கோள். பிறவுமன்ன. (உரு)

உருசு. உவமப் பொருளு மிறைச்சிப் பொருளு
மெனவிரு பொருளு மெய்தும் பாட்டினுள்.

எ-து. உவமப்பொருளு மிறைச்சிப்பொருளு மென்று கூறப்பட்ட விரண்டுவகைப் பொருளும் வரும் அகப்பாட்டிடத்து. எ-று. (உஎ)

உருஎ. உள்ளுறை யுவமம் வெளிப்படை யுவமமென
வுள்ளுறை யுவம மிருவகை யுடைத்தே.

எ-து. கூறப்பட்ட யுவம முள்ளுறையுவமமும் வெளிப்படையுவமமுமென விரண்டு கூற்றினையுடைத்தா மகப்பாட்டினுட்கிடக்கு முவமைப்பொருளும். எ-று. (உஅ)

உருஅ. அவற்றுள்,—
உள்ளுறை யுவம முய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும பிறவொடும் புலப்படும்.

எ-து. மேற்சொல்லப்பட்ட விரண்டுவமத்துள்ளு முள்ளுறையுவமமாவது ஆராய்ந்தறியும் பகுதியினையுடைத்தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் பிறவற்றோடுந் தோன்றும். எ-று. (உகூ)

உருகூ. வெளிப்படை யுவமம் வினைபயன் மெய்யுரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும்.

எ-து. வெளிப்படை யுவமமாவது, தொழிலும், பயனும், வடிவும், நிறமும் புலப்படுமாறு நின்று விளங்குவதாம். எ-று. (௩௦)

உச௦. கருப்பொருட் பிறக்கு மிறைச்சிப் பொருளே.

எ-து. இறைச்சிப் பொருளாவது தெய்வம் முதலாகிய பொருளின்கண்ணே பிறக்கும். எ-று. (௩க)

உசக. காமஞ் சாலா விளமையோள் வயிற்
குறிப்பறி வுறாது குறுகியாங் கவளோ
டிறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை.

எ-து. காமஞ்சாலா விளமைத்தன்மையையுடைய தலைமகள் பக்கத்துத் தலைமகன் குறிப்பறியாது சென்றுசேர்ந்து அவளோடு மேன்மேலுங் கூறுவ தகப்புறக் கைக்கிளையாம். எ-று.

அன்னதாதல் "ஊர்க்கானிவந்தபொதும்பரெ"ன்னுங் குறிஞ்சிக் கலியுள் ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. (கூஉ)

உசஉ. அதுவே,—
இறைமை யில்லோர்க்கு மிழிகுலத் தோர்க்கு
முறைமையி னுரித்தே முன்னுங் காலை.

எ-து. மேற்சொல்லப்பட்ட கைக்கிளைதான் றலைமைப்பாட்டில்லாதார்க் கு மிழிகுலத்தோர்க்கு முறைமையானுரித்தா மாராயுங்காலத்து. எ-று.

முறைமையென்பது மேற்சொல்லிய முறைமை. முன்னுங்காலையென்றத னு லிது பயின்றுவாராதெனக்கொள்க. உ-ம். "இஃதொத்தனெ" ன்னுங் குறி ஞ்சிக்கலியுள்ளும், "என்னேற்றனைக் கொல்லோ" வென்னும் மருதக்கலியுள் ளுங் கண்டுகொள்க. (கூகூ)

உ௩ரு. அகன்றுழிக் கலங்கலும் புகன்றமடற் கூற்றுங்
குறியிடை யீடுங் தெளிவிடை விலக்கலும்
வெறிகோள் வகையும் விழைந்துடன் போக்கும்
பூப்பிய லுரைத்தலும் பொய்ச்சூ ளுரையுந்
தீர்ப்பி லூடலும் போக்கழுங் கியல்பும்
பாசறைப் புலம்பலும் பருவமாறு படுதலும்
வன்புறை யெதிர்ந்து மொழிதலு மன்புறு
மனைவியுந் தானும் வனமடைந்து நோற்றலும்
பிறவு மகப்பொருட் பெருந்திணைக் குரிய.

எ-து. அகன்றுழிக் கலங்கன் முதலாகத் தலைவியுந் தானும் வனமடை ந்து நோற்றலீறாகச் சொல்லப்பட்டனவும் பிறவு மகப்பொருட் பெருந்திணைக் குரியவாம். எ-று. (கூச)

உசச. மடலே றுதலொடு விடைதழா லென்று
குற்றிசை தன்னொடு குறுங்கலி யென்று
சுரநடை தன்னொடு முதுபாலை யென்று
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்
புகன்றவை யியற்பெயர் பொருந்தா வாயி
னகன்ற வகப்புறப் பெருந்திணைக் காகும்.

எ-து. மடலேறன் முதலாகத் தபதாரநிலையீறாகச் சொல்லப்பட்ட வியற்பெயர் கூடாவாயி னகப்புறப் பெருந்திணைக்காம். எ-று.

அவற்றுள், மடலேறற்குதாரணம் நெய்தற்கலியுட் கண்டுகொள்க. விடைதழாதற்குதாரணம் முல்லைக்கலியுட் கண்டுகொள்க. சுரநடை முதலாகிய நான்கிற்குமுதாரணம் புறநானூற்றுட் கண்டுகொள்க. (ருரு)

உசரு. பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவனெனப்
பாட்டினுட் பாடப் படுவோ ரிருவர்.

எ-து. அகப்பாட்டினுட் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைமகனுங் கிளவித் தலைமகனுமென விருவர். எ-று. (ருசு)

உசசு. அவருள்,—
உயர்ந்தோன் பாட்டுடை யுரவோ னாகும்.

எ-து. மேற்சொல்லப்பட்ட விருவருள்ளு முயர்ந்தோன் பாட்டுடைத் தலைவனாகும். எ-று.

“அரிபெய்சிலம்பினும்பலைத்தொடலை” என்னும் பாட்டினுள்ளும், “மழை வண்டூர்த்தன்பிண்டிநெல்லி-னுறந்தையாங்கட்சுளைநிலைபெருக் - காவிரிநீத்தாங் குழைமானுள்ளிழை - நீவெய்யோளொடுவேழவெண்புணை - தழீஇப்பூழியாசய நாடியானையின்-முகனமர்ந்தாங்கேந்தெழிலாகத்துப் - பூந்தார்குழையநெருநலாடினன்புனலே” என்னு மதனானும் “வெள்ளாளர் பார்ப்பாரெ”ன்னு நெடுந்தொகைப்பாட்டினுட் “கழித்துறைசெறியாவாளுடை யெறுத்தோளிரவுத்துயின் மடிந்ததானை யுரவுச்சினவேந்தன் பாசறையோமே” என்றதனானும் பாட்டுடைத் தலைவனுயர்ந்தானெனவறிக. இதனுள் வேந்தனென்றது பாண்டியனை. பிறவுமன்ன. (ருஎ)

உசஎ. நிலப்பெயர் வினைப்பெயர் பண்புகொள் பெயரொடு
குலப்பெய ரியற்பெயர் கூறுப வவர்க்கே.

எ-து. நிலப்பெயர் முதலாகிய வைந்துபெயருங் கூறுவர் மேற்சொல்லப்பட்ட தலைமக்களிருவர்க்கும். எ-று.

அவற்றுள் நிலப்பெயராவன மலைநாடன், சோணாடன், பாண்டிநாடன், என்றாற்போல்வனவும், சிலம்பன், ஊரன், சேர்ப்பன் என்றாற்போல்வனவுங் கொள்க. வினைப்பெயராவன, கடம்பெறிந்தான், தூங்கெயிலெறிந்தான், வடிம்பலம்பநின்றான் என்றாற்போல்வனவும், கோவலன், வேட்டுவன் என்றாற்போல்வனவுங் கொள்க. கோவலனென்பது, கோபாலனென்னும் வடமொழித்திரிபான் புரத்தற்றொழின்மேனின்றது. வேட்டுவனென்றது வேட்டைத்தொழின்மேனின்றது, பண்புப்பெயராவன நெடுஞ்சேரலாதன் இளஞ்சேட்சென்னிப் பெருவழுதியென்றாற்போல்வனவும், தோன்றல் அண்ணலென்றாற்போல்வனவுங் கொள்க. குலப்பெயராவன சேரன் சோழன் பாண்டியன் என்றாற்போல்வனவும், இறைவனுயனென்றாற்போல்வனவுங் கொள்க. இயற்பெயராவன குரவராற்பெற்ற பெயரெனக் கொள்க. (ருஅ)

உசஅ. அவற்றுள்,—
இயற்பெயர் கிளவித் தலைவற் கிசையார்.

எ-து. மேற் சொல்லப்பட்ட பெயருட் குரவராற் பெற்ற பெயரினைக் கிளவித் தலைமகற்குச் சொல்லார் புலவர். எ-று. (சகூ)

உசகூ. இருவரு மொருங்கே வருதலுந் தனித்தனி
வருதலு மிருவரும் வாரா தொழிதலு
முரிய வென்மனா ருணர்ந்திசி னோரே.

எ-து. மேற்சொல்லப்பட்ட தலைமக்க ளிருவருங் கூடி வருதலும் பாட்டுடைத் தலைமகனே வருதலும் கிளவித் தலைமகனே வருதலு மவ்விருவரும்வாரா தொழிதலு முரியவா மகப்பாட்டுறுப்புக்களென்று சொன்னா ரறிந்தோர். எ-று.

"அரிப்பவர்பிரம்பணவரிப்புறவிளைகனி-குண்டுநீரிலஞ்சிக்கெண்டை தூஉந்-தண்டுறையூரன்பெண்டினையாயிற்பலவாகுகநின்னெஞ்சிற்படரே-யோவாதீயுமாரிவண்மைக்- கடும்பகட்டியானைநெடுந்தேர்வஞ்சிக்-கோன்முனையிர்வூர்போல்-சிலவாகுகநீதுஞ்சுநாளே." என்னும் பாட்டினுளிருவரும் வந்தவாறு கண்டுகொள்க. "பெருங்கறைநிவந்தசிறுநறுநெய்தலுங்-கருங்கயத்துமன்றற்செந்தாமரையுமருமலிப்புறவிற்பூத்தமுல்லையுமிரும்பு- மலரேந்திணரியபொன்னவிழ்வேங்கையு-மொருங்குநின்றுகமழும்பலபலமறுகிற்-குடவாகோமான்குன்னைவிரவமுனைந்தருந்தேரோன்றளிபொழிதடக்கைத் - தொண்டிக்கோமான்விண்டவற்றேய்க்குங்-கேளோம்புநெடுந்தகைபறையிற்சாய்ந்த- நன்னலமிழ்ந்ததீவினையேனொடு-பண்டைபோலாகினுறுவிறிதாகிக்-கடுங்கதிர்க்காந்தண்நண்பக -ணடும்புலம்படர்ந்த தண்டுறைக்குருகே." என்னும் பாட்டினுட் பாடுடைத் தலைமகனே வந்தவாறு கண்டுகொள்க. "தேரோன்மலைமறைந்தசெக்கர்கொள்புன்மாலை- யூரன்பினுயனுவந்தூதுஞ்-சீர்சால்-சிறுகுழலோசைசெறிந்தோடிவேல்கொண் - டெறிவது போலுமெமக்கு." என்னும் பாட்டினுளிருவரும் வாராதொழிந்தவாறு கண்டு கொள்க. (சo)

உருo. அகப்புறப் பாட்டு மிகப்பில வலையே.

எ-து. அகப்பாட்டிற் சொன்ன விலக்கணங்களைக் கடவாதகப்புறப்பாட்டு. எ-று.

உ-ம். வெண்பாமாலையுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. இத்துணையுங் கூறப்பட்டனவெல்லா மகப்புறப்பாட்டிற்குமுரியவுறுப்புகளாம். (சக)

உருக. முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாரா து மயங்கலு முரிய.

எ-து. முதல், கரு, உரி என்னும் மூன்று கூற்றவாகிய பொருளுந் தத்தமக்குரிய திணையொடுகூட்டி யிலக்கணமுறைமை பிறதிணையொடுகூட்டி யுடனிலக்கணமுறைமையயாராய்ந்து மயங்குதலு முரியவாகும். எ-று.

அஃதென்னையெனின் பெரும்பொருளகத்து, "உரிப்பொருளல்லனமயங்கவும்பெறுமே." என்பதனானும் உரிப்பொருட் சூத்திரத்துட் டேருங்காலை யென்னுமிலேசினானும்பெறும். "கறங்குமணிநெடுந்தேர்கைவரன்று-பிறங்குமணன்மெல்லணைபரிப்ப-வறங்கூர் - நெடுங்கதிர்வல்விரைந்துநீங்க-நிறந்தருமாலைவரும்." என்னுந் திணைமொழி நெய்தற்பாட்டினுள் முல்லைக்குரிய மாலையாகிய முதற்பொருள் மயங்கினவாறு கண்டுகொள்க. "அன்னாய்வாழிவேண்டன்னை என்னும் பெருங்குறிஞ்சியுள்-ஆன்கணங்கன்றுபயில்குரன்மன்றுநிறைபுகுதர-வேங்கிமயிரிசைக்கொடுவரியன்றில்-ஓங்கிரும்பெண்ணையகமடலதவப்-பாம்புமணியுமிழப்பல்வயிற்கோவலா-ராம்பலந்தீங்குழற்றெள்விளிப்பயின்ற." என்புழி முல்லைக்குரிய கருப்பொருளாகிய வான்கண முயங்கக் கோவலரு மாம்பற்குழலு மதற்குரிய முதற்பொருளாகிய மாலையும் நெய்தற்குரிய கருப்பொருளாகிய வன்றிலும் பனையும் மயங்கிவந்தவாறு கண்டுகொள்க. "உரைத்திசிற்றோழியதுபுரைத்தொன்றன்றே - துருத்தங்கமழுயின்றோருரைப்பவென்றீஇயென்னுயிரே." என்னுஞ் சிற்றடக்கத்துக் குறிஞ்சிப்பாட்டினுள் ஊடலென்னு முரிப்பொருள் மயங்கியவாறு கண்டுகொள்க. படர்ந்தொழிவினைகண்ணே "கொடுவரிக்கொண்முரண்யாணைகண்மலைநாடனைசையினானே." என்னுஞ் சிற்றடக்கத்துக் குறிஞ்சிப்பாட்டினுள் இரங்கலென்னு முரிப்பொருண் மயங்கினவாறு கண்டுகொள்க. "சிலையிற்பகழிசிந்துவாரடைக் - கொலைவில்லெயினர்தங்கைநின்முலையசுணங்கெனநினைதிநீயென்றனைநினையுமெனலம்வருநெஞ்சே." என்னுமைங்குறுநூற்றுப்பாலைப் பாட்டினுட் புணர்தலென்னுமுரிப்பொருள் வந்தது. "நாளுநாளுமாள்வினையழுங்கவில்லிருந்துமகிழ்வோர்க்கில்லையாற்புகழென-வொண்பொருடருளர்காதலர்-கண்படைதுடையினித்தோழிநீ." எ-து. இருத்தலென்னுமுரிப்பொருள்சிற்றடக்கத்துப்பாலைப்பாட்டினுள் வந்தது. "வனைமலர்ததைந்தண்டுபடுநறும்பொழின்-முனைநிலைமுறுவலொருத்தியொடுநெருநற்குறிநீ-செய்தனையெனப்பலகூறவர்நீள்சினை - யுறையும்பருவமாற்குயிற்கவ்வையிற்பெரிதே." எ-து. ஊடலென்னு முரிப்பொருள்வந்த ஐங்குறு நூற்றுப்பாலைப்பாட்டு. "வெறுக்கைக்குச்சென்றார்விளங்கிழாய்தோன்றார்-பொறுக்கவென்றபொறுக்கலாமோ-வொறுக்கப்போற் - பொன்னுறுவளைபோந்தபுணர்முருக்கமென்-னுள்ளுறுநோயேபெரிதே." எ-து, இரங்கலென்னுமுரிப்பொருள் வந்தனு வந்தவைதிணைப்பாலைப்பாட்டு. "இரங்கல்வேந்தன்சேனையினிறுத்தவர்போல்" எ-து, புணர்தலென்னுமுரிப்பொருள் வந்தகலித்தொகை முல்லைப்பாட்டு. "புறவறிநாதன்காதன்மடமக-ளொண்ணுதல்டசப்பநீசெல்லிற்-றெண்ணிற்போதவிழ்தாமரையன்ன-நிரைகாதலம்புதல்வனெழுமினிமுலைக்கே." எ-து, எ-து: பிரிதலென்னுமுரிப்பொருள்வந்த வைங்குறுநூற்று முல்லைப்பாட்டு. "உதுக்காணதுவேப்பிதுகேண்மொழிகோனெண்ணினையிருந்த - வறுந்தோட்டுப்புள்ளினந்தாம்புணர்ந்தமையிற்பிரிந்தோருள்ளா து- தீங்குரலனுக்கேட்டுநீக்கியவேதிலாளரிவண்வரிற் - போதிற்பாமலேந்தியு புனையலேன் முன்றோடா அலெனக்குமன்னே." எ-து. ஊடலென்னுமுரிப்பொருள்வந்த திணைப்பாலை முல்லைப்பாட்டு. "என்னகோவேற்றதுணைபிரிந்தாராற்றேன்பாரனன்றேவாயாரோவாரவர்க்கு- முன்னரேவந்தாரந்தேங்குவரிமுல்லைச்சேர்தீர்த்தென்காந்தாரம்பாடுங்களிறு." எ-து, இரங்கலென்னுமுரிப்பொருள்வந்த திணைக்குறுந்தொகைப்பாலைமுல்லைப்பாட்டு. "பழனிக்கப்புளயில்பெடையகவுங்கழனியூரனின்மொவலென்று துஞ்சு-நெடுங்காமனைவருந்தியஞ்சாயோவிடர்ந்தைகைவேலே" எ-து புணர்தலென்னுமுரிப்பொருள்வந்த வைங்குறுநூற்று மருதப்பாட்டு. "அழுந்துபடுவிழுப்புண்வழும்பு [illegible] நெஞ்சலை [illegible]ரிந்தாங்குப்பிரிவில்புலம்பினுவல்லுங்-குயினு

தெரிநேரறல்கெழீஇயாறு கனிகொடித்தேயேசென்னுங் - கொடியாடானேமதிலுயர்ஷையிலேயிதழியைங்குருக்கக்கத்தியொடு- பித்திகைவிரவுமலர்க்கொள்ளீரோ திநிந்தருதண்டலேயுளாவெனவண்டுசூழ்வட்டியோடுவாதம்மடிகளே." இருத்தலென்னுமுரிப்பொருள் வந்தநற்றிணை மருதப்பாட்டு. இரங்கற்குமதுவேயுதாரணம் "சுறவுப்பிளிறுங்கழிநீந்தியகலுமிரவுக்குறிக்கொண்கன்-வரைந்தனவிரவுமணிக்கொடிப்பூண்விளங்கிழைபோயே." எ-து, புணர்தலென்றவுரிப்பொருள் வந்தசிற்றடக்கத்து நெய்தற்பாட்டு. "தண்கடற்சேர்ப்பன்பிரிந்தெனப்பண்டையிற்கடும்பலவருந்திக்கையறுமாலே-நெடுங்கழிநெய்தலுங்கூம்பக்-காலைவரினுங்களைநரோவிலரே." எ-து. இருத்தலென்னுமுரிப்பொருள் வந்த வைங்குறுநூற்று நெய்தற்பாட்டு. "காண்டிகுமலமோகானநின்களவே - ஒள்ளிழையுயர்மடன்விழந்தென-வெள்ளாங்குருகைவினவுவோளே." எ-து. ஊடலென்னுமுரிரிப்பொருள் வந்தவைங்குறு நூற்று நெய்தற்பாட்டு. பிறவுமிவ்வாறுமயங்கிவருவனவெல்லாங் கண்டுகொள்க. இத்துணையுங் கூறியது வழுவமைதியாம். (சஉ)

உருஉ. கூறிய வல்ல வேறுபிற தோன்றினுங்
கூறி யவற்றொடு கூட்டிக் குறிக்கொளக்
கூறி யுணர்த்தல் குணத்தோர்க் கியல்பே.

எ-து. பொருள்வேறே தோன்றினவாயினு மவற்றையிசனு ளெடுத்தோதப்பட்ட பொருளோடுங்கூட்டி யுண்மைபுலப்படச்சொல்லிப் பிறர்க்குணர்த்துதல் குணமுடையோர்க்கிலக்கணம். எ-று. (சங)

ஒழிபியன் முற்றிற்று.

அகப்பொருள் விளக்க மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

சூத்திரத்தொகை.

அகத்திணை நூற்றுப் பதினே ழடங்கா
மிருத்தகள வைம்பதுடன் மேனுன்—குருத்த
வரையிருபத் தொன்பஃது மன்னுங் கற்பீரைந்
துறை யொழிபு நாற்பதோ டொன்று.

சூத்திரமுதற்குறிப்பகராதி.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்
௬	௭	இனுங்	கங்
௯	௨௬	மிஞ	முஞ
௧0	௨௮	டைய்ச்	டைச்
௧௬	௪௧	லாம்ம	லாம
௧௯	௧	வழித	வழித்த
௨௩	௮	வுணர்ந்தி	வுரைத்தி
௨௭	௨௧	பெருன்	பெருஅன்
௩0	௧௪	நீதி	நீதியு
௫௧	௧௭	லொடு	லொ
௯௧	௧௮	சாத்	டுசத
௪௪	௯௭	குரிய	குமுரிய
௫௭	௩0	யிற்கூற்று	கூற்று
௬0	௧௫	குறைய	குரிய
௬௨	௨0	சொல்	சேறல்
௬௪	௧௫	காடக	கட்டக
௬௫	௨	யிடையிடை	யிடை
௬௬	௨௮	நாலும்	நாலும்
௭௩	௧௫	யநா	யுநா
௭௬	௬	பிரி	விரி
௭௬	௨௮	சொல்	சொற்
௭௬	௬௪	ன்ஞெய்	ந்நோய்
௭௭	௧௬	யேளே	யோளே
௮0	௩0	வர	வா